ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

திருவாய்மொழி

ஒன்பதாம்பத்து

இதற்கு

* தெள்ளாரும் ஞானத்திருக்குருகைப்பிரான்

அருளிச்செய்த ஆறாயிரப்படியும்.

* அன்போடழகிய மணவாளச்சீயரருளிச்செய்த

பன்னீராயிரப்படி உரையும்

* தெள்ளியதா நம்பிள்ளை செப்புநெறிதன்னை

வள்ளல்வடக்குத்திருவீதிப் பிள்ளை அருளிச்செய்த

ஈடு முப்பத்தாறாயிரம்

வ்யாக்யாநமும்

ஸபாபண்டிதரான

ஸ்ரீமான், புதுப்பட்டு-திருவேங்கடாசார்யரால்

பரிசோதிக்கப்பட்டு

ஸ்ரீவைஷ்ணவ கிரந்த முத்ராபக சபையாரால்

சென்னை:

ஸ்ரீநிகேதன முத்ராக்ஷர சாலையில்

அச்சிட்டு ப்ரசுரம் செய்யப்பட்டது.

ஸ்ரீமுக ௵

1933

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



திருவாய்மொழி

ஒன்பதாம்பத்து.

முதற்றிருவாய்மொழி—கொண்டபெண்டிர் ப்ரவேஶங்கள்.

ப:—ஒன்பதாம்பத்தில், கீழேழாம்பத்திலு மெட்டாம்பத்திலும் விரோதிஸ்வரூபத்தையும் தந்நிவ்ருத்தி ப்ரகாரத்தையு மருளிச்செய்து, மேலிரண்டுபத்தாலும் ப்ராப்திபலாவாப்தியை யருளிச்செய்வதாக, இப்பத்திலே பலஸ்வரூபத்தை நிரூபிப்பதாகக்கொண்டு பலப்ரதனான ஸர்வேஶ்வரனுடைய நிருபாதிகதையையும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்திதயா நித்ய ப்ரார்த்த்யத்வத்தையும், நிரதிஶயபோக்ய ஶீலாதிகுணயோகத்தையும், நித்யாபூர்வ போக்யதையையும், ஸ்மரணதஶையிலே ஸாந்நித்யஜநகமான போக்யகுணவத்தையையும், ஸ்ம்ருதிஸாந்நித்ய முடையாரை புஜிப்பிக்கையிலுண்டான ப்ரதமோத்யோகவத்தையையும், அத்யர்த்தாதரணீய கடக கம்யத்வத்தையும், பத்நீபரிஜநாதிபூர்த்தியையும், அல்பகாலவிளம்பத்திலும் அதிக்லேஶாவஹத்வத்தையும், பக்திகாரிதமான கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும் அருளிச்செய்து, அவனுடைய பலரூபத்வத்தை யருளிச்செய்தருளுகிறார்; முதலிரண்டுபத்தாலே நிரூபித்த ப்ராப்ய ஸ்வரூபத்தினுடைய ப்ரயோஜநரூபத்வ மிங்கே நிரூபிக்கப்படுகிறது.

முதற்றிருவாய்மொழியிலே, ததீயஶேஷத்வ போக்யதா ப்ரதிபத்திபிறக்கும்படி ஸமஸ்தவிரோதி நிவ்ருத்தி பிறந்தபின்பு, அந்த ததீய ஶேஷத்வ போக்யதாமூலமான தத்போக்யதையை அநுஸந்தித்து, அவனுடைய ஸர்வப்ரகாரபலத்வத்துக்கு உபபாதகமான ஸர்வவிதபந்துத்

வத்துக்கு ப்ரகாசகமான ஆபத்ஸகத்வத்தையும், அவிச்வாஸநிராஸகத்வத்தையும், அநிஷ்ட நிராஸக க்ருபாயோகத்தையும், அவதாரப்ரயுக்த குணோத்தரதையையும், அநிஷ்டத்வம்ஸகத்வமடியான அபிகமநீயதையையும், கீர்த்தநீயகுணவத்த்வத்தையும், சிந்தாமாத்ரஸுலபத்வத்தையும், உஜ்ஜீவநஹேதுத்வத்தையும், போக்யவிக்ரஹவிசிஷ்டதையையும், பூபார நிராஸகத்வத்தையு மநுஸந்தித்து. "ஏவம்பூதனான ஸர்வேச்வரனே நிருபாதிகபந்துவானவன்; அல்லாதார் உபாதிநிபந்தநபந்துக்கள், ஆதலால் அவர்களைவிட்டு, நிருபாதிகபந்துவான விவனையே பற்றி உஜ்ஜீவியுங்கோள்" என்று தாமறுதியிட்டவர்த்தத்தை தம்மைப் பற்றினார்க்குத் தஞ்சமாக வுபதேசித்தருளுகிறார். *

ஈடு;—ஒன்பதாம்பத்தில் முதற்றிருவாய்மொழி, கீழ்திற்றிவாய் மொழியிலே, பாகவதசேஷத்வபர்யந்தமாக நிரதிசய புருஷார்த்தத்தை நிகிலவிரோதிநிவ்ருத்திபூர்வகமாக அவன்காட்டிக்கொடுக்க அதிப்ரீதியோடே அந்த மஹோபகாரத்தை அநுஸந்தித்து "சயமேயடிமைதலைநின்றார்" என்றும், "நீக்கமில்லாவடியார்" என்றும் "கோதிலடியார்" என்றும் பாகவதரை விரும்பினாராநின்றார்.

ஆப்பான் திருவழுந்தூரரையர் ஆச்ரயித்ததும், திருவாய்மொழி கேட்டதும் - ஆழ்வானோடேயிறே; "'சயமேயடிமை தலைநின்றார்' என்றது ஸ்ரீபரதாழ்வான்போல்வாரை; 'நீக்கமில்லாவடியார், என்றது இளையபெருமாள்போல்வாரை; 'கோதிலடியார்' என்றது ஸ்ரீசத்ருக்நாழ்வான் போல்வாரைக்காணும்" என்று ஆழ்வான் பணித்தாரெனப் பணிப்பர்.

"இப்படிப்பட்ட பாகவதசேஷத்வமாகிற புருஷார்த்தத்தினெல்லையை நமக்குத்தந்த ஸர்வேச்வரனே நிருபாதிகபந்து, அல்லாதாரடங்க ஸோபாதிகபந்துக்கள். அவனே நிருபாதிக ஸுஹ்ருத்து, அல்லாதார்பக்கல் தோற்றுகிற ஸௌஹார்த்தம் ஸோபாதிகம்; என்று ப்ராப்யாபாஸங்களைத் தவிர்த்து, அவனே ப்ராப்யனென்றும், ப்ராபகாபாஸங்களைக்கழித்து அவனே ப்ராபகனென்றும், அறுதியிட்டுப் பிறந்தலாபத்தாலுண்டான ஹர்ஷத்தாலே சேதநரைக்குறித்து, "நீங்கள் ஸோபாதிகபந்துக்களான வல்லாதாரை விட்டு நிருபாதிகபந்துவான அவனையேபற்றி உஜ்ஜீவிக்கப் பாருங்கோள்" என்று பரோபதேசே ப்ரவ்ருத்தராகிறார்.

(க) "ஸர்வேஷாமேவ லோகாநாம் - ஸர்வேஷாமேவ லோகாநாம்" இத்யாதி; (உ) "அவ்யய: பிதா - அவ்யய: பிதா" அல்லாதார் தாய் தமப்பனென்றுபோராய், நாலுநாளிருந்து மணற்கொட்டகம் போலே கழிந்துபோவர்கள், அங்ஙனன்றிக்கே அழியாதே யென்றுமொக்க ரக்ஷகனும் பிதா அவனேயாயிற்று; தனக்கு ஹிதஞ்சொன்ன விபீஷணனை (ங) "த்வாந்து திக் - த்வாந்துதிக்" என்று புறப்படவிட்டானிறே ராவணன்; அவன் தம்பியையொழியச் செல்லாதென்றானிறே பெருமாள். மஹாராஜர் ஜ்யேஷ்டனாலே நோவுபட்ட தனிமையிலேவந்து உதவினாரிறே பெருமாள். பெற்றதமப்பன் பகையாக, அவனிலுமண்ணியனாய்வந் துதவினாரிறே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு; மாதாபிதாக்கள் கைவிட்டஜயந்தனுக்கு, ப்ரஹ்மாஸ்த்ரந்தொடுத்துக் கொடுநிற்கிறவர்தாமேயிறே புகலானார்; (ச) "ஸ பித்ரா ச - ஸபித்ராச" இத்யாதி. [ஸ:] நீரிலேபுக்கழுந்துவாரைப்போலே தாரகரானவரே பாதகராய் அம்புதொடுக்கும்படி சூழ்த்துக் கொடுநின்ற அவன். மோக்ஷம்பூர்வவத்.

த்ரௌபதி, தர்மப்ரதாநரான பர்த்தாக்களைவரும் வெறுந்தரையைக்கீறியிருக்க, அவர்களையொழிய தூரஸ்த்தனான க்ருஷ்ணனையேநினைக்க, "அவள் ஆபந்நையாய் நம்மை நினைக்க, நாமுதவப் பெற்றிலோம்" என்று (ரு) "க்ருஷ்ணாமாம் தூரவாஸிநம் - க்ருஷ்ணாமாம் தூரவாஸிநம்" என்று புண்பட்டானவனிறே. அர்ஜுனன் "என்னபிமதமென்னால் தலைக்கட்டிக்கொள்ளவரிது" என்றுசோகிக்க; "உன்னைத்தொற்றி வருவதொன்றுபேற்றுக்குடலாமன்றிறே உனக்கு சோகிக்கவேண்டுவது, உன்னுடைய ஸர்வபாரங்களையும் நம் தலையிலேபொகட்டு, நாமே கடவோமென்றிரு; உன்னுடைய விரோதிவர்க்கத்தை யடைய நாமே போக்கித்தருகிறோம்" என்றானிறே. இப்படிகளாலே "அவனே நிருபாதிகபந்து, அவனையேபற்றப்பாருங்கோள்" என்று தாமறுதியிட்டவர்த்தத்தைத் தம்மைப் பற்றினார்க்குத் தஞ்சமாக வுபதேசித்தருளுவதாக பரோபதேச ப்ரவ்ருத்தராகிறார். *

(க) பார-உத்யோ (உ) ஸஹஸ்ரநாம

(ங) ரா-யு-கசு-கரு- (ச) ரா-ஸு-ரு அ-ருரு

(ரு) பார-

முதற் பாட்டு.

கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர்பிறரும் * கண்டதோடுபட்டதல்லால் காதல்மற்றியாதுமில்லை * எண்டிசையுங் கீழும்மேலும் முற்றவுமுண்டபிரான்*தொண்டரோமாயுய்யலல்லாலில்லைகண்டீர்துணையே. (க)

ப:—முதற்பாட்டில், ஔபாதிகபந்துக்களான, தாரபுத்ராதிகளாலொருப்ரயோஜநமில்லை; அஶேஷஜகத்தையும் வயிற்றிலேவைத்துநோக்கின ஆபத்ஸகனானவனுக்கு அடியராமதொழிய வேறுதுணையில்லையென்கிறார்.

(இ-ள்.) கொண்ட - நாம்பந்துக்களாக நெஞ்சிலேகொள்ளப்பட்ட பெண்டிர் - தார, மக்கள் - புத்ராதி, உற்றார் - ஸம்பந்தி, சுற்றத்தவர் - பார்ஶ்வவர்களும், பிறரும் - மற்றும் மித்ரப்ருத்யப்ரப்ருதிகளும், கண்டதோடு - தங்கையிலே ப்ரயோஜநங்கண்டபோது, பட்டதல்லால்-உடன்படுமதொழிய, மற்று - ப்ரகாராந்தரத்திலே, யாதும் - ஏகதேசமும், காதலில்லை - ஸ்நேஹமுடையாரல்லர். ஆதலால், எண்டிசையும் ஸமஸ்ததிக்குக்களோடுகூடின, கீழும் - பூமியையும் பாதாளங்களையும், மேலும் - ஊர்த்வலோகங்களையும், முற்றவும் - எல்லாவற்றையும், உண்ட-ப்ரளயங்கொள்ளாதபடி யமுதுசெய்துநோக்கின, பிரான் - மஹோபகாரகனுக்கு தொண்டரோமாய் - அடியோமாய், உய்யலல்லால் உஜ்ஜீவித்தலல்லது, வேறுபத்துக்கு. இல்லைதுணை - துணையில்லை. (க)

ஆறு—(கொண்டபெண்டிர்) இந்தபாகவதகைங்கர்யரூப ஸம்பத்தை பாகவதகைங்கர்யரதிகளாயிருப்பாரோடே புஜிக்கையிலே அபேக்ஷையுடையரான வாழ்வார், ததாவிதரை இந்தலோகத்திலே காணாமையாலே இந்த லோகத்திலுள்ளாரையே பாகவதஶேஷதைகரதிகளாக்கிக்கொண்டாகிலும் அவர்களோடே இப்போகத்தை புஜிக்கைக்காக, பாகவதஶேஷதைகரதித்வத்துக்கு உபாயமாக, அவர்களைப்பார்த்து, உங்களுக்கு ஔபாதிக ஸ்நேஹரான களத்ராதிகளோடுள்ள வுறவைவிட்டு, அகாரணஸுஹ்ருத்தாய் ப்ரளயகாலத்திலெல்லாரையும் தன்திருவயிற்றிலேவைத்துப் பரிஹரித்தருளின மஹோபகாரகனான வெம்பெருமானுக் கடியோமாயுய்கையொழிய வேறுரக்ஷகரில்லையென்கிறார். (க)

ஈடு; அவ;—முதற்பாட்டில். "ஔபாதிகபந்துக்களான தார புத்ராதிகளாலொரு ப்ரயோஜநமில்லை, நிருபாதிகபந்துவானவனே ஆபத்ஸகன். அவனையேபற்றி யுஜ்ஜீவியுங்கோள், வேறுதுணையில்லை" என்கிறார்.

(கொண்டபெண்டிரித்யாதி) தான் தன் ஹ்ருதயத்திலே பந்துக்களாக நினைத்திருக்கும் பார்யாதிகளென்னுதல், (கொண்டபெடிர்) நிருபாதிகமாகவந்ததன்றிக்கே த்ரவ்யாத்யுபாதிகளாலே பரிக்ரஹித்தஸ்த்ரீகள்; அன்றிக்கே மாதாபிதாக்களைச் செங்கற்சீரை கட்டவிட்டு, தானார்ஜித்தநந்தை யடையக்கொடுக்கும்படி தஞ்சமாக நெஞ்சிலேகொண்ட பெண்டிரென்றுமாம். ஆசார்யனும், பரதேவதையும், ஐஸ்வர்யாதிகளுமெல்லா மிவளேயாகக் கொண்டபெண்டிரென்றுமாம். இவளுண்டாகையிறே யெல்லாமென்றிருக்கை. அன்றியே, இது ஸர்வவிசேஷணமாய், பந்துக்களாகத்தான் நினைத்திருக்கும் பார்யாதிகளென்னுதல்.

(மக்கள்) அப்படிப்பட்டவளுடைய யௌவநத்தையழிய மாறிப்பெறும் ப்ரஜைகள். (உற்றார்) தனக்கும் ஸத்ருஶவிஷயமென்று ஆதரித்தஸப்பந்திகள். (சுற்றத்தவர்) அவர்கள் மதிக்கும்படியான ஜ்ஞாதிகள். (பிறரும்) அந்யரும், முன்புசொன்னவர்களும், இவர்களிற்காட்டில் வாசிபெரிதன்றென்னை (பிறரும்) மித்ரப்ருத்யாதிகளென்றுமாம்; (கண்டதோடேபட்டதல்லால்) ஸந்நிதியிலே ஸ்நேஹிக்குமதொழியவென்னுதல், கையிலேத்ரவ்யங்கண்டபோது அத்தைப்பற்ற ஸ்நேஹிக்குமதொழியவென்னுதல், (காதல்மற்றுயாதுமில்லை) ப்ரயோஜநங்கண்டபோது உடன்படுமதொழிய, ப்ரகாராந்தரத்தி லேசதேசமும் ஸ்நேஹமுடைய ரல்லரென்னுதல், காணாதபோது மெய்யானஸ்நேஹ மொன்றுமில்லை யென்னுதல், கண்டதுக்குமற்று - காணாதபோதிறே. (காதல்மற்று) ஸ்நேஹமும், அதுக்கெதிர்த்தலையான த்வேஷமுமில்லையென்னுதல், ஸ்நேஹமுமதுக்கடியான பந்தமுமில்லை யென்னுதல்.

(எண்டிசையுமித்யாதி) பத்துதிக்கிலுமுண்டான ஸகலசேதநரையும் பிரிகதிர்ப்படாமே திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்தவன், இவற்றின் பக்கலொன்றுமில்லாதவன்று ரக்ஷிக்குமவன். ப்ரளயாவஸ்த்தையில் ரக்ஷிக்கைக்கு ஸாதநமுமில்லை, அர்த்தித்வமுமில்லை

யிறே. ரக்ஷிக்கைக்குத்தானறிந்தவாபத்தும் ஸம்பந்தமுமிறே வேண்டுவது; அப்போது விலக்குகைக்குப் பரிகாரமில்லையே. (பிரான்) உபகாரசீலனானவன். (தொண்டரோமாயுய்யலல்லால்) அவனுக்கு நம்மதாயிருப்பதொன்று கொடுக்கவேண்டுவதில்லை - அடியோமாயுஜ்ஜீவிக்குமதொழிய.

சேஷத்வம் ஸ்வரூபமானபின்பு அத்தையிழக்கையாவது-விநாசமிறே. அந்வயத்தாலே யன்றிக்கே வ்யதிரேகத்தாலு மிவ்வர்த்தத்தை த்ருடீகரிக்கிறார். (இல்லைகண்டீர்துணையே) ஆபத்துக்கு வேறோராபாச்ரயமுண்டாயிருக்க விவனைப்பற்றச்சொல்லுகிறதல்ல வித, அவனைப்பற்றி ஸ்வரூபம்பெறுதல்; இல்லையாகி லில்லையாமித்தனை.

(க)

இரண்டாம்பாட்டு.

துணையுஞ்சார்வுமாகுவார் போல்சுற்றத்தவர்பிறரும்* அணையவந்தவாக்கமுண்டேலட்டைகள்போல் சுவைப்பர் * கணையொன்றாலேயேழ்மரமுமெய்த வெங்கார்முகிலை * புணையென்றுய்யப்போகிலல்லாலில்லை கண்டீர்பொருளே. (உ)

ப:—அநந்தரம், அவிச்வஸநீயரான அநுபகாரகரை பந்துபுத்தி பண்ணாதே; விச்வாஸஜநகனுமா யுபகரிக்குமவனை யாச்ரயித்தாலல்லது ப்ரயோஜநமில்லையென்கிறார்.

(இ-ள்) ஸுகதுக்கங்களுக்கு, துணையும்-ஸஹாயபூதருமாய், ஆபத்துவந்தால், சார்வும்- அபாச்ரயமும், ஆகுவார்போல் - ஆவாரைப்போலே, சுற்றத்தவர்-பந்துக்களும், பிறரும்-மற்றுமுள்ளாரும், அணைய-தங்களுக்குக்கிட்ட, வந்த-வரும், ஆக்கம்-ப்ரோஜநம், உண்டேல்-உண்டாகில், அட்டைகள்போல்-அட்டைகள்போலே, சுவைப்பர்-இவன்தனக்கு உபகாரமென்று நினைக்கும்படி பசையறச்சுவைத்துவிடுவர்; அப்படியன்றியே, ஆபத்திலே அபாச்ரயமான தன்பக்கலிலே பந்தாதிசங்கை பண்ணினவனுக்கு விச்வாஸம்பிறக்கும்படி, கணையொன்றாலே - ஓரம்பாலே, எழ்மரமும் - எழுமராமரத்தையும், எய்த-எய்தவுபகாரகனாய் எம் - நம்மையும் விச்வஸிப்பிக்கும், கார்முகிலை-காளமேகஸ்வபாவனானவனை, புணையென்று-அபாச்ரயமென்று நினைத்து, உய்யப்போகிலல்

லால்-உஜ்ஜீவித்துப்போமதொழிய, பொருள்-ப்ரயோஜநம், இல்லை - இல்லை.

புணை-தெப்பமாய், அமிழ்த்தாதபடி நோக்கும் அபாஶ்ரயத்தைச் சொல்லுகிறது. (உ)

ஆறு:—(துணையும்) பரப்ரயோஜநபரரைப்போலே வர்த்தியா நின்று ஸ்வப்ரயோஜநபரராயிருக்கிறவர்களைவிட்டு, கேவலம் பரப்ர யோஜநபரனை தஶரதாத்மஜனையே ரக்ஷகனாகப்பற்றப்பாருங்கோ ள்; வேறொருவரைப்பற்றி பொருப்ரயோஜநமில்லையென்கிறார். (உ)

ஈடு; அவ;—உபகாரகரைப் போலேயிருந்து, ஸ்வப்ரயோஜநங் களைத் தலைக்கட்டநினைக்கு மவிஶ்வஸநீயரானவர்களையொழிய, நிர் ஹேதுகமாக விஶ்வாஸஜநகனுப், ஆபத்ஸகனானவனைப் பற்றுமத ன்றி ப்ரயோஜநமில்லையென்கிறார்.

(துணையித்யாதி) துணையாகையாவது - (க) "வந குமஹ-ஸீவ ஸுவஹொநள - ஏகம் துஃகம்ஸுகஞ்சநௌ" என்று ஸுகதுஃகங் களையொக்க வநுபவிக்கை. சார்வாகையாவது - போக்கடியற்றதசை யில், தாங்களோபுகலாகை. பாண்டவர்களுடைய வநவாஸத்தில் தனி மையிலே முகங்காட்டியும், த்ரௌபதியை மீட்டுக்கொண்டு போகிற போது (உ) "ஜநாத ஹர மஹ்வ க்ருஷ்ணாங்-ஜகாமதாம்பார்க் கவகர்மஶாலாம்" என்று, அவர்கள் தங்கினபணிக் கொட்டிலிலே சென்று முகங்காட்டிக்கூடக்கிடந்து கதறியுந்துணையாயும், பகதத் தன்விட்ட ஶக்தியை அர்ஜுநனைத்தள்ளித் தன்மார்பிலேயேற்றுப் புகலாயும் போந்தக்ருஷ்ணனைப்போலேயிருக்கை. (ஆதுவார்போல்) தாங்க ளபந்துக்களானபடியே கடக்கநிற்பதுஞ்செய்யாதே, "ரக்ஷ கர்" என்று ப்ரமிக்கும்படி வர்த்திப்பர்கள். (சுற்றத்தவர்பிறரும்) ஜ்ஞாதிகளும், மற்றுமுள்ளாரும்.

(அணையவித்யாதி) கைக்கெட்டின ஸம்பத்துண்டாகில். "இவன்பக்கலிலே ப்ரயோஜநம் தங்களுக்குண்டாம்" என்று தோற் றியிருக்கிலென்னுதல்; "தங்கள்பக்கலிவனுக்கொரு ப்ரயோஜநமு ண்டு" என்றுதோற்றியிருக்கிலென்னுதல். (அட்டைகள்போல்சு வைப்பர்) ரக்தஸ்பர்ஶமற வாங்காநிற்கச்செய்தே, இவனுக்கு ஹி தஞ்செய்தனவாயிறே யிவையிருப்பது, அப்படியே, உபகாரங்கொ

(க) ரா-கிஷ்-டு-கஅ- (உ) பாரத

ண்டாராய்க்கொள்ளாதே, ஹிதஞ்செய்கிறார்களாய்க்கொண்டு உபஜீவிப்பார்கள். " உன்பக்கலிலே தங்கிடக்கில் வாங்கிக்கொள்வர்கள்; அவற்றையென்மேலே யேறிட்டுவை " என்று அவனுக்கு ஹிதஞ் செய்கிறார்களாயாயிற்று உபஜீவிப்பது.

(கணையித்யாதி) (௧) "ஸகௌநசௌஹஷ்டௌ-ஏகேநமேஹஷ்டௌ" என்று கைக்கெட்டிற்றோரம்பாலே. மஹாராஜர், தனியருமாய், வெறுவியருமாய், தமையன்பகையுமாய், மநுஷ்யஸஞ்சாரமில்லாத தனிக்காட்டிலேயிருக்க, பெருமாளையு மிளையபெருமாளையுந் தூரத்திலேகண்டு, "வாலிவரவிட்டவர்கள்" என்றஞ்சியோடித் திருவடியைவரவிட்டு, அறிவித்தபின்பு, " நாமும்முடைய கார்யஞ் செய்யவல்லோம் " என்று மழுவேந்திக்கொடுத்தும் அவர்காரியஞ் செய்தாரிறே. (ஏழ்மரமுமெய்த) ஒன்றிரண்டாலே மஹாராஜரதிசங்கை தீர்க்கலாயிருக்க, ஏழுமராமரத்தையுமெய்த. (எங்கார்முகிலே) (எம்) என்று - ஆஶ்ரிதரைச்சொல்லுதல் ; ஆத்மநிபஹுவசநமாய், மஹாராஜர்க்குச்செய்தது தமக்குச்செய்ததாக நினைத்திருந்தபடியாலேயாதல். (கார்முகிலே) பரமோதாரனனவனே.

அவன்படியிதுவாகில் நாமவனுக்குச் செய்யவேண்டுவதென்னென்னில் (புணையித்யாதி) இடவேண்டுவதொரு பச்சையில்லை, ஒருக்திமாத்ரமமையும். "என்கார்யமுனக்கேபரம்" என்றொருவார்த்தையே அவனுக்கு நேரவேண்டுவது, (இல்லைகண்டீர் பொருளே) புறம் பொருவரைப்பற்றினலொரு ப்ரயோஜநமுமில்லை. புறம்பாஶ்ரயிக்கையிலே க்லேஶிக்கச் சிலருண்டத்தனை ; ப்ரயோஜநரூபமாவதொன்றில்லை. (௩)

மூன்றாம்பாட்டு.

பொருள்கையுண்டாய்ச் செல்லக்காணில் போற்றியென்றேற்றெழுவர்* இருள்கொள்துன்பத்தின்மை காணிலென்னேயென்பாருமில்லை * மருள்கொள்செய்கை யசுரர்மங்கவடமதுரைப் பிறந்தாற்கு * அருள்கொளாளாயுய்யலல் லாலில்லைகண்டீரரணே. (௩)

ப:-அநந்தரம், அநிஷ்டநிராஸகனனக்ருஷ்ணனுடைய க்ருபாபாத்ரமாகிலல்லது வேறுமுதலில்லையென்கிறார்.

(௧) ரா-பா-௧ ௬௯-

(இ-ள்.) கை - கையிலே, பொருள் - அர்த்தம், உண்டாய் - உண்டாய், செல்ல - செல்ல, காணில் - கண்டார்களாகில், போற்றியென்று - மங்களாஸாஸநம்பண்ணி, ஏற்று - அவன்கொடுத்தத்தைக் கையிலே யேற்றுக்கொண்டு, எழுவர் - யதாபிலஷிதம் போகாநிற்பர்; இருள் கொள் - அஜ்ஞாநதமஃப்ரசுரமாய், துன்பத்து - துஃகோத்தரமான, இன்மை - தாரித்ர்யம், காணில் - கண்டார்களாகில், என்னே-ஐயோ!, என்பாரும் - என்று க்ருபைபண்ணுவாரும், இல்லை-இல்லை, ஜகத்துக்கு மருள்கொள் - நெஞ்சுகலங்கும்படியான, செய்கை - ப்ரவ்ருத்திகளையுடைய, அசுரர்-அஸுரர், மங்க-கலங்கும்படியாக வடமதுரை வடமதுரையிலே, பிறந்தாற்கு - அவதரித்த க்ருஷ்ணனுக்கு, அருள் கொள்-க்ருபாபாத்ரமான, ஆளாய் - சேஷபூதராய்க்கொண்டு, உய்யிலல்லால்- உஜ்ஜீவிக்கிலல்லது, அறண் - வேறுபுகல், இல்லை - இல்லை. (௩)

ஆறு:—(பொருள்கை) இப்படி ஸ்வப்ரயோஜநபரராகையாலே ப்ரயோஜநமுள்ளபோது பற்றி, தாரித்ர்யாபத்தில் விடும் ஸ்வபாவரானவர்களைவிட்டு, ஆபத்ஸகனை க்ருஷ்ணனுடைய க்ருபைக்கு விஷயமாயுய்யிலல்லால் வேறொரு ரக்ஷையில்லை யென்கிறார். (௩)

ஈடு; அவ;—அவனை யொழிந்தார், ப்ரயோஜந முள்ளபோது பந்துக்களாய்க் கொண்டாடி, ஆபத்துவந்தால் பார்ப்பாருமில்லை; ஆனபின்பு, நிருபாதிகமாக வாபத்ஸகனை க்ருஷ்ணனுடைய க்ருபாபாத்ரமாகையொழிய வேறுரக்ஷகரில்லை யென்கிறார்.

(பொருள்கையுண்டாய்ச்செல்லக்காணில்) இவன்றான் சிலவற்றை யவிழ்ப்பது முடிவது சேமிப்பதாய்ப் போராநிற்குமிறே. பொருளானது கையிலேயுண்டாய்ப் போரக்காணில் (போற்றியென்று) பாஸம்ருத்த்யேக ப்ரயோஜநரைப்போலே வார்த்தைசொல்லுவர். உனக்கின்னமும் கிழிச்சீரை பெருகவேணுமென்பர்கள் நம்ஸம்ருத்தியே தனக்குப்ரயோஜநமாயிருப்பானொருவனுண்டாவதே!" என்று குளிரப்பார்க்குமே. இவனினி நமக்குக் கண்ணறமாட்டானென்றறிந்தவாறே (ஏற்றெழுவர்) இடலாகாதோ போகவென்று ஏற்றுக்கொண் டெழுந்திருப்பர்கள்.

(இருளித்யாதி) அஜ்ஞாநாவஹமாய், துக்கஹேதுவாயிருக்கிற வெறுமையைக்காணில். (என்னேஎன்பாருமில்லை) ஐயோவென்பாருமில்லை.

பிள்ளைதிருநறையூரரையர், "ஒருவனுக்கிட்டொருவன்வெறுவியனாவது, அவனாலே ஸம்ருத்தனானவன் இவனை'என்'என்னுதல், இவன்க்ருஹத்திலேவந்தொருநாள்கால்கழுவிப்போதல்செய்ய, அவ்வளவாலே 'இன்றனின்றனுக்கு பந்துவாகாதே!' என்றிவ்வளவு கொண்டு ஜீவிக்கலாயிருந்தால் அவ்வளவுஞ்செய்வாரில்லை" என்று பணிப்பர்.

(மருளித்யாதி) பொருள்கையுண்டாய்ச் செல்லக்காணாதவன்று மாஸ்ரிதருடைய வாபத்தைப் போக்குகைக்காக அகர்மவஸ்யனாக தான்வந்தவதரித்து உதவுவானொருவனுண் டென்கிறதுமேலே; சேதநர்நெஞ்சிலே யிருள் குடிபுகுரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய வாஸுரவர்க்கம் முடியும்படி ஒருவரபேக்ஷியாதிருக்கத் தானே வந்தவதரித்து ரக்ஷிக்குமவனுக்கு.

அவனுக்கு நாம்செய்யவேண்டுவதென்னென்னில் (அருள்கொளித்யாதி) க்ருபாபாத்ரமான சேஷபூதராய்க்கொண்டு உஜ்ஜீவிக்கையல்லது; அவன்பண்ணு மருளை விலக்காதொழியுமத்தனையே வேண்டுவது; தன்னருள்கொள்வாரை (௧) "உதாரா:-உதாரா:" என்னுமவனிறே அவன். இவன்பக்கலிதுக்குமேற்படக்கொள்ளலாவதில்லை; அவனுக்கு மிதுக்குமேல்செய்யவேண்டுவதில்லை பூர்ணனாகையாலே; ஸம்பந்தமோ ஸ்வாபாவிகமாயிருந்தது, இவன்புகுரநின்றவம்ஸமுண்டாகில், தன்பேறாக நினைத்திருக்குமவனாயிருந்தான்' இனி விலக்காமையிறே வேண்டுவது, (இல்லைகண்டீரரணே) ரக்ஷகமாவதிதொன்றுமே; அல்லாததெல்லா மநர்த்தத்தோடே தலைக்கட்டுமித்தனை.

சிறுப்ரஜை "குன்றிச்சூடு" என்று நெருப்பிலே கைவைக்குமாபோலே யிருப்பதொன்றிறே புறம்பிவன் ரக்ஷகமாக நினைத்திருக்குமவை; (௨) "[illegible]-ஆதரேண யதாஸ்தௌதி தநவந்தந்தநேச்சயா । ததாசேத் விஸ்வகர்த்தாரம் கோநமுச்யேதபந்தநாத்" ஸ்தோத்ரம் பண்ணிப் போந்த வாஸனையாலே உச்சைஸ்ஸாக ஸ்துதியாநிற்கும்; இப்படிஸ்துதிக்கிறது உதாரனையோவென்னில்; [தநவந்தம்] ஓர்பற்றறையையென்றபடி; அவன் பக்கல்நெகிழ்ச்சியில்லை. ஆகிலவனை ப்ரேரித்தாரரென்னில் [[illegible] - தநேச்சயா] ஸர்வத்தையுமுடையனுப், இவனளவன்றிக்கே

(௧) கீதை-எ-௧அ-

(௨)

யிருக்கிற வவன்பக்கலிலே யிவ்வாநுகூல்யத்தைப் பண்ணப்பெறில், பிறர்கீழேயிருந்து ஸ்துதிக்கவேண்டும்படியிவனை வையான். (ங)

நான்காம்பாட்டு.

அரணமாவரற்றகாலைக் கென்றென்றமைக்கப்பட்டார் * இர ணங்கொண்டதேப் பராவரின்றி யிட்டாலுமஃதே* வருணித்தென் னேவடமதுரைப் பிறந்தவன்வண்புகழே* சரணென்றுய்யப் போகி லல்லாலில்லை கண்டீர்சதிரே. (ச)

ப:— அநந்தரம், ஆபத்துக்குதவுவர்க வைத்தவர்களும அவ்வவஸ்த்தையிலுதவார்கள்; அபேக்ஷாநிரபேக்ஷமாக வவதரித்து உபக ரிக்கு மவன் குணங்களே ரக்ஷகமாமதொழிய, வேறுகோளில்லை யென்கி றார்.

(இ-ள்.) அற்றகாலைக்கு-கைம்முதலற்றகாலத்துக்கு, அரணமாவர்- புகலிடமாவர், என்றென்று-என்று பலகாலுமநுஸந்தித்து, அமைக்கப் பட்டார் - அர்த்தாதிகளாலே வசீகரிக்கப்பட்டார், இரணம் - கடவது, கொண்ட- கொண்டாரோபாதி, தேப்பராவர் - துச்சராய்ப் போவர்கள், இன்றியிட்டாலும் - நாமாக்காதொழியிலும், அஃதே - அவருடையவுத வாமையேவசித்தம், வருணித்து-க்ருதக்நப்ரகாரம்சொல்லி, என்னே - என்னப்ரயோஜநமுண்டு, வடமதுரை- வடமதுரையிலே, பிறந்தவன் - பிறந்தவனுடைய, வண்- நிர்ஹேதுகோபகாரகமான, புகழே-சீலஸௌ லப்யாதிகுணங்களையே, சரண் - ரக்ஷகம், என்று-என்றநினைத்து, உய்ய பிழைத்து. போகிலல்லால் - போமதொழிய, வேறு, சதிர் - சதிர்பாடு, இல்லை - இல்லை.

சதிராவது - அநாயாஸேந பலம்பெறலாம் ப்ரவ்ருத்தி, இன்றியிட் டாலும் - அவர்கள் நசித்தாலு மென்றுமாம், தேப்பர்- தப்ராராய், துச்ச ரென்றபடி. (ச)

ஆறு:— (அரணமாவர்) த்ரவ்யதாநாதிகளாலே யாபத்துக்கு பந்துக்களை ஸ்பாதித்துவைத்தால், அவர்களுமாபத்துவந்தால் க்ரு தக்நரா யநுபக்ருதரைப்போலேயுதவார்; ஆதலால், அவர்களைவிட்டு உபகாராபேக்ஷனன்றிலேவடமதுரையிலேவந்துபிறந்து ஆபந்நரை ரக்ஷிக்கும் ஸ்வபாவனானவனுடையகல்யாணகுணங்களை ஶரணமாகப் பற்றுங்கோள், அதுவேசதிரென்கிறார்.

ஈடு; அவ:—சிலரை ஆபத்ஸகரென்று அர்த்தாதிகளாலேகெடு நாளாச்ரயித்தால், ஆபத்துவந்தவாறே கண்ணற்ற உபேக்ஷிப்பர்கள்; நிர்ஹேதுகமாக வந்தவதரித்து ஆபத்ஸகனானவனே யாச்ரயணீய னென்கிறார்.

(அற்றகாலைக்கு-அரணமாவர்-என்றழைக்கப்பட்டார்) கைம்முதலற்றகாலைக்கு ரக்ஷகனாவானொருவன் வேணுமென்று பலகாலு மநுஸந்தித்து, தனக்கு இயற்றியுள்ளகாலத்திலேபச்சையிட்டாச்ரயித்து, தனக்காபாச்ரயமாகச் சமைத்துவைத்தவர்கள்.

இப்படி அர்த்தாதிகளாலே வசீகரிக்கப்பட்டவர்கள் ஆபத்துக்குதவும்படி யென்னென்னில் (இரணங்கோண்டதேப்பராவர்) இவனிட்டபச்சையை யிவனென்று செய்தானாகநினைத்திருக்கையன்றிக்கே, தங்களுக்கு ப்ராப்தமானதை வாங்கினாராய், இவனுக்கியற்றியின்றிக்கே பச்சையிடாதநாளைக்கும் "நமக்கிட்டிலன்" என்று வெறுத்து, இப்படி கொடுத்தது வாங்கினோராதி புல்லியராம்படியையுடையராவர். தேப்பர்-தப்பர். சபரரென்றபடி. (இன்றியிட்டாலு மஃதே) பச்சையிட்டாச்ரயியாவிடிலு மாபத்துவந்தால் கைவிடுவாரைக் கிடைக்கும். ஆபத்துவந்தால் கைவிடுவார்க்குப் பச்சையிட்டாச்ரயிக்க வேண்டாவே; அன்றிக்கே, இப்படியே இப்பச்சையிட்டவன் "நமக்கு ரக்ஷகன்" என்றாச்ரயியாநிற்கச்செய்தே, நடுவே அவன்முடிவது, அப்போதும் கீழ்ச்சொன்னதுவேபலிதமாமித்தனை

(வருணித்தேன்னே) உபகரித்தார் திறத்திலே யபகாரம் பண்ணுவார்படியை யநுஸந்தித்துவெறுத்து "வருணித்தேன்னே" என்கிறார். இளையபெருமாள், கைகேயியுடைய படிகளை யநுஸந்தித்து, (க) "க்ருதகாமா ஸகாமா ஸ்ரீ க்ருநோயஸ்நு ராஜ்யகாமி நீ - ஆத்மகாமா ஸதாசண்டீ க்ரோதநா ப்ராஜ்ஞமாநிநீ" என்றாப்போலே சிலவற்றைச் சொல்ல; வாராய்பிள்ளாய், நீதானிவையெல்லாஞ்சொல்லுகிறது நடுவிலாய்ச்சியையே, (உ) "நதேம்பா மத்யமா தாத கர்ஹிதவ்யா கதஞ்சந - தேம்பாமத்யமா தாத கர்ஹிதவ்யாகதஞ்சந" ஒருபடியாலும் நீயவளை யிவ்வார்த்தை சொல்லக்கடவையல்லை [தாமேவ] வேணுமாகில் கைகண்டமருந்தைச் செய்வபாராய். [இக்ஷ்வாகு நாதஸ்ய - இக்ஷ்வாகு நாதஸ்யபரதஸ்ய] ஐயரோபொசட்டு

(க) ரா-அயோ-எக-கo (உ) ரா-ஆர-கசு-ங எ-

முடிந்துபோனார்; நாம்பொகட்டுப் போந்தராஜ்யத்தை யிக்குடியில் மர்யாதை குலையாதபடியாக நோக்கிக்கொண்டு கிடந்தபிள்ளை-பரதனன்றோ விக்குடிக்குநாதன். [ஹா [illegible] - பரதஸ்ய கதாம் குரு] நாநீர்வரும்படியானவார்த்தை சொல்லப்பாராய்.

ஆக, உபகரித்தார் விஷயத்திலே அபகாரமாக நினைத்திருப்பார்படி யநுஸந்தித்து, இவ்வர்த்தத்தைக்கடந்து வர்ணிக்கிறவித்தால் ப்ரயோஜநமென், பச்சையிட்டலையாதவன்று யபேக்ஷித காலத்திலே வந்துதவுவா னொருவனுண்டு, அவனையாச்ரயித்துப் பிழைத்துப்போகப்பாருங்கோள் (வடமதுரையித்யாதி) ஒருவரபேக்ஷியாதேயிருக்கச்செய்தே. இவற்றினுடைய ரக்ஷணார்த்தமாகத்தானேவந்து ஸ்ரீமதுரையிலேயவதரித்தவனுடைய நிர்ஹேதுகோபகாரகமான ஸௌசீல்ய ஸௌலப்யாதி கல்யாணகுணங்களை நமக்கு ரக்ஷகமென்று உஜ்ஜீவித்துப் போகையொழிய. (இல்லைகண்டீர்சதிரே) நெற்றிபெருத்து, பலமொன்று மின்றிக்கே யிருக்குமென்னுமது - இனிப்பிறே. நெற்றியல்பமாய், பலம்கனக்கப்பெறுமதிறே - சதிராவது. * நமோவென்னலிறே நெற்றி; * சமன்கொள் வீடிறே பலம். (௪)

ஐந்தாம்பாட்டு.

சதிரமென்று தம்மைத்தாமே சம்மதித்தின்மொழியார் * மதுரபோகந் துற்றவரே வைகிமற்றேன்றுறுவர் * அதிர்கோள் செய்கையசுரர்மங்க வடமதுரைப்பிறந்தாற்கு * எதிர்கோளாளா யுய்யிலல்லாலில்லைகண்டீரின்பமே. (௫)

ப:—அநந்தரம் தங்களுக்கு போக்யதயா ஸ்வீக்ருதைகளான ஸ்த்ரீகளுமுதவாதபடிக்லேசிப்பார்;க்லேசநிவர்த்தகனான க்ருஷ்ணனை அபிகமநம்பண்ணி யாச்ரயிக்குமதொழிய வேறுஸாதநமில்லையென்கிறார்.

(இ-ள்) சதிரம் - அபிமதவிஷயத்தைவசீகரிக்கவல்ல சதிரையுடையோம், என்று - என்று, தம்மை-தங்களை, தாமே - தாங்களே, சம்மதித்து - ஸம்வதித்துக்கொண்டு, இன் - ப்ரமுகஸரஸமான, மொழியார் - வார்த்தையையுடையரான ஸ்த்ரீகளுடைய, மதுரம்-இனிதான, போகம் போகத்தை, துற்றவரே-பூர்ணமாகவநுபவித்தவர்களே, வைகி -கா

லாந்தரத்திலே. அவர்கள், மற்றொன்று-அவமாநாதிகார்யமான விபரீத பலத்தை, உறுவர் - பெறுவர், லோகத்துக்கு, அதிர்கொள் - மிகவுமதிர்த்தியை விளைப்பிக்கையே, செய்கை - ஸ்வபாவமாகவுடைய, அசுரர் - அஸுரர்கள், மங்க - நசிக்கும்படி, வடமதுரை-வடமதுரையிலே, பிறந்தாற்கு - அவதீர்ணனான க்ருஷ்ணனுக்கு, எதிர்கொள் - அபிகமநகர்த்தாக்களான, ஆளாய் - சேஷபூதராய்க்கொண்டு, உய்யிலல்லால் உஜ்ஜீவிக்கிலல்லது, வேறு, இன்பம் - நிரதிசயஸுகம், இல்லை - இல்லை.

ஆறு:—(சதிரமென்று) சதிராகவாழா நின்றோமென்று தங்களைத்தாங்களேயிசைந்து, இனியபேச்சுக்களையுடைய ஸ்த்ரீகளுடைய மதுரமான போகங்களை புஜித்தவர்களே, புஜிக்கைக்கீடான யோக்யதைகுன்றினவாறே அவர்களாலே மிகவும்பரிபவிக்கப்படுவர்; லோகமெல்லாமதிரும்படியான ப்ரவ்ருத்திகளையுடைய வஸுரர் மங்கும்படியாக வடமதுரைப் பிறந்தாற்கு ஸ்வாகதாதிகளைப்பண்ணியெதிர்கொள்ளும்படியாரா யுப்யிலல்லால் வேறு ஸுகமில்லையென்கிறார். (ரு)

ஈடு: அவ:—தங்களைப் பெறுவிடில் தரிக்கமாட்டாதபடி ஸங்க்தைகளான ஸ்த்ரீகளாலே யாபத்துவந்தாலிகழப்படுவர்; ஆனபின்பு ஏகப்ரகாரமாக ஸ்நிக்தனானவனை யாச்ரயிக்குமதொழிய வேறுஸுகமுமில்லை யென்கிறார்.

(சதிரமென்று) சதிராகவாழாநின்றோமென்று. "நாம்சதிரர், நாம்சதிரர்" என்றாயிற்று இருந்ததேகுடியாகத் தந்தாமைநினைத்திருப்பது. (தம்மைத்தாமேசம்மதித்து) தங்களைத்தாங்களேசம்மதித்து. தாங்களேயிசைந்து. அல்பமியற்றியையுடையனாயிருக்குமவன், "அங்கேகம்மை 'சதிரன்' என்று நினைப்பிட்டுக்கொடுவர, நாமதிலே மேலெழுத்திட்டுத்தர" என்னும்; இவ்வஸ்தஸ்யப்ரவ்ருத்திக்கு வேறுஸஹகரிப்பாரைக் கிடையாதே; தானேயிறேயுள்ளது. (இன்மொழியார்) இனிய பேச்சையுடையராயிருந்துள்ளவர்களுடைய. அசவாய் மயிர்க்கத்தியாயிருக்கச் செய்தேயும், ப்ரணயஸரஸமானபேச்சாலே வஸீகரிக்கவல்லவர்கள்.

(மதுரபோகந்துற்றவரே) மதுரமானபோகத்தை, அவர்களுடனே நெருங்கபுஜித்தவர்களே. (வைகிமற்றொன்றுறுவர்) போகத்துக்குப்பாங்கான யௌவநமும், அதுக்குக்கைம்முதலான த்ரவ்ய

மும்போமே; பின்னையுமாசைமாறாதே; அவ்வோவிடங்களிலே பேயிருக்கும் வருவார்க்கும் விரோதியாய் முற்பட, மணிச்சிலே நாலிரண்டுபண்ணை "போகலாகாதோ" என்பர்களே; "போகின்றோம் போகின்றோம்" என்றிருக்குமே போகாதே; பின்னை வெள்ளாட்டினை விட்டுப் பரிபவிப்பர்கள்; அதுக்கும் போகானே; பின்னை யானையிட்டெழுப்பிப்பார்ப்பர்கள்; அதுக்குமெழுந்திரான்; பின்னைக்காலைப்பற்றியிழுப்பர்கள், இவன் தூணைக்கட்டிக்கொள்ளும்; இப்படியால் அவர்களாலே பரிபூதராவர்கள். விபாகத்தில் பிறக்கும் பரிபவத்தை யநுஸந்தித்து வெறுத்து, அது தன்வாயாலருளிச் செய்யமாட்டாமையாலே (மற்றொன்று) என்கிறார். அங்ஙனன்றிக்கே, விபாகத்தில் நன்மையோடே தலைக்கட்டும் விஷயத்தைப்பற்றி யுஜ்ஜீவித்துப் போகப்பாருங்கோளென்கிறார்.

(அதிரித்யாதி) சேதநருடைய நெஞ்சுகளதிரும்படியான ப்ரவ்ருத்திகளையுடையவஸுரவர்க்கம் முடியும்படி வடமதுரையிலேவந்து திருவவதரித்தவற்கு. (எதிர்கோளாளாயுய்யலல்லால்) ஆபிமுக்யம் பண்ணுமடியாரா யுஜ்ஜீவிக்குமதொழிய. அவனுக்கு நாம்செய்ய வேண்டுவதிது-அவன்தானே மேல்விழாநின்றால், விமுகராகாதொழியுமத்தனையே வேண்டுவது.

(௧) "[illegible]-அந்பத்பூர்ணகபாம்கும்பாத்" பாண்டவபக்ஷபாதியாயிருக்கிற க்ருஷ்ணன் வாராநின்றான், அவனுக்கு நாட்டையுங்கொடுத்து, பொன்னையுங்கொடுத்து, நமக்காக்கிக்கொள்ளுகிறோமென்றாப்போலே, த்ருதராஷ்ட்ரன் சிலசொல்ல; அதுக்குக்கருத்து - இவற்றாலே அவனைப் படையறுத்துக் கொள்ளுகிறேனென்றாயிற்று. அவன்றான் நெஞ்சாலே நினைப்பதொன்றாய், வாயாலே வ்யவஹரிப்பதொன்றாயிறே யிருப்பது; இத்தையறிந்த ஸஞ்ஜயன், வருகிறவன் அங்ஙனொத்தவனல்லன்காண், அவனுக்குவேண்டுவது இதில்லையென்கிறான்; தான் குடிக்குந்தண்ணீரைக் குளிரவைக்கக்கடவனே, அத்தை அவன் வருகிறவழியிலே வாசலிலேவைக்கவமையும். தன் க்ருஹத்திலே அதிதி வந்து புகுந்தால் கால்கழுவுவதாக ஸாமாந்ய ஶாஸ்த்ரம் விதித்தது; அதுக்குமேற்பட அவனைவாசிக்கு விசேஷித்துச் செய்யவேண்டுவதில்லை [[illegible] - அந்பத்பாதாவநேஜநாத்] அந்தக்கு

(௧) பார-உத்யோ-அக-

டத்தில் நீரையிட்டு அவன் திருவடிகளை விளக்க வமையும், மற்று வேண்டா. [அந்யத்ர ஸம்ப்ரஸ்நாத் - அந்யத்குமலஸம்ப்ரஸ்நாத்] நெடுந்தூரம் வந்தவனை (க) "நடந்தகால்கள் நொந்தவோ" என்ன ப்ராப்தமிறே; "நவெுபூக்ஷித: நசேச்சதி" உண்டவனுக்கு உண்ணப் போகாதிறே; அப்படியே இவனுடைய உத்யோகத்திலே அவனுக்கு வயிறுநிறையும்; பின்பவன் செய்யுமவையடைய மிகையாயிருக்கும்.

(இல்லைகண்டீரின்பமே) து:க்கங்களிலே சிலவற்றை ஸுகமென்று ப்ரமிக்கிறவித்தனைபோக்கி, இதொழிய ஸுகரூபமாயிருப்பதொன்றில்லை. உயிர்க்கழுவிலே யிருக்கிறவனுக்கு பிபாஸையும் வர்த்தித்து, தண்ணீருங்குடித்து, தாஹமும் ஶமித்தால் பிறக்கும் ஸுகம்போலேயிருப்பதொன்றிறே ஸம்ஸாரிகளுக்கு போகத்தால் பிறக்கும் ஸுகமாகிறது; ஆடுகிறபாம்பின் நிழலிலே யொதுங்கி, "அதள்ளிக்கொள்ளும்" என்றறியாதே "வெய்யிலைத்தப்பப்பெற்றோம்" என்று ஹ்ருஷ்டராயிருப்பாரைப்போலேயிறே விஷயாநுபவங்களாலே களித்திருக்கிறவிருப்பிவனுக்கு. (௫)

ஆறும்பாட்டு.

இல்லைகண்டீரின்பமந்தோ வுள்ளது நினையாதே * தொல்லையார்களெத்தனைவர் தோன்றிக்கழிந்தொழிந்தார்* மல்லைமூதூர்வடமதுரைப் பிறந்தவன்வண்புகழே* சொல்லியுய்யப் போகிலல்லால் மற்றொன்றில்லைசுருக்கே. (௬)

ப:—அநந்தரம், புருஷார்த்த பரிஜ்ஞாநமில்லாமல் முடிந்துபோகாதே க்ருஷ்ணனுடைய வாநந்தஜநகமான குணகீர்த்தநத்தைப்பண்ணிலல்லது வேறுஉஜ்ஜீவநார்த்தமாயிருப்பதொரு ஸங்க்ரஹமில்லை யென்கிறார்.

(இ-ள்.) (உ) "ஸர்வம் து:கமயம் ஜகத் - ஸர்வம்து:கமயம்ஜகத்" என்கிற ஜகத்திலே, இன்பம் - ஸுகரூபமாயிருப்பதொன்று; இல்லைகண்டீர்-இல்லைகிடீர்; அந்தோ! - ஐயோ!, உள்ளது - ஸர்வகாலவர்த்தியான வாநந்தியாயுள்ள பகவத்ஸ்வரூபத்தை; நினையாதே - அநுஸந்தி

(க) தி-ச-வி-௬௧-

யாதே, தொல்லையார்கள் - பழையகாலத்திலுள்ளார், எத்தனைவர் - எத்தனைபேர், தோன்றிக்கழிந்தொழிந்தார் - ஜந்மமரணங்களே யாத்ரையாய்ப்போனார், ஆனபின்பு; மல்லை-நிரதிஶயஸம்பத்ஸம்ருத்தமாய், மூதூ-வாமநாவதாரந்தொடங்கி தத்ஸம்பந்தம் மாறாமல் பழையதான, ஊர்-ஊராயிராநிற்கிற, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தவன் - பிறந்தவனுடைய, வண்-ஆஹ்லாதஜநகமான, புகழ்-குணங்களை, சொல்லி-கீர்த்தித்து, உய்யப்போகலல்லால் - உஜ்ஜீவித்துப்போமதொழிய, மற்று-வேறு, சுருக்கு-ஸங்க்ரஹேண சொல்லலாவது, ஒன்று ஒன்றும், இல்லை - இல்லை. (௬)

ஆறு:-- (இல்லைகண்டீர்) "எம்பெருமானல்லது வேறுபுருஷார்த்தமில்லை" என்னு மிவ்வுண்மையை யுணராதே யெத்தனைவர் இங்ஙனேமுடிந்துபோனார்; நீங்களு மிங்ஙனே நசியாதே, ஆஶ்ரிதர்க்காத்மதாநம் பண்ணுகைக்காகவந்து பிறந்தருளினவனுடைய வௌதார்யத்தையே சொல்லியுய்யுங்கோள்; வேறுய்ய விரகில்லை, இது ஸங்க்ஷேபேண சொன்னேனென்கிறார். (௬)

ஈடு; அவ;—நிரதிஶயபுருஷார்த்தத்தை யுணராதே முன்புள்ளாரநேகர் முடிந்துபோனார்கள்; அப்படியே நீங்களும் நசியாதே, ஆஶ்ரிதர்க்காக வவதரித்து ரக்ஷிக்குமவனையே யாஶ்ரயிக்குமத்தனையல்லது, ஆத்மாவுக்கு ஹிதமில்லையென்கிறார்.

(இல்லைகண்டீரின்பம்) (க)"ஸவ-ம்ஓ-ஃ:வமயம்ஜகஜ-ஸர்வம் துஃகமயம்ஜகத்" என்கிற ஸம்ஸாரத்தில், கெடுவீர்காள், ஸுகலேஶமுமில்லைகிடீகோள். (அந்தோ!) போக்தாக்களான வுங்களுக்கு நானுபதேசிக்கவேண்டுவதே!. ப்ரத்யக்ஷமுமகிஞ்சித்கரமாயிருக்க, உபதேசிக்கிறாரிறே. (உள்ளதுநினையாதே) உண்டான புருஷார்த்தத்தை நினையாதே. "ஸுகரூபமுமாய் நித்யமுமாயிருப்பது பகவத்விஷயம்" என்றநுஸந்தியாதே, உண்டானவில்லாமையை நினையாதேயென்று கீழேகூட்டவுமாம்.

(தொல்லையித்யாதி) பழையராயிருப்பாரெத்தனைபேர், உத்பத்தியானது விநாஶத்தோடேகூட்ட, நடுவுள்ளநாள் புருஷார்த்தத்துக்குடலன்றிக்கேகழிந்துபோனார். சிலபூண்டுகளுண்டாய், தோன்றின விடந்தன்னிலே நின்று தீய்ந்துபோவன; அப்படியே.

(மல்லையித்யாதி) ஸம்ருத்தியையுடைத்தாய், அவனுக்கென்று மொக்கக் கலவிருக்கையாய்ப்போருகிற ஸித்தாஶ்ரமமாய், ஸ்ரீவாமந

னெழுந்தருளியிருந்தும், ஸ்ரீமத்ருக்காழ்வான் படைவீடுசெய்தும், க்ருஷ்ணன் வந்தவதரித்தும், இப்படி பகவத் ஸம்பந்தம் மாறாதே போருகிறதேசமாயிற்று. (முதூர்) பழையதாய் வருகிறவூர்; அங்கே வந்தவதரித்தவனுடைய வுதாரமான புகழையே வாயாலே சொல்லியுஜ்ஜீவித்துப் போமதொழிய. (மற்றொன்றில்லைசுருக்கே) புறம்பேநின்று பரக்கக்காடு கைக்கலாவதுண்டித்தனைபோக்கி, சுருங்க வொருபாசுரத்தாலே சொல்லலாவதில்லை. (௬)

ஏழாம்பாட்டு.

மற்றொன்றில்லை சுருங்கச்சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும்* சிற்றவேண்டாசிந்திப்பே யமையுங்கண்டீர்களந்தோ* குற்றமன்றெங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான் * குற்றமில் சீர்கற்றுவைகல்வாழ்தல் கண்டீர்குணமே. (எ)

ப:—அநந்தரம், சிந்தாமாத்ரஸாலபனை க்ருஷ்ணகுணாநுஸந்தானம்பண்ணி, காலதத்வமுள்ளதனையும் வாழ்கை ப்ராப்தமென்கிறார்.

(இ - ள்.) மற்று - வேறு, ஒன்று - வக்தவ்யமாயிருப்பதொன்று, இல்லை இல்லை, சுருங்க - ஸங்க்ரஹேண, சொன்னோம் - உங்களுக்குச் சொன்னோம், மா - பெரிய நிலத்து-பூமியிலே, எவ்வுயிர்க்கும்-எல்லாவாத்மாக்களுக்கும், சிற்றவேண்டா -பரக்கவாயாஸப்படவேண்டா, சிந்திப்பே-சிந்தாமாத்ரமே, அமையும்-அமையும். கண்டீர்கள் (௧) "ஆயாஸஸ்ஸ்மரணேகோஸ்ய)-ஆயாஸஸ்ஸ்மரணேகோஸ்ய" என்று ப்ரஸித்தமன்றோ; அந்தோ! - ஐயோ!; ஸாதமார்க்கம் பலவ்யாப்தமல்லவாகிலும், குற்றம்-அநர்த்தகரம், அன்று-அல்லவே, இப்படி ஸ்மர்த்தவ்யமேதென்னில்; எங்கள் - ஆஸ்ரிதபவ்யரொய் பெற்றம் - அஜ்ஞமானபசுக்களுக்கு. தாயன்-ரக்ஷகமாய்க்கொண்டு, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தான் - அவதீர்ணனானவனுடைய, குற்றமில் - அபேக்ஷாநிரபேக்ஷமாக ஆஸ்ரித ஸம்ரக்ஷணைக ப்ரயோஜநமான, சீர் - குணங்களை, கற்று - உபதேசமுகத்தாலே யிப்படி வ்யுக்பத்திபண்ணி, வைகல் - (௨ "ஸவாநுகாலாநு ஸம்ஸ்ம்ருதே-ஸர்வாங்காமாந்ஸமஸ்நுதே" என்கிறபடியே யாவதாத்மபாவி குணாநுபவம்பண்ணி, வாழ்தல்கண்டீர் - வாழ்கைகிடிகோள். உங்களுக்கு குணம் - ஸ்வபாவமாகையும், ப்ராப்தமும்.

(௧) வி பு-௯-௬௭ எஅ- (௨) தை-ஆ ௨-௧௫-

ஆறு:—(மற்றொன்றில்லை) இச்சுருக்கை மிகப்பரவாமே வ்யக்தமாக்குகிறார் வேறுவக்தவ்யமில்லாதபடி ஸங்க்ஷேபேணாத்மோஜ்ஜீவநோபாயத்தை யெல்லார்க்குஞ்சொன்னோம். இதுக்கதிகாரிநியமமும், காலநியமமும், தேசநியமமுமில்லை "இவ்வுபாயந்தான் துஷ்கரம்" என்று குறைவுபடவும்வேண்டா, ஸ்ம்ருதிமாத்ரமேயமையும். இது நிஷ்பலமாகிலோவென்னில்; இது செய்தால் முன்னமநர்த்தமில்லையிறே. ஆகலால், ஆஸ்ரிதர்க்காக வடமதுரையிலே பிறந்தானை பசுமேய்க்கு மாயனுடைய ஹேயப்ரத்யநீகமான கல்யாணகுணங்களை யநுஸந்தியுங்கோள், இதுதானே அமையுமென்னும்படி போக்யமாய், யுக்தமுமாயிருக்குமென்கிறார். (எ)

ஈடு ; அவ:—பகவத்ஸமாஸ்ரயணத்தினுடைய வெளிமையையுமினிமையையு மருளிச்செய்கிறார்.

(மற்றொன்றில்லை) இத்தோடொக்க வேறெண்ணலாவதில்லையென்னுதல், இப்போதித்தைச்சொல்லி வேறொருபோது வேறொன்றைச்சொல்லுகிறோமென்றிருக்கவேண்டா வென்னுதல். (சுருங்கச் சொன்னோம்) இது தன்னைப்பரப்பாச்சொன்னோம். ப்ரதிபத்திக்கு விஷயமாம்படி சொல்லுகையன்றிக்கே, ஸங்க்ரஹமாகச்சொன்னோம்; (மாநிலத்து) இதுக்கதிகாரிகள் ஸம்ஸாரத்திலே. இவ்வர்த்தத்துக்கண்ணியார் பரமபதத்திலுள்ளாராகிலும், உபதேசத்துக் கதிகாரிகள் ஸம்ஸாரத்திலுள்ளாரென்கை. (எவ்வுயிர்க்கும்) இது அதிக்ருதாதிகாரமன்று; ஸர்வாதிகாரம்.

(சிற்றவேண்டா) ஆயாஸிக்கவேண்டா. சிற்றுதல்- சிதறுதலாய், பரக்கவேண்டாவென்கை. ஒருவ்யாபாரம்வேண்டாவென்றபடி. (சிந்திப்பேயமையுங்கண்டீர்கள்) உத்திரபேக்ஷமான சிந்தாமாத்ரமேயமையுங்கிடீர்கோள். (அந்தோ) "நற்சார்க்குக்கிட்டினதனையும் கைவிடுகைக்குடலாவதே!" என்று - அந்தோ! என்கிறார்.

(குற்றமன்று) கீழ்ச்சொன்னநன்மையொன்றுமில்லையேயாகிலும், இதுசொன்னோமுங்கள்தலையில் முந்தறமுன்னமிடிவிழாது. (க) - [illegible] யோவஸ்ாதஸ்ஸஉச்யதாம்ப்ராதர்த்தேவேதிக்ருஷ்ணேதி] இவ்வுபாயத்துக்குப் பலமில்லையாறுலும், இதுதானே ப்ரயோஜநம்போரு

பிறப்பதற்கு முன்னே பெற்றத்தாயன்போலேகாணும். வந்தவதரிப்பதாக ஸங்கல்பித்ததில் புரையற்றிருந்தபடி. ஆஸ்ரிதர்க்காக வடமதுரைப்பிறந்தானை பசுமேய்க்குமாயனென்னுதல். பெற்றத்தாயன் - பசுமேய்க்குமிடையன்.

(குற்றமில்சீர்கற்று) ஹேயப்ரத்யநீகமான கல்யாணகுணங்களை யப்யஸித்தென்னுதல்; பிறப்பிலும் சேஷ்டிதங்களிலும் புரையற்றிருக்குமென்னுதல் (௧) "ஐஷம்வொவா நூவொஜாதஃ- அஹம்வேக் பாந்தவோஜாதஃ"(வைகல்வாழ்தல்கண்டீர்குணமே) கற்பதொருமகாலாய், பின்பு வாழ்ச்சி நித்யமாயிருக்குமாயிற்று; இதொன்றுமே குணம்; இதொழிந்ததடையவப்ராப்தம். (எ)

எட்டாம்பாட்டு.

வாழ்தல்கண்டீர் குணமிதந்தோ மாயவனடிபரவி * போழ்து போகவுள்ளகிற்கும் புன்மையிலாதவர்க்கு * வாழ்துணையா வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே* வீழ்துணையாப் போமிதனில்யாதுமில்லைமிக்கதே. (அ)

ப:—அநந்தரம், அநந்யப்ரயோஜநரான அதிகாரிகளுக்கு உஜ்ஜீவந ஹேதுவான க்ருஷ்ணனுடைய குணங்களை யபிநிவேசித் தநுபவிக்குமதொழிய, இதில்விஞ்சினதொருவாசியில்லையென்கிறார்..

(இ-ள்.) வாழ்தல் - வாழுகிற, இது - இதுவன்றோ, குணம் - எல்லார்க்கும்குணமாவது, கண்டீர்- இதுலோகப்ரஸித்தமன்றோ, அந்தோ- ஐயோ! வாழும்ப்ரகாரமறிகிறதில்லையே, எதென்னில்; மாயவன் - ஆஸ்சர்யகுணசேஷ்டிதனான ஸர்வேஸ்வரனுடைய, அடி - திருவடிகளை, பரவி - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸ்தோத்ரம்பண்ணி, போழ்துபோக - காலக்ஷேபம்பண்ணவேணுமென்று, உள்ளகிற்கும் - நினைக்கவல்லவர்களாய் புன்மை-ப்ரயோஜநாந்தரஸம்பந்தமாகிறபுல்லிமை, இலாதவர்க்கு- இல்லாதவர்களுக்கு *வாழ் ஸ்வரூபாநுரூபமானவாழ்ச்சிக்கு, துணையா- உபாயபூதனைக்காக, வடமதுரை - வடமதுரையிலே. பிறந்தவன் - வந்துபிறந்த க்ருஷ்ணனுடைய, வண்-ஆஸ்ரிதாநுபாவ்யமான, புகழே- குணங்களையே, வீழ் - அபிநிவேசவிஷயமான. துணையா-போகஸஹா

(க) வி-பு ௫ ௧௩-௧௩.

யமாய்க்கொண்டு, போம் - நடக்கிற, இதினில் - இதில், மிக்கது - விஞ்சினது யாதும் - ஏதேனுமொருவாழ்வும், இல்லை - இல்லை.

வீழ்துணை - விழுமிய துணையென்றுமாம். (அ)

ஆறு:— (வாழ்தல்) தன்னுடைய கல்யாணகுணாநுஸந்தானைகாத்மதாரணரான சீரியர்க்கு வாழ்துணையாக வடமதுரையிலேவந்துபிறந்தருளின ஸர்வேஸ்வரனுடைய கல்யாணகுணாநுஸந்தாநத்துக்குமேற்பட்ட புருஷார்த்தோபாயமில்லையென்கிறார். (அ)

ஈடு; அவ:—அவதாரத்துக்கு நிதாநத்தைச்சொல்லி, அவனையே ரக்ஷகனாகப் பற்றுமதொழிய, வேறுவிலக்ஷணமாயிருப்பதோருபாஸ்ரயமில்லையென்கிறார்.

(வாழ்தல்கண்டீர்குணமிது) அவன்குணங்களை யநுஸந்தித்து வாழுமிதுவே கிடீர்காள்யுக்தம். (அந்தோ) கரும்புதின்னக் கூலிகொடுப்பாரைப்போலே, இவர்களை யபேக்ஷிக்கவேண்டுவதே யெனக்கு. வாழ்ச்சியுங்களதாயிருக்க, இரந்துதிரிவேன் நானுவதே!. (மாயவனித்யாதி) ஸௌந்தர்யசீலாதிகளாலாஸ்சர்யபூதனாயிருந்துள்ள வஸ்துவினுடைய குணஜிதராய், ப்ரீதியாலே அவன்திருவடிகளை யக்ரமமாகவேத்தி, அத்தாலேகாலக்ஷேபம்பண்ணுவதாக வத்யவஸிக்கவல்லரான நன்மையையுடையவர்கள்-சீரியவர்கள், அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு. (௧) * தெரித்தெழுதிவாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போதுபோக்குமவர்கள். “ இத்தமாயவனடிபரவுகை - சூதுசதுரங்கத்தோபாதி காலக்ஷேபமாக்குகிற புன்மையில்லாதவர்கள் ” என்று பட்டர்.

(வாழ்துணையித்யாதி) புன்மையுடையவர்களை மகப்படக்கழித்து அதுவேபோதுபோக்காக நின்றபின்பு, முதலிலே அதுகுடிபுகுராதவனுக்கு ஆஸ்ரிதஸம்ஸ்லேஷமொழிய வேறுப்ரயோஜநமில்லையிறே. அவர்கள் தன் குணங்களையநுபவித்து வாழ்கைக்குத்துணையாக வடமதுரையிலேவந்தவதரித்தவனுடைய; அவதாரப்ரயோஜநம் (௨) “ பரித்ராணாயஸாதூநாம் ” என்றிறேயிருப்பது. (வண்புகழித்யாதி) அவனுடைய கல்யாணகுணங்களையே யாசைப்படுந்துணையாகப் பற்றுமிதுவேபோக்கி (வீழ்துணை) ஆசைப்படுந்துணை (௩) “ தாம்வீழ்வார் தம்வீழப்பெற்றவர் ” என்னக்

(௧) ௪ திருவ ௯௩- (௨) கீ- (௩) குறள்-

கடவதிறே ஆஸ்ரயுக்கரை. (இதனில்) இதிற்காட்டில். (யாதுமில்லைமிக்கதே) இதனில் மேலாயிருப்ப தொன்றுண்டாய், "இதில்லன்று" என்னவேணுமே; இதுக்கு மேலாயிருப்பதொன்றுமில்லை.

ஒன்பதாம்பாட்டு.

யாதுமில்லைமிக்கதனி லென்றென்றதுகருதி * காதுசெய்வான் கூதைசெய்துகடை முறைவாழ்க்கையும்போம்* மாதுகிலின்கொடிக்கோள்மாடவடமதுரைப்பிறந்த* தாதுசேர்தோள்கண்ணனல்லாலில்லைகண்டீர்சரணே. (கூ)

ப:— அநந்தரம் வேறொன்றை ப்ரயோஜநமாக நினைத்தால் முன், புள்ள போகத்தையு மிழக்குமித்தனை, நிரதிஸய போக்யனான க்ருஷ்ணனையொழிய ப்ராப்யமில்லை யென்கிறார்.

(இ-ள்.) அதனில் - அதிற்காட்டில், மிக்கு -மிஞ்சின ப்ரயோஜநம்-யாதும் - ஏதேனுமொன்றும், இல்லை - இல்லை, என்றென்று - என்று பலகாலும், அது - அந்தவைஸ்வர்ய கைவல்யரூபமான ப்ரயோஜநாந்தரத்தை, கருதி - அநுஸந்தித்து, காது-காது, செய்வான்-செய்யப்புக்கு கூதைசெய்து-ஆஸ்ரயமுங் குலைந்து கூதையாய்விடுமாபோலே, கடைமுறைவாழ்க்கையும் - முன்புபோகிறஹேய ப்ரயோஜநமும், போம் - நசித்துப்போமித்தனை, ஆனபின்பு, மா - பெரிய, துகிலின் - துகில்களாலுண்டான, கொடி - கொடிகளை, கொள் - உடைய, மாடம்-மாடங்களை யுடைத்தாயிருக்கிற, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்த-அவதரித்தவனாய், தாதுசேர் - துளஸீ வைஜயந்த்யாதி மாலாலங்க்ருதமான தோள் - தோள்களையுடைய, கண்ணன்-க்ருஷ்ணனை, அல்லால்-ஒழிய, சரண் - ப்ராப்யதயா புகலிடமாவது, இல்லை - ஒன்றுமில்லை, கண்டீர் இது நிரூபகர்க்குக் கண்டுகொள்ளலாம்-

தாது - புஷ்பகேஸரம். (கூ)

ஆறு:— (யாதுமில்லை) எல்லாவற்றிலும் மேற்பட்ட புருஷார்த்தமன்றோ ஸாம்ஸாரிக துஃக்கநிவ்ருத்திரூப கைவல்யமென்று அதைப் புருஷார்த்தமென்று பற்றில், காதுபெருக்கவென்றுபுக்கு, பண்டுள்ளத்தையுங்கெடுத்துக் கூதையாக்கினபோலே, பண்டுள்ள ஸாம்ஸாரிக ஸுகத்தையு மிழக்குமித்தனை; ஆதலால், ஸ்ரீமதுரையிலே திருவவதாரம்பண்ணுகையாலே புதுக்கணித்த வழகையுடையனான கண்ணனே பரமப்ராப்யமென்கிறார். (கூ)

ஈடு-அவ:— இவனை யொழிய வேறே யொன்றை ரக்ஷகமென்று பற்றினவர்கள், பண்டு நின்றநிலையுங்கெட்டு அநர்த்தப்பட்டுப் போவார்கள்; ஆனபின்பு, இவனல்லது சரணமில்லையென்கிறார். அன்றிக்கே, கைவல்யபுருஷார்த்தத்தைச் சொல்லுகிறதாகவுமாம்.

(யாதுமித்யாதி) பகவத்வ்யதிரிக்தமா யிருப்பதொன்றைப்பற்றி "இதொழிய வேறுரக்ஷகமாயிருப்ப தொன்றுமில்லை" என்று சொல்லி, அத்தை ரக்ஷகமாகநினைத்து (க) "ஸஶ்ரோஷுஸ்ஸ்தக கஷ்ரிக-ஸமாத்தோ த்ருஶ்யதே கஶ்சித்" என்கிறப்ரதிபத்தியை யதிலேபண்ணி. (காதுசெய்வான்கூதைசெய்து) காதுபெருக்கப்புக்கு, பண்டுள்ள யோக்யதையையுங் கெடுத்துக் கூதையாக்கினாப்போலே. (கடைமுறைவாழ்க்கையும்போம்) தண்ணிதான முறைமையாலே வாழக்கடவவாழ்வுண்டு - ஸம்ஸாரத்திலே பசலுங் குட்டியுமாய் அளாய்க்குளாயாய்ப் போருமது, அதுவுங்கூடக் கெடுமித்தனை; ஆபத்திலது ரக்ஷகமாகமாட்டாது; அதின்பக்கலிலே ந்யஸ்தபரனாயிருக்கையாலே, தான்செய்துகொள்ளுமத்தனையுமிழக்கும்.

(மாதுகிலித்யாதி) கம்ஸன் வாழ்கிறானாய், அலங்காரமாகக் கட்டின கொடியை க்ருஷ்ணனுடைய வவதாரத்துக்கென்றே நினைத்திருக்கிறாராயிற்றிவர். ஶிஶுபாலன், பாணிக்ரஹணத்துக் குடலாகச் செய்த சடங்குகளடையத் தனக்குடலாக நினைத்துக்கைப்பிடித்தானிறே (தாதித்யாதி) வைஜயந்திதொடக்கமான மாலைகளாலே யலங்க்ருதமான திருத்தோள்களையுடையவன். வேறொருப்ரயோஜநந்தான் வேண்டா. (அல்லாலில்லை கண்டீர்சரணே) அவனை யொழிய வேறு ரக்ஷகமாகவல்ல தொருவஸ்துவில்லை கிடிகோள்.

கைவல்யபரமானபோது, (யாதுமித்யாதி) "இவ்வாத்மாநுபவஸுகத்துக்கு மேற்பட்டிருப்பதொன்றில்லை" என்று, அவ்வருகே பகவதநுபவஸுகமுண்டாயாகிலு மத்தையே புத்தி பண்ணிக் காதுபெருக்கப்புக்கவன், அத்தைப் பலகாலுமறுத்துவைத்து முன்புத்தை யோக்யதையுங்கூடக் கெடுக்குமாபோலே, பகவத் ஸமாஶ்ரயணத்துக்கு யோக்யமான ஸம்ஸாரத்திலே ஶப்தாதிவிஷயங்களையநுபவித்திருக்கு மத்தையு மிழக்கும்; ஆனபின்பு, ஸர்வாதிகனான க்ருஷ்ணனே பரமப்ராப்யமென்கை. (௯)

பத்தாம்பாட்டு

கண்ணனல்லாலில்லை கண்டீர்சரணது நிற்கவந்து * மண்ணின்பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தான்* திண்ணமாநும் முடைமையுண்டே லவனடிசேர்த்துய்மினோ * எண்ணவேண்டா நும்மதாது மவனன்றிமற்றில்லையே. (க௰)

ப:—அநந்தரம், தானேப்ராப்யமும் ப்ராபகமுமென்னுமிடம் நிலைநிறுத்துகைக்காக வவதரித்து பூபாரநிரஸநம்பண்ணின க்ருஷ்ணன் திருவடிகளிலே, நீங்கள் ப்ராப்ய ப்ராபகமென்று நினைத்திருக்கிறவற்றையெல்லாம் த்ருடமாக ஸமர்ப்பியுங்கோளென்கிறார்.

(இ-ள்.) கண்ணன் - க்ருஷ்ணன், அல்லால் - அல்லது, சரண் - வேறுப்ராப்ய ப்ராபகங்கள், இல்லைகண்டீர் - இல்லைகிடிகோள். அது - அந்ததன்னுடைய, ப்ராப்ய ப்ராபகபாவம், நிற்க - லோகத்திலேநிற்கைக்காகவும், மண்ணின்பாரம் - தத்விரோதிகளான வாஸுரப்ரக்ருதிகளாகிறபூபாரத்தை, நீக்குதற்கு - போக்குகைக்காகவும், வந்து - நாகபர்யங்கத்தைவிட்டுவந்து, வடமதுரை - வடமதுரையிலே, பிறந்தான் - அவதரித்தான்; ஆனபின்பு, நும் - உங்களுக்காகநினைத்திருக்கிற, உடைமை - பதார்த்தம், உண்டேல் - உண்டாமாகில், அவனடி - அவன்திருவடிகளிலே, திண்ணமா - த்ருடமாக, சேர்த்துய்மினோ - ஸமர்ப்பியுங்கோள்; இது எண்ணவேண்டா - விசாரிக்கவேண்டா, நும்மது - உங்களுடைய, ஆதும், ப்ராப்யப்ராபகரூபமான ஸமஸ்தபதார்த்தங்களும், அவனன்றி - (க) "𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌾 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌨𑌿𑌵𑌾𑌸𑌶𑍍𑌶𑌰𑌣𑌂 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍𑌗𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 - மாதாபிதா ப்ராதாநிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத்கதிர் நாராயண:" என்று ஸர்வவிதபந்துவானவனையொழிய, மற்று - வேறுஸ்வநிஷ்டமாயிருப்பதொருவஸ்து, இல்லை. (க௰)

ஆறு:—(கண்ணனல்லால்) க்ருஷ்ணனல்லது சரணில்லையென்று இங்ஙனே தன்னுடைய ரக்ஷகத்வத்தை நிலைநிறுத்துகைக்காக ஸ்ரீமதுரையிலேவந்து பிறந்தருளி, பூபாராவதரணம்பண்ணி, ஜகத்தைரக்ஷித்தருளினான்; ஆகலால், அவனேரக்ஷகன்; ஆனபின்பு உங்களுக்காக வபிமாநிக்கப்படுகிற வஸ்துக்களையு முங்களையும் அவன்திருவடிகளிலே ஶேஷத்வேந ஸமர்ப்பியுங்கோள்; உங்களுக்காக

(க) ஸுபாலோப.

திருவாய்மொழி, ௯ ப, ௧-தி, ௧௧-பா, ஆதுமில்லை வ்யாக்யானம். உரு

வபிமாநிக்கப்படுகிறவையும் நீங்களுமவனுக்கேஶேஷம், இதிலொரு ஸம்ஶயமில்லை யென்கிறார். (௧௦)

ஈடு-அவ;—தான் சரணமென்னு மர்த்தத்தை ப்ரதிஷ்டிக்கைக்காக வவதரித்த க்ருஷ்ணன் திருவடிகளை யாஶ்ரயியுங்கோளென்கிறார்.

(கண்ணனித்யாதி) க்ருஷ்ணனையொழிய வேறுசரணமாவாரில்லை யென்னுமிவ்வர்த்தம் நிலைநிற்கைக்காக, இவ்வர்த்தத்தை ஸ்தாபிக்கைக்காகவும், அதுக்குறுப்பாக பூபாரத்தைப் போக்குகைக்காகவும் திருவவதாரம்பண்ணினான்; ஆனபின்பு, நீங்களும், உங்களுடைமையென்று நினைத்திருந்தனவுண்டாகில் கடுகவவன்திருவடிகளிலே ஶேஷத்வேந த்ருடமாக ஸமர்ப்பியுங்கோள். உண்டேலென்றது - ஸ்வபக்ஷத்தாலில்லை, அவர்களுடைய வந்யதா ஜ்ஞாநத்தாலுண்டான ப்ரதிபத்தியாலேவந்தன வுண்டாகிலென்கை.

(எண்ணவேண்டா) "இதுதான் அவனதோ, நம்மதோ" என்று விசாரிக்கவேண்டா, உங்களோடு உங்களுடைமையோடுவாசியற அவனுக்கேஶேஷம். (மற்றில்லையே) வேறில்லை. அன்றிக்கே, உங்களுடையபரத்தில் கர்த்தவ்யாம்ஶமுடைய உங்கள் தலையிலே கிடக்கிறதல்ல, எல்லாம் அவன்பக்கலிலே கிடக்கிறதென்னுதல். (மற்றில்லை) பலஸித்திக்கீடான ஸாதநமும் அவனையொழியவில்லை, ஸமிதைபாதி, ஸாவித்ரீபாதியாக நீங்களுமொருதலை கூட்டுப்படவேண்டுவதில்லை. (௧௦)

பதினொன்றாம்பாட்டு.

ஆதுமில்லைமற்றவனிலென்றது வேதுணிந்து * தாதுசேர்தோள்கண்ணனைக் குருகூர்ச்சடகோபன் சொன்ன * தீதிலாதவொண்டமிழ்களிவை யாயிரத்துளிப்பத்தும் * ஓதவல்லபிராக்கள் நம்மையாளுடையார்கள்பண்டே. (௧௧)

ப—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக, இதுகற்றவர்களைப் பற்றவுண்டான ஸ்வஶேஷத்வத்தை யருளிச்செய்கிறார்,

(இ-ள்.) அவனில் - அவனையொழிய, மற்று - வேறு, ஆதும்-ப்ராப்யப்ராபகமாயிருப்பதொருவஸ்துவும், இல்லை - இல்லை, என்றதுவே-

என்னுமத்தையே, துணிந்து-அத்யவஸித்து, தாதுசேர் - மாலாலங்க்ருதமான, தோள் - தோள்களையுடையனுகையாலே நிரதிஶயபோக்யனாய், கண்ணனை - ஆஶ்ரிதபவ்யனை க்ருஷ்ணனை, குருகூர்ச் சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், தீது - ஸப்தார்த்தங்களிற்குற்றம், இலாத - அற்று, ஒண் - பஹுகுணமாய், தமிழ்கள்-த்ராமிடரூபமான, இவை - இவை, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இப்பத்தும்-இப்பத்தையும், ஓதவல்ல - அப்யஸிக்கவல்ல, பிராக்கள் - உபகாரகரானவர்கள், பண்டே - இந்தவப்யாஸார்த்தமான, ஸரீரபரிக்ரஹம் பண்ணினகாலமேதொடங்கி, நம்மை - நமக்கு, ஆளுடையார்கள்-நாதபூதர்.

இது கலித்துறை; இது சீர்வகையொளித்து "கலிவிருத்தம்" என்பாருமுளர். (௧௧)

ஆறு;—(ஆதுமில்லே) ஆத்மாத்மீயங்களெல்லாம் அவனுக்கே ஶேஷமென்று துணிந்திருந்த சடகோபன், தாதுசேர்தோள்கண்ணனைச்சொன்ன, நிரவத்யமாய் கல்யாணமான வித்திருவாய்மொழியையோதவல்ல மஹாத்மாக்கள், நமக்குப்பண்டே ஸ்வாமிகளென்கிறார்.

ஈடு; அவ;—நிகமத்தில், (௧) "ஐயெ[illegible] - அத்யேஷ்யதேச யஇமம்" என்று தொடங்கி அவனருளிச்செய்தாப்போலே, இத்திருவாய்மொழியப்யஸிப்பார் எனக்கு ப்ரியகரரென்கிறார்.

(ஆதுமில்லே மற்றவனிலென்றதுவேதுணிந்து) அவனையொழிய வேறு ப்ராப்ய ப்ராபகங்களில்லையென்றத்யவஸித்து, இவர்க்கிப்படி இந்த வ்யவஸாயத்தைக் கொடுத்தாராரென்றால்; வேறுண்டோ, அவனுடைய தோளும் தோள்மாலையுமன்றோ (தாதித்யாதி) அவனுடைய ஸௌந்தர்யமாயிற்று இவரை யிப்படித்துணியப்பண்ணிற்று.

(தீதிலாத) கதாந்தரப்ரஸ்தாவமின்றிக்கேயிருக்கை. (ஒண்டமிழ்கள்) உள்ளுண்டானவர்த்தத்தையடைய வெளியிட்டுக் கொடுக்கவற்றாயிருக்கை. நிர்த்தோஷமாய், பஹுகுணமானவை யென்றுமாம். (ஓதவல்லபிராக்கள்) இப்பத்தையதிகரிக்கவல்லவுபகாரகர். ஸம்ஸாரத்தின் தண்மையும், ஈஶ்வரனுடைய ப்ராப்யப்ராபகபாவமுமிறே இத்திருவாய்மொழியிற்சொல்லிற்று; இத்தை யப்யஸிக்

(௧) கீதை-௧௮அ-௭௦.

திருவாய்மொழி, ௬-ப, ௯-தி, ௧௧-பா, ஆதுயில்லை வ்யாக்யாநம்.உள

கவே, தீயவழியைத் தவிர்ந்து நல்வழிபோகத்தொடங் குவர்கள். இதுக்குமேற்படவிவர்க்கு உபகாரமில்லையிறேயிவர்கள் பண்ணுவது.

(நம்மையாளுடையார்கள்பண்டே) ஒருஜந்மத்திலே இத்தையப்யஸிக்கைக்கீடான வதிகாரத்தை யுடையாரயிருப்பாராகில், அவர்கள் பண்டே நமக்கு நாதபூதர். (க) "ஙபெருஷ்ருதெ-அத்யேஷ்யதே" என்கிறபடியே, இத்தை அப்யஸிக்கைக்கீடான யோக்யதையுள்ள ஜந்மந்தொடங்கி நமக்குநாதர். (௧௧)

முதல்திருவாய்மொழி வ்யாக்யானம்

முற்றிற்று.

(க) கீ-க௮-௭0-

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஒன்பதாம்பத்து.

இரண்டாந்திருவாய்மொழி.

பண்டைநாள் ப்ரவேஸங்கள்.

ஆரு:—(பண்டைநாளாலே) இப்படி யெம்பெருமானுடைய வுறவுடைமையை யநுஸந்தித்து, "இவ்வுறவுடையனை வவனோடேகலந்து பரிமாறவேணும்" என்று மநோரதித்துக்கொண்டு திருப்புளிங்குடியிலே போய்ப்புக்கு. அவ்விடத்தில், தன்திறத்து ஸாமாந்யகடாக்ஷமல்லது வேறொருவிஶேஷ கடாக்ஷம்பண்ணி யருளக்காணமையாலே சாலவின்னாதாராய், "என்னை யுன்னழகிய திருக்கண்களாலேநோக்கி யருளவேணும், திருவடிகளைத் தலையிலேவைத்தருளவேணும், திருப்பள்ளியுணர்ந்து பிராட்டியோடேகூட விருந்தருளவேணும், எழுந்திருந்து என்னெதிரே வந்தருளவேணும்" என்றிப்புடைகளிலே தம்முடைய மநோரதங்களை யடையவபேக்ஷிக்கிறார். *

ப:—அநந்தரம், இரண்டாந்திருவாய்மொழியில், கீழே, நிருபாதிக பந்துவான ஸர்வேஶ்வரனுடைய பலரூபதயா ப்ராப்யதையை யருளிச்செய்து, அவன்கண்வளர்ந்தருளில் கைங்கர்யம் பண்ணுகையை மநோரதித்து; கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியானவனுடைய புண்டரீகாக்ஷத்வத்தையும், அநுரூபஸம்பந்தத்தையும், லக்ஷ்மீஸஹாயத்வத்தையும், தர்ஶநீயாகாரதையையும், மந்தஸ்மிதஶோபையையும், ஆஶ்ரிதார்த்தமான வாஹநாயுதவத்தையையும், அஸாதாரண பரிகரயோகத்தையும், அகிலலோகவந்த்யத்வத்தையும், அதிஶயித ஸௌகுமார்யத்தையும், ஶ்ரீபூமி ஸேவ்யத்வத்தையுமநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிஶிஷ்டனானநீ, உனக்கஸாதாரண ஶேஷபூதராய்ப் போந்தவெங்களுக்கு க்ருபைபண்ணி பூர்ணகடாக்ஷம்பண்ணவும், திருவடிகளையெடுத்துத் தலையிலேவைக்கவும், அங்கீகரிக்கும்போது பிராட்டியோடேகூட வெழுந்தருளியிருந்து அங்கீகரிக்கவும் ஆசாநுரூபமாக நடந்தெழுந்தருளிவரவும், முகமும் முறுவலுமாய்க்கொண்டு என் முன்னேநிற்கவும், நிற்கும்போது பெரியதிருவடியை மேற்கொண்டு திவ்யாயுதங்களையுமேந்திக்கொண்டுவரவும், அஸாதாரண பரிகரத்தோடேவந் தென்முன்னேயெழுந்தருளிவந்திருக்கவும்

ஸர்வலோகங்களுங்கண்டு வாழும்படி யெழுந்தருளியிருக்கவும் இந்த ஸௌகுமாரமானவடிவை நானநுபவிக்கும்படிபண்ணவும், நாய்ச்சிமாரை யடிமைகொண்டருளுகிறப்போலே உன் திருவடிகளிலே யடிமைகொண்டருளவும் வேணுமென்று, தம்முடைய மநோரதபரம்பரைகளை, திருப்புளிங் குடியிலேகிடந்தருளுகிற ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே ப்ரார்த்தித்தருளுகிறார்.

ஈடு;—கீழ்த்திருவாய்மொழியிலே - " அவனையொழிந்தாரடங்கலும் ஸோபாதிகபந்துக்கள், அவனொருவனுமே நிருபாதிகபந்து" என்றார்; நிருபாதிகபந்துவானால் பின்னை பந்துக்ருத்யம்பண்ணாதிருக்க வொண்ணாதிறே. இப்படி பரமபந்துவானவன் கண்வளர்ந்தருளுகிற திருப்புளிங்குடியிலே யெல்லாப் பரிமாற்றத்தையு மாசைப்பட்டு இவர்சென்று கிட்டினவிடத்தில், இவரையென்னென்னுதல், திருக்கண்களாலே குளிரநோக்குதல், ஒருவார்த்தை சொல்லுதல் செய்யக்கண்டிலர்; காணாமையாலே மிகவுமவஸந்நரானார்; அது அவனுளனாகத்திருமிறே.

அதுக்குமேலேயு மொன்றுண்டாயிற்று - " திருமேனியலசும்படி யேகரூபமாகக் கண்வளர்ந்தருளாநின்றான். என்வருகிறதோ" என்றொருபயமோடிற்று; கீழே, * ஆராவமுதிலே, " என்னார்த்தியைத்தீர்க்கிறிலன் " என்றின்னாதானார்; இங்கே " என்னார்த்தியும் தன்னார்த்தியுந் தீர்க்கிறிலன் " என்றின்னாதாகிறார்; ஆக, " கொடியார் மாடக்கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்னே " என்றவதுவே தலையெடுத்து, பெரியவாற்றாமையோடே, என்னுடையவார்த்தியெல்லாந்திரும்படி திருக்கண்களாலே குளிரநோக்கியருளவேணும், என் தலைமேலே திருவடிகளைவைத்தருளவேணும், தேவரும் பிராட்டிமாருங்கூட வெழுந்தருளியிருக்கு மிருப்பை யெனக்குக் காட்டியருளவேணும்; ஸஞ்ஜயன்பெற்றபேற்றில் எனக்குக்குறையவொண்ணாது.

(க) " [illegible] - யத்ர க்ருஷ்ணௌ ச க்ருஷ்ணா ச ஸத்யபாமா ச பாமிநீ " என்று சொல்லுகிறபடியே, அவ்விருப்பிலேயிறே அவனையழைத்துக்காட்டிக்கொடுத்தது. இப்படி " ஸஞ்ஜயன்வந்தான் " என்றறிவிக்க, ' நமக்குநல்

(க) பாரத உத்யோ-சக-

லாரொருவன், உகவாதார்க்கு மிவ்விருப்பைப்போய்ச் சொல்லுவாரொருவன், அநுகூலனானவிவனுக்கு விளைநீரடைத்தோமாகிறோம், உகவாதார் மண்ணுண்ணும்படி கார்யம்பார்த்தோமாகிறோம், புகுரவிடுங்கோள்" என்றானிறே. [நவாஹி ந்ருபதயோ ஸஹிதம் ஜெய ஸஹிஜஷ்டஃ - நசாபி மந்யுர்நயமௌ தம்தேஹமபிஜக்மதுஃ] தாயுந்தமப்பனும் சேரவிருந்தவிடத்தில் ப்ரஜைகளுக்குச்சென்று கிட்டவொண்ணாமையில்லையிறே; அவர்களுக்குஞ்சென்று கிட்டவொண்ணாதபடியாயிற்றுஎழுந்தருளியிருக்கிறவிருப்பு; அவ்விருப்பிலேயிறே அவனையழைத்துக் காட்சிகொடுத்தது.

அப்படியே "தேவரும் பிராட்டிமாரு மெழுந்தருளியிருக்குமிருப்பை யெனக்குக்காட்டவேணும், என்னைக் கண்டகாட்சியிலே விக்ருதனாய் என்முன்னே நாலடியுலாவி யருளவேணும், அநுகூலதர்ஶநத்தால் பிறக்கும் ஸ்மிதங்காணவேணும், ஒருவார்த்தையருளிச்செய்யவேணும்" என்றிங்ஙனே, தாமுமவனுமறிந்ததாகத் திருவாசலைத் திருக்காப்புக்கொண்டு ஏகாந்தத்திலே தம்முடைய மநோரதங்களை யெல்லாம் விண்ணப்பஞ் செய்து, "இவற்றை யிப்போதே பெறவேணும்" என்று த்வரிக்கிறார். ப்ராப்தியை யநுபவித்தார் கீழ்த்திருவாய் மொழியிலே; ப்ராப்திபலத்தை யாசைப்படுகிறாரிதில்.

முதற்பாட்டு.

பண்டை நாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள்திருவருளுங் கொண்டு* நின்கோயில் சீய்த்துப் பல்படி கால்குடிகுடி வழிவந்தாட்செய்யும் * தொண்டரோர்க்கருளிச் சோதிவாய்திறந்துன் தாமரைக்கண்களால் நோக்காய் * தெண்டிரைப்பொருநல் தண்பணைசூழ்ந்த திருப்புளிங் குடிக்கிடந்தானே. (க)

ப:-அநந்தரம், முதற்பாட்டில் குலக்ரமாகதமாக கைங்கர்யம் பண்ணிப்போந்த வடியோங்களுக்கிரங்கி, திருப்பவளத்தைத் திறந்து ஸாந்த்வவாதத்தை யருளிச்செய்து, அழகிய திருக்கண்களாலே பார்த்தருளவேணுமென்கிறார்.

(இ-ள்.) தெண் - தெளிந்த, திரை - திரையையுடைத்தான, பொருநல் - திருப்பொருநலையுடைத்தாய், தண் - குளிர்ந்த, பணை - நீர்

நிலங்களாலும், சூழ்ந்த-சூழ்ந்த, திருப்புளிங்குடி-திருப்புளிங்குடியிலே, கிடந்தானே - கண்வளர்ந்தருளுகிறவனே, நின் - நிருபாதிகபந்துவான வுன்: திருவருளும் - திருவருளையும், பங்கயத்தாள்-உன்னை யருளுவிக்கக்கடவளான பங்கயத்தாள், திருவருளும்-திருவருளையும், (௧) "ஜாயமாநம்ஹி-புருஷம்"என்கிறபடியே, பண்டைநாளாலே உத்பத்தி காலமே பிடித்து, கொண்டு - உடையோமாய்க் கொண்டு, நின்-நீ புகந்தருளின, கோயில்-திவ்யதேசத்திலே, சீய்த்து - உசித கிஞ்சித்காரத்தைப் பண்ணி, பல்படிகால் - பல்படிகாலுண்டாம் படி, குடிகுடிவழி-குலக்ரமத்திலே, வந்து - வரக்கடவராய், அப்படி காலந்தோறும், புத்ரபௌத்ராதி ஸஹிதராய்க்கொண்டு, ஶாஸ்த்ரோக்த மார்க்கத்தைத் தப்பாதபடி, ஆட்செய்யும்-வந்தடிமைசெய்துபோருகிற, தொண்டரோர்க்கு - சேஷபூதரானவெங்களுக்கு, அருளி - நிரவதிகக்ருபையைப்பண்ணி, சோதி - உஜ்ஜ்வலமான, வாய் - திருப்பவளத்தை, திறந்து-திறந்து, ஸாந்த்வவாதம்பண்ணி, உன்-உனக்கஸாதாரணமான, தாமரை - தாமரைபோலேயிருக்கிற, கண்களால் - திருக்கண்களாலே, நோக்காய் - பூர்ணமாகப்பார்த்தருளவேணும். (௧)

ஆறு;— பிராட்டி பரிக்ரஹமாகையாலே பண்டை யுன்னுலே விஷயீக்ருதராய் ஸர்வவித கைங்கர்யநிரதருமாய் * எங்குங்குடியாக வடிமைசெய்துவர்த்திக்கிறவடியோங்களுக்கருளி,சோதிவாய்திறந்து உன் தாமரைக்கண்களால் நோக்காய்; தெளிந்த திரையையுடைய திருப்பொருநலோடு கூடின வழகிய நீர்நிலஞ்சூழ்ந்த திருப்புளிங்குடியிலேவந்து கண்வளர்ந்தருளினவனே யென்று ப்ரார்த்திக்கிறார்.

ஈடு; அவ:— அநந்யகதிகளானவடியோங்களைக்குறித்து, ஒரு வார்த்தை யருளிச்செய்து, விடாய்கெடும்படி குளிரநோக்கி யருளவேணுமென்கிறார்.

(பண்டைநாளாலே நின்திருவருளும்) நெடுநாள்கூடப்பண்ணிப்போந்த வுன் கடாக்ஷத்தையும். நீ நேற்றின்று பண்ணிப்போந்த க்ருஷியின் பலமோவிது; * எதிர்சூழல்புக்கு நெடுநாள்பட்ட க்லேஶத்தின் பலமன்றோவிது. நெடுநாள் க்ருஷியைப்பண்ணி பலவேளையில் கைவிடவோ. (பங்கயத்தாள்திருவருளும்) அதுக்கடியான பெரி

* (பா) என்றும் (௧) பாரத-ஶாந்தி-

ய பிராட்டியார் கடாக்ஷத்தையுங்கொண்டு. அவனுடையவருளின் ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்க்குமருள், ப்ரணயித்வத்தால்வந்த பாரதந்த்ர்யமிறே, ஸ்வாதந்த்ர்யத்தைத் தவிர்ப்பது.

(௧) "என்னடியாரது செய்யார்" என்னு முன்கடாக்ஷமும், (௨) "நக்ருஹ்ணவாராய) தி-நகஸ்சிந்நாபராத்யதி" என்னுமவள் கடாக்ஷத்தையும் பெற்று. (௩) "க்ஷவயாவாரா)வாயஸ-க்ருபயா பர்யபாலயத்" என்று, க்ருபாபரதந்த்ரனை வுன்னுடைய கடாக்ஷமும், அப்பாரதந்த்ர்யத்துக்கடியான வவள்கடாக்ஷமு மென்றுமாம். ('பங்கயத்தாள் திருவருளும்) உன்னருளின் ஸ்வாதந்த்ர்யங்களைத் தவிர்க்குமவளருளும்படியாக வன்றோவந்தது. அவளருத் அவன் ஸ்வாதந்த்ர்யத்தைப் பின்செல்லாதபடி பண்ணுமாயிற்று. "அவனுடைய பாரதந்த்ர்யம் ப்ரணயித்வமேயன்றோ, நிலைநிற்குமோ, ஸ்வாதந்த்ர்யமேயன்றோ-ப்ரக்ருதி" என்றஞ்சவேண்டா, அவளருகே யிருக்கஸ்வாதந்த்ர்யம் ஜீவியாது; ஆகையிறே, முற்கூற்றால் அவள்புருஷகாரமாகப் பற்றுகிறது.

(நின்கோயில்சீய்த்து) உகந்தருளினநிலங்களிலே, அஸாதாரண பரிசர்யைபண்ணி. தந்தாமுடைய ஸுக்ருதத்தாலே பகவதநுக்ரஹமுடையரானவர்கள், தந்தாம் க்ருஹங்களைப் பேணுவர்கள், பிராட்டி புருஷகாரமாக பகவத்ப்ரஸாதம் பெற்றவர்கள். உகந்தருளின நிலங்களைப்பேணாநிற்பர்கள். (௪) "நக்ஷம்ஹி ஜவிகஷ்வாரணோ விஷ்ணோராயதநே வஸேத்-நகிஞ்சிதபி குர்வாணோ விஷ்ணோராயதநே வஸேத்" ஒருதுரும்பு நறுக்கேனென்னுமவர்களுக்கும், உகந்தருளின நிலத்தைப்பற்றிக் கிடக்கவேணும். ஶரீரஸம்பந்தமற்றால் பெறவேணுமென்றாசைப்படுகிற வடிமையை, இச்சரீரத்தோடே கிடைக்குமாகில் விடானிறே (௫) "வயலணியனந்தபுரங் கடைத்தலை சீய்க்கப்பெற்றால் கடுவினைகளையலாமே." ப்ராப்யத்தை லபிக்கவே, ப்ராப்ய விரோதிகளைப் போக்கலாமாயிற்று.

திருக்கண்ணமங்கையாண்டான், அங்கே யொரு திருமதிளடியிலேயிருந்து, சருகைத் திருவலகிடாநிற்க, கூடவாஸித்து நாஸ்திகனு

(௧) பெரியா-தி-௩௧-௧- (௨) ரா-யு-௧௧௬-௪௪.
(௩) ரா-ஸு-௩௮-௩௪- (௪) விஷ்ணுதர்மம்-
(௫) ௯-௨ ௭-

யிருப்பானொருவன், "பகவானுபாயம், நாமநந்யப்ரயோஜநர். இப்போதிந்தக்லேசத்துக்கு பலமென்" என்ன; திருவலகிட்டவிடத்தையும் இடாதவிடத்தையும்காட்டி, 'இவ்விடமு மவ்விடமுமிருந்தபடி கண்டாய்க்கு 'ஒருபலமில்லை' என்றுதோற்றியிருந்ததோ" என்றான்.

(பல்படிகால்) இதுதானின்றுதொடங்கிவந்ததொன்றோ, நீ கடாக்ஷிக்கப் புக்க வன்று தொடங்கி வந்ததன்றோ. (குடிகுடி) ஸபரிகரமாக. (வழிவந்து) ஶாஸ்த்ரங்களிற் சொல்லுகிற முறைதப்பாதபடிவந்து. (ஆட்செய்யும்தொண்டரோர்க்கருளி) அடிமைசெய்கிற வடியோங்கள்பக்கலிலேக்ருபைபண்ணி. (சோதிவாய்திறந்து) பூவலருமாபோலேயாயிற்று வாய்திறந்துவார்த்தையருளிச் செய்யும்போது திருமுகத்தில் பிறக்கும்செவ்வி. (க) "ஶாகேஸ்ரோதி வக்ஷ்யதி-நாமக்ஶரே திவக்ஷ்யதி" என்றுவார்த்தையளவிலேயாயிற்று அக்ரூரனநுபவித்தது. தக்காலத்தில் திருமுகத்தில் செவ்வியு முத்தேஶ்யமாயிருக்கிறதாயிற்று இவர்க்கு.

(உன்தாமரைக்கண்களால் நோக்காய்) வார்த்தையில் தோற்றுத பந்தமும் நோக்கிலே யநுபவிக்கும்படி குளிரநோக்கியருளவேணும்; (உ) "ஸவிலாஸநதாநேந ஸம்யோஜய ஶ்ரீவாஸயாவ்யய அவலோகநதாநேந பூயோமாம்பாலயாவ்யய" என்னுமாபோலே. வார்த்தை யருளிச்செய்யப்புக்கு விக்கினால் குறையுந்திருக்கண்களாலே தலைக்கட்டி யருளவேணும்.

பிள்ளைதேவப் பெருமாளரையர், "உன்தாமரைக் கண்களால் நோக்காய், நோக்காய்" என்று பலகாலுஞ்சொல்ல, ஆழ்வாரெழுந்திருந்து, "பிள்ளாய், நீயிங்ஙனே திருவுள்ளம் புண்படும்படி பலகாலும் நிர்ப்பந்திக்கிறதென், அழகியவீட்டைத் தந்தாராகில், நல்ல பாட்டைதந்தாராகில், பிள்ளைகளையுமைஶ்வர்யத்தையும் தந்தாராகில் என்செய்யாதாராக நீ இங்ஙனே கிடந்துபடுகிறது" என்றருளிச்செய்தாராம்.

(தெண்டிரையித்யாதி) திருமேனியில் ஸௌகுமார்யத்துக்கநுரூபமான ஜலஸம்ருத்தியை யுடைத்தான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளப்பெற்றது. தெளிந்த திரைகளை யுடைய திருப்பொரு

(க) வி-பு-ரு-கள-கஉ. (உ) வி-பு க-உ௦-கக.

நேரோடே சேர்ந்தழகிய நீர்நிலஞ்சூழ்ந்த திருப்புளிங்குடியிலே கணை வளர்ந்தருளினமையுண்டு; இது - செய்த வம்ஸப்; உன் தாமரைக்க ண்களால் நோக்காய். செய்தவம்ஸத்துக்கு க்ருதஜ்ஞனாகவும், செய்ய வேண்டு மம்ஸத்துக்கு ப்ரார்த்திக்கவும் வேணுமிறே அதிகாரிக்கு,

இரண்டாம் பாட்டு.

குடிக்கிடந்தாக்கஞ்செய்து நின்தீர்த்தவடிமைக் குற்றேவல் செய்து* உன்பொன்னடிக்கடவாதே வழிவருகின்ற வடியரோர்க்க கருளி * நீயோருநாள் படிக்களவாக நிமிர்த்தநின்பாத பங்கயமே தலைக்கணியாய்* கோடிக்கோள் பொன்மதிள்சூழ் குளிர்வயல்சோ லைத் திருப்புளிங்குடிக்கிடந்தானே. (௨)

ப:—அநந்தரம், ஆஸ்ரய விஷயாநுரூப ஸம்பந்தத்தை யுடைய வுன் திருவடிகளை யென்தலையிலே வைக்கவேணுமென்கிறார்.

(இ - ள்.) கொடிக்கொள்-கொடிகளாலே யலங்க்ருதமாய், பொன்-கநகமயமான; மதிள் - மதிளாலே, சூழ் - சூழப்பட்டு, குளிர் - குளிர்ந்த, வயல்-வயலையும் சோலை சோலையையுமுடைத்தான, திருப்புளிங்குடி-திருப்புளிங்குடியிலே; கிடந்தானே-ஆஸ்ரிதாநுபவார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிறவனே. குடிக்கிடந்து-ஸேஷத்வகுலம் தப்பாதபடி நின்று, ஆக்கம்செய்து-அந்தஸேஷத்வ மபிவ்ருத்தமாம் படியானஸேஷவ்ருத்தியிலே யுத்யுக்தராய். தீர்த்த - இதரஸங்கநிவர்த்தகமான. நின்-உன் விஷயமான. அடிமை-அடிமைகளிலே, குற்றேவல்-அந்தரங்கமான வ்ருத்தி விசேஷங்களை, செய்து-அநுஷ்டித்து; உன் - உன்னுடைய, பொன்-ஸ்ப்ருஹணீயமான, அடிக்கடவாதே - திருவடிகளை யொழிய. அநுபவஜநிதமாய் அபர்யவஸாநலப்யமான ஸ்வாநந்தத்திலும் தாத்பர்யம்பண்ணாதே, வழி-பாரதந்த்ர்யமார்க்கம், வருகின்ற- தப்பாதபடிவருகிற, அடியரோர்க்கு-ஸேஷபூதரானவெங்களுக்கு, அருளி-அருளி, நீ - நிருபாதிகபந்துவான நீ, ஒருநாள்-பூமிக்கந்யாபிமாநம் வந்ததொரு நாளிலே; படிக்கு - அதுக்கு, அளவாக - அநுரூபமாக, நிமிர்த்த - நிமிர்த்தளந்து கொண்ட, நின்-உன், பாதபங்கயம்-நிரதிஸயபோக்யமான திருவடித்தாமரையை, தலைக்கணியாய் - என்தலைக்கநுரூபமான வலங்காரமாம்படி பண்ணியருளவேணும்.

ஆறு:—(குடிக்கிடந்து) த்வத்ஸம்ருத்த்யேக ப்ரயோஜநராய்க் கொண்டு உனக்கந்தரங்கமான வடிமைசெய்து உன் திருவடிகளல்ல தறியாதே பரம்பரயா வர்த்திக்கிற வடியோமுக்கு க்ருபைபண்ணி ஸர்வாத்மாக்களுக்கும் ஸுலபமான தின்பாதபங்கயமே யொருநாள் தலைக்கணியாய், கொடிக்கொள் பொன்மதிள்சூழ்குளிர்வயல்சோலை திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளினவனே யென்கிறார்.

ஈடு; அவ:—ஸர்வஸுலபமான வுன்திருவடிகளை யென்தலையில் வைத் தருளவேணுமென்கிறார்.

(குடிக்கிடந்து) குடிக்கீடாக வர்த்தித்து. குலமர்யாதை தப்பாதபடி வர்த்திக்கை. "இக்ஷ்வாகுவம்ஶ்யரில், தமயனிருக்கத் தம்பிமாரில் முடிசூடியறிவாரில்லை" என்றானிறே ஸ்ரீபரதாழ்வான். (ஆக்கஞ்செய்து) குடியில் பண்டில்லாத நன்மைகளை யுண்டாக்கி, (க) "ஸஜ்ஜீக்ருத்ய ஜடிலோ ஹாதஸ்ஸாஸ்ய ஸ்ஸுதீக்ஷ்ணதே । வாக்யே தவாஜ்ஞாய ஸ்ருத்வா ஸம்வத்ஸரம் ஸமாஹிதோ - பங்கதிக்தஸ்து ஜடிலோ பரதஸ் த்வாம்ப்ரதீக்ஷதே । பாதுகே தே புரஸ்க்ருத்ய ஸர்வஞ்சகுஶலம்க்ருஹே" என்றும் (உ) "ஜடிலஞ்சீரவஸநம் - ஜடிலஞ்சீரவஸநம்" என்றும்.

(ங) "நஹி தே ராஜபுத்ரந்தம் காஷாயாம்பரதாரிணம் பரிபோக்தும் வ்யவஸ்யந்தி பௌரா யஸ்ஸ்வ தர்மவத்ஸல - நஹிதே ராஜபுத்ரந்தம் காஷாயாம்பரதாரிணம் । பரிபோக்தும் வ்யவஸ்யந்தி பௌராவை தர்மவத்ஸலம்" அருகேயிருக்கச்செய்தேயு மிவனைச் சூழவிருக்கிற பௌரரானவர்கள் இவனை யநுபவிக்கையிலே நசையற்றார்கள். அதுக்கடி யென்னென்னில் [ராஜபுத்ரம்] பெருமாள் பேரநின்றவனந்தரம், "முடிந்தவன்மகனன்றே, இவனேதான் நமக்குத்தொங்கப்புகுகிறான்" என்றிருந்தார்கள். [யஸ்ஸ்வ தர்மவத்ஸல - தர்மவத்ஸலம்] இதுக்கு மவனேயொக்கும்; தர்மத்துக்காகத் தன்னை யழியமாறினானிறே அவன்; (ச) [ஸஹி ஸ்ருஷ்டிர் வைவஸ்வதஸ்ய - ஸமஸ்சிவைஸ்ஸார்த்தம்] தானொருவனுமே போகவமைந்திருக்க, ஆர்த்தர்பலரையுங் கொண்டுபோனான்; அதுக்கடி - "நாமொருவரு

(க) ரா-யு கஉஎ-ச (உ) ரா-அயோ-க00 க,
(ங) ரா-யுகஉஅ-ஙச (ச) ரா-அயோ-க0ௗ-கஉ

மேயன்றிக்கே, பலர் கண்ணநீர்கண்டால் மீளாரோ" என்னுமத்தைப்பற்ற; வினைசெய்யப் போவாரைப்போலே ஆனைகுதிரைகளை யகப்படத் திரட்டிக் கொடுபோனானிற்று. பிரிவாற்றாமைக்குத் தன்னிற்குறைந்தா ரொருவருமில்லையாயிற்றுப் பரிகரத்தில்; [ஶிரஸா யாசதோ தஸ்ய-ஶிரஸாயாசிதோமயா] நான் தலையாலேயிரந்தகார்யத்தையும் மறுப்பரோ. (க) "ஶிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் ந க்ருதம் மயா-ஶிரஸாயாசதஸ்தஸ்ய வசநம்நக்ருதம்மயா" என்றாரிறே அவரும் - "அவனும் தனக்கடுக்கும்படி செய்தான், நாமும் நமக்கடுக்கும்படி செய்தோம்," என்றாரிறே. "அவன் தலையாலே யிரந்த கார்யத்தை மறுத்துப்போந்தோம்" என்றிறே அவர் திருவுள்ளம் புண்பட்டது [ப்ராதா:-ப்ராதா:] (உ) "ப்ராதா ஸ்வா ம்ருதிர் ப்ராதுஸ் - ப்ராதாஸ்வாமூர்த்திராத்மந:" என்கிறபடியே, அவர் தந் திருமேனியாக வன்றோ வென்னை நினைத்திருப்பது; சேஷம்பூர்வத். இப்படி யிக்குடியிலில்லாத வேற்றங்களையுஞ் செய்து. "மூத்தாரிருக்க விளையார் முடிசூடக்கடவதன்று" என்றுபோந்தவித்தனை முன்பு. ஆற்றாமையும், கண்ணும் கண்ணநீருமாய், ஜடையும்புனைந்து வல்கலையுமுடுத்திருந்தாரில்லையிறே முன்பிவனையொழிய.

(நின்தீர்த்தவடிமைக்குற்றேவல்செய்து) தன்னுடைய ரஸ்யதையாலே இதரபுருஷார்த்தத்தில் நசையறுக்கவல்ல வடிமைகளிலந்தரங்கமான வடிமைகளைச் செய்து. (உன்பொன்னடிக்கடவாதே) தன்சாபலத்தாலே நிர்ப்பந்திக்குமதுவுமன்றிக்கே. முன்பு பெரியவாற்றாமையோடே ஸ்ரீவஸிஷ்டபகவான் தொடக்கமானாரைப்புருஷகாரமாகக்கொண்டு மீட்பதாகச் சென்றவன், "நாம் ஐயர் சொன்ன கார்யம் செய்தோமான நிறம்பெறலாவது, நீர் பதினாலாண்டு ராஜ்யத்திலேயிருக்கில்காணும்" என்ன; (ந) "ஶிரஸாராஹ்யம் ஸஹ்ருஷ்ட: ஆரோஹதம் ஹ்ருஷ்ட:" என்று ஹ்ருஷ்டனாய் மீண்டுபோந்தானிறே; அப்படியே, உன்னுடைய வாஜ்ஞாதிலங்கநம் பண்ணாதே. உன்திருவடிகளைத் தப்பாதே; அன்றியே, உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளையல்லதறியாதே யென்னுதல். அதாவது - அநந்யப்ரயோஜநனானை.

(க) ரா-யு-கஉ-க-௬ (உ) மநுஸ்ம்ருதி
(ந) ரா-அயோ-ககந-க.

(வழிவருகின்ற வடியரோர்க்கருளி) அடிமைமுறை தப்பாதே போருகிற அநந்யகதிகளான வெங்களுக்கு க்ருபையைப்பண்ணி. (நீயொருநாளித்யாதி) அந்தஸ்வபாவ மொருநாளிலேயாய்ப் பின்பு வற்றுமதோ. அப்ரதிஷேதத்துக்கு மேற்பட ருசியில்லையோ. குணகுணநிரூபணம் பண்ணாதே யெல்லார்தலையிலும்வைத்த திருவடிகளை, ஆசையுடைய வென்தலையிலும் வைக்கலாகாதோ. (படிக்களவாக) பூமியை விளாக்குலைகொள்ள விஞ்சவளருமதிலு மரிதுபோலேகாணும், அதுக்களவாகத் திருவடிகளைக் குறைசதாங்கினவருமையும், உனக்கரியதொன்றாய் நான்க்லேசப்படுகிறேனோ; இத்தனையன்றோ செய்யவேண்டுவது. (நின்பாதபங்கயமே) ஒருசெவ்விப்பூவைக் கொண்டுகாணும் காடுமேடையுமளந்துகொண்டது. (தலைக்கணியாய்) ஏதேனுமாகக்கொள்ள நினைத்தகார்யத்துக்களவாக்குமித்தனையாயிருந்ததிறே; பூமிக்களவாக்கின திருவடிகளை யென்தலைக்களவாக்கலாகாதோ. (தலைக்கணியாய்) (௧) "கோலமாமென்சென்னிக்கு" என்றிருப்பார் தலையில்வைக்கலாகாதோ. (௨) "கூடா-கதா" என்கிறார்.

(கோடியித்யாதி) (௩) [ஸாராஸஹ்ருதவீதஶோகா ராஸஹ்ருஶோகேந ஸஹ்ருதேநஶோகா-ஸாராமஸங்கீர்த்தந வீதஶோகா ராமஸ்யஶோகேந ஸமாநஶோகா] பெருமாளுடைய ஸத்பாவத்தில ஸம்ஶயமில்லாமையாலேயு மொருஶோகமுண்டு, பிரிவாற்றாமையாலே படுகிறது மொருஶோகமுண்டு; அதில், திருவடியைக் கண்டபின்பு ஒன்று தீர்ந்ததிறே: அப்படியே, ஸுரக்ஷிதமாய் ப்ரமஹ்ரமான தேசத்திலே கண்வளர்ந்தருளப் பெற்றது, "என்வருகிறதோ" என்கிற பயந்தீர; இனியென்னை விஷயீகரிக்குமதுவே குறை, அக்குறையுந் தீர்த்தருளவேணும். (௨)

மூன்றாம்பாட்டு.

கிடந்தநாள்கிடந்தாயெத்தனை காலங்கிடத்தி யுன்திருவுடம்பசைய * தொடர்ந்துகுற்றேவல்செய்து தொல்லடிமை வழிவருந்தொண்டரோர்க்கருளி, * தடங்கொள் தாமரைக்கண்விழித்து நீயெழுந்துன்தாமரைமங்கையும்நீயும்* இடங்கொள் மூவுலகுந் தொழவிருந்தருளாய் திருப்புளிங்குடிக் கிடந்தானே. (௩)

---

(௧) ச-௩-௨௨- (௨) ஸ்தோ·ர- (௩) ரா-ஸு·௩௬-௭

ப:—அநந்தரம், திருமேனியசையும்படி யெப்போதுங் கண்வளர்ந் தருளாதே, அடியோங்கள் கண்டநுபவிக்கும்படியாகப் பிராட்டியோ டேகூட வுணர்ந்தெழுந்தருளியிருக்க வேணுமென்கிறார்,

(இ - ள்.) திருப்புளிங்குடி - திருப்புளிங்குடியிலே, கிடந்தானே - ஆஶ்ரிதார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிறவனே, அபேக்ஷா பரதந்த்ர னாய்க்கொண்டு, கிடந்தநாள்-கண்வளர்ந் தருளுகிறவன்றுதொடக்கமாக கிடந்தாய்-இப்படி யொருப்படிப்படக் கண்வளர்ந்தருளினாய், உன், திரு வுடம்பு-திருமேனி, அசைய-அசையும்படி, எத்தனைகாலம்-இன்னமெத் தனைகாலம், கிடத்தி-கண்வளர்ந்தருளக்கடவை, இனி, தொடர்ந்து - எங்களபேக்ஷைக்காக வுன்னை யநுவிதாநம் பண்ணிச்சென்று, குற்றே வல்-அந்தரங்கவ்ருத்தி, செய்து - பண்ணி, தொல்-அநாதிஸித்தமான, அடிமைவழி-ஶேஷத்வமார்க்கத்திலே, வரும்-வருவோமாய், தொண்ட ரோர்க்கு - உனக்கே சேஷமாம்படி யநந்யகதிகளானவெங்களுக்கு, அருளி - இரங்கி, தடம்-தடத்தை, கொள் - கொள்ளும்படிபெருத்த, தாமரை - தாமரைபோன்ற, கண் - திருக்கண்களை, விழித்து பரக்கவி ழித்து, நீ, எழுந்து - படுக்கையினின்றுமெழுந்து, உன் - உனக்கநபாயி நியாய், தாமரை - பூவிற்பிறப்பாலுண்டான போக்யதையையும், மங் கையும் - பருவத்தையு முடையளானலக்ஷ்மியும், நீயும்-நீயும், இடங் கொள்மூவுலகும் - விஸ்தீர்ணஜகத்த்ரயமும், தொழ-அநந்யப்ரயோஜந ரோபாதி கண்டநுபவிக்கும்படி, இருந்தருளாய் - இருந்தருளவேணும்.

ஆறு;— (கிடந்தநாள்) இங்ஙனே யொருபடியே கண்வளர்ந்த ருளுகிறபிரானே, உன்திருவுடம்புநோவாதோ; உன்திருவுடம்புநோ வாதே உன்னடியேனுன வெனக்காக நீயொருநாள், தாமரைத்தடம் மலர்ந்தாப்போலே திருக்கண்களைவிழித்து எழுந்திருந்து உன்தாம ரைமங்கையும்நீயும், இந்தலோகமெல்லாம் வாழும்படி யிருந்தருளா யென்கிறார். (௩)

ஈடு; அவ:—திருவுடம்பசைய வொருபடியே கண்வளர்ந்தரு ளாதே, அடியோமுக்காகப் பிராட்டியும் தேவரு மெழுந்திருந்தருள வேணுமென்கிறார்.

(கிடந்தநாள்கிடந்தாய்) (க) "கிடந்ததோர்கிடக்கை" என்று கிடையழகுகாணவேணுமென் றாசைப்பட்டிருப்பா னொருவனுக்கா

(க) திருமாலை-

க, ஆசைப்பட்டவன்று தொடங்கிக் கண்வளர்ந்தருளினாய் (எத்தனைகாலங்கிடத்தி) இனியொருவன்வந்து (க) "கிடந்தவாறெழுந்திருந்துபேசு" என்னுமளவுங்கிடக்கு மித்தனையிறே. எல்லாசேஷ்டிதங்களும், (உ) "ஸகாநாஶ-பக்தாநாம்" என்றிருக்கை தவிராதிறே. (உன்திருவுடம்பசைய) ஸுகுமாரமான திருமேனியலசும்படி. அர்த்திகளையேபார்க்குமித்தனையோ, உன்னையும் பார்க்கவேண்டாவோ.

(தொடர்ந்து குற்றேவல்செய்து) "இத்தசையில் செய்யவடிப்பதிது, இத்தசையில் செய்யவடிப்பதிது" என்றுணர்த்தி, அந்தரங்கவ்ருத்தியைப்பண்ணி. பெருமாள், தமக்கபிமதங்களிலவஹிதரன்றிக்கே யிருந்தபோதும், "இவ்வடிமையைக் கொண்டருளவேணும், இவ்வடிமையைக் கொண்டருளவேணும்" என்று அவ்வவகாலந்தோறும் (௩) "ஶாலஷு ஶாலஷு-மாம்வத, மாம்வத" என்று வடிம்பிட்டடிமை செய்தாப்போலே, அந்தரங்கவ்ருத்திகளைப்பண்ணி. (தொல்லடிமை) ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமான அடிமையாகையாலே பழையதாய்ப்போருகிற (ச) "ஆவிஸ்ருஜஸ்ருஜஸௌஹ்ரு வியயஃ-ஆவிஸ்யுர்மமாஸஹஜ கைங்கர்யவிதய:" என்னக்கடவதிறே. (வழிவருந் தொண்டரோர்க்கருளி) அடிமைமுறை தப்பாமேபோருகிற அநந்யகதிகளான வெங்களுக்குக்ருபைபண்ணி. இம்மூன்று பாட்டிலும், தம்முடைய யோக்யதையைச் சொன்னப்போலேயிறே யிருக்கிறது; அதன்றுசொல்லுகிறது "ஒருவர்க்கேயாயிருப்பாரை வேறுமுகம பாராபாரிலலே" என்று தம்முடைய சொல்லுகிறார்.

(தடங்கோள் தாமரைக்கண்விழித்து) பொய்கையைக்கண்செறியிட்ட தாமரைபோலே. இடமுடைத்தான திருக்கண்களாலே குளிரநோக்கி. (நீயெழுந்து) நீயெழுந்திருந்து (ரு) "சீரியசிங்கமறிவுற்று" என்கிறபடியே, உணர்ந்தருளும்போதை யழகு காணவேணும். (உன்தாமரைமங்கையும்நீயும்) "பகவத்விஷயத்தில் முதலடியிடுவார் பிராட்டி புருஷகாரமாகப் பற்றக்கடவது" என்னுமத்தாலே. "பங்கயத்தாள் திருவருள்" என்றார்கீழ்; அடிமைசெய்யுமிடத்திலு மிருவருமானசேர்த்தியிலே யடிமைசெய்வதாகச் சொல்லிப்போரு மத்தைப்பற்றச் சொல்லுகிறதிங்கு

(க) தி-ச-வி-கூக. (உ) ஜிதந்தை- (௩) ரா-ஆ-க(
(ச) அஷ்டஶ்லோகி- (ரு) திருப்பாவை-

(இடங்கோள் மூவுலகும்) இடமுடைத்தான ஸகலலோகங்களிலுள்ளாரும். (தொழவிருந்தருளாய்) அநந்யப்ரயோஜநரைப் போலே முறையிலே தொழ நீயிருக்குமிருப்பை நான்கண்டநுபவிக்கவேணும். (திருப்புளிங்குடிக்கிடந்தானே) நீ ஸ்தலபணையின்பு, எல்லாம் ... அபே ...
ஞல், அதிலே கலேசஞ்செய்தால், குறையுஞ்செய்து தலைக்கட்டவேண்டாவோ. (திருப்புளிங்குடிங்கிடந்தானே - இருந்தருளாய்) சாய்ந்தருளின வழகுகாட்டிஞய், இருந்தருளினபோதை யழகையுங்காட்டியருளாய். (௩)

நான்காம்பாட்டு.

புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று * தெளிந்தவென்சிந்தையகங்கழியாதே யென்னையாள்வாயெனக்கருளி* நளிர்ந்தசீருலகம் மூன்றுடன்வியப்ப நாங்கள்கூத்தடிநின்றார்ப்ப * பளிங்குநீர்முகிலின் பவளம்போல் கனிவாய்சிவப்பநீகாணவாராயே, (௪)

ப:—அநந்தரம் ஆஸ்ரிதார்த்தமாகக் கிடந்திருந்து நின்று என்னையடிமைகொண்ட தர்ஸநீயமான வடிவோடேகூட நான் காணும்படி வரவேணுமென்கிறார்.

(இ-ள்.) புளிங்குடி - திருப்புளிங்குடியிலே, கிடந்து - கண்வளர்ந்து, வரகுணமங்கை - திருவரகுணமங்கையிலே, இருந்து - இருந்து, வைகுந்தத்துள் - ஸ்ரீவைகுண்டத்திலே, நின்று - நின்று, தெளிந்த - "இவைநமக்காகப் பண்ணின வ்ருத்திகளிறே" என்று தெளிந்த, என் - என்னுடைய, சிந்தையகம் - நெஞ்சுக்குள்ளே நின்று, கழியாதே - போகாதே, உன்னுடைய சீலாதிகுணங்களை ப்ரகாசிப்பித்து, என்னை - என்னை, ஆள்வாய் - அடிமைகொண்டவனே, எனக்கு - எனக்கு, அருளி - விஸேஷ்மாகக்ருபைபண்ணி, உன்னுடைய, நளிர்ந்த - சீதளமான சீர் - சீலாதிகளை, உலகமூன்று - லோகத்ரயமும், உடன் - ஏககண்டமாய்க்கொண்டு, வியப்ப - "ஆஸ்ரிதபக்ஷபாதமே" என்று விஸ்மயப்படும்படியாகவும், நாங்கள் - அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு காணவிருக்கிற நாங்கள், கூத்தாடி - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸஸம்ப்ரம ந்ருத்தம்பண்ணி

நின்று-நின்று, ஆர்ப்ப - ஆர்ப்பரவம்பண்ணும்படியாகவும், பளிங்கு - தெளிந்த, நீர் - நீராலே நிறைந்த, முகிலின் - காளமேகத்திலே, பவளம் போல் - பவளக்கொடிபடர்ந்தாப்போலே, கனி - ஸ்நிக்தமான நிறத்தை யுடைத்தான, வாய் - திருவதரம், சிவப்ப-சிவந்துதோன்றும்படி, காண - நாங்கள்கண்டநுபவிக்கும்படியாக, நீ-நீ, வாராய் - நடந்துவந்தருளவே ணும். (ச)

ஆறு;—(புளிங்குடி) உன்னுடைய காருண்யத்தாலே யெனக் காகப் புளிங்குடிக்கிடந்து, வரகுணமங்கையிருந்து, வைகுந்தத்துள் நின்று. தெளிந்தவென்சிந்தை யகங்கழியாதே யென்னையடிமைகொ ண்டருளினாப்போலே, இன்னமு முன்னுடைய பரமகாருண்யத்தி னாலே சோதிவாய்திறந்து, தாமரைக்கண்களாலே நோக்கி, திருவடி களை யென்தலையிலே வைத்தருளி, பிராட்டியோடேகூட விருந்த ருளி, "ஆழ்வாரபேக்ஷிதத்தைச் செய்தருளினான்" என்று இந்த கல்யாணகுணத்தைக்கண்டு லோகமெல்லாம் விஸ்மயப்பட நாங்கள் கூத்தாடி நின்றார்வாரப்பட, நிறமுகிதான மேகத்திலே யுண்டான பவளம்போலே யழகிய திருப்பவளத்தில் சிவப்போடே காணலாம் படி நீவரவேணுமென்கிறார். (ச)

ஈடு-அவ;—திருப்பதிகளிலே ஸந்நிஹிதனா யென்னை யிவ்வள வாக்கினாப்போலே, மேலுமென்னபேக்ஷிதஞ்செய்தருளவேணுமென் கிறார்.

(புளிங்குடியித்யாதி) நானிரக்கவோ வினையெல்லாம் நீசெய்த து. பட்டர், திருநாராயணபுரத்தில் வெறுப்பிலே, "தேவர்ஸ்வாதந் த்ர்யமெல்லாங்காட்டினாலும் பின்னையும் பண்ணின விச்வாஸத்தில் குலைத்தலின்றிக்கே யிருக்கும்படி எனும்புரமுடைய வெம்பெருமா னார்போல்வார்பக்கல் செய்யுமத்தை எலியெலும்பனான வடியேன் பக்கலிலும் செய்வதே, (க) "மஹாவிச்வாஸ-ருவ-க்ஷு-மஹாவி ச்வாஸபூர்வகம்" என்கிறபடியே, ஏதேனுமொன்று வந்தாலும் 'இங் குத்தைக்கொன்று வருவதாய்வந்ததன்று, இதுக்கடி நம்முடையபா பம்' என்று பண்ணினவிச்வாஸம் குலையாதார் விஷயத்திலே செய் யுமத்தை இதுதானே ஹேதுவாக நெஞ்சநெகிழும்படி யினநெஞ்சர் பக்கலிது மத்தைச்செய்யக்கடவதோ" என்றாராம்.

(க) விஷ்வக்-ஸம்ஹி.

திருப்புளிங்குடியிலே (க) "கிடந்தோர்கிடக்கை" என்னு மழகைக்காட்டியும், வரகுணமங்கையிலே (உ) "பிரானிருந்தமை காட்டினீர்" என்னுமிருப்பழகைக்காட்டியும், ஸ்ரீவைகுண்டத்தி லே (ந) "நிலைபாரநின்றான்" என்னும் நிலையழகைக்காட்டியுமன் றோ வென்னைப்புகுரநிறுத்திற்று. (தெளிந்தவென்சிந்தை யகங்கழி யாதே) "அயோக்யன்" என்றகலாதபடி * கண்களசிவந்திலே என் ஹ்ருதயத்தைத் தெளிவித்தும் அத்தைக்கைவிடாதே நிரந்தரவா ஸம்பண்ணி. (என்னையாள்வாய்) என்னை "அயோக்யன்" என்ற கலவுமொட்டாதே பிரிவாற்றாமையால் முடியவுமொட்டாதே, குண ஜ்ஞாநத்தாலே தரிப்பித்துக் கொண்டுபோந்தாய். (எனக்கருளி) புறம்புபோகாதபடி வளைத்து நீயும் ஜீவநமிடாவிட்டா லெங்ஙனே தரிக்கும்படி.

(நளிர்ந்தவித்யாதி) அநுஸந்தித்தார் ஹ்ருதயம் குளிரும்படி யான சிலகுணத்தை. "ஆழ்வாரபேக்ஷிதஞ்செய்தருளினான்" என் கிற கல்யாணகுணத்தை (உலகம்மூன்றுடன்வியப்ப) விலக்ஷண ரோடு அவிலக்ஷணரோடுவாசியற வெல்லாருமொக்கவநுபவித்து விஸ்மயப்படும்படியாக. (நாங்களித்யாதி) நாங்கள் விஸ்மயப்படுமள வன்றிக்கே, விக்ருதராம்படி. இவர்க்கு விஸ்மயப்படவவஸரமில்லை யாயிற்று.

(பளிங்குநீர் முகிலின்பவளம்போல் கனிவாய்சிவப்ப) தெளி ந்தநீரை முகக்கையாலே தர்ஶநீயமான மேகமானது பவளத்தைப் பூத்தாப்போலேயாயிற்று திருவதரத்தில் பழுப்பிருப்பது. இவர் ஸம்ப்ரமத்தைக்கண்டு அவன்பண்ணும்ஸ்மிதமிருக்கிறபடி. (நீகாண வாராயே) என்னெஞ்சிரே யுன்னழகுகாணவரவேணும். அவன்கூடத் திருக்கிறபடி. அவன்மாறிமாறியிடு:டி, வல்லாடினைப்போலே காணு மிருப்பது.

பிள்ளையழகியமணவாளவரையரைப் பெருமாளொருநாளருள ப்பாடிட்டு, "நாமிங்ஙனே நடக்கிறோம், நீயிதுக்கீடாக ஆடிக்காண்" என்ன; "தம்பிரானே, என்னாலந்நடைக்கீடாக ஆடப்போமோ, (ச) [காளகம்படியுலாவியுலாவியித்யாதி] தேவருடைய குழலோசையைக் கேட்டவாறே, பாடல்தவிர்ந்தார்கள், தேவருடைய ஸ்வாபாவிக

(க) திருமாலை-உந-
(உ) சா-டு டு-
(ந) திருமொ-சா-கூ-அ.
(ச) பெரியா-தி-மொ-ந-சு ச.

மானநடைக்குத் தங்களுடைய சிக்ஷாபலத்தாலுண்டான ஆடல்தவிர்ந்தார்கள்; குரக்குக்கைகொடுகூழ்துழாவி அடியேன் தேவர்திருமுன்னே ஆடவல்லேனோ” என்றாராம் (ச)

ஐந்தாம்பாட்டு.

பவளம்போல் கனிவாய் சிவப்ப நீகாண வந்து நின்பன்னிலா முத்தம் * தவழ்கதிர் முறுவல் செய்து நின்திருக்கண் தாமரை தயங்க நின்றருளாய் * பவளநன் படர்க்கீழ்ச் சங்குறை பொருநல்தண் திருப் புளிங்குடிக்கிடந்தாய் * கவளமாகளிற்றினிடர் கெடத்தடத்துக் காய்சினப் பறவை யூர்ந்தானே.

ப:—அநந்தரம், என்முன்னே யெழுந்தருளி வந்து மந்தஸ்மிதம் பண்ணிக்கொண்டு நின்றருள வேணுமென்கிறார்.

(இ - ள்.) பவளம் - பவளத்தினுடைய, நன்-செறிந்த, படர்க்கீழ்-பாரத்தின்கீழே, சங்கு - சங்குகளானவை, உறை - வர்த்திக்கும்படியான, பொருநல் - திருப்பொருநலையுடைய, வண் - ப்ரமஹரமான, திருப்புளிங்குடி - திருப்புளிங்குடியிலே, கிடந்தாய் - கண்வளர்ந்தருளினவனும், கவளம் - கவளங்கொள்கையே ஸ்வபாவமான, மா - பெரிய, களிற்றின் - கஜேந்த்ரனுடைய, இடர் - ஆயிரம்தேவஸம்வத்ஸரம் நிராஹாரனாய் நின்றுக்லேசித்தது:கம், கெட - போம்படியாக, தடத்து - அந்தத்தடாகத்திலே, காய் - விரோதிவிஷயத்திலே வெவ்விய, சினம்-சினத்தையுடைய, பறவை - பெரியதிருவடியை ஊர்ந்தானே - நடத்திக்கொண்டுவந்தவனே, பவளம்போல் - திருப்பொருநலில் பவளப்படரும் சங்கும் செறிந்தாப்போலே, கனி - ஸ்நிக்தமான, வாய் - திருவதரமானது, சிவப்ப - சிவந்துதோன்ற, நின் - உன், பல்-பல்லாய், நிலா-நிற்கிற, முத்தம் - முத்தம்பார்க்கில், கதிர் - கதிரை, தவழ் - உடைத்தாம்படி; முறுவல்செய்து - முறுவல்செய்துகொண்டு, ஸ்ரீகஜேந்த்ரன் முன்புவந்தாப்போலே, காண - காணுங்காணும்படி, நீ-நீ, வந்து ஸத்வரனாய்வந்து, நின் - உன்னுடைய, திரு - அழகிய, கண் - திருக்கண்களாகிற, தாமரை - தாமரையானது, தயங்க - விளங்கும்படி. நின்றருளாய் - ப்ரீதிதோன்ற நின்றருளவேணும்; படர்-பற்றை. (ரு)

ஆறு;— (பவளம்போல்) வருமிடத்தில், ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்காகப் பெரியதிருவடிமேலேறி வந்தருளினாப்போலே, கனிவாய் சிவப்ப நீகாணவந்து நின்பன்னிலாமுத்தந்தவழ் கதிர்முறுவல்செய்து நின்திருக்கண் தாமரைதயங்க நின்றருளாயென்கிறார். (ரு)

ஈடு-அவ;—ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குவந்து தோற்றினாப்போலேவந்து தோற்றியருளவேணுமென்கிறார்.

(பவளமித்யாதி) (க) "அவாக்யநாதர: - அவாக்யநாதர:" என்கிறபடியே, ஒன்றுக்கும் விக்ருதனுகாதநீ, அநுகூலதர்மநத்தாலே யகவாயில் பந்தந்தோற்ற விக்ருதனாய் ஸ்மிதம்பண்ணினிற்கும் படியைக் காணவேணும். (நின்பன்னிலாமுத்தம்) பல்லாகிற நிலாவையுடைய முத்துநிரையானது. (தவழ்கதிர் முறுவல்செய்து) (கதிர்தவழ்- முறுவல்செய்து) கதிருள்ளடங்காதே புறம்பேதவழும்படி முத்தத்திலே பன்னில்க்கதிர் தவழும்படி. முத்தம்-அதரம். கதிர் புறப்படும்படி முறுவல்செய்து. (நின்திருக்கண்தாமரைதயங்க நின்றருளாய்) கண்ணினுடைய ஸம்ருத்திருக்கிறபடி. தயங்குகைபாவது அப்போதுபிறந்தவொளியாதல், கடல்சலித்தாப்போலே யசைந்து வருகிறபடியைச் சொல்லிற்றாதல். (நின்றருளாய்) முந்துறநாலடிவந்து, பின்னையதுவும் மாட்டாதே ஸ்தப்தனாய்நிற்கும் நிலைகாணவேணும்.

(பவளமித்யாதி) நல்லபவளப்படரின்கீழே சங்குகள் நிர்ப்பாதமாய்வர்த்திக்கிற திருப்பொருநலை யுடைத்தாய், ஸரமஹாரமான திருப்புளிங்குடியிலேகண்வளர்ந்தருளுகிறவனே. படர்- தூறு. அவ்வூரில் பதார்த்தங்களுக்கு, பாதகத்துக்கு பயப்பட்டுவர்த்திக்குமதில்லையாயிற்று. அத்தேசஸ்வபாவமிதுவாயிருக்க, "எனக்குஉன்னைக் கிடைக்குமோ, கிடையாதோ" என்று நான் பயப்படும்படியிருக்கிறதென்.

(கவளமித்யாதி) கவளங்கொண்டிருப்பதான பெரியவானை; கவளங்கொண்ட வென்றவித்தால் - மதமுதிதமென்கை. இதுக்கு முன்பு இடர்பட்டறியாதவானை. (இடர்கெட) (உ) "வாராயென்னிடரைநீக்காய்" என்று, தன்வாயாலே "ஆரிடர்" என்னும்படியிறே

(க) சாந்தோ:௩-கச- (உ) சிறியதிரு-

பட்டவிடரின்கணம். (க) "ஆனையின்துயரம்" என்று நெஞ்சுளுக்கும்படியிறேபட்டது. (தடத்து) தன்னிலமல்லாத பொய்கையிலே க்ஷுத்ரபதார்த்தத்தின் கையிலே யகப்பட்டு ப்ரதிக்ரியையின்றிக்கேயிருக்கும்படியான வாபத்துப்போம்படியாக. தடமென்று - கரைக்கும், பொய்கைக்கும்பேர். (காய்சினப்பறவையூர்ந்தானே) ப்ரதிபக்ஷத்தைக்காயுஞ்சினத்தையுடைய பெரியதிருவடியை, அவன்வேகம்போராமை அவனைப்ரேரித்துக் கொண்டுவந்து தோற்றிற்றிலேயோ. அவ்வானையின் தசைகிடாயென்தசை; அதுக்குத்தோற்றினப்போலே யென்முன்னேவந்து தோற்றியருளவேணும். (௫)

ஆறும்பாட்டு:

காய்சினப்பறவை யூர்ந்து பொன்மலையின் மீமிசைக்கார் முகில்போல் * மாசினமாலி மாலிமானென்றங் கவர்படக்கனன்று முன்னின்ற * காய்சினவேந்தே கதிர்முடியானே கலிவயல்திருப் புளிங்குடியாய்* காய்சின வாழிசங்குவாள் வில்தண்டேந்தி யெம்மிடர் கடிவானே.

ப:—அநந்தரம், உகவாதார் முன்னே யகப்படப் பெரிய திருவடியை மேற்கொண்டு சென்று நின்றநீ, உகந்துகாணவாசைப்பட்ட வென் முன்னேயப்படி அவனைமேற்கொண்டுவந்து நின்றருள வேணுமென்கிறார்.

(இ-ள்) பொன் - கநகமயமான, மலையின் - மஹாமேருவின், மீமிசை - மேலேபடிந்த கார்முகில்போல - காளமேகம்போலே, காய்-விரோதிவிஷயத்திலே வெவ்விய, சினம் - சீற்றத்தையுடைய, பறவை-பெரியதிருவடியை, ஊர்ந்து - நடத்திக்கொண்டு, காய் - ப்ரதிபக்ஷங்களிலே காலாக்நிகல்பமான, சினம் - சினத்தையுடைய, ஆழிசங்குவாள் வில்தண்டு - ஸ்ரீபஞ்சாயுதத்தையும், ஏந்தி - ஏந்தி, மா - பெரிய, சினம் - சினத்தையுமுடைய, மாலி - மாலி, மான் - மஹானான, மாலி - ஸுமாலி, என்று - என்றுப்ரஸித்தரான, அவர் - அவர்கள், அங்கு - அந்த யுத்தபூமியிலே, பட - நசிக்கும்படி. (உ) "க்ஷாயாந்திவஸந்ருஸம்க்ருத்தய காலாக்நிஸத்ருஸம்க்ரோதே" என்கிற கணக்கிலே, கன்று - பெரிய

(க) தி-மொ-உ-ங-க (உ) ரா-பா-க

சிற்றத்தோடே, முன் - உகவாதார்முன்னே, நின்ற - இவ்வழகைக்காட்டி நின்றவனும், (க) " அங்கருளில்லாத்தன்மையாளன் " என்னும் கணக்கிலே, காய் - விரோதிகளுக்கு தாஹகமான, சினம்-க்ரோதகுணத்தையுடைய, வேந்தே - ஸ்வாமியாய், கதிர் - விரோதிவர்க்கம்மடிகையாலே யொளிவிடுகிற, முடியானே-திருவபிஷேகத்தையுடையவனாய், ஆஸ்ரிதார்த்தமாக, கலி - ஸம்ருத்தமான, வயல்-வயலையுடைய, திருப்புளிங்குடியாய்-திருப்புளிங்குடியிலே வர்த்திப்பானாய், அவ்வழியாலே, எம் - எங்களுடைய, இடர் - அநுபவாலாபரூபமான துக்கத்தை, கடிவானே - கழிக்கக்கடவனாயிருக்கிறவனே.

அந்த வாஹநத்தோடு மாயுதங்களோடும் திருவபிஷேகத்தோடும் நான்காணும்படியாகவந்து நின்திருக்கண்தாமரைதயங்க நின்றருளாயென்று கீழேயந்வயம். (சு)

ஆறு ;—(காய்ச்சினப்பறவையூர்ந்து) உம்முடைய மநோரதங்களுக்கு ப்ரதிபந்தகங்களில்லையோ, ஸஹஸா முடியுமோவென்னில்;

என்னுடைய மநோரதப்ரதிபந்தகங்களைப் போக்குகைக்காகவன்றோ, சங்க சக்ர கதா ஶார்ங்காதி திவ்யாயுதங்களை யேந்தியருளியிருக்கிறது ; ஆனபின்பு, பொன்மலையின்மீமிசைக் கார்முகில்போலே காய்சினப்பறவையூர்ந்து, மாலி ஸுமாலி மால்யவத்ப்ரப்ருத்யஸுரநிரஸநம் பண்ணியருளினாப்போலே இந்த ப்ரதிபந்தகத்தையும் நீயேபோக்கி யென்னுடைய மநோரதத்தையும் முடித்தருளவேணுமென்கிறார். (சு)

ஈடு-அவ;—உம்முடைய வபேக்ஷிதங்கள் செய்யவொண்ணாதபடி ப்ரதிபந்தகங்கள் ப்ரபலமன்றோவென்னில்; மாலி, ஸுமாலி, மால்யவான், இவர்களிலும் வலிதோ வென்ப்ரதிபந்தகமென்கிறார்.

(காய்சினப்பறவையூர்ந்து) ப்ரதிபக்ஷத்தில் உனக்குக் கண்ணோடிலும் கண்ணற்றறியச்செய்யும் பெரியதிருவடியைநடத்தி. (பொன்மலையின்மீமிசைக் கார்முகில்போல்) அப்போதிருக்கும்படி. மேருவைக்கினிய காளமேகம் படிந்தாப்போலேயாயிற்றிருப்பது இப்போதிதுசொல்லுகிறது - பெரியதிருவடி முதுகிலிருப்பைக் காண்கைக்காக. (மாசினமாலி) பெரியசினத்தை யுடையனாய்க்கொண்டுவந்த மாலி. (மாலிமான்) மஹாநுபாவமாலி. ஸுமாலியென்றபடி. (என்றங்

(க) திருநெடு-சு-

கவர்பட)என்கிறவர்களங்கே முடியும்படியாக. (கனன்றுமுன்னின்ற) சீறி, அவர்கள் முன்னேநின்ற; வடிவைக்கண்டபோதே யெதிரிகள் முடியும்படியாயிறே வீரமிருப்பது.

(காய்சினவேந்தே) திருநாமம். காயுஞ்சினத்தையுடைய நிர்வாஹகனே. (கதிர்முடியானே) விளங்காநின்ற திருவபிஷேகத்தை யுடையவனே. நீ ரக்ஷணத்துக்கு முடிசூடியிருக்க, காணிழக்கவோ. (கலிவயல் திருப்புளிங்குடியாய்) நீ தூரஸ்தனுய்த்தானிழக்கிறே னோ. ஸம்ருத்தமானவயலை யுடைய திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே. (காய்சினவாழியித்யாதி) காயுஞ்சினத்தையுடைய திருவாழிமுதலான திவ்ய யுதங்களை தரித்தது ஆஶ்ரிதருடைய வாபத்தைப் போக்குகைக்காகவன்றோ. "எம்மிடர்கடிவானே-திருக் கண்தாமரைதயங்கநின்றருளாய்" என்று கீழ்ப்பாட்டிலே யிப் பாட்டுக்கு க்ரியை. (௬)

ஏழாம்பாட்டு.

எம்மிடர்கடிந்திங்கென்னை யாள்வானே யிமையவர்தமக்கு மாங்கனையாய் * செம்மடல்மலரும் தாமரைப்பழனத்தண் திருப்புளிங்குடிக்கிடந்தாய் * நம்முடையடியர் கவ்வைகண்டுகந்து நாங்களித்துளநலங்கூர* இம்மடவுலகர்காணநீயொருநாளிருந்திடாயெங்கள்கண்முகப்பே. (எ)

ப:—அநந்தரம், அளவிலிகளான வெங்களோடு, அளவுடையாரோடு வாசிபற ரக்ஷகனான நீ, அஸாதாரணஶேஷபூதரான ஸூரிகளனுபவிக்கிற கீர்த்தியைக்கண்டு நாங்களுகக்கும்படி யெங்கள் கண்முகப் பேயிருந்தருள வேணுமென்கிறார்.

(இ-ள்.) எம் - எங்களுடைய, இடர் - அவித்யாதி க்ருதமான ஸகல துக்கங்களையும், கடிந்து - போக்கி, இங்கு - இந்த பூமியிலே வைத்து, என்னை - என்னை ஆள்வானே - அடிமைகொண்டு போருமவனாய், இமையவர்தமக்கும் - அநிமிஷரான ப்ரஹ்மாதி தேவர்களுக்கும், ஆங்கு - அங்கு, அனையாய் - அப்படி அநிஷ்டநிவ்ருத்தி பூர்வகமாக இஷ்டப்ராப்தியைப் பண்ணிக்கொடுத்து ரக்ஷிக்குமவனாய், செ-சிவந்த, மடல் - இதழ், மலரும்-மலருகிற, தாமரை - தாமரையையுடைத்தான,

பழனம் - நீர்நிலங்களையுடைய, தண் - குளிர்ந்த, திருப்புளிங்குடி - திருப்புளிங்குடியிலே, கிடந்தாய் - ஆச்ரிதார்த்தமாகக் கண்வளர்ந்தருளுகிறவனே, நம்முடை-நம்முடையாரென்னும்படி, அடியவர்-உனக்கஸாதாரண சேஷபூதரான ஸூரிகளுடைய, கவ்வை - அத்யத்புதமான கோலாஹலத்தை, கண்டு - கண்டு, நாம் - நாங்கள், உகந்து - உகந்து, களித்து - ஆநந்திகளாய், உளம் - நெஞ்சிலே, நலம் - ப்ரேமமானது, கூர - வர்த்தி (யி-) க்கும்படியாக், மடம் - வாசியறியாத, இ - இந்த, உலகர்-லோகத்தாரும், காண - காணும்படி, நீ-நித்யஸூரிகளை யென்றுமிருந்தநுபவிப்பிக்கிற நீ, ஒருநாள் - ஒருநாளாகிலும், எங்கள் கண்முகப்பே-எங்கள் கண்முகப்பே,இருந்திடாய்-இருந்தருளவேணும் (எ)

ஆறு; —(எம்மிடர்) உத்கர்ஷாபகர்ஷவிபாகமின்றியே ஸர்வாத்மாக்களுக்கும் நீயல்லது வேறு ரக்ஷகருளரோ; ஆனபின்பு, உனக்கு நல்லராயிருப்பார் நீயிருந்தருளு மிருப்பைக்கண்டால் படும்பாடு கண்டு நாங்கள் வாழும்படியாக, இந்தலோகத்திலுள்ளவர்கள் காணும்படி யெங்கள் கண்ணெதிரே நீ யொருநாளிருந்திடா யென்கிறார்.(எ)

ஈடு: அவ:—துர்ப்பலரோடு ப்ரபலரோடு வாசியற ரக்ஷகனை நீ, நாங்கள் வாழும்படி கண்ணெதிரே யொருநாளிருக்கவேணுமென்கிறார்.

(எம்மிடர்கடிந்து) எங்களுடைய ஸாம்ஸாரிக ஸகலதுஃக்கங்களையும்போக்கி.(இங்கென்னையாள்வானே) பகவத்ஜ்ஞாநத்துக்கடைவில்லாத விஹலோகத்திலே யென்னை யடிமைகொள்ளுகிறவனே. (இமையவர் தமக்குமாங்கனையாய்) அகிஞ்சநரான வெங்களுக்கேயன்றிக்கே, (க) "ஸ்ரஷ்டாரோஹ்ஸ்-ஸம்ஹரோஹ்ம்" என்றிருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கு மங்கப்படி நிர்வாஹகனானவனே. (செம்மடலித்யாதி) சிவந்தமடல்மலராநின்றுள்ள தாமரைகளையுடைய நீர்நிலங்களை யுடைத்தாய், ஸரமஹ்ரமான திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே. உள்ளும்புறம்புமெல்லாம் தாமரையாயிற்று.

(நம்முடையித்யாதி) உன்னடியாருன்னையநுபவிக்கிற வாரவாரத்தைக்கண்டு நாங்களுகந்து, அந்தவுகப்புத் தலைமண்டையிட்டு, ஹ்ருதயத்திலே ஸ்நேஹமானது மேன்மேலென மிக்குவர. (இம்மடவுலகர்காண) இந்தஸம்ஸாரத்திலறிவுகேடராய், இடக்கைவலக்

(க) கீதை-

கையறியாதவர்களும் கண்ணாலே காணும்படியாக. (நீயோருநாளிருந் திடாயெங்கள்கண்முகப்பே) எங்கள்கண்வட்டத்திலே யொருநாளி ருந்தருளவேணும். நித்யஸூரிகளுக்கு ஸதாதர்மநவிஷயமானநீ, ஒருநாளெங்கள்கண்ணுக்கு விஷயமாயிருந்தா லாகாதோ; உன்னு டைய தர்மநம் அதிக்ருதாதிகாரமாக வேணுமோ. (எ)

எட்டாம்பாட்டு.

எங்கள்கண்முகப்பே யுலகர்களெல்லா மிணையடிதோழுதே ழுதிறைஞ்சி * தங்களன்பாரத்தமதுசோல்வலத்தால் தலைத்தலைச்சி றந்துபூசிப்ப* திங்கள்சேர்மாடத் திருப்புளிங்குடியாய் திருவைகுந் தத்துள்ளாய்தேவா* இங்கண்மாஞாலத்திதனுளு மொருநாளிருந்தி டாய் வீற்றிடங்கோண்டே. (அ)

ப:—அநந்தரம், அந்த விபூதியிலன்றியே, ஸகலலோகங்களுங்க ண்டு உன் திருவடிகளிலே விழுந்து தொழுதுவாழும்படி, இந்த விபூதி யிலும் திருப்புளிங்குடியிலே உன்வாஸிதோற்ற வெழுந்தருளி யிருக்க வேணுமென்கிறார்.

(இ - ள்.) திங்கள் - தேவலோகத்தில் மேலெல்லையிலே வர்த்திக் கிற சந்த்ரன், சேர் - சேரும்படி யோங்கின, மாடம் - மாடங்களையு டைய, திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடியிலே வர்த்திப்பானும், திருவைகுந்தத்து - திருவைகுந்தத்திலே, உள்ளாய் - எழுந்தருளியிற் பானும், தேவா - இந்த ஸௌலப்ய தேஜஸ்ஸை யுடையனானவனே, எங்கள் கண்முகப்பே - எங்கள் கண்முகப்பே, உலகர்கள் - லோகத்தி லுள்ளார், எல்லாம் - எல்லாரும், அடி - உன்திருவடிகள், இணை-இரண் டையும் தொழுது - தொழுது, எழுது - எழுவதாய்க்கொண்டு, இறை ஞ்சி - பாரதந்த்ர்யம் தோன்றும்படி ஸஸம்ப்ரமராய், தங்கள் - தங்களு டைய, அன்பு - பக்தியானது, ஆர - வர்த்தியாநிற்க, அத்தாலே, தமது- தங்களுடைய சொல்வலத்தால் . உக்திபலாநுருபமாக. தலைத்தலைச்சி றந்து-ஒருவர்க்கொருவர் அஹமஹமிகையாலே மேல்விழுந்து, பூசிப்ப- ஸபஹுமாந ஸ்தோத்ரங்களைப்பண்ணும்படி, இ-இந்த, கண் - இட முடைத்தாய், மா - நீ வருகைக்கீடாக ஶ்லாக்யமான, ஸ்ரீமத்தான, ஞாலத்து-பூமியிலே, இதனுளும் - திருப்புளிங்குடிக்குள்ளேயும், வீற்றி

டங்கொண்டு - உன்மேன்மையிடங்கொண்டு தோன்றும்படி. ஒருநாள்- ஒருநாள், இருந்திடாய் - இருந்தருளவேணும். (அ)

ஆறு:—(எங்கள்) "நீர்சொல்விற்றெல்லாம் திருநாட்டிலே செய்கிறோம்" என்றோ பேசாதிருந்தருளுகிறது, அங்ஙனே செய்தருளவமையாது, எங்கள்கண்ணெதிரே லௌகிகரெல்லாரு முன் திருவடிகளிரண்டையும் நிரந்தரமாகத்தொழுது க்ருதார்த்தராய், தங்களுடைய ஸ்நேஹாநுகுணமாகத் தங்களுடைய ஶக்த்யநுரூபமான சொற்களாலே மிகவும் மேல்விழுந்து கொண்டாட, இந்த லோகத்திலே யித்திருப்புளிங்குடியிலே பிராட்டியும் நீயுங்கூடவொருநா ளிருந்திடாயென்கிறார். (அ)

ஈடு; அவ:—பரமபதத்திலே யன்றோ விருப்பழகு காட்டலாவதென்ன; அவ்விருப்பைத் திருப்புளிங்குடியிலே யொருநாளிருந்தருளவேணுமென்கிறார்.

(எங்களித்யாதி) எங்கள்கண்முகப்பே இருக்கவேணும். அது செய்யுமிடத்தில், லோகத்திலுள்ளாரடங்க, திருவடிகளிலுண்டான சேர்த்தியழகுகண்டு திருவடிகளிலே விழுவதெழுவதாய்க்கொண்டாஶ்ரயித்து. (தங்களன்பார) தங்கள் ப்ரேமம் மிக்குவர (தமது சொல்வலத்தால்) ஶக்த்யநுரூபமான சொற்களாலேயென்னுதல்; தாந்தாஞ்சொல்லவல்லவளவிலே யென்னுதல்; (க) "யதாஜ்ஞாந ஐ-மவக்ஷ்ராஜீ வ-மா-மஷஜஂமஸநாதநஂ - யதாஜ்ஞாநந்துவக்ஷ்யாமி புருஷந்தம்ஸநாதநம்" என்னக்கடவதிறே. அதாவது-"நூறு பிராயம்புகுவீர், பொன்னாலே பூணுநூலிடுவீர்" என்றாப்போலே சொல்லுகை. வங்கிப்புரத்துநம்பி "விஜயஸ்வ,விஜயஸ்வ" என்ன, ஆண்டான் சொன்னவார்த்தையை நினைப்பது, (தலைத்தலைச்சிறந்து பூசிப்ப) ஒருவர்க்கொருவர் மேல்விழுந்து மிகவுமாஶ்ரயித்துக் கொண்டாட.

(திங்களித்யாதி) சந்த்ரனுக்கு இதஸ்ததஸ்ஸஞ்சரிக்கையாலுண்டான விளப்பெல்லா மாறும்படியிருக்குமாயிற்று மாடங்களினுடையவோக்கம்; அதிலே ஸந்நிஹிதனானவனே. (திருவைகுந்தத்துள்ளாய்) அவ்வளவேயன்றிக்கே, திருவைகுந்தத்திலே நின்றருளினவனே. (தேவா) பரமபதத்திற்காட்டில் ஸம்ஸாரத்தில் நிலையால்

(க) ஶ்ரீநாராயணம்.

வந்தபுகர். (இங்கண்மாஞாலத் திதனுளுமோருநாளிருந்திடாய்) இந்தவிடமுடைத்தான மஹாப்ருதிவியிலே, திருப்புளிங்குடியிலேயு மொருநாளிருந் தருளவேணும். இருக்குமிடத்தில் (வீற்றிடங்கொண்டு) பரமபதத்திலிருக்குமாபோலே, உன்னுடைய வ்யாவ்ருத்தி தோற்ற விருக்கவேணும்.

(இதனுளும்) என்கிறதுக்குக் கருத்தென்னென்னில்; சாய்ந் தருளினவழகுகண்டோமுக்கு, "இவனிருந்தாலெங்ஙனே யிருக்கிற தோ" என்றும், "இப்படியிருக்கிறவன்றான்நின்றாலெங்ஙனேயிருக் கிறதோ" என்றும், இங்ஙனே சிலவபேக்ஷைகள் பிறக்குமிறேயிவர் களுக்கு; அது வேறொருபடியிறேநமக்கு- இவையெல்லாம் நாகாவ ஹமான விஷயங்களிலேயுண்டு; இவ்விஷயத்தில் தெரியாது. செய் ததெல்லாம் பரிதாபையும், அவ்வருகே சிலபரிமாற்றங்களை யாசைப் படுகையுமெல்லாம் நமக்கு ப்ராக்ருதவிஷயங்களிலே யுண்டாயிருக் கும். இப்படியிருக்குமோவென்றறியுமித்தனை. (அ)

ஒன்பதாம்பாட்டு.

வீற்றிடங்கொண்டு வியன்கோள் மாஞாலத் திதனுளுமிருந்தி டாய் * அடியோம் போற்றியோவாதே கண்ணிணைகுளிரப்புதுமல ராகத்தைப்பருக* சேற்றிளவாளை செந்நெலூடுகளுஞ் செழும்பணைத் திருப்புளிங்குடியாய் * கூற்றமாயசுரர் குலமுதலரிந்த கொடுவினை ப்படைகள் வல்லானே. (கூ)

ப:—அநந்தரம், ஸ்ரீதிஸயஸுகுமாரமான வுன வடிவை நாவகள கண்டநுபவிக்கை ப்ரயோஜநமாக விந்த விபூதியிலே யெழுந்தருளியிரு க்கவேணுமென்கிறார்.

(இ - ள்.) சேறு - தன்னிலமான சேற்றிலே வளருகையாலே, இளம் - இளகிப்பதித்த, வாளை-வாளைகள், செந்நெலூடு-செந்நெலூடே, உகளும்-உகளிக்களித்து வர்த்திக்கக்கடவதாய், செழும்-ஸம்ருத்தமான, பணை - நீர் நிலங்களையுடைய. திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடி யிலே வர்த்திக்கிறவனாய், கூற்றமாய் - ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவாய்க் கொண்டு, அசுரர்குலம் - அஸுரகுலத்தை, முதல் - கர்ப்பபர்யந்தமாக, அரிந்த-அறுத்துப்பொகடுமவனாய், கொடுவினை - அதுக்கீடான கொடுந் தொழிலையுடைய, படைகள் - ஆயுதங்களை, வல்லானே - விதேயமாக

வுடையனானவனே, அடியோம் - உனக்கஸாதாரண சேஷபூதரான நாங்கள், போற்றி - மங்களாஸாஸநம்பண்ண. ஓவாதே-இடைவிடாதே, கண்ணிணை - கண்ணிணையானது, குளிர - பரிதாபம் தீர்ந்து குளிரும்படியாக,(க) "ஔவநாஹ்ராவிவ நிவ-லோசநாப்யாம்பிபந்நிவ" என்கிறபடியே, புதுமலர்-செவ்விப்பூப்போலே புஷ்பஹாஸஸுகுமாரமான, ஆகத்தை - உன்வடிவை, பருக - த்ருஷ்ணாநுரூபமாக வநுபவிக்கும்படி, வீற்றிடங்கொண்டு - உன்னுடைய ஸர்வாதிகத்வத்தால்வந்த வேறுபாடு விஸ்த்ருதமாய்க்கொண்டு தோற்றி, வியன்கொள் - விஸ்த்தாரவத்தாய், மா - ஶ்லாக்யமான, ஞாலத்திதனுளும் - இந்த ஜகத்தினுள்ளேயும், இருந்திடாய் - இருந்தருளவேணும். (௬)

ஆறு: (வீற்றிடங்கொண்டு) என்னுடைய கண்ணிணையானது விடாய்தீர்ந்து குளிர உன்னுடைய செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியைப்போவாதே பருகும்படியாக விஸ்மயநீயமான ஸம்ஸாரத்திலே உன்னுடைய வ்யாவ்ருத்தி தோற்றும்படி யொருநாளிருந்தருளவேணும்; ஆஶ்ரிதருடைய து:கத்தைப் போக்கவல்லையாயிருந்து அவை செய்யாதொழியலாமோவென்கிறார். (௬)

ஈடு:- அவ;—இவ்விருப்பில் வாசியறியாத ஸம்ஸாரத்திலேயிருக்கிறதென்னென்னில்; ருசியுடைய நாங்கள்கண்டநுபவிக்கவென்கிறார்.

(வீற்றிடங்கொண்டு) ஶேஷித்வத்தால்வந்த வேறுபாடுதோற்றும்படி. (வியன்கொளித்யாதி) விஸ்மயநீயமான மஹாப்ருதிவியானவிதிலேயு மிருந்திடாய் உன்னைக்கொண்டொரு கார்யமில்லாத ஸம்ஸாரத்திலே. (இதனுளுமிருந்திடாய்) இந்தத் திருப்புளிங்குடியாகிற திருப்பதியிலேயுமிருந்திடாய். உன்னை யொழியச் செல்லாமையுடையார் முன்னே யிருந்தாயென்னுமிதுபோருமோ. (இதனுளுமிருந்திடாய்) சாய்ந்தருளினபோதிருக்குமிருப்பை யநுபவிப்பித்தருளிற்று, இனி இருந்தாலிருக்குமழகையு மநுபவிப்பித்தருளவேணும்.

"நமக்கிவை யெல்லாமிங்கே காணலாமிறே - சாய்ந்தருளினவழகு, பெரியபெருமாள்பக்கலிலே காணலாம்; நின்றருளினவழகு, நம்பெருமாள்பக்கலிலே காணலாம்" இருப்பிலுண்டானவழகுபெரியபிராட்டியார்பக்கலிலே காணலாம்" என்று பட்டருளிச்செய்வர்.

(க) ரா-யு-கக-எ.

திருவாய்மொழி, கூ-ப, உ-தி, கo-பா, கொடுவினைவ்யாக்யாநம் இங்

நாமிங்கிருந்து நீர்பெறப்புகுகிறபேறேதென்ன (அடியோமித்யாதி) (அடியோம்) அவ்விருப்பைப்படிவிட, அதுவே ஜீவநமாகவிருக்கிறநாங்கள். (போற்றி) இவ்விருப்பிங்ஙனே நித்யமாகச் செல்லவேணுமென்று மங்களாசாஸநம்பண்ணி. (ஓவாதே) உச்சிவீடுவிடாதே. (கண்ணிணைகுளிர) காணப்பெறுமையாலே கமர்பிடந்துகிடக்கிறகண்கள், விடாயெல்லாந்தீர்ந்து குளிரும்படியாக. (புதுமலரித்யாத்) செவ்விப்பூப்போலேயிருக்கிற திருமேனியை யநுபவிக்கும்படியாக. புஷ்பஹாஸ ஸுகுமாரமானவடிவை (க) "யௌவநாஸ்ரிவநிவ-லோசநாப்யாம்பிபந்நிவ" என்கிறபடியே நிரந்தரமாகவநுபவிக்கப்பெறுகை.

(சேற்றிளவித்யாதி) அவ்வூரில் பதார்த்தங்களுடைய அபிமதலாபத்தாலே களித்து வர்த்திக்குமாயிற்று செங்கெலின் நடுவேசேற்றிலே. பஞ்சவிம்ஸதிவார்ஷிகரான முக்தரைப்போலேயிருக்கிற வாளைகள் களித்துத்துள்ளாநிற்பதான வழுகியநீர் நிலத்தையுடைய. (செழும்பணை) அழகியமருதநிலமென்றுமாம். (கூற்றமாயித்யாதி) ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவான திவ்யாயுதங்களை தரித்துக்கொண்டிருக்கிறவென்னுதல்; அன்றிக்கே, ப்ரதிபக்ஷத்துக்குக் கூற்றமாய்க்கொண்டு அவர்களுடைய குலத்தை முதலிலேயரிந்து பொகடுமவனும், அதுக்கடைக்கொடியதொழில்களையுடைய திவ்யாயுதங்களையுடையனுமிருக்கிறவனென்னுதல். இப்போது சொல்லுகிறது இதுக்குமுன்பு தம்முடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கினபடிக்கு த்ருஷ்டாந்தமென்னுதல்; உனக்கென்னகுறை யுண்டாயிழக்கிறேனென்னுதல். (கூ)

பத்தாம்பாட்டு

கொடுவினைப்படைகள்வல்லை யாயமராக்கிடர்கெட வசுரர்கட்கிடர்செய் * கடுவினைநஞ்சேயென்னுடையமுதே கலிவயல் திருப்புளிங்குடியாய் * வடிவிணையில்லா மலர்மகள் மற்றைநிலமகள்பிடிக்கும்மெல்லடியைக் * கொடுவினையேனும் பிடிக்கநீயொருநாள்கூவுதல் வருதல்செய்யாயே. (கo)

ப:—அநந்தரம், நாய்ச்சிமாரை யடிமைகொண்டருளினுப்போலே நானும்முன் திருவடிகளிலே யடிமைசெய்யும்படி, என்னை யங்கேயழைத்தல் இங்கே வருதல் செய்தருளவேணுமென்கிறார்.

(க) ரா யு-கக-எ.

(இ-ள்.) கொடுவினை-விரோதிவிஷயத்தில் கொடுந்தொழிலான, படைகள் - ஆயுதங்களை, வல்லையாய்-கார்யங்கொள்ள வல்லையாய், அமரர்க்கு - அநுகூலரான தேவர்களுடைய, இடர் - துக்கம், கெட - தீரும்படி, அசுரர்கட்கு - ப்ரதிகூலரானவஸுரர்கட்கே, இடர் - துக்கத்தை, செய் - விளைக்குமிடத்தில், கடு - சடக்கென்னும், வினை - ப்ரவ்ருத்தியையுடைய, நஞ்சே - நஞ்சானவனே, என்னுடை - அநந்யப்ரயோஜநனாயநந்யகதியான வெனக்கு அமுதே - அலப்யமானவம்ருதமாய், அத்யாஸந்நமாம்படி; கலி - ஸம்ருத்தமான, வயல் - வயலையுடைய, திருப்புளிங்குடியாய் - திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே, (க) "ஸுவலிதேக்ஷணா - அவலிதேக்ஷணு" என்னும்படி, வடிவு - வடிவழகுக்கு, இணையில்லா - நீயும் தகுதியல்லாதபடியான வதிஶயிதவைலக்ஷண்யத்தையுடைய, மலர்மகள் - கமலவாஸிநியான லக்ஷ்மியும், மற்றை - ஏவம்பூதவைலக்ஷண்யத்தையுடைய, நிலமகள் - ஸ்ரீபூமியும், பிடிக்கும் - தங்களுடைய ஸ்வாபாவிகமார்த்தவத்தையுடைய திருக்கைகளாலே பிடிக்கும்படியான, மெல் - நிரதிஶயஸௌகுமார்யத்தையுடைய, அடியை - திருவடிகளை, கொடுவினையேனும் - ப்ராப்தனுய்வைத்து நெடுங்காலமிழக்கும்படி கொடியபாபத்தை யுடையநானும், பிடிக்க - பிடிக்கும்படியாக, நீ நீ, கூவுதல் - அங்கேயழைத்துக்கொள்ளுதல், வருதல் - நானபேக்ஷித்தபடி யிங்கேவந்தருளுதல், ஒருநாள்-ஒருநாள், செய்யாய் - செய்யவேணும். (௧௦)

ஆறு:—(கொடுவினை) ஆஶ்ரிதவிரோதிநிரஸந ஸமர்த்தனுமாய், ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனுமாய், எனக்கு நிரதிஶய போக்யனுய், திருப்புளிங்குடியிலேவந்து ஸந்நிஹிதனுனவனே, வடிவழகுக்கொப்பில்லாத பெரியபிராட்டியாரும், அப்படிப்பேயிருக்கிற ஸ்ரீபூமிப் பிராட்டியுங்கூடி ஸ்பர்ஶிக்கவேண்டும்படி ஸுகுமாரமான வுன்னுடைய திருவடிகளை, அதில்போக்யதையை யறிந்துவைத்து இழக்கைக்கீடான பாபத்தைப்பண்ணினநானும் பிடிக்கும்படி, என்னையொருநாளங்கே யழைத்துக்கொள்ளுதல், இங்கேவருதல், செய்தருளவேணுமென்கிறார். (௧௦)

ஈடு; அவ;—நிரதிஶயபோக்யமான வுன்னுடைய திருவடிகளிலே நானும் வந்தடிமைசெய்யும்படி, என்னை யங்கேயழைத்தல், நீ யிங்கேவருதல் செய்யவேணுமென்கிறார்.

(க) ரா-ஸு-௧௬-௫.

(கோடுவினைப்படைகள் வல்லையாய்) நீரிலே நெருப்பெழுந்தாப்போலே, உனக்குசேஷமாய்வைத்து ப்ரதிகூலித்தவர்கள்பக்கல்சீறி, ஆயுதமெடுக்கவல்லையாய். அவன்மாட்டாதது சிலரையழியச்செய்கையாயிற்று; (க) "யதிவாராவணஸ்ஸ்வயம்-யதிவாராவணஸ்ஸ்வயம்" என்னுமவனிறே. கடலேயணைசெய்து, ஊரைச் சூழப்போக்கு, பின்னை அங்கதப்பெருமாளைப்புகவிட்டு, கையிலேவந்தகப்பட்டவனை (உ) "ஹநாநீ-ஜராநாமி-கச்சாநுஜாநாமி" என்று தப்பவிட்டது, "இன்னமொருக்கா லநுகூலிக்குமோ" என்று; "நான்முடிந்தேபோமித்தனை" என்று அவனதிலே முதிரநின்றபின்பு, கண்ணுங்கண்ணீருமாயிறே நின்றுகொன்றது. இவர்கள் பண்ணும் ப்ராதிகூல்யத்தாலே யழியச்செய்யுமித்தனைபோக்கி, தானாகவழியச்செய்யமாட்டானாயிற்று.

(அமரரித்யாதி) அஸுரர்களாலே தேவர்களுக்குண்டான து:க்கந்திரும்படி, அஸுரர்களுக்கு து:க்கத்தைவிளைக்கும். (கடுவினைநஞ்சே) அப்போதே சடக்கெனமுடிக்கவற்றாய், ப்ரத்யௌஷதமில்லாத நஞ்சானவனே. (என்னுடையமுதே) அந்நஞ்சுதானே இவர்க்கம்ருதமாயிருக்கிறபடி, தேவர்களுடைய வுப்புச்சாறன்று. (கலிவயலித்யாதி) இவ்வம்ருதத்துக்குக் கடல்கடைதல்; ஸ்வர்க்கத்திலே போதல் செய்யவேண்டா, திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாயிற்று இவ்வம்ருதம். (கலிவயல்) ஸம்ருத்தமானவயல்.

(வடிவிணையித்யாதி) வடிவில்வந்தாலொப் பின்றிக்கேயிருக்கும். பகவத்தத்த்வமுமொப்பன்று; (ங) "தமேவம்விதேக்ஷணா-தஞ்சேயமஸிதேக்ஷணா" என்றேற்றமாயே நின்றதிறே. (மற்றைநிலமகள்) ஏவம்பூதையென்னுமத்தனை அவளையும். (பிடிக்கும் மெல்லடியை) அவர்களுந்திருவடிகளைப் பிடிக்கப்புக்கால், பூத்தொடுவாரைப்போலே "கன்றுகிறதோ" என்றுகூசித் தொடவேண்டும் படியாயிற்று ஸௌகுமார்யமிருப்பது; அப்படிப்பட்ட திருவடிகளை.

(கொடுவினையேனும்பிடிக்க) * கண்கள் சிவந்துக்குப்பின்பு இவர்க்கு நிகர்ஷாநுஸந்தாநமில்லையிறே. "அவர்களும் ஸந்நிஹிதராய், ப்ராப்தியுமுண்டாயிருக்க, நானிகழ்ந்திருப்பதே!" என்று,

(க) ரா-யு-க அ-ங-ச. (உ) ரா-யு-ருக கசச.

(ங) ரா-ஸு-கரு-ரு

"பாவியேன்" என்பாரைப்போலே "கொடுவினையேன்" என்கிறார். (நீயொருநாள் கூவுதல்வருதல் செய்யாயே) நிரதிசயபோக்யனும் ஸந்நிஹிதனுமனநீ, ஸத்தைக்குநோக்குகைக் கொருநாளங்கேயழைத் தல், இங்கேவருதல் செய்தருளவேணும்; முற்பட "வருதல்" என் றிலராயிற்று, அஸ்ஸமுதாயத்தைக் குலைக்கவொண்ணாதென்னுமத் தாலே; அபேக்ஷையுடையார்பக்கல் அவனைத்தனிவிட்டிரார்களிறே, கூடக்கொடுவருவார்களென்னு மத்தைப்பற்றச் சொல்லுகிறார். (கo)

பதிற்றென்றாம்பாட்டு.

கூவுதல்வருதல்செய்திடாயென்று குரைகடல் கடைந்தவன் றன்னை * மேவிநன்கமர்ந்தவியன்புற் பொருநல்வழுதிநாடன் சடகோபன் * நாவியல்பாடலாயிரத்துள்ளு மிவையுமோர்பத்தும் வல்லார்கள் * ஓவுதலின்றி யுலகம்மூன்றளந்தானடியிணை யுள்ளத் தோர்வாரே. (கக)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக பகவத்ஜ்ஞாந லாபத்தை யருளிச்செய்கிறார்.

(இ - ள்.) ப்ரயோஜநாந்தர பரரான தேவர்களுக்காக, குரை-அதி கோஷத்தையுடைத்தான. கடல் - கடலை, கடைந்தவன்றன்னை - கடை ந்தவனான ஸர்வேஶ்வரனை, கூவுதல் - அங்கேயழைத்துக் கொள்ளுதல், வருதல் - நானிருந்தவிடத்தில்வருதல், செய்திடாய் - செய்யவேணும், என்று-என்றபேக்ஷித்து மேவி அவனுடைய அங்கீகாரத்தைப்பெற்று அத்தாலே, நன்கு-நன்றாக, அமர்ந்த - தரித்தவராய், வியன் - ஸம்ருத் தமான, புனல் - ஜலத்தை யுடைத்தான, பொருநல் - திருப்பொருந லையுடைத்தான, வழுதிநாடன் - திருவழுதிநாட்டுக்கு நிர்வாஹகரான சடகோபன் - ஆழ்வாருடைய, நாவியல் - ஜிஹ்வாவ்யாபாரமான, பா டல் . பாடல், ஆயிரத்துள்ளும் - ஆயிரத்துள்ளும் வைத்துக்கொண்டு, ஓர் . அத்விதீயமான, இவையும்பத்தும் - இப்பத்தையும், வல்லார்கள்- வல்லவர்கள், மூன்றுலகம் - த்ரைலோக்யத்தையும், அளந்தான் - அள ந்துகொண்ட ஸர்வஸுலபன், அடி - திருவடிகள், இணை - இரண்டை யும், ஓவுதல் - ஓவுதல், இன்றி - இன்றி, உள்ளத்து - நெஞ்சிலே, ஓர் வார் - அநுஸந்திக்கப்பெறுவர்கள். இது எழுசீராசிரியவிருத்தம். (கக

ஆறு;—(கூவுதல்) குரைகடல்கடைந்தவன்றன்னை பரமப்ராப்யமாகப்பற்றி, கூவுதல் வருதல் செய்திடாயென்றபேக்ஷித்த வியன்புனல் பொருநல் வழுதிநாடன் சடகோபன் நாவியல் பாடலாயிரத்தி லித்திருவாய்மொழியைவல்லார், ஆஶ்ரிதஸுலபனான வெம்பெருமானுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே யநுபவிக்கப் பெறுவரென்கிறார். (கக)

ஈடு; அவ:—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார், அவனை நிரந்தரமாக வநுபவிக்கப் பெறுவரென்கிறார்.

(கூவுதலித்யாதி) "குரைகடல்கடைந்தவன்றன்னை-கூவுதல் வருதல்செய்திடாய்" என்றாயிற்றிவர் சொல்லிற்று. முறைகெடவுமாம், முறையிலேயாகவுமாம், காணுமித்தனையே வேண்டுவது. (குரைகடலித்யாதி) இவ்வபேக்ஷையில்லாதார்க்கும் உடம்புநோவக் கடைந்து அம்ருதங்கொடுக்குமவனையாயிற்று இவரபேக்ஷித்தது. (மேவிநன்கமர்ந்த) இந்தஸ்வபாவாநுஸந்தாநத்தாலே பொருந்திக் கால்தரையிலேபாவினாராயிற்று. (வியனித்யாதி) விஸ்மயநீயமான நீரையுடைய திருப்பொருநலையுடைய திருவழுதிவளநாட்டுக்கு நிர்வாஹகரானவாழ்வார்.

(நாவியல்பாடல்) மநஸ்ஸஹகாரமுமொழியவாயிற்றுச் சொல்லிற்று. (ஓவுதலித்யாதி) ஆஶ்ரிதஸுலபனானவனுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே யநுபவிக்கப்பெறுவர். இத்தனைபோதும், இவர்தாம் "இவற்றைப் பெறவேணும்" என்னுமபேக்ஷையோடே, "திருக்கண்களாலே குளிரநோக்கியருளவேணும், திருவடிகளைத் தலைமேலேவைத்தருளவேணும், தேவரீரெழுந்தருளியிருக்குமிருப்பைக்காணவேணும், நாய்ச்சிமாரும் தேவரீருமாயிருக்கும் படிகாணவேணும், உலாவும்படிகாணவேணும், ஸ்மிதமிருக்கும்படிகாணவேணும்" என்றாசைப்பட்டவிவர்க்கு அப்போதே கிடையாமையாலே, "இவற்றைப்பெறவேணும்" என்னும் மநோரதந்தானே பேறாய்த்தோற்றிற்று; இத்தையப்யஸித்தவர்களுக்கும் இம்மநோரதம் மாறாதேமுடியச் செல்லுமென்கிறார். (க) "யதி நாஶம் நவிநேதாவதாவஸிக்ஷ்யதீஸதா-யதிநாஶம்நவிந்தேத தாவதாஸ்மி க்ருதீஸ்தா" என்கிறபடியே. (கக)

இரண்டாம்திருவாய்மொழி முற்றிற்று.

(க) ஜித-க-கஉ-

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஒன்பதாம்பத்து.

மூன்றாந் திருவாய்மொழி.

ஓராயிரம் ப்ரவேஶங்கள்.

ஆறு;—(ஓராயிரம்) இப்படியாழ்வாரபேக்ஷிக்க, 'நீரிங்ஙனே ப்ரார்த்திக்கவேணுமோ, நம்மோட்டைக் குடற்றுடக்கறியீரோ" என்றெம்பெருமா னருளிச்செய்ய, அவற்றை யநுஸந்தித்தினியரா கிறார்.

ப:—மூன்றாந்திருவாய்மொழியில் கீழே - கைங்கர்யப்ரார்த்தனை யைப்பண்ணி 'கூவுதல்வருதல்செய்யவேணும்" என்றபேக்ஷிக்க, அவ னும் தன்க்ருபாதிஶயத்தாலே 'நீரபேக்ஷிக்கவேணுமோ நம்முடைய கார்யஞ்செய்கைக்கு" என்று தன்னுடைய ப்ரகாரப்ரகாரி ஸம்பந்த த்யோதகமான நாராயணத்வத்தைப்ரகாஶிப்பிக்கக்கண்டு, அதினுடைய கார்யமான ஸர்வலோகரக்ஷண ஸமர்த்தமாயுள்ள திவ்யநாம ஸம்பத் தையும், ரக்ஷணார்த்த வ்யாபாரத்தையும் அகிலவேத வேத்யதாப்ரகாரத் தையும், நித்யஸூரி போக்யதையையும், அதினுடைய நிருபமஸௌல க்ஷண்யத்தையும், அநிஷ்டநிவ்ருத்தீஷ்ட ப்ராப்திஹேதுவான லக்ஷ்மீ ஸம்பந்தத்தையும், ப்ரபலாநிஷ்டபஞ்ஜநத்வத்தையும், அபீஷ்டதேஶ வர்த்தித்வத்தையும், ஆஶ்ரயணம் மிகையான வஶீகரஶீலத்வத்தை யும், அதினுடைய வாசாமகோசர மஹத்தையையு மநுஸந்தித்து, ஏவம் விதஸ்வபாவனான ஸர்வேஶ்வரனை யநுபவிக்கவாசைப்பட்டு அவனுடை யஶீலத்திலே வித்தராய் அநுபவந்தன்னிலு மக்ஷமரான ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

ஈடு;—"நீரிங்ஙனே யர்த்திக்கவேணுமோ, நம்மோட்டைக் குடற்றுடக் கையறியீரோ" என்ன; அத்தை யநுஸந்தித்தினிய ராகிறார். "கூவுதல்வருதல்செய்யாய்" என்று ப்ரார்த்தித்தார்கீழ்; "ஆர்ப்ரார்த்திக்கக்கடவவற்றை யார்ப்ரார்த்திக்கிறார், உம்முடைய லாபத்துக்கு நாம் ப்ரார்த்திக்கவேண்டும்படியன்றோ வும்மோடு நமக் குண்டான ரக்தஸ்பர்ஶம், ஆனபின்பு, உம்முடைய ஸர்வாபேக்ஷிதங் களுஞ் செய்யக்கடவோம், நீர் வெறுக்கவேண்டா" என்று ஸமா தாநம்பண்ணினான். (க) "மையல்நேற்றிமயக்க வுன்முகம் மாயமந்தி ரந்தான்கொலோ" என்னக்கடவதிறே;

(க) நா தி உ-௪.

ஸ்ரீகௌஸல்யையார், ஏகபுத்ரையான நானும்மைப்பிரிந்து தனியாயிருக்கமாட்டேன், கூடப்போருமித்தனை" என்று பின்தொடர; புரிந்துபார்த்து, "ஆய்ச்சீ, நீரென்னைப் பின்தொடருகிறவிடம் தர்மஹாநிகிடீர்" என்று முகத்தைப்பார்த் தொருவார்த்தை யருளிச்செய்ய; மீட்கைக்காகப்போனவிவள் மங்களாஶாஸநம் பண்ணிமீண்டாளிறே; இதிறே அவனுடைய பார்வைகளு முக்திகளுமிருக்கும்படி. அவனொருவார்த்தைசொன்னால் பின்னை அவன்வழியேபோக வேண்டும்படியாயிறே யிருப்பது.

ஆக, அவன் நாராயணனாயிருக்கிற விருப்பை யநுஸந்தித்தார்; அந்நாராயண ஶப்தத்தினுடைய வர்த்தத்தையாராய வென்றிழிந்தவாறே ஒருவஸ்துவுக்கும் தன்னுடைய பேறிழவுக்குத் தனக்கு ப்ரார்த்திக்கைக்கு ப்ராப்தியற்றிருந்தது; இப்படி யிருக்கிறவன் தன் பக்கலிலே விஶேஷகடாக்ஷம் பண்ணினபடியையும், இந்நாராயண ஶப்தார்த்தத்துக்கெல்லையான வவனுடைய ஶீலகுணத்தையு மநுஸந்தித்து, "இப்போதே இப்படி ஶீலவானானவனைக்காணவேணும்" என்னுமபேக்ஷை பிறந்தது;

அதில் தமக்கு அவனிருந்தவிடத்தளவும் கால்நடைதாராதபடிக்கிடாகவாயிற்று அவனுடைய ஶீலாதிகளிலே யீடுபட்டுத் துவக்குண்டபடி. இனித்தான், இவர்போனாலு மொன்றுசெய்கை மிகையாம்படியிருப்பானொருவனாயிருந்தானவன்; இவர்தாம், ஒன்றுசெய்தநுபவிக்க வல்லவரன்றிக்கேயிருந்தார், அவனுடைய சீலகுணங்களிலே கால்தாழ்ந்திருக்குமவராகையாலே. இப்படிப்பட்டவனுடைய ஶீலகுண ப்ராசுர்யத்தையே சொல்லித் தலைக்கட்டுகிறது இத்திருவாய்மொழி.

அன்றிக்கே. * கண்கள் சிவந்திலே-ப்ரணவார்த்தத்தை யநுஸந்தித்தார்; அதில் முதலிரண்டுபாட்டாலே - அகாரார்த்தத்தை யருளிச்செய்து, மேலொன்றரைப்பாட்டாலே- சதுர்த்யர்த்தத்தையும் மத்யமாக்ஷரத்திலர்த்தத்தையும், த்ருதீயாக்ஷரத்திலர்த்தத்தையு மருளிச்செய்து, அவைபிரித்தருளிச் செய்யாதொழிந்தது- சதுர்த்த்யர்த்தமும், மத்த்யமாக்ஷரத்திலர்த்தமும் ஸாஶ்ரயமாயல்லதிராமையாலேகூட வருளிச்செய்தார்; மேல்நாலுபாட்டாலே-த்ருதீயாக்ஷரவாச்யனுடைய வைலக்ஷண்யத்தை யருளிச்செய்து; மேலி

ரண்டுபாட்டாலே-இவ்வடைவிலே ப்ரணவார்த்தாநுஸந்தாநம்பண்ணுந பாஹ்யகுத்ருஷ்டிகளை நிரஸித்து; ஆக, ப்ரணவார்த்தத்தை யருளிச்செய்து;

மேல், நமஶ்ஶப்தார்த்தத்தை, * கருமாணிக்கமலை *நெடுமாற்கடிமை, இரண்டாலுமருளிச்செய்து; நமஶ்ஶப்தத்துக்கு ஶாப்தமாகவு மார்த்தமாகவு மிரண்டிறே அர்த்தம், அதில்ஶாப்தமானவர்த்தத்தை * கருமாணிக்கமலையிலே யருளிச்செய்து, ஆர்த்தமானவர்த்தத்தை * நெடுமாற்கடிமையிலே யருளிச்செய்தது. நமஶ்ஶப்தத்துக்கு ஶாப்தமானவர்த்தம் - " நானெனக்குரியேனல்லேன் " என்கையிறே; ஒருகந்யகையானவொருவனுக்கேயாயிருக்கையும், தான் தனக்குரியளன்றிக்கே யிருக்கையுமிறே ஸ்வரூபம்; அத்தையருளிச்செய்தார் - * கருமாணிக்கமலையாலே ;

மேல், * நாராயண ஶப்தார்த்தத்தை யருளிச்செய்தார். * கொண்டபெண்டிராலே; நாராயணஶப்தத்துக்கர்த்தம்-ஸ்வாமித்வ வாத்ஸல்யோபாயத்வோபேயத்வ வ்யாபகத்வ மித்யாதியிறே ; மேலே, சதுர்த்யர்த்தத்தை யருளிச்செய்தார்-* பண்டைநாளாலே ; சதுர்த்திக்கர்த்தம்-கைங்கர்யப்ரார்த்தனையிறே; ப்ரணவார்த்தமும், நமஶ்ஶப்தார்த்தமும், வ்யாபகத்வமும், அவ்யாபகத்வமும், அல்லாத வ்யாபக மந்த்ரங்களிலுமுண்டு ; அதில், தாமாதரித்தருளிற்றுத் திருவஷ்டாக்ஷரமென்னுமிடத்தை * ஒராயிரத்தாலே யருளிச்செய்கிறார். இது நடுவில் திருவீதிப்பிள்ளை யருளிச்செய்யும்படி. *

முதற்பாட்டு.

ஒராயிர மாயுலகேழளிக்கும் * பேராயிரங் கொண்டதோர் பீடுடையன் * காராயினகாள நன்மேனியினன் * நாராயணன் நங்கள் பிரானவனே. (க)

ப:— முதற்பாட்டில், நாராயணத்வகார்யமான ஸர்வரக்ஷகமாயுள்ள நாமஸம்பத்தையுடையவன் நமக்கு உபகாரகனென்றறுதியிட்டு நெஞ்சை நோக்கி யருளிச்செய்கிறார்.

(இ - ள்.) (க) "ஸம்ஹர்த்தா-ஸம்பர்த்தா" இத்யாதி வசநக்ரமத்தாலே யுண்டான வ்யுத்பத்திபேதத்தாலும், நிர்வசநபேதத்தாலும், ஓர் -

(க) வி-பு-சா-

ஒரோதிருநாமங்கள், ஆயிரமாய் - ஸஹஸ்ரமுகமாய்க்கொண்டு, உல கேழு - ஸர்வவிதமானஸகல சேதநாசேதநங்களையும், அளிக்கும் - ரக்ஷிக்கக்கடவதான, பேர் - திருநாமங்கள், ஆயிரம் - ஆயிரத்தை, கொண்டது - உடைத்தான, ஓர் - அவித்தீயமான, பீடு - பெருமையை, உடையன் - உடையனாய், இந்நாமங்களாலே ப்ரதிபாத்யமாயிருக்கிற, காளநாராயின - காளமேகம்போலே ஶ்யாமளமாய், நன்-அப்ராக்ருதமான மேனியினன் - திவ்யவிக்ரஹத்தையுடையனாய், நாராயணனவனே அவற்றுக்கடங்க மூலபூதமான நாராயணஶப்தவாச்யனானவனே, நங்கள் - நமக்கு, பிரான்-உபகாரகன். (௧)

ஆறு;—ஒவ்வொரு திருநாமமே யாயிரம்படியா யுலகேழளிக்கும் பேராயிரமுடையவனும், ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வ ஸத்யஸங்கல்பத்வ காருண்ய ஸௌஶீல்ய வாத்ஸல்யாத்ய ஸங்க்யேயகல்யாண குணவிஶிஷ்டனாய், * ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்ய பரிமிதகுண விஶிஷ்ட நீலமேகநிப திவ்யரூபனையிருந்த நாராயணனே ஸர்வேஶ்வரனாகப் பெறுவதே! என்று, தம்முடைய திருவுள்ளத்தி லின்னாப்பெல்லாந்தீர்ந்து எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வத்தை யநுபவிக்கிறார். (௧)

ஈடு; அவ:—“ அவன் நாராயணனன்றோ. நம்மபேக்ஷிதஞ்செய்கைநிஶ்சிதம்” என்று திருவுள்ளத்தைக்குறித்தருளிச் செய்கிறார்.

(ஓராயிரமாய்) ஒவ்வொரு திருநாமங்களே யாயிரம் முகத்தாலே ரக்ஷிக்கவற்றாயிருக்கும். (௧) “ ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரியஃ-ஐஶ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யஶஸஶ்ஶ்ரியஃ” என்று - நிர்வசநபேதத்தாலே அநேகம்படி ரக்ஷிக்கவற்றாயிறேயிருப்பது. (உலகு) ரக்ஷிக்குமிடத்தில், ஒவ்வொருத்தராகவன்றிக்கே, லோகமாக ரக்ஷிக்கும். (ஏழு) அதுதன்னிலு மொருலோகமாத்ரமன்றிக்கே, ஸர்வலோகங்களையும் ரக்ஷிக்கும். ஆஶ்ரிதரொருத்தரை ரக்ஷிக்குமதுண்டிறே அவனுக்கு; அங்ஙனன்றென்கை திருநாமங்கள். (அளிக்கும்) இவைபண்ணினபாபங்களைப் பார்த்து, (௨) “க்ஷிபாமி-க்ஷிபாமி” என்பது மொருபோதுண்டு அவனுக்கு அளிக்குமதொன்றுமேயாயிற்று அவற்றுக்கு ஸ்வபாவம்.

(௧) வி-பு-௬ ரு ௭௪- (௨) கீதை-௧௬-௧௯

(பேர்) ரக்ஷிக்கைக் கொருபேர்காணும்வேண்டுவது; அப்படிப் பட்ட திருநாமங்களைத்தானெத்தனை யுடையனென்னில் (ஆயிரங் கொண்டதோர் பீடுடையன்) (க) "தைவா நாமஸஹஸ்ர வாந்-தேவோ நாமஸஹஸ்ரவாந்" என்னுமாபோலே. பலபசுவுடையவ னென்னுமாபோலே; ஸர்வாதிக்யம் பண்ணாநினைத்தவர்கள், சோறுந்தண்ணீரும் குறையறுத்துக் கொண்டிருக்குமாபோலே, ஜகத்ரக்ஷணை சிந்தைபண்ணின ஸர்வேஸ்வரனுக்கு அதுக்குபாயமாக வாயிரந் திருநாமங்களுண்டாயிருக்குமாயிற்று.

கோயிலாய்த்தான், புத்ரவிபோகத்தாலே பட்டர் ஸ்ரீபாதத்திலேவந்து தன்சோகமெல்லாந்தோற்ற விழுந்துகிடக்க, அவரருளிச்செய்தவார்த்தையை நினைப்பது ஆயிரந்திருநாமத்தை யுடையனுகையால் வந்த பெருமையையுடையவன்.

அவைதாம் கரைக்கட்டாக் காவேரிபோலே பரந்திருந்தால் அவற்றையெல்லா மொருமுகஞ் செய்தநுபவிக்கைக்கீடான வடிவையுடையனுயிருக்கும் (காராயினகாளநன்மேனியினன்) காரென்றேயிருக்கிறதாயிற்று. ரூபகம் முற்றுகையாலே, கறுத்திருந்துள்ள காளமேகம்போலே யிருப்பதாய்; அதுதானும், பெருக்காற்றிலிழிவார் ஒருதெப்பந்தேடி யிழியுமாபோலே ஒன்றைச் செல்லும்போது உபமாநம் முன்னாகவல்லது சொல்லவொண்ணாமையாலே சொன்னவித்தனைபோக்கி, திருமேனியைப்பார்த்தால் உபமாநரஹிதமாயாயிற்றிருப்பது.

இப்படியிருக்கிறவைதன்னையுடையவன்றானாரென்ன (நாராயணன்) ஜ்ஞாநஶக்த்யாதிகளும் குணங்களாயிருக்கச்செய்தே, ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகள் ஸ்வரூபநிரூபகமாயிருக்குமிறே; அப்படியே, "பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்" என்றவனுகிறானாரென்ன "இன்னான்" என்று விசேஷிக்கிறவிடத்தில், "நாராயணன்" என்கையாலே-நிரூபகமாய்ப் புக்கதிறே யிது. ஆயிரந்திருநாமங்களைச் சொல்லி, அவற்றிலே மூன்றை ப்ரதாநமாக வெடுத்தது வ்யாபக மந்த்ரங்களாகையாலே; அவற்றிலே யிரண்டை மற்றைபவற்றோடொக்கச் சொல்லலாம்படியாயிற்று இதுக்குண்டான ப்ராதாந்யம்.

(க) பாரதம்.

(௧) "அந்தணர்மாட்டந் திவைத்தமந்திரத்தை" என்றும், (உ) "நின்திருவெட்டெழுத்தும் கற்றுநான்-உற்றதும்" என்றும், (௩) "நாராயணாவென்னும்நாமம்" என்றும், (௪) "நமோநாராயணம்" என்றும், இவையிறே திருமங்கையாழ்வார்படி ; நம்மாழ்வாரும், "வண்புகழ்நாரணன்" என்று தொடங்கி, திருவாய்மொழி முடிய வநுஸந்தித்தது இதுவாயிருக்குமிறே. வேதங்களும், ஆழ்வார்களும், நம்மாசார்யர்களு மெல்லாம் போனவழியிதுவாயிற்று;நமக்குமெல்லா மிப்போது மவற்றை யாதரித்தாலொரு குற்றமில்லையிறே; இது தன்னை பாஹ்யாதிகள் மற்றையார் பரிக்ரஹிக்கச்சுட்டியிறேநாம் அது தன்னைத் தவிர்ந்தது. நம்மாசார்யர்கள் போனதுபோருமிறே நமக்காதரிக்கவேண்டுவது.

(நங்கள்பிரானவனே) நமக்கு ரக்ஷகனான வுபகாரகனவனே. "கூவுதல்வருதல்செய்திடாய்" என்று நப்பேற்றுக்கு நமக்கு ப்ராப்திக்கப்ராப்தியில்லையென்கிறது - அவதாரணத்தால். (உ)

இரண்டாம் பாட்டு.

அவனே யகல்ஞாலம் படைத்திடந்தான் * அவனேயஃது ண்டுமிழ்ந்தானளந்தான் * அவனேயவனு மவனு மவனும் * அவனே மற்றெல்லாமுமறிந்தனனே.

ப:—அநந்தரம், அந்தநாராயண ஶப்தார்த்தமான ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரத்தைப் பண்ணிக்கொண்டு ஸர்வாத்ம பூதனானபடியை நமக்கு ப்ரகாசிப்பித்தானென்கிறார்.

(இ - ள்.) அகல் - விஸ்தீர்ணமான, ஞாலம்-ஜகத்தை, படைத்து - உத்பாதித்தானும், இடந்தான் - ப்ரளயாபத்திலே முழுகி யிடந்தெடுத்தானும், அவனே - ஸஹாயாந்தர நிரபேக்ஷனானவனே, அவனே - அவனே, அஃது - அந்த பூமியை, உண்டு - மஹாப்ரளயத்திலே வயிற்றிலே வைத்துநோக்கி, உமிழ்ந்தான் - ப்ரளயாநந்தரமுமிழ்ந்தவனும், அளந்தான் - அந்யாபிமாநம் வாராமலளந்து கொண்டவனும், அவனு மவனுமவனும் - ஸ்ருஷ்டிஸம்ஹாரரக்ஷணத்துக்குக் கடவராய், தனக்கு

(௧) திருநெ ௪. (உ) பெரியதிரு-அ-௧0-௩. (௩) தி-மொ-௧-௧. (௪) தி.மொ-௬-௧0-

ப்ரகாரதயா வேதாந்தத்திலே (க) "ஸப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ர: - ஸப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ர:" என்று ப்ரஸித்தரான ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளும், அவனே - அவனே, மற்று - மற்றும் ஸ்ருஷ்ட்யாதிகளுக்குக் கர்மீபவித்த, எல்லாமும்-ஸகல சேதநாசேதநங்களும், அவனே-அவனேயாக, அறிந்தனம்-அவன் தந்த ஜ்ஞாநத்தாலே யறிந்தோம். (௨)

ஆறு:—(அவனே) ப்ரஹ்மருத்ராதிகளு மீஶ்வரரல்லரோ, நாராயணனே ஸர்வேஶ்வரனென்னுமிட மெங்ஙனே யறிந்தபடி யென்னில்;

அவனே நிகிலஜகந்நிர்மாணோத்தரண நிகரணோத்கிரண க்ரமணாதி ஸர்வேஶ்வராஸாதாரண திவ்ய சேஷ்டிதங்களைப் பண்ணுகையாலும், சதுர்முகபசுபதி ப்ரமுக ப்ரப்ருதிஸ்தாவர பர்யந்தமான ஸர்வாத்மாக்களுக்கு மாத்மபூதனாகையாலும், நாராயணனே ஸர்வேஶ்வரனென்னு மிடமறிந்தேனென்கிறார். (௩)

ஈடு; அவ;—கீழ் ப்ரஸ்துதமான நாராயண ஶப்தத்துக் கர்த்தத்தையருளிச்செய்கிறார்.

(அவனே யகல்ஞாலம் படைத்திடந்தான்) விஸ்த்ருதமான பூமியையுண்டாக்கி, ப்ரளயங்கொண்ட பூமியை மஹாவராஹமா யெடுத்தானுமவனே. அவதாரணத்தால்-ஸ்ருஷ்ட்யாதிகளில் ஸஹகாரி நைரபேக்ஷ்யஞ்சொல்லுகிறது. (அவனேயித்யாதி) ப்ரளயங்கொள்ளாதபடி பூமியையெடுத்து வயிற்றிலே வைத்து, வெளிநாடுகாணவுமிழ்ந்து, மஹாபலியாலே யபஹ்ருதமாக, எல்லைநடந்து மீட்டுக்கொண்டான் அவனே. இந்த வவதாரணத்தால்-ஆபத்ஸகத்வாதி ரக்ஷகத்வத்திலும் ஸஹகாரிநைரபேக்ஷ்யஞ் சொல்லுகிறது.

(அவனேயித்யாதி) ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளுடைய ஸ்வரூப ஸ்த்திதி ப்ரவ்ருத்திகள் அவனிட்ட வழக்கு. (க) "ஸப்ரஹ்மா ஸஶிவ ஸேந்த்ர:-ஸப்ரஹ்மா ஸஶிவஸ்ஸேந்த்ர:" என்கிற ப்ரஸித்தியைப் பற்றச்சொல்லுகிறார். "ஸ:, ஸ:. ஸ:," என்றே போருகிறார். (அவனே மற்றெல்லாமும்) (க) "ஸோக்ஷர: பரமஸ்ஸ்வராட் -ஸோக்ஷர: பரமஸ்வராட்" என்கிறபடியே, ப்ரதாநரோடு அப்ரதாநரோடுவாசியற, ஸகல சேதநாசேதநங்களும் தததீநமே.

(க) நாராயணாநுவாகம்,

திருவாய்மொழி, கூ-ப, ங-தி, ங-பா, அறிந்தன வ்யாக்யாநம். கூ௫

(அறிந்தனமே) *ப்ரம்ஹாதிகள் (க) “ஸர்வஸ்ய சரணம் ஸுஹ்ருத்-சரண்ய ரோஹம்” என்றிருக்கையும், அவர்களை யாஶ்ரயிப்பாருமாய்ச் செல்லாநிற்க, நீர் “அவனே” என்கிறதென்கொண்டென்னில்; * மயர்வற மதிநல மருளப்பெற்றதாலே யறிந்தவனுகையாலே. ஆக, இரண்டு பாட்டாலும் திருமந்த்ரத்தையும், அதிலர்த்தத்தையு மநுஸந்தித்தாராய் நின்றார்.* (உ)

மூன்றாம்பாட்டு.

அறிந்தனவேதவரும் பொருள்நூல்கள்* அறிந்தன கொள்கவரும் பொருளாதல் * அறிந்தனரெல்லா மரியைவணங்கி * அறிந்தனர்நோய்களறுக்கும் மருந்தே. (ங)

ப:—*அநந்தரம், ஸகல வேதங்களோடு வைதிகபுருஷர்களோடு வாசியற, தம்மைப்போலன்றியே அவனை யறிந்தவளவை யருளிச்செய்கிறார்.*

(இ - ள்.) *அறிந்தன (உ) “வேதாஹமேதம்-வேதாஹமேதம்” என்றறிந்தனவாயிருக்கிற, வேதம் - வேதங்களினுடைய, அரு - அறிதற்கரிய, பொருள் - பொருள்களையும் நிஷ்கர்ஷித்துத்தருவதான, நூல்கள் - ப்ரஹ்மஸூத்ரேதிஹாஸ புராணுதிகளான ஶாஸ்த்ரங்கள்; (ங) “யதோவாசோ நிவர்த்தந்தே-யதோவாசோ நிவர்த்தந்தே” என்றும், (ச) “யஸ்யாமதம் தஸ்ய மதம் - யஸ்யாமதம்தஸ்யமதம்” என்றும், (ச) “அவிஜ்ஞாதம் விஜாநதாம்-அவிஜ்ஞாதம்விஜாநதாம்” என்றுஞ் சொல்லுகிற மர்யாதையாலே, அரு - அறியவரிய, பொருளாதல் - பொருளென்று, அறிந்தன - அறிந்தனவாக, கொள்க - கொள்ளவமையும். அறிந்தனர் - (ரு) “அஹம் வேத்மி மஹாத்மாநம்-அஹம்வேத்மிமஹாத்மாநம்” என்றறிந்த வைதிகபுருஷர்கள், எல்லாம் - எல்லாம், அரியை - ஸர்வபாபஹரனுன ஸர்வேஶ்வரனை, வணங்கி - ஆஶ்ரயித்து, நோய்கள் - தங்களுடைய ஸாம்ஸாரிக மஹாவ்யாதியை, அறுக்கும் - அறுத்துக்கொள்ளும், மருந்தே - பரமௌஷதமாக, அறிந்தனர் - அறிந்தார்களித்தனை.*

(க) கீதை- (உ) புருஷஸூ- (ங) தை-ஆந-
(ச) கௌஷீத- (ரு) ரா-பா-கக-கச.

நாம்ப்படியன்றியே, அவன் போக்யதையையும், ஶீலாதிகளையும் பூர்ணமாகக்காட்ட வறியப்பெற்றோமென்று, கீழில் " அறிந்தனம் " என்கிற வாக்யத்தோடே யந்வயம். (௩)

ஆறு:—(அறிந்தன) அபௌருஷேயமாகையாலே நிர்த்தோஷாதிநால்ப ப்ரயோஜநாநுபார்த்தவத்தாய், பரமபுருஷ யாதாத்ம்ய ஜ்ஞாபநாயைவ ப்ரவ்ருத்தமான ஸகல வேதங்களாலும், * ஜந்மாந்தர ஸஹஸ்ரார்ஜித தபோஜ்ஞாநஸமாதிகளாலே ப்ரக்ஷீணாஶேஷ கல்மஷராய்த் தன் திருவடிகளிலே ஸஞ்ஜாதபக்திகளான புருஷராலும், ஸாம்ஸாரிக ஸமஸ்த து:க்கபேஷஜதயா பரமப்ராப்யதயா வறியப்படுகிறவவனை, நான்நிர்ஹேதுகமாக வறியப்பெற்றேனென்கிறார். வேதங்களாலும் வேதவித்துக்களாலுமறியவொண்ணாதவனை, நான் நிர்ஹேதுகமாக வுள்ளபடியேயறியப்பெற்றேனென்றுமாம்.(௩)

ஈடு; அவ:—வேதங்களும், வேதார்த்த வித்துக்களான ருஷிகளு மறிந்தவளவன்றிக்கே, தன்னை யெனக்குப் பூர்ணமாக வறிவித்தானென்று ப்ரீதராகிறார்.

(அறிந்தனவித்யாதி) துர்ஜ்ஞேயார்த்தத்தை யறிந்தனவாயிருக்கிற வேதங்களாகிற ஶாஸ்த்ரங்களென்னுதல்; அறிந்தனவாயிருக்கிற வேதங்களில் துர்ஜ்ஞேயார்த்தத்தை நிஷ்கர்ஷித்துத்தரும் ப்ரஹ்மஸூத்ரம், இதிஹாஸ புராணாதிகளென்னுதல். (அறிந்தனகோள்க வரும்பொருளாதல்) " துர்ஜ்ஞேயன் " என்னு மிவ்வள வறிந்தனவாகக்கொள்ள வமையும், (க) " யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ " (உ) " யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத ஸ: - யஸ்யாமதம்தஸ்யமதம் " (உ) " அவிஜ்ஞாதம் விஜாநதாம் - அவிஜ்ஞாதம் விஜாநதாம் " என்னு மிவ்வளவறிந்தது.

(அறிந்தனரெல்லாம்) மற்றறிந்தாராயிருக்கிற பராஶர வ்யாஸ வால்மீகி ப்ரப்ருதிருஷிகளும்.(அரியை வணங்கி)ஸர்வ து:க்கநிவர்த்தகனை, வணங்கி-ஆஶ்ரயித்து. (அறிந்தனர் நோய்களறுக்கும் மருந்தே)(௩) " ஸம்ஸாரதுரிதபேஷஜம் - ஸம்ஸாரதுரிதபேஷஜம் " என்னு மிவ்வளவறிந்தார்கள். (௪) " ஸம்ஸாரஸர்ப்பஸந்தஷ்டநஷ்டசேஷ்டைகபேஷஜம் - ஸம்ஸாரஸர்ப்பஸந்தஷ்டநஷ்டசேஷ்

(க) தை-ஆ- (உ) கௌஷீ-

திருவாய்மொழி, கூ-ப, ந-தி, ச-பா, மருந்தே வ்யாக்யாநம். கூஎ

டைகபேஷஜம்" அவனுடைய போக்யதையிலிழிந்திலர்கள், அவ னுடைய நிரபேக்ஷோபாய பாவத்திலிழிந்திலர்கள். (ந)

நான்காம்பாட்டு.

மருந்தேநங்கள்போக மகிழ்ச்சிக்கென்று * பெருந்தேவர்குழா ங்கள் பிதற்றும்பிரான் * கருந்தேவனெம்மான் கண்ணன்விண்ணு லகம் * தருந்தேவனைச் சோரேல்கண்டாய்மனமே, (ச)

ப:—அநந்தரம், நித்யஸூரிபோக்யனாய், நிரதிஶயஸௌலப்ய விஶி ஷ்டனாய்க்கொண்டு அவ்வநுபவத்தை நமக்குத் தரவிருக்கிறவனை, நெஞ்சேவிடாதே கிடாயென்கிறார்.

(இ - ள்.) நங்கள்-எங்களுடைய, போகம்-போகத்தினுடைய, மகி ழ்ச்சிக்கு - வ்ருத்திக்கு, மருந்தே - வர்த்தகமானவம்ருதமே, என்று - என்று, பெரு - உத்க்ருஷ்டரான, தேவர்-ஸூரிகளுடைய, குழாங்கள்-ஸமூஹங்களானவை, பிதற்றும் - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே யடைவுகெடக் கூப்பிடும்படி,பிரான்-அவர்களைக்களிப்பிக்கும் மஹோபகாரகனாய், கரு-கருமையையுடைய, தேவன் - திவ்யமானவிக்ரஹத்தை யுடையனாய், எம்மான் - அவ்வடிவழகைக்காட்டி யென்னை யடிமைகொண்ட, கண்ணன் - ஸர்வஸுலபனான க்ருஷ்ணனாய், அந்நிலையிலே, விண்ணுலகம்-பரமபதபோகத்தை, தரும்-தருவானான, தேவனை-ஸமாஶ்ரயணீயனை, மனமே - நெஞ்சே, சோரேல் கண்டாய் - உன் அந்யபரதையாலே யா தல், நிகர்ஷாநுஸந்தாநத்தாலே யாதல் நழுவவிடாதே கிடாய்.

மருந்தென்று-போகத்தை ஸாத்மிப்பிக்கும் பரிஹாரமாகவுமாம். (ச)

ஆறு;—(மருந்தே) உன்னழகாலே யெங்கள் போகத்துக்கு வர்த்தகனானவனேயென்று பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும் பிரானாயிருந்துவைத்து, இங்கேவந்து பிறந்தருளி, ஆஶ்ரிதஸுலப னாய், தன்னையாஶ்ரயித்தநம்போல்வார்க்கும் நித்யஸித்தமான ஸ்வா நுபவத்தைத் தந்தருளும் ஸ்வபாவனான வெம்பெருமானை யொரு வண்ணம் பெற்றோம், இனி யவனைச்சோரவிடாதேகிடாய், நன்னெ ஞ்சேயென்கிறார். (ச)

ஈடு; அவ:—நித்யஸூரிகளுக்கு போக்யனாய்வைத்து, க்ருஷ்ண னாய்வந் தவதரித்து, நம்மையும் அவர்கள்நடுவே வைப்பானாகவிருக்

கிறவனை விடாதே கொளென்று திருவுள்ளத்தைக்குறித் தருளிச் செய்கிறார்.

(மருந்தோநங்கள்போக மகிழ்ச்சிக்கென்று) உன்னுடைய வநுபவத்தா லெங்களுக்குவரு மாநந்தத்துக்கு வர்த்தகனானவனே. இப்படிச் சொல்லுகிறவர்கள் தாமாரென்னில் (பெருந்தேவர்) அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள், (குழாங்கள்) அவர்கள், கிண்ணகத்திலிழிவாரைப்போலே திரள்திரளாக வாயிற்றிழிவது, (பிதற்றும்) ஜ்வரஸந்நிபதிதரைப்போலே அக்ரமமாகக் கூப்பிடாநிற்பார்கள். (பிரான்) அவர்களுக்குத் தன்னை யநுபவிக்கக்கொடுத்தவுபகாரகன்.

(கருந்தேவன்) காளமேகநிபஸ்யாமமாய், திவ்யமான வடிவையுடையவன். (எம்மான்) அவ்வடிவைக்காட்டி யென்னை யெழுதிக்கொண்டவன். நித்யஸூரிகளுக்குப்படிவிடும் வடிவைக்கிடீர்! எனக்கு உபகரித்தது. (கண்ணன்) தன்னிலைகுலையாமல்நின்று உபகரிக்கையன்றிக்கே, அவதரித்துவந்துஉபகரிக்குமவன். (விண்ணுலகந்தருந்தேவனை) பரமபதத்தைத் தருவானாயிருக்கிற ஸர்வேஸ்வரனை. (சோரேல்கண்டாய்மனமே) அவனை யுடம்புவெளுக்கப்பண்ணாதே கிடாய்நெஞ்சே; இவன் விடுகையாவது அவனுக்கிழவுபோலேகாணும். அவன்பண்ணின க்ருஷி பலித்ததில்லையாமே; இல்லையாகில் அவன் வைலக்ஷண்யத்தை புத்திபண்ணாதே, "ஸுலபன்" என்னுக் காற்கடைக் கொள்ளாதேகிடாய். (௪)

ஐந்தாம் பாட்டு.

மனமேயுன்னை வல்வினையேனிரந்து * கனமே சொல்லினேனிது சோரேல்கண்டாய் * புனமேவிய பூந்தண்டுழாயலங்கல் * இனமேதுமிலானை யடைவதுமே.

ப:—அநந்தரம், போக்யதையினுடைய நிருபக வைலக்ஷண்யத்தையுடையவனை நாம் கிட்டவேணுமென்னுமிடத்தைச் சிக்கெனச்சொன்னேன், இது நழுவவிடாதே கொள்ளென்கிறார்.

(இ - ள்.) மனமே - நெஞ்சே, உன்னை - என்னிலுமிவ்விஷயத்தில் ஸத்வரமானவுன்னை; வல்வினையேன் - விளம்பாக்ஷமும் படிப்ரபலபா

பத்தையுடையனுன வென்சாபலத்தாலே, இரந்து - அர்த்தித்து, கன மே - திருடமாகவே, சொல்லினேன் - சொன்னேன், இது - இத்தை சோரேல்கண்டாய் - நழுவவிடாதேகொள்; எத்தையென்னில்; புனம் தன்னிலத்தில், மேவிய - வளர்த்தியாலே, பூ - செவ்விய, தண்டுழாய் திருத்துழாய், அலங்கல் - மாலையையுடையனுய், இந்தபோக்யதைக்கு ஏதும் - ஒருப்ரகாரத்தாலும், இனம் - ஒப்பு, இலானை - இல்லாதவைலக்ஷண்யத்தையுடையவனை, அடைவதும்-கிட்டவேணுமென்கிறவித்தை.

ஆறு;—(மனமே) பரமபோக்யனுய்த் தன்னேடொப்பாரின்றிக்கே யிருக்கிறவனை விடாதே கிடாய்நெஞ்சமே, உனக்கடியேனு யிருக்கிறேனென்று பின்னையும் நெஞ்சையிரக்கிருர். (ஓ)

ஈடு; அவ;—நெஞ்சே அவனைவிடாதே கிடாயென்றார்கிழ்;அவ் வார்த்தை தன்னை யோலக்கவார்த்தையாக நினைத்திராதே கிடாயென்கிருரிதில்,

(மனமேயுன்னை) மோக்ஷஹேதுவாய் முற்பட்டு நிற்கிறவுன்னையன்றோ. பிற்பாடரைச் சொல்லுமாபோலே யிருக்கநான்சொல்லுகிறது. பகவத் ப்ராவண்யம் உனக்கு ஸ்வாபாவிகமாயிருக்க, என் செல்லாமையாலே சொல்லுகிறேனத்தனையிறே. (க)''முந்துற்றநெஞ் சே-இயற்றுவாயெம்மொடுநீகூடி'' என்று - எனக்குஞ்சாற்கட்டவேண்டும்படி யநுபவத்திலே முற்பட்டுநிற்கிறவுன்னை. (வல்வினையேன்) பகவத்விஷயத்தில் க்ரமப்ராப்தி பற்றுதபடியான பாபத்தைப் பண்ணினேன்; உன்னையிரக்கவேண்டி யிரக்கிறேனல்லேன்,என் சாபலாதிசயத்தாலே யிரக்கிறேனித்தனை. (இரந்துகனமே சொல்லினேன்) உன்னைக்கால்பிடித்து த்ருடமாகச்சொன்னேன். இரந்து சொல்லுகைக்கு மணக்கால்நம்பியோடொப்பர்காணும்.

(இதுசோரேல்கண்டாய்) இன்னமும்நானே ''பகவத்ப்ராவண்யமாகாது, இத்தைத்தவிரவேணும்'' என்றுசொன்னுலும், நீயித்தைநெகிழவிடாதேகிடாய். கனம் - பொன், உனக்குப் பரமார்த்தத்தைச்சொன்னேனென்கை. (உ) ''சாயாக்கரியானை'' இத்யாதி. (இதுசோரேல்) எத்தைத்தான் நீரிப்படிசொல்லுகிறதென்ன (புனமித்யாதி) நிரதிசயபோக்யனுனவனை யாஸ்ரயிக்கையை. புனத்திலே மேவியிருப்பதான வழகியதிருத்துழாய்மாலையை யுடையவனுகை

(க) பெரியதிருவ-க- (உ) பெரியதிருவ-கச-

யாலே யொப்பின்றிக்கே யிருக்கிறவனை. அத்தோள்மாலையையுடைய வனுகையிறே ஸர்வாதிகனுகையாவது.

ஒரு திருமுளைத்திருநாளினன்று இப்பாட்டை யருளிச்செய்து, முன்னாள் கையார்சக்கரத்துக்குப் புறப்பட்டருளினபடி திருவுள்ளத்திலேகிடந்து, "புனமேவியபூந்தண்டுழாயலங்க லினமேது மிலானுகையாவது - நேற்றுப்புறப்பட்டருளினபடியிறே" என்றருளிச்செய்தார். "அடைவது-சொல்லினேன், இதுசோரேல்கண்டாய்" என்று க்ரியையாகவுமாம்; எத்தைநீர்சொல்லுகிறதென்ன; இனமேதுமிலானை யடைவதென்று க்ரியையாகவுமாம். (௫)

ஆறும்பாட்டு.

அடைவதுமணியார் மலர்மங்கைதோள் * மிடைவதுமசுரர்க்குவெம்போர்களே * கடைவதுங்கடலுளமுதம் * என்மன முடைவதுமவற்கே யொருங்காகவே. (௬)

ப:—அநந்தரம். அநிஷ்டநிவ்ருத்தீஷ்ட ப்ராப்தி ஹேதுவான லக்ஷ்மீஸம்பந்தத்தை யுடையனானவனைப்பற்ற வென்னெஞ்சமொருபடிப் படஶிதிலமாகாநின்றதென்கிறார்.

(இ - ள்.) மலர்-பத்மவாஸியான வாபிஜாத்யத்தையும், மங்கை - பருவத்தையுமுடையளான லக்ஷ்மியினுடைய. அணி-ஆபரணங்களாலே ஆர் - நெருங்கின, தோள் - திருத்தோளையே, அடைவதும் - ஸம்ஶ்லேஷிப்பதும், அத்தோளோடுண்டான பரிஷ்வங்கம் ஸித்திக்கைக்காக, அசுரர்க்கு-ப்ரதிகூலரான ஸுரர்களுக்காற்றவரிய, வெம்-வெவ்விய, போர்களே - போர்களையே, மிடைவதும் - நெருங்கப்பண்ணுவதும், ஆஶ்ரிதார்த்தமாக, கடலுள் - கடலுக்குள்ளில், அமுதம்-அம்ருதத்தை, கடைவதும் - கடைவதும், அவற்கே-இப்படி லக்ஷ்மீவிஶிஷ்டனுமாய்-அநிஷ்ட நிவர்த்தகனுமாய், இஷ்டப்ராபகனுமானவவனுக்கே, என் - என், மனம் - நெஞ்சானது; ஒருங்காகவே-ஒருபடிப்பட, உடைவதும் - ஶிதிலமாகாநின்றது.

ஆறு;—(அடைவதும்) "அவனைவிடாதேகிடாய்" என்று நான்சொல்லி முடிப்பதற்குமுன்னே அவனுடைய செயல்களிலே யென்னெஞ்சானது ஒருகடலுடைந்தாப்போலே யுடைந்து கிடக்கப்பெற்றேனென்று தம்முடைய நெஞ்சைப் புகழுகிறார். (௬)

ஈடு; அவ;—தம்முடைய வுபதேசம்பலித்து, இவ்விஷயத்திலே திருவுள்ளம் ஸ்திலமாகாநின்றதென்று ப்ரீதராகிறார்.

(அடைவதுமணியார் மலர்மங்கைதோள்) மிகவுமழகிதான பெரியபிராட்டியார் திருத்தோளோடே ஸம்ஸ்லேஷிப்பதும். அவன்றான் வைஸ்வரூப்யங்கொண்டிழிந்தாலும் தோளுக்கவ்வருகுபோக மாட்டான். (அணியார்மலர்மங்கை) (௧) "மார்வத்துமாலை" என்கிறபடியே திருமார்வுக்கெல்லாம் தானேயாபரணமாகப் போரும்படியாக விருப்பாளாய், போக்யதையால் குறைவற்றிருக்கிறவள் தோளோடேயாயிற்றணைவது.

(மிடைவதுமசுரர்க்கு வெம்போர்களே) அவள் தோளணைக்கைக்கிடும் பச்சை (௨) "ஹ்ருஷ்டாரசவரிஷ்வஜே-பர்த்தாரம்பரிஷ்ஸ்வஜே" என்றிறே அவளணைப்பது, ஆஸ்ரித விரோதிகளுக்கு வெம்போர்களே நெருங்கப்பண்ணுவது மென்னுதல், அவர்களை முடிக்கும்விரகே சிந்தியாநிற்குமென்னுதல்.

(கடைவதுங்கடலுளமுதம்) ப்ரயோஜநாந்தரபருடைய ப்ரயோஜநத்துக்காகக்கடைவது மென்னுதல், பிராட்டியைப்பெறுகைக்கு வ்யாபரிக்கும்படி சொல்லுகிறதென்னுதல். அவளை ஸம்ஸ்லேஷிக்கும்படி சொல்லிற்று, அதுக்கிடும் பச்சைசொல்லிற்று, அவளைப்பெறுகைக்கு யத்நம்பண்ணினபடி சொல்லிற்று. இவர்திருவுள்ளமுடைகுலைப் படுகைக்குஹேதுக்களிவை.

(என்மனமித்யாதி) என்னுடையமநஸ்ஸு ஒருமடைப்படவுடைகுலைப்படாநிற்பதும் ஏவம்விதமான சேஷ்டிதங்களையுடையவனுக்கே. அவன் * பனிக்கடலைக்கடைய, இவர் * மனக்கடலுடையப்புக்கது. விரகராயிருப்பார், கோழைகளாயிருப்பாரை த்ரவ்யம் வாங்க நினைத்தால், முந்துற மிடுக்கராயிருப்பாரை நெருக்கிவாங்கவே இவர்கள் தாங்களே கொடுசென்று கொடுப்பார்களிறே; அவனும் மஹத்தத்த்வமானகடலை யுலக்கைவிடுகையிட்டுநெருக்கி அதின் நல்லுயிரைவாங்கி, இவருடைய திருவுள்ளமுடையத் தொடங்கிற்று.

---

(௧) ௪௦-௪௦-௨. (௨) ரா-ஆர-௩௦-௩௯.

ஏழாம்பாட்டு.

ஆகஞ்சேர்நரசிங்கமதாகி * ஓராகம்வள்ளுகிராற் பிளந்தானு றை * மாகவைகுந்தங்காண்பதற்கு * என்மனமேகமெண்ணுமிரா ப்பகலின்றியே. (எ)

ப:—அநந்தரம், ப்ரயலாநிஷ்ட பஞ்ஜகனானவன் வர்த்திக்கிற ப்ராப்யபூமியே வேணுமென்று எப்போது மென்னெஞ்சமெண்ணா நின்றதென்கிறார்.

(இ-ள்.) ஆகம் - ஒருவடிவிலே, சேர் - பொருந்துவிக்கப்பட்ட, நரசிங்கமதாகி - நரத்வ ஸிம்ஹத்வங்களை யுடைத்தாய்க்கொண்டு, ஹிரண்யனுடைய, ஓர் - அத்விதீயமான, ஆகம் - மார்வை, வள் - வளைந்த, உகிரால் - உகிராலே, பிளந்தான் - பிளந்தவன், உறை - வர்த்திக்கிற, மாகவைகுந்தம் - ஸ்ரீவைகுண்டத்தை, காண்பதற்கு - காண்கைக்கு, என் - என், மனம்-நெஞ்சானது, இராப்பகல்-இராப்பகலாக, இன்றி-வேறுபாடின்றியே, ஏகம் - ஏகப்ரமாகாரக, எண்ணும்-எண்ணாநின்றது.

ஆறு;—(ஆகஞ்சேர்) இந்த வாஸ்சர்யத்தை யநுபவித்து, பின்னையும், ஏவம்விதசேஷ்டிதங்களைச் செய்தருளினவன்றன்னை அவனிருக்கிற திருநாட்டிலே சென்று காணவேணுமென்றாசைப்படாநின்றது; அதுவோ அதிதூரமாயிராநின்றது; என்னெஞ்சைக் கொண்டென்செய்கேனென்கிறார். (எ)

ஈடு; அவ;—அவன் நித்யவாஸம்பண்ணுகிற பரமபதத்தைச் சென்று காணவேணுமென்னாநின்றதென்னெஞ்சென்கிறார்.

(ஆகஞ்சேரித்யர்தி) நரத்வஸிம்ஹத்வங்கள், சேர்ப்பாலுங் கண்டசர்க்கரையும்போலே ஸங்கடிதமான நர்ஸிம்ஹமாயென்னுதல்; நரஸிம்ஹத்தினுடையவடிவு இவர்நெஞ்சிலே சேர்ந்தபடியென்னுதல்; (க) "ஜூலாநூராவவவாணா.நாழ-ஸ்மரந்ராகவபாணாம்" என்கிறபடியே மறக்கவொண்ணாதபடி திருவுள்ளத்திலே சேர்ந்தபடியைச் சொல்லிற்றாதல்; இரண்டுவடிவையுஞ் சேர்த்துக்கொடுவந்து தோன்றினபோது. இவர்நெஞ்சுக் கினிதாய்ச் சேர்ந்திருந்தபடியைச் சொல்லுதல். (ஓராகம்) அத்விதீயமான முருட்டுடம்பு. (வள்ளுகிரால்) கூரியவுகிர். வளைந்தவுகிரென்றுமாம். (பிளந்தானுறை) அநாயாஸேந கிழித்துப்பொகட்டவன் நித்யவாஸம்பண்ணுகிற

(க) ரா-யு-சுoு-ந-

(மாகவைகுந்தம்) அக்ஷரலிம்ஹம் வர்த்திக்கிற முழஞ்சுகாண வாயிற் றுசைப்படுகிறது. (க) "பரமாகாஶம்-பரமாகாஶம்" என்னக்கடவதிறே. என்னுடைய ஹ்ருதயமானது, எப்போதுமொக்க வுச்சிவீடுவிடாதே யித்தையே மநோரதியாநின்றது. (இராப்பகலின்றியே) இரா வொருகார்யமும், பகலொருகார்யமுமாயிறே நாட்டார்க்கிருப்பது; இவர்க்கெல்லாக்காலத்திலு மிதுவேயாயிற்று. (உ) (ஸர்வதா ஸர்வதா ராகவஸ்ய நிவேஶநே - ஸமாத்வாத ஸதாத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே" என்று பிராட்டி திருவயோத்யையை நினைத்தாப்போலேயாயிற்று, இவர் திருவுள்ளத்துக்குப் பரமபதம் ஸ்வதேசமாயிருக்கிறபடி. (எ)

எட்டாம்பாட்டு.

இன்றிப்போகவிருவினையுங்கெடுத்து* ஒன்றியாக்கைபுகாமை யுய்யக்கொள்வான் * நின்றவேங்கடம் நீணிலத்துள்ளது * சென்று தேவர்கள் கைதொழுவார்களே. (அ)

ப:—அநந்தரம், ஆஸந்நமாக வவன்வர்த்திக்கிற வபீஷ்டதேஶமாயுள்ள திருமலையைச்சென்றநுபவிப்பார் ஸூரிஸமராளுநிறேயென்று தம்முடையமைஸதில்யத்தை யருளிச்செய்கிறார்.

(இ - ள். இருவினையும் - புண்யபாபரூபமான கர்மங்களிரண்டையும். இன்றி - ஸத்தையழிந்து, போக-போம்படி, கெடுத்து-நசிப்பித்து, ஒன்றி - துர்விவேசமாம்படி அசித்தோடே ஸம்ஸ்ருஷ்டனாய், ஆக்கை புகாமை - தேவாதிஶரீரப்ரவேசம் பண்ணுதபடி, உய்யக்கொள்வான் அடிமைகொண்டுஜ்ஜீவிப்பிக்குமவன். நின்ற - அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கிற, வேங்கடம் - திருமலையானது, நீணிலத்து - ஶ்லாக்ய பூமியிலே, உள்ளது-உண்டாயிருப்பதொன்று, சென்று - கிட்டி, கைதொழுவார்கள் - கைதொழுமவர்கள், தேவர்களே - மநுஷ்யரல்லரே, தேவர்களன்றே (அ)

ஆறு;—(இன்றிப்போக) அவனைக் காண்கைக்குத் திருநாட்டிலே போகவேணுமோ, இங்கே யணித்தாகத் திருமலையிலேயன்றோ அவன் நின்றருளுகிறதென்னில்; அத்தாலென் எனக்கு; அங்குச்சென்றடிமை செய்வார்* அபர்வருமமரர்களல்லரோ வென்கிறார்.

(க) (உ) ரா ஸு ௩௩-௧௭.

ஈடு; அவ;—இஶ்ஶரீர ஸம்பந்தமற்றால் போயநுபவிக்கும் பரமபதம் வேணுமோ, இஶ்ஶரீரத்தோடே யநுபவிக்குந் திருமலைபூமியதன்றோ, ஆனாலும் நமக்குத் திருமலையோடு பரமபதத்தோடு வாசியற்றதிறே யென்கிறார்.

(இன்றிப்போகவிருவினையுங்கெடுத்து) புண்யபாபரூப கர்மங்களானவை, இன்றிப்போம்படி - ஸவாஸநமாகப் போம்படிபண்ணி. தானே போக்கிக்கொள்ளப் பார்க்குமன்றிறே சிறிது கிடக்கப்போவது. (ஒன்றியித்யாதி) பின்னையும் ருசிவாஸனைகிடக்கில், அசித்தத்வத்தோடேபோய்க்கலசி, ஶரீரப்ரவேஶம்பண்ணி, அத்தால் வரும் க்லேஶமநுபவிக்க வேணுமிறே; அதுசெய்யாமை. (உய்யக்கொள்வாலித்யாதி) (க) "உயிரளிப்பான்" என்கிறபடியே, ஸர்வரக்ஷணார்த்தமாக வ்யவஸாயப்ரதீக்ஷணையுக்கொண்டுநிற்கிற திருமலை.

(நீணிலத்துள்ளது) திருமலையை யுடைத்தாகையாலே ஶ்லாக்யமான பூமியிலுள்ளது திருமலை. அத்தால் பெற்றதென் (சென்றித்யாதி) அவ்வளவு கால்நடைதந்து போகவல்லார் பாக்யாதிகரிறே; (உ) "நமெ தசெநஷ்ரூமெஷ்வாமெ - நதேமநுஷ்யாதேவாஸ்தே" என்னுமாபோலே, அவனுடைய சீலாதிகுணத்தை யநுஸந்தித்துச் சொல்லுகிறார். ப்ரேமாந்தர்க்கு அவ்விடத்தோடு இவ்விடத்தோடு வாசியற்றதிறே யெட்டாமைக்கு. (அ)

ஒன்பதாம்பாட்டு.

தொழுதுமாமலர்நீர் சுடர்தூபங்கொண்டு * எழுதுமென்னுமிது மிகையாதலில் * பழுதில்தொல்புகழ்ப் பாம்பணைப்பள்ளியாய் * தழுவுமாறறியேனுன தாள்களே. (கூ)

ப:—அநந்தரம், ஆஶ்ரயணோத்யோகமும் மிகையாம்படியான வுன்னுடைய சீலாதிஶயத்தை யநுஸந்தித்து, உன்திருவடிகளிலொரு ப்ரவ்ருத்திக்கு க்ஷமனாகிறிலேனென்கிறார்.

(இ-ள்.) மா - ஶ்லாக்யமான, மலர் - புஷ்பத்தையும், நீர் - அர்க்க்யாதிஜலத்தையும், சுடர்தூபம் - தீபதூபங்களையும், கொண்டு - ஸ்வீகரித்துக்கொண்டு, தொழுது - தொழுகைக்காக, எழுதும் - உத்யோகிப்

(க) திருவி-க-

(உ) ரா-அயோ-கூஅ-கூகூ-

போம், என்னுமிது - என்னுமிது-உன்சீலாதிசயத்தாலே, மிகை-மிகை யாய், ஆதலில் - இருத்தலால், பழுது - தூராராததையடியானபழுது, இல் - இன்றியே, தொல்புகழ் - ஸ்வாபாவிக ஸௌஶீல்ய ப்ரதையை யுடையையாய், அதுக்கு ஸூசகமாம்படி, பாம்பு-திருவனந்தாழ்வானை, அணை - படுக்கையாய்க்கொண்டு, பள்ளியாய்-நித்யஸம்ஶ்லேஷம்பண் ணிக் கண்வளர்ந்தருளுகிறவனே, உன் - உன், தாள்கள் - திருவடிகளை தழுவும் ஸம்ஶ்லேஷிக்கும், ஆறு-ப்ரகாரம், அறியேன்-அறிகிறிலேன்.

அங்குத்தைக்கொரு ப்ரவ்ருத்தி யபேக்ஷிதையல்ல, நானொரு ப்ர வ்ருத்திக்கு க்ஷமனுகிறிலேனென்று கருத்து. (கூ)

ஆறு;—(தொழுது) உமக்குத்தானங்கேசென் றடிமைசெய்கைக் குத் தட்டென்னென்னில்;

ஹேய ப்ரத்யநீக கல்யாணகுண விஶிஷ்ட ஶேஷஶேஷாஶந கருடப்ரமுக திவ்யபுருஷர்களாலே பரிசரித சரணயுகளனான வுன் திருவடிமலர்களிலே, அத்யந்த மபக்ருஷ்டனான நானடிமைசெய்கைக் கர்ஹனோவெனகிறார். (கூ)

ஈடு; அவ:—இப்படி ஸுலபனான வுன்திருவடிகளிலே கிட்டப் பெற்றாலும், ஆஶ்ரயணத்தில் ஆபிமுக்யத்திலே ஸந்துஷ்டனாமுன் ஶீலவத்தையையநுஸந்தித்து, ஒருப்ரவ்ருத்திபண்ண க்ஷமனுகிறி லேனென்கிறார்.

அன்றிக்கே, "இங்ஙனேயொரு மூன்றுபாட்டுத் தம்முடைய வயோக்யதையைச் சொல்லுகிறார்" என்பாருமுண்டு; அதிலேயி றே - * கண்கள்சிவந்துக்குப் பின்பிவர்க்கு; "இத்தலையாலேயொன் றை யர்த்தித்துப்பெறுகை மிகையாம்படியாயிருக் கிறவனுடைய வுபாயபாவத்தைச் சொல்லுகிறார்" என்பாருமுண்டு. இவையெல் லாமல்ல, "அவன் ஸந்நிதியில் க்ரமத்தில் பரிமாற வொண்ணாதபடி யழிக்குமவனுடைய சீலகுணத்தைச் சொல்லுகிறது" என்று நம்மு டையவர்கள் நிர்வஹிக்கும்படி.

(தொழுதித்யாதி) "ஶ்லாக்யமான புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டடிமைசெய்து உஜ்ஜீவிப்போம்" என்றால், இது மிகையாம் படியன்றோ உன்னுடைய ஶீலவத்தையிருப்பது. (க) "அநர்க்ஷ-தி ணை-ரா ஹவா ம்கூ ஹ ஈக-அந்யத்பூர்ணாதபாம்கும்பாத்" என்கிறவிஷ யமிறே.

(க) பாரத-உத்யோ-

(ஆதலில்) இப்படி சீலாதிகளுகையாலே, "தூராராதன்" என்றிறபழுதின்றிக்கே, ஸ்வாபாவிகமான ஸ்வாராதத்வ ப்ரதையையுடையையாய், அதுக்கடியாகத் திருவநந்தாழ்வானோடே ஸம்ச்லேஷிக்கிறவனே. (தழுவுமாறறியேன்) 'உன் திருவடிகளை யணையும் விரகறிகிறிலேன். பலஹாநியாலே முதலிலேகிட்டுகையரிது, கிட்டினாலும் சீலாதிக்யத்தை யநுஸந்தித்தொரு ப்ரவ்ருத்திபண்ண க்ஷமனாகிறிலேன். (கூ)

பத்தாம்பாட்டு

தாளதாமரையானுனதுந்தியான் * வாள்கொள்நீள்மழுவாளியுன்னாகத்தான் * ஆளராய்த் தொழுவாருமமரர்கள் * நாளுமென் புகழ்கோவுனசீலமே. (க0)

ப:—அநந்தரம், ப்ரயோஜநாந்தரபரார்க்கும் முகங்கொடுக்கு முன்னுடையசீலம் வாசாமகோசரமஹிமாவன்றோ வென்கிறார்.

(இ - ள்.) தாள - தாளையுடைத்தான, தாமரையான் - தாமரையிலேபிறந்தப்ரஹ்மா, உனது, உந்தியான்-உந்தியை யாஸ்ரயமாக வுடையவன்; வாள் - ஒளியை, கொள் - உடைத்தான, நீள் - பெரிய, மழு - பரசுவை, ஆளி - ஆண்டுகொண்டுபோருகிறருத்ரன், உன் - உன், ஆகத்தான் - திருமேனியிலொருபக்கத்தான்; ஆளராய் - ஸஞ்சீசனோபாதி ஸேஷபூதராய், தொழுவாரும் - தொழுமவர்கள், அமரர்கள் ப்ரயோஜநாந்தரபரரானதேவதாந்தரவர்க்கம்; இப்படியாவதிகமான, உன் - உன்னுடைய, சீலம் - சீலத்தை, நாளும் - காலதத்த்வமெல்லாங்கூடினாலும், என் - எத்தைச்சொல்லி, புகழ்கோ - புகழ்வேன். (க)

ஆறு: (தாளதாமரையான்) தம்முடைய வஸ்ஹாநுஸந்தானத்தாலே அவன்திருவடிகளி லடிமைசெய்கையில் தமக்குப் பிறந்த கூச்சமெல்லாம் போம்படியாகத் திருவேங்கட முடையானுடைய நிரவதிக ஸௌசீல்ய குணத்தைக்கண்டு புகழுகிறார். (க0)

ஈடு:- அவ;—தாஸ்யச்சுவடறியாத ப்ரஹ்மாதிகளுக்கும் ஸமாச்ரயணீயனாயிருக்கிற வுன்னுடைய ஸீலம் என்னால் புகழ்ந்துமுடிக்கவொண்ணாதென்கிறார்.

(தாளதாமரையா னுனதுந்தியான்) தாமரைப்பூவை யுத்பத்திஸ்தாநமாக வுடைய ப்ரஹ்மா, உன் திருநாபியைப்பற்றி வர்த்தி

யாநின்றான்; கமலயோநித்வத்தால் வந்த தூர்மாநத்தையுடையவ னுக்கிறே யுடம்புகொடுத்தது. (வாளித்யாதி) ஒளியையுடைத்தாய், தொடங்கினகார்யத்தை முடிய நடத்தவற்றான மழுவையுடைய ருத்ரன், உன்திருமேனியி லேகதேஶத்தைப்பற்றி வர்த்தியா நின்றான். அநந்யஸாதாரணத்வ லக்ஷணமான* தொடையொத்ததுளபமுங் கூடையுமாய்ப் புகுந்திருக்கிறா னல்லனே.

(ஆளராய்த்தொழுவாருமமரர்கள்) அடியாரா யாஶ்ரயிக்கிறவர்களும் தேவர்கள். நித்யஸூரிகள்செய்யு மடிமையிறே, அமரத்வஸாம்யத்தாலே "நாங்களுமீஶ்வரர்கள்" என்றிருக்குமவர்கள் செய்கிறது. (நாளுமித்யாதி) காலத்தையுடைய வொருபோகியாக்கி யெனக்குப் புகழுகைக் குறுப்பாக்கி னால்தான், என்னாலே புகழ்ந்து தலைக்கட்டலா யிருந்ததோ வுன்னுடைய சீலகுணம். [உனசீலம்- நாளுமென்புகழ்கோ.] (௧0)

பதினொன்றாம்பாட்டு.

சீலமெல்லையிலானடிமேல்* அணிகோலநீள்குருகூர்ச்சடகோ பன்சோல் * மாலையாயிரத்துள்ளிவைபத்தினின் பாலர்* வைகுந்த மேறுதல் பாண்மையே (௧௧)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக் பரமபதப்ராப்தியை யருளிச்செய்கிறார்.

(இ - ள்.) சீலமெல்லையிலான் - அபர்யந்தமான சீலத்தையுடையவன், அடிமேல் - திருவடிகளின்மேலே, அணி - அணியப்பட்டதாய், கோலம் - தர்ஶநீயமானரூபமாய், நீள் - ஆயாமவிஸ்தார வத்தான, குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடைய சொல் - ஶப்தாத்மகமான. மாலை-மாலையாயிருக்கிற, ஆயிரத்துள்-ஆயிரத்துள், இவைபத்தினின்-இப்பத்தினுடைய, பாலர் - பரிஸரத்திலே ஶப்தமுகத்தாலேயாதல் அர்த்த முகத்தாலேயாதல் அந்வயமுடையவர்கள், வைகுந்தம்-பரமபதத்தில், ஏறுதல்-ஏறப்பெறுகை, பான்மை-ஸ்வபாவம். இது - கலிவிருத்தம். (௧௧)

ஆறு:—(சீலம்) சீலமெல்லையிலானா யிருந்த திருவேங்கடமுடையான் திருவடிகளுக்குத் திருவணிகலமா யிருந்த வித்திரு

வாய்மொழியோடே யொருஸம்பந்தமுடையார், வைகுந்தமேறுகை யாஶ்சர்யமன்றென்கிறார்.

(௧௧)

ஈடு; அவ;—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார் பரமபதத்தே செல்லுகையாஶ்சர்யமன்று, ப்ராப்தமென்கிறார்.

(சீலமெல்லையிலானடிமேல்) அமர்யாதசீலனானவனுடைய திருவடிகளிலே. இத்திருவாய்மொழியால் ப்ரதிபாதிக்கப்பட்டது-சீலாதிக்யமாயிற்று, அத்தை நிகமிக்கிறார். (அணிகோலநீள் குருகூர்ச்சடகோபன் சொன்மாலை) அழகுமிக்கிருந்துள்ள திருநகரியையுடைய வாழ்வார். அன்றிக்கே, கோலநீளென்று - ஸப்தந்தானேயுண்டாகையாலே "அடிமேலணி - மாலை" என்று கூட்டிக்கொள்ளவுமாம்.

(ஆயிரத்துள்ளிவைபத்தினின்பாலர்) இப்பத்தின் பரிஸரத்திலேயுள்ளாரமவர்கள். உக்திமாத்ரம், பாடதாரணம், அர்த்தாநுஸந்தாநம், ஒருவழியாலே யிதிலேயந்வய முடையவர்கள். (வைகுந்தமித்யாதி) பரமபதத்திலே செல்லுகை ப்ராப்தம். * மாகவைகுந்தம்காண்பதற் கேகமெண்ணிறரிவர்; இப்பாசுரத்தே யந்வயித்தவர்களுக்கு ப்ராரத்த்யமன்று, ப்ராப்தம். பித்ருதநம் புத்ராணுக்கு தாயப்ராப்தமாயிருக்குமிறே.

(௧௧)

மூன்றாம் திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஒன்பதாம்பத்து.

நான்காம் திருவாய்மொழி.

மையார் ப்ரவேஸங்கள்.

ஆரு:—(மையார் கருங்கண்ணி) இப்படி யெம்பெருமானுடைய ஸௌஸீல்யாநு ஸந்தாநத்தாலே நிர்ப்பீகராய், ததநுபவத்திலே ப்ரவ்ருத்தராய் அதுகைவாராமையாலே தாம் அவஸந்நராய், அவஸந்நஸர்வகரணருமாயிருந்தவாழ்வார், *

ப:—நாலாந்திருவாய்மொழியில், கீழே அவன்சீலாதிசயத்தை யநுஸந்தித்துஸிதிலரானவர், "ஸீலவானாய் ஸ்ரிய:பதியானவனையநுபவிக்கவேணும்" என்றபிநிவேஸித்து, அந்தவபிநிவேஸாநுரூபமான லக்ஷ்மீவிசிஷ்டத்வத்தையும், அத்யபிநிவேஸவிஷயத்வத்தையும், ஆஸ்ரிதரக்ஷகத்வத்தையும, அபேக்ஷப்ரதிஸம்பந்தித்வத்தையும், காரணத்வாதிகுணயோகத்தையும், பரமபத நிலயத்வத்தையும், ஹ்ருத்யதாதிஸயத்தையும், ஸர்வாந்தராத்மத்வாதிகளையும், கிஞ்சித்காரவிஷயத்வத்தையும், நிருபாதிகஸம்பந்தத்தையு மநுஸந்தித்து "ஏவம்பூதனானவனையநுபவிக்கவேணும்" என்கிற ஆகாங்க்ஷையாலே, தம்மோடு கரணங்களோடு வாசியற வீடுபட்ட விவருடைய வார்த்திதீரும்படி முகங்காட்டவநுபவித்து ஸந்துஷ்டராய், ஆஸ்ரிதாநுபாவ்யமான திருவாய்மொழியை அவன்திருவடிகளிலே பாடி யுஜ்ஜீவிக்கப்பெற்றேனென்று மிகவும் ஹ்ருஷ்டராகிறார்.

ஈடு;—ஈஸ்வர ஸ்வாதந்த்ர்யத்துக்கடி அவன்றானாயிருக்கும்; சீலாதிகுணங்களுக்கடி பிராட்டியாயிருக்கும். இதிலே வந்தவாறே ஸ்வாதீனமன்றிக்கே யொழிகிறதோவென்னில்; அங்ஙனுமாயிராது; நிரூபித்தால், அந்தஸ்வாதந்த்ர்யத்தோபாதி இவளோட்டைச்சேர்த்தி நிரூபமாயிருக்கையாலே. பாஷ்யகாரர்மேலே (க) "ஸ்ரீவல்லப:—ஸ்ரீவல்லப:" என்னநினைத்து, ஸ்வரூபத்தை நிரூபிக்கிறவிடத்திலே ஜ்ஞாநாநந்தங்களுக்கு முன்னே (க) "ஸ்ரிய:பதி: - ஸ்ரிய:பதி:" என்றாரிறே. இப்படியிருக்கிறவனுடைய சீலகுணத்தையும், அதுக்கடியான ஸ்ரிய:பதித்வத்தையு மநுஸந்தித்தார் - கீழ்த்திருவாய்மொழியிலே;

(க) கீதாபாஷ்யம்.

கடுகப்பெறவேண்டும்படி குணாதிகனுமாய், பெறுவிப்பாருமருகே யுண்டாயிருக்கையாலே, இப்போதே பெறவேண்டும்படியான சாபலம்பிறந்தது; அப்போதே பெறக்காணாமையாலேவிஷயாநுரூபமாக விடாய்த்தார்; பெறவேண்டும்படி குணாதிகனுமாய், பெறுவிப்பாருமருகேயுண்டாயிருக்க, பெறாவிட்டா லாறியிருக்கப்போகாதே. ஆகையாலே, சேதநஸமாதியாலே தனித்தனியே கரணங்களும்விடாய்த்து, தாமும் விடாய்த்தார்* முடியானேயில் வாஸநையாலே; இது தானெல்லாத் திருவாய்மொழியோடுங்கூடி யிருப்பதொன்றாயிற்று- ஒரு-"செஞ்சொற்கவி," "வீற்றிருந்தேழுலகு," "என்றைக்குமென்னை," "முடியானே," இவையித்தனையிலுமோடுகிற பாவவ்ருத்தியையுடைத்தாயாயிற்றிருப்பது.

இப்படி யிந்த்ரியங்களுந் தனித்தனியே விடாய்த்துத் தாமும் விடாய்த்தபடி. ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய வார்த்திக்குத்தோற்றினான் "க்ரமத்திலேவந்தான்" என்னலாம்படி ஆறாமைக்கு க்ரமத்திலே தோற்றப்பற்றாதே, தூணிலேவந்துதோற்றினாப்போலே தோற்றவேண்டும்படியாயிற்று. இப்படிப்பட்ட தம்தசையையும், அதுக்கடியான விடாயையும், அவன்விடாயறிந்து அதுக்கு உதவவந்து முகங்காட்டினபடியையு மநுஸந்தித்து ஹ்ருஷ்டராய, "நான்க்ருதக்ருத்யனானேன், அடிமைசெய்யப்பெற்றேன், வாழ்ந்தேன், ஸ்ரீவைஷ்ணவர்களுக்குமெல்லாம் நானுபகாரகனும்படியானேன், இதொருவன் பெறும்பேறிருந்தபடியே!" என்று தமக்குப் பிறந்தலாபத்தை யநுஸந்தித் தினியராய், அத்தைப்பேசித் தலைக்கிறார். *

முதற்பாட்டு.

மையார்கருங்கண்ணிகமலமலர்மேற் செய்யாள் * திருமார்பி
னிற்சேர்திருமாலே * வெய்யார்சுடராழி சுரிசங்கமேந்துங் கையா*
உன்னைக்காணக் கருதுமென்கண்ணே. (க)

பா:—முதற்பாட்டில், நிரதிசயபோக்யதாப்ரகாஶகமான லக்ஷ்மீஸம்பந்தத்தையும், அந்தபோக்யதையைக்காத்தூட்டு மாயுதபூர்த்தியையுமுடைய வுன்னைக்காணவாசைப்படாநின்றது என் கண்ணென்கிறார்.

(இ-ள்.) மையார் - அஞ்ஜநாலங்காரத்தையுடைத்தாய், கரு - (க), "அஸிதேக்ஷணா-அஸிதேக்ஷணா" என்னும்படி ஸ்வாபாவிகமான

(க) ரா-ஸு-கக-டு-

 அஞ

கருமையையுடைத்தான, கண்ணி - திருக்கண்களையுடையளாய், கமல மலர்மேல்-தாமரைப்பூவின்மேலேயிருப்பாளாய், செய்யாள் பத்மவர்ணை யாகையாலே சிவந்த நிறத்தையுடையளான லக்ஷ்மியானவள், (க) "அக லகில்லேனிறையும்" என்று, திருமார்வினில்-திருமார்பனழகிலேயீடுபட்டு, சேர்-சேரும்படியாய், அவளுடைய அவயவசோபையிலு மாபிஜாத்யத்திலும் துவக்குண்டு, திரு - அவள்பக்கலிலே, மாலே - அதிசயித வ்யாமோஹத்தைப்பண்ணுமவனாய், இந்தச்சேர்த்திக்கு அஸ்த்தாநேபய சங்கிகளாய், ரக்ஷோத்யோகத்தாலே ப்ரதிபக்ஷத்திலே, வெய்யார் - வெம்மைமிஞ்சின, சுடர் - ஜ்வாலையையுடைய, ஆழி -திருவாழியையும் சுரி - வடிவுதானே யெதிரிகளையுமழித்து ஆச்ரிதர்க்கநுபாவ்யமாம்படியான வடிவிலே ரேகாவலயத்தையுடைய, சங்கும்-ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், ஏந்தும் - ஏந்தும், கையா - திருக்கையையுடையவனே, உன்னை - இப்படி ச்ரியஃபதியாய் சங்கசக்ரதாரணனுமான வுன்னை, என் - என்னுடைய, கண் - சபலமான கண்ணானது, காண - ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்று ஸதா தர்சநம்பண்ண, கருதும் - மநோரதியாநின்றது. (க)

ஆறு:—லக்ஷ்மீகடாக்ஷ ஸம்ச்லேஷைக போகனாய், தத்பரவசனாய், சங்கசக்ர திவ்யாயுத விபூஷிதகரனான வுன்னழகை யென் கண்ணானது காணவாசைப்படாநின்றதென்கிறார். (க)

ஈடு; அவ:—"ச்ரிய꞉பதியானவனைக் காணவேணும்" என்று தம்முடைய சக்ஷுரிந்த்ரியத்துக்குப் பிறந்த சாபலத்தை யருளிச் செய்கிறார்.

(மையார்கருங்கண்ணி) "அவனைப்பெறவேணும்" என்றிருப் பாராசைப்படுவதும் அவள்முன்னாகவாய், பெற்றால் பின்னை கைங்கர்யம்பண்ணுவதும் இருவருமான சேர்த்தியிலே யாயிருக்குமிறே. (மையார் கருங்கண்ணி) ஒன்றால் ஸமாதாநம் பண்ணவேண்டாத படி ஸ்வாபாவிகமான வழகையுடைத்தாயாயிற்றுத் திருக்கண்களிருப்பது. இனி மங்களார்த்தமாக தரிக்குமித்தனையிறே அஞ்ஜநம். "கருங்கண்ணி" என்றுநிற்கச்செய்தே, "மையார்" என்னும்போது மங்களார்த்தமாக வஞ்ஜநம் தரித்ததாமித்தனையிறே. (கமலமலர்மேற்செய்யாள்) இதுவாயிற்று ஸௌகுமார்ய மிருக்கும்படி.

(திருமார்வித்யாதி) தாமரைப்பூவில் பரிமளமும் தாதும் அடிக் கொதித்தால், உன்மார்விலே யடிமாறி யிடவேண்டும்படி மார்வு

படைத்தவனே. இவளிவ்வேற்றமெல்லாங்கொண்டும் அம்மார்வுக்கவ் வருகுபோகமாட்டாள். அவ்வகல மெல்லாம் போக்யமா யிருக்கை யாலே, அவ்வருகு போகவேண்டாவே (திருமாலே) அவனும், இவள் மார்வில் படும்பாட்டை, இவளுடைய ஸர்வாவயவங்களிலும் பிச்சேறியிருக்குமாயிற்று. அவனுக்குத் திருக்கண்கள் சிவந்தாயிற் றிருப்பது. அவனிவளை நிரந்தரகடாக்ஷம்பண்ணுகையாலே, அவன் கண்ணின்சிவப்பு இவள்மேலேயூறியிவள்திருமேனி சிவந்திருக்கும்; இவள் அவனை நிரந்தரகடாக்ஷம் பண்ணுகையாலே, இவள்கண் ணில் கறுப்பு அவன்திருமேனியிலேபரந்து அவன்திருமேனி ஶ்யா மளமாயிருக்கும்.

இவளுக்குத் திருக்கண்கள் குளிர்ந்திருக்கும்; அவனுக்கு வாத்ஸல்யம் விஞ்சி யிருக்கும். அவனோட்டைச் சேர்த்தியாலேயா யிற்று இவளுக்குத் தண்ணளிவிஞ்சியிருப்பது; இவளோட்டைச் சேர்த்தியாலேயாயிற்று அவனுக்கு வாத்ஸல்யம் விஞ்சியிருப்பது. ஆக, இருவர்க்கு மிரண்டும் குறைவற்றிருக்கும் ப்ரணயித்வத்தாலே. வரவிட்டவாளழியச்செய்யப்புக, (க) "நக்ஷ்ஶிணாவராய) கி-நகஶ்சிந்நாபராத்யதி" என்னுமிவள்; (உ) "என்னடியாரதுசெய் யார்" என்று அவள் தன்னோடே மறுதலைக்கும்படியாயிற்று அவ னிருப்பது; ஆகையாலே, இருவருமான சேர்த்தியிலே யிவை யிரு வர்க்கும் குறைவற்றிருக்குமென்றுமாம்; வ்யதிரேகித்தவன்றும்தனி த்தனியே குறைவற்றிருக்குமென்றுமாம். (திருமார்வினில்சேர்.) நித்யாநுபவம் பண்ணாநிற்கச்செய்தேயும், (ந) "அகலகில்லேனிறை யும்" என்று இன்று வந்து கிட்டின புதியார்படுவதையெல்லாம் படாநிற்கும், சேரென்கிற வர்த்தமாநம் - இத்தைக் காட்டுகிறது.

(வெய்யாரித்யாதி) இவள்கையில் லீலாரவிந்தம் அவனுக்கு போக்யமாயிருக்குமாபோலே யாயிற்று அவன்கையில் திவ்யாயுதங் கள் இவளுக்கினிதாயிருக்கும்படி. இவளுகப்புக்காக ஆஶ்ரிதவிரோ திகளை யழியச்செய்கைக்குமுதலாய் தர்ஶநீயமாயிருக்குமாயிற்று. ப்ரதிபக்ஷத்தின்மேலே மிக்கவெம்மையை யுடைத்தாய், புகரோடு கூடியிருக்கிறதிருவாழி. ஸந்நிவேசமேயமைந்து வேறொருகார்யங் கொள்ளவேண்டாதே, வைத்தகண்வாங்காதே கண்டுகொண்டிருக் கவேண்டும்படியான ஸ்ரீபாஞ்சஜந்யம். (ஏந்துங்கையர்) வெறுமி

(க) ரா-யு-ககசு-சச- (உ) பெரியா-ச-கு-உ- (ந) கூ-கo-கo-

திருவாய்மொழி, கூ-ப, ச-தி, உ-பா, கண்ணே வ்யாக்யாநம். அங்

கையுமன்று, கையுமன்று' இரண்டினுடையவுஞ் சேர்த்தியாயிற்றிவராசைப்படுகிறது. (க) " கூராராழிவெண்சங்கேந்தி-வாராய் " என்னுமவரிறே.

(உன்னை) லக்ஷ்மீஸம்பந்தத்தோடும், திவ்யாயுதங்களோடும், திவ்யவிக்ரஹத்தோடுங் கூடியிருக்கிற வுன்னை. இவருடையவுத்தேஶ்யவஸ்து விருக்கிறபடி யிதுகாணும். (காணக்கருதும்) (உ) "ஸஹஸ்ராம்ஶுமஹாயா: - ஸ்ரீவத்ஸவக்ஷா:- ஶங்கசக்ரகதாதர: - ஸ்ரீவத்ஸவக்ஷா:" என்கிற வுன்வடிவைக்காண வாசைப்படாநின்றது; அவனையாசைப்படுவாராசைப்படுவது ஒருகார்யங்கொள்ளவன்று, காணவாயிற்று, (ந) * திருவேங்கடத்தானைக் காணவிறே. (ச) * காரார்திருமேனிகாணுமளவுமிறே. நித்யஸூரிகளும் ஸதா தர்ஶநம்பண்ணுமித்தனையிறே. (ரு) "அணியரங்கனென்னமுதனைக் கண்டகண்கள் மற்றொன்றினைக்காணா" என்று இவ்வளவிலே தேக்கிட்டுவிடுவார்களிங்குள்ளார்; (உ) "ஸதா பஶ்யந்தி ஸூரய:-ஏதத்தேவாம்ருதம்த்ருஷ்ட்வா த்ருப்யந்தி" என்று இவ்வளவிலேதேக்கிட்டுவிடுவர்களங்குள்ளார். (என்கண்ணே) ஸம்ஸாரிகளில் தமக்குண்டான சாபலத்தோபாதியும் போருமாயிற்று இவர்தம்மிற்காட்டிலுமிவருடைய திருக்கண்களுக்கு. இவர்க்கு நேத்ரபூதரான வேற்றமுண்டிறே அவற்றுக்கு. (க)

இரண்டாம்பாட்டு.

கண்ணே யுன்னைக்காணக்கருதி * என்னெஞ்ச மெண்ணே
கொண்ட சிந்தையதாய் நின்றியம்பும் * விண்ணோர் முனிவர்க்
கென்றுங் காண்பரியாயை * நண்ணுதொழியேனென்று நானழைப்
பனே. (உ)

ப: —அநந்தரம், "உன்னைக்காணவேணும்" என்கிற வபிநிவேசத்தாலே, என்னெஞ்சும் நானு மலற்றாநின்றோமென்கிறார்.

(இ - ள்.) கண்ணே-எனக்கு தர்ஶநஸாதநபூதனாய்க்கொண்டு த்ருஷ்டியானவனே, உன்னை - ஸாதநபூதனான வுன்னையே, காண - ஸதா தர்ஶநம்பண்ணி யநுபவிக்க, கருதி - கருதி, என்னிலும் சபலமான

(க) கூ-கூ-க- (உ) ரா-யு-கசச-கரு- (ந) ச-திருவ
(ச) சிறியதி... (ரு) அமலனாதி- ...) சாந்தோ-

என் - என், நெஞ்சம் - நெஞ்சானது, எண்ணே கொண்ட - பஹுஸங்க்யாதமான, சிந்தையதாய் - மநோரதங்களைப் பண்ணி, நின்று - நின்று காண்கையிலும், ப்ரதிபந்தகம்போகையிலும், அடிமைசெய்கையிலுமுண்டான அபிநிவேசத்தாலே, இயம்பும் - அலற்றாநிற்கும், நான் - கரணியானநான், விண்ணோர் - ப்ரஹ்மாதிகளுக்கும், முனிவர்க்கு - ஸநகாதிகளுக்கும், என்றும்-என்றும், காண்பு-காண, அரியாயை-அரிய வுன்னை, நண்ணு தொழியேன் - கிட்டாமல் விடேன், என்று - என்று வ்யவஸிதனாய்க்கொண்டு, அழைப்பன்-த்வரையாலே கூப்பிடாநின்றேன். (உ)

ஆறு;—(கண்ணே) என்னெஞ்ச முன்னைக்காண வாசைப்படாநின்றது, ப்ரஹ்மாதிகளுக்கும் காண வரிதாயிருக்கச்செய்தே, எனக்கு த்ருஷ்டிபூதனாயிருந்த வுன்னையொழிய வேறெனக்குச் செல்லாமையாலே யுன்னைக்காணுதொழியில் தரியேனென்று நானிடந்து கதறாநின்றேனென்கிறார். (உ)

ஈடு; அவ;—தமக்கும் தம்முடைய நெஞ்சுக்குமுண்டானசாபலத்தை யருளிச் செய்கிறார்.

(கண்ணே) எனக்கு த்ருஷ்டியானவனே. (உன்னைக்காணக் கருதி) நிரதிசயபோக்யனான வுன்னைக்காணவாசைப்பட்டு. கண்ணைக்கொண்டே கண்ணைக்காண விருக்குமாபோலேகாணுமிவரிருக்கிறது; காண்கைக்கு ஸாதநமான கண்ணும், காணப்படும் விஷயமு மவனென்கிறார். (க) "சக்ஷுஸ்ச த்ரஷ்டா ச நாராயண:-சக்ஷுஸ்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:" என்னக்கடவதிறே; அவன்றன்னாலே யவனைபபெறுமவரிறேயிவர், ப்ராப்யத்தில் நியதிபோலே, இவர்க்கு ப்ராபகத்தில் நியதியும்.

(என்னெஞ்சம்) பந்தஹேதுவாய்க்கொண்டு, விஷயங்களிலே "பருகுபருகு" என்று வாராநிற்குமிறே ஸம்ஸாரிகளுடைய நெஞ்சம்; * மயர்வற மதிநலமருளப்பெற்றார் நெஞ்சிறே, (உ) "தொழுதெழு" என்பது. (எண்ணேயித்யாதி) எண்கொண்ட மநோரதத்தையுடைத்தாய்-பஹுமநோரதங்களைப்பண்ணி "காணவேணும், காணாதேபட்ட து:க்கத்தைப்போக்கவேணும், அடிமைசெய்யவேணும்" என்று. (நின்றியம்பும்) நிரந்தரமாகக்கூப்பிடாநிற்கும். பரவ்ருத்தியையுந் தானே யேறிட்டுக்கொள்ளாநிற்கும்.

(க) ஸுபால-   (உ) க-க-க.

(கண்ணே) என்கையாலே - "ப்ராபகனவனே" என்றதாய், (உன்னைக்காண) என்கையாலே- "ப்ராப்யவஸ்துவுமவன்" என்றதாய், (எண்ணேகொண்ட) என்கையாலே - "அந்தப்ராபகத்தைக் கொண்டு இந்தப்ராப்யத்தைப்பெறவேணும்" என்றிருக்குமதிகாரியுடைய யாத்ரையிருக்கும்படி சொல்லிற்று.

(விண்ணோரித்யாதி) இதுதான் நெஞ்சுக்கேயாய் நான்கைவாங்கியிருக்கிறேனே. ப்ரஹ்மாதிகளுக்கும் ஸநகாதிகளுக்கு மென்று மொக்கக் காணவரியையா யிருக்கிற வுன்னை நான் கிட்டாதொழிவனே. "பெற்றுமுடிப்பன்" என்று நான் கூப்பிடாநின்றேன். "பெற்றுமுடிப்பன்" என்கிறது இவரென்கொண்டென்னில்; "விலக்ஷண தேசவாஸிகளாய், தங்களுக்கென்ன வொருகைம்முதலுண்டாயிருக்கிறவர்களாகையாலே விளம்பஹேதுவுண்டு அவர்களுக்கு; அங்ஙனொரு கைம்முதலில் லாதவர்களுக்கு விளம்பஹேதுவுண்டோ" என்று கூப்பிடாநின்றேன்.

(நண்ணுதொழியேன்) அவனைக்கிட்டாதொழியில் நான் தரியேன். இது ஆப்த்தான் நிர்வாஹம். (நண்ணுதொழியேன்) என்றவிடம்-மஹா விச்வாஸஞ்சொல்லுகிறது. அவர்கள் விலக்ஷண தேசத்திலே யிருக்கையாலே க்ரமத்திலே யெடுக்கலாம்; அங்ஙனன்றிக்கே, ஸம்ஸாரத்தேயகப்பட்டுநிற்கிற விவரையிறே கடுகவெடுக்க வேணுவது. எடுக்கவேண்டும் நிலத்திலேயிருந்தேன்; எடுக்கவேணுமென்றிருந்தேன்; எடுப்பான் தானுமிருந்தான்; எடுத்தால் பெறுவது தன்னையாயிருந்தது; ஆனபின்பு, எனக்கென்ன கண்ணழிவுண்டு. (௨)

மூன்றும்பாட்டு.

அழைக்கின்றவடிநாயேன் நாய் கூழைவாலால்*குழைக்கின்றதுபோல வென்னுள்ளங்குழையும் * மழைக்கன்று குன்றமெடுத்தாநிரைகாத்தாய் * பிழைக்கின்றதருளென்று பேதுறுவனே.

ப:—அநந்தரம், ஆர்த்தியேபற்றுசாக ஆஸ்ரிதரக்ஷகனுன வுன்னுடைய க்ருபையானது என்னை நழுவவிடுகிறதோவென் றஞ்சாநின்றேனென்கிறார்.

(இ - ள்.) அழைக்கின்ற - அபிநிவேசாதிசயத்தாலே யழைத்துக் கூப்பிடாநிற்பேனாய், அடி - அநந்யகதியான ஸம்பந்தத்தை யுடையேனாய், நாயேன் - அனுகில் அவத்யாவஹமான நிகர்ஷத்தையுடைய என்-என்னுடைய, உள்ளம் - துக்கக்ஷீணமான நெஞ்சானது, உன்னுடையஸந்நிதியிலே, நாய் - நாயானது, தன்னினைவை, கூழை-கூழையான, வாலால்-வாலையசைத்து, குழைக்கின்றதுபோல-ப்ரகாசிப்பிக்குமாபோலே, குழையும் - ஶிதிலமாகாநின்றது, இந்த்ரன், அன்று - அஶ்மவர்ஷமுகத்தாலே ஆர்த்தியைஜநிப்பித்தவன்று, மழைக்கு - அந்தவர்ஷத்துக்கு நிவாரணமாம்படி, குன்றம்-மலையை, எடுத்து - எடுத்து ஆ-ரக்ஷாபேக்ஷைபண்ணவு மறியாதபசுக்களுடைய, நிரை - திரளை, காத்தாய் - ரக்ஷித்தவனே, உன்னுடைய, அருள் - நிரவதிகக்ருபையானது என்னளவில், பிழைக்கின்றது - தப்புகிறதோ, என்று - என்று, பேதுறுவன் - கலங்காநின்றேன். உனக்குத்தப்புகிறதோவென்றுமாம். (௨)

ஆறு:—(அழைக்கின்ற) என்னெஞ்சானது, தன்னுடைய வயோக்யதையையும், ஸாமக்ரீவைகல்யத்தையும் பாராதே, தன்னுடையசாபலத்தாலே யுன்னையாசைப்பட்டு விடமாட்டுகிறதில்லை; இப்படி யென்னுடைய ஸர்வகரணங்களும் தளராநிற்கச்செய்தே பேசாதிருந்தருளுகையாலே, உபாயஶூந்யரா யாபந்நராயிருப்பாரை ரக்ஷிக்கக்கடவதான வுன்னுடைய நிரவதிககாருண்யவெள்ளத்திலும் நானகப்படேனோவென் றஞ்சாநின்றேனென்கிறார். (௩)

ஈடு; அவ:—இப்படி கூப்பிடச்செய்தேயும் வரக்காணாமையாலே, ஆர்த்தியேகைம்முதலாக ரக்ஷிக்கக்கடவ வுன் றுணைத்துக்குப் புறம்பானேனோவென்கிறார்.

(அழைக்கின்றவடிநாயேன்) அயோக்யனாய் க்ஷுத்ரனாயிருந்து வைத்து, ஆர்த்தியாலே கூப்பிடாநின்றேன். ருசியாலே தவிரமாட்டார். கிட்டினால் அத்தலைக்கவத்யமாம்படி யாயிற்றுத் தம்முடைய நிலை. நாய், தன்னையுடையவனுக்குத் தன்னபிமதத்தில் ருசியைத் தெரிவிப்பது வாலாலேயாயிற்று; அவ்வால்தான்கூழையானால் தெரிவிக்கையரிதாமிறே; அதுபோலே, என்மநஸ்ஸானது ஶோவுபடாநின்றது. இத்தால்-தமக்கோடுகிற க்லேசம் பேச்சுக்கு நிலமன்றென்கை, நிஸ்ஸாதநனாய்வைத் தாசைப்படாநின்றேனென்றுமாம்.

திருவாய்மொழி, கூ-ப, சு-தி, ச-பா, உறுவதிது வ்யாக்யாநம். அவ

(மழைக்கித்யாதி) இந்த்ரன் அஶ்மவர்ஷத்தை வர்ஷிக்கிறவள விலே, மலையையெடுத்து இடையரையும் பசுக்களையுமார்த்தியே கைம்முதலாக ரக்ஷித்தவனே. (பிழைக்கின்ற தருளென்றுபேதுறுவ னே) ":வரையாதே ரக்ஷித்தமஹாகுணம் எனக்குதவாமையாலே யிழக்கப்புகாநின்றாய்' என்று பேகணியாநின்றேன்" என்றுளவந்தா ரருளிச்செய்யும்படி. அத்தை யெம்பெருமானார் கேட்டருளி, "இது பொருளழகிது; ஆனால்இப்போ திவர்க்கோடுகிற தசைக்குச்சேராது; ஆனபின்பு, 'பசுக்களுமிடையரும் வர்ஷத்திலே நோவுபடாதபடி மலையையெடுத்துமறித்த விம்மஹாகுணத்துக்கு நான் புறம்பாகிறே னோ' என்று பேதுறுகின்றேன்" என்று. (ங)

நான்காம் பாட்டு.

உறுவதிது வென்றுனக்காட்பட்டு * நின்கண் பெறுவதெது கோலென்று பேதையேன்நெஞ்சம்* மறுகல்செய்யும் வானவர்தான வர்க்கென்றும் * அறிவதரியவரியாயவம்மானே.

ப:—அநந்தரம், உத்தேஶ்யமான சேஷத்வத்துக்கு ப்ரதிஸம்பந்தி யான வுனக்கடிமையாய்வைத்து, என்பேறேதாயிருக்கிறதோவென்று என்னெஞ்சு கலங்காநின்றதென்கிறார்.

(இ-ள்.) ஸம்பந்தமொத்திருக்கச்செய்தேயும், வானவர்-அநுகூல ரானவானவரோடு, தானவர்க்கு - ப்ரதிகூலரானதாநவரோடுவாசியற, ஆஶ்ரித ஸௌலப்யத்திலும் ஸர்வேஶ்வரத்வத்திலும், என்றும் - என்று மொக்க, அறிவது - அறிய, அரிய-அரியையாம்படியான, அரியாய-நர ஸிம்ஹமான, அம்மானே - ஸ்வாமியே, இது - இந்தசேஷத்வமாகிற ஸ்வரூபமே உறுவது-உத்தேஶ்யம், என்று என்றறுதியிட்டு, உனக்கு- தத்ப்ரதி ஸம்பந்தியானவுனக்கு ஆட்பட்டு-தாஸ்யாநுமதியைப்பண்ணி, நின்கண் - ஸ்வாமியான வுன்பக்கல், பெறுவது - பலமாகலபிக்கவருகி றது, எதுகொல் - ஸ்வரூபாநுரூபகைங்கர்யமோ, ஸம்ஸாரஸ்திதியோ ஏதாயிருக்கிறது, என்று, பேதையேன் - ஏதேனுமொன்றை நீசெய்த படிகண்டிருக்கை ப்ராப்தமென்னுமறிவில்லாத வென்னுடைய நெஞ் சம் - நெஞ்சானது, மறுகல்செய்யும்-கலங்காநின்றது. (ச)

ஆறு;—(உறுவதிது) நீ ஆஸ்ரிதஸுலபனா யிருக்கச்செய்தே பிறருக்கரியை யாயிருக்கையாலே, எனக்கு மரியையாயிருக்கிற் செய்வதென்னென்று, என்னெஞ்சு நடுங்காநின்றதென்கிறார். (ச)

ஈடு; அவ;—நீரிங்ஙன் பயப்படுகிறதென்னென்ன ; "தேவாதிகளுக்கரியையாகையாலே யெனக்குமரியையாகிறாயோ" என்றென்னெஞ்சு கலங்காநின்றதென்கிறார்.

(உறுவதிதுவென்று) சீரியது - அடிமைசெய்யு மிதுவென்று. (உனக்காட்பட்டு) உனக்கடிமைபுகுந்து. "ஸ்வரூபம் பகவத்பாரதந்த்ர்யம்" என்றறிந்தால், சீரியப்ரயோஜநம் கைங்கர்யமேயிறே. (நின்கட்பெறுவதேதுகொலென்று) உன்பக்கல் பெறுவதேதோவென்று. ஸ்வரூபத்தையுமுணர்ந்து, "கைங்கர்யமே சீரியதும்" என்றறிந்து, "ஈஶ்வரன் அநந்யப்ரயோஜநர்க்கு வேறொன்றைக்கொடுத்து விடுவானொருவனல்லன்" என்றுமறியுமிவர், "உன்பக்கல்பெறுவதெது" என்கைக்கு ஹேதுவென்னென்னில்; "க்ரமத்திலேசெய்கிறோம்" என்று ஸம்ஸாரத்திலிருப்பே சேஷித்துவிடப்புகுகிறதோ, என் த்வரையறிந்து சடக்கென முகங்காட்டுகிறாயோவென்கை. (பேதையேன் நெஞ்சம்மறுகல்செய்யும்) "நாமபிஸந்திபண்ணினபடியே பலிக்கும்" என்னுமறிவின்றிக்கேயிருக்கிற வென்னெஞ்சம் கலங்காநின்றது.

இங்ஙன் கலங்குகைக்கடி யென்னென்னில் ; நெஞ்சினுடைய விவேகஶூந்யதையிறேயிதுக்கடி. நீதானுமிதுக்கடி. (வானவர்த்யாதி) (க) *"தெ³வா நா:ஜா நவா நா:- அம்மாணுபிருந்துவைத்துஸர்வே" ப்ராணுயிருந்துவைத்து, தேவர்களுக்கு மஸுரர்களுக்குமென்று மொக்க வறியவரியையாய், அந்நிலைதன்னிலே ஒருசிறுக்கனுக்கு உன்னையுள்ளபடி யறியலாயிருந்தாய, அதில் நானெக்கோடியிலே யாகிறேனோவென்றறியாமை. தேவாஸுராஷிபாகம்பண்ணின வநந்தரம், அர்ஜுநன் "நானெக்கோடியிலாகிறேனோ" என்றஞ்சினாப்போலே, பின்னை அவனிதுக்குப்பண்ணின பரிஹாரமென்னென்னில்; தன்ஸௌலப்யத்தை ப்ரகாசிப்பிக்கையிறே.எளியோமாகையுமொரு கோடியுண்டாக நீர்சொன்னீராகில், நீர்தாமக்கோடியிலேயுள்ளா ரொருவராயிருந்தீராகில்,உமக்கினி நாம் கைப்புகுந்தோ மென்றிருக்கை யமையாதோ வென்கையிறே. (ரு)

(க) ஜிதந்-க-உ-

ஐந்தாம் பாட்டு.

அரியாய வம்மானை யமரர்பிரானை * பெரியானைப்பிரமனை முன்படைத்தானை * வரிவாளரவினணைப் பள்ளிகொள்கின்ற * கரியான்கழல்காணக் கருதுங்கருத்தே.

ப:—அநந்தரம், காரணத்வாதிகுண யோகத்தையுடையனான வன் திருவடிகளைக்காணவேணுமென்று என்னுடைய நெஞ்சானது நினையாநின்றதென்கிறார்.

(இ - ள்.) அரியாய - விரோதிநிரஸநசீலனான, அம்மானை - ஸ்வாமியாய், அமரர் - நிரஸ்தஸமஸ்தவிரோதிகளான ஸூரிகளுக்கு, பிரானை - போகப்ரதனாய், பெரியானை - அவர்களாலும் பரிச்சேதித்தநுபவிக்க வொண்ணாத பெருமையையுடையனாய், முமுக்ஷு-வஸிஸ்ருக்ஷயாலே ஜகத்தைஸ்ருஷ்டிக்கைக்கு, முன் - முற்படவே, பிரமனை-ப்ரஹ்மாவை, படைத்தானை - உத்பாதித்தவனாய், உத்பந்நஜகத்ரக்ஷணார்த்தமாக, வரி-வரியையும், வாள் -ஒளியையுமுடைத்தான, அரவினணை-திருவரவணையிலே, பள்ளிகொள்கின்ற - பள்ளிகொண்டருளுகிற, கரியான் - படுக்கைக்குப்பரபாகமான ஸ்யாமளவிக்ரஹத்தை யுடையவனை, கழல்-திருவடிகளிலே, காண - காணவேணுமென்று, கருத்து - புத்தியானது, கருதும்-நினையாநின்றது. கரியானையென்கிற விரண்டாம்வேற்றுமை யெஞ்சிக்கிடக்கிறது. கரியான்றனையென்றும் பாடஞ்சொல்லுவர். (ரு)

ஆறு:—(அரியாய) உம்முடையவபேக்ஷிதந்தானேதென்னில்; அண்டாதிபதியான ப்ரஹ்மாவுக்கும் காரணபூதனாகையாலே ஸர்வேஶ்வரனாய், * அயர்வறுமமரர்களதிபதியாய், ஸகலஜநமநோநயநஹாரி திவ்யஸௌந்தர்ய விசிஷ்டனாய், ஆஸ்ரிதர்க்காத்மதாநம் பண்ணுகைக்காகத் திருப்பாற்கடலிலேவந்து கண்வளர்ந்தருளுகிற கரியான்கழல்காண வாசைப்படாநிற்கு மென்னெஞ்சென்கிறார்.

ஈடு; அவ;—நாமெளியோமானபோகோடியிலேயன்றோ, உமக்குப் பேறுகைபுகுந்திருக்க நீரிங்ஙன் படுகிறதென்னென்ன; என்னெஞ்சு காண்கையிலே த்வரியாநின்றதென்கிறார்.

(அம்மானை) ஸர்வேஶ்வரனை. (அமரர்பிரானை) நித்யஸூரிகளுக்குத் தன்னைக்காட்டிக் கொடுத்தநுபவிப்பிக்கு முபகாரகனை. (பெரியானை) அவர்களுடைய ஸ்வரூபஸ்த்தித்யாதிகள் தன்னதீந

மாய், தன்னை அவர்களால் பரிச்சேதிக்கவொண்ணாதவனே. (பிரம னை முன்படைத்தானே) சதுர்முகனுக்கு ஜநகனாயுள்ளவனே. அரியாய வென்று-கீழேகூட்டுவது. ஸ்ருஷ்டமானஜகத்திலே, ஆஸ்ரிதார்த்த மாகவவன் ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே தன்னையழியமாறிவந்தவதரித் தவனே.

(வரிவாளித்யாதி) ஆஸ்ரிதர்க்கு உதவுகையன்றிக்கே. தத்ஸம்ஸ் லேஷஸ்வபாவனாயுள்ளவனே. (வரிவாளரவு) வரியையுமொளியையு முடையவரவு. வரி - அழகு. (கரியான்) வெளுத்ததிருநிறத்தை யுடைய திருவநந்தாழ்வான்மேலே ஒருகாளமேகம் சாய்ந்தாப்போ லேயாயிற்றுக் கண்வளர்ந்தருளுவது. (காணக்கருதும் கருத்தே) காண்கையிலே த்வரியாநின்றமென்மனஸ்ஸு. படுக்கைக்கு பரபாக மானவடிவும், அதுக்குப்பரபாகமான திருவடிகளும் இத்தையாயிற் றுக்காணவாசைப்படுகிறது. (௫)

ஆறும் பாட்டு.

கருத்தேயுன்னைக் காணக்கருதி * என்னெஞ்சத் திருத்தாக விருத்தினேன் தேவர்கட்கெல்லாம் * விருத்தாவிளங்குஞ் சுடர்ச் சோதியுயரத் தொருத்தா * உன்னையுள்ளு மென்னுள்ளமுகந்தே.

ப:—அநந்தரம், நான் மநோரதித்தபடியே, பரமபதநிலயனாய் ஸூரிஸேவ்யனான வுன்னை யென்னெஞ்சானது கண்டநுபவியாநின்ற தென்கிறார்.

(இ - ள்.) கருத்தே - நான் தளராதபடி யெனக்கு பலகாரணமாக் கொண்டு நெஞ்சுவழியானவனே, உன்னை-உன்னை, காண - கண்டநுப விக்கவேணுமென்று, கருதி - மநோரதித்து என் - என், நெஞ்சத்து - நெஞ்சுக்குள்ளே, இருத்தாக - எழுந்திராதபடி, இருத்தினேன் - இருத் திக்கொண்டேன், தேவர்கட்கெல்லாம் - ஸூரிகளுக்கெல்லாம், விருத் தா - மூப்பான சேஷியாய், விளங்கும் - உஜ்ஜ்வலமான, சுடர் - ப்ரபை யையுடைத்தாய், சோதி - தேஜோமயமாய், உயரத்து - (க “ விஶ்வதஃ ப்ருஷ்டேஷு ஸர்வதஃப்ருஷ்டேஷு - விஶ்வதஃ ப்ருஷ்டேஷு ஸர்வதஃப்ருஷ்டேஷு ” என்றுஸர்வோத்தரமான பரமபதத்திலே,

---

(க) சாந்தோ-௩-௧௩-

ஒருத்தா-அத்விதீயனா யிருக்குமவனே, என்-என்னுடைய உள்ளம்-அந்தஃகரணமானது, உன்னை - நிரதிஶயப்ராப்யபூதனானவுன்னை, உகந்து-அத்யந்தப்ரேமவிஶிஷ்டமாய்க்கொண்டு, உள்ளும் - அகவாயிலேயநுபவியாநின்றது. (௬)

ஆறு:—(கருத்தே) இப்படி நானுன்னைக்காண விச்சிக்குமளவில் திருநாட்டி லிருக்கும்படியேவந்து என்னெஞ்சிலே புகுந்தருளின வுன்னை யென்னெஞ்சு உகந்து புஜியாநின்றதென்கிறார். (௬)

ஈடு; அவ:—காணவாசைப்பட்டவளவிலே அவன் தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்தருள, தம்முடையநெஞ்சு உகந்தநுபவிக்கிறபடியை யருளிச்செய்கிறார்.

(கருத்தேயுன்னைக் காணக்கருதி) எனக்குமிடுக்கான வுன்னைக் காண வாசைப்பட்டவளவிலே முகங்காட்டினாய், இவ்விஷயத்தை லபிக்கைக்கு ருசியேயமையுமென்கை, "கண்ணேயுன்னைக்காணக் கருதி" என்றார் கீழ்; "கருத்தேயுன்னைக்காணக்கருதி" என்றாரிங்கே. அநுபவத்தையைக்கொண்டு அர்த்தாபத்தியாலே கல்பித்தல், அநுமானத்தாலே அதீந்த்ரியமென்றறிதல்செய்யும் வஸ்துவை ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்று மநோரதிக்கிறார். இவர்க்குக் கண்ணுங் கருத்து மவனாயிற்று.

(என்னேஞ்சத்திருத்தாகவிருத்தினேன்) * மறுகல்செய்தநெஞ்சிலே, * மறுகலிலீசனைப் பரமபதத்திலேயிருக்குமாபோலேயிருத்தினேன். "இவர்பக்கலிசைவுபெற்றிலோம்" என்றிருக்கிறவன் இத்தனை யிசைவுபெற்றால் பின்னைத்தள்ளிக் கதவடைத்தாலும் போகானிறே.(க) [யதீஹாஸாஹொநகா ஸ்யா ஸாய–ுஜிநிதெ-யதிஹா ஸாதோகோஸ்த்வயாஸார்த்தமநிந்திதே](உ)[ஐஹவஸ்ஸ்ராிஸளதி ெது ஸாய–ுெதநஷக்ஷிணா- இஹவத்ஸ்யாமி ஸௌமித்ரே ஸார்த்தமேதேநபக்ஷிணா] ஐயர் கண்வட்டத்திலே வர்த்திக்கவேணுமென்று நினைத்திருந்தோம், நடுவிலாய்ச்சிக்கு ப்ரியஞ்செய்யவேண்டுகையாலே அதுசெய்யப்பெற்றிலோம், இனி இவர் சிறகின்கீழாகிலும் வர்த்திக்கப்பாராநின்றோ மென்றாரிறே. அன்றிக்கே, (இருத்தாக) மித்ரபாவமேகிடீ ரென்பக்கலுள்ளதென்னுதல்.

(க) ரா-அயோ-கூச-கடு- (உ) ரா-ஆர-கடு-கூகூ-

(தேவர்கட்கெல்லாம்விருத்தா) "இனியவ்வருகில்லை" என்னும்படி யுயர்ந்தவர்களுக்கு மவ்வருகானவனே, தலைமகனையும் தலைமகளையும் "கிழவனுங்கிழத்தியும்" என்று தமிழர் சொல்லக்கடவர்களிறே; அவளையும் (க) "மலர்க்கிழத்தி" என்றார்களிறே. (விளங்குமித்யாதி) (உ) "அத பதஃபரோ திவோஜ்யோதிர்தீப்யதே" என்கிறபடியே, எப்போது மொக்கவிளங்காநிற்பதாய், நிரவதிகதேஜோரூபமா யிருக்கிற பரமபதத்திலே யெழுந்தருளியிருக்கிற அத்விதீயனே. ப்ரகாரத்திலேயிறே நாநாத்வமுள்ளது; ப்ரகாரியொருவனேயிறே.

(உன்னையித்யாதி) சடக்கென முகங்காட்டின வுன்னை, கண்டு கலங்கின வென்னெஞ்ச முகந்தே யநுபவியாநின்றது. "தேவர்கட்கெல்லாம்விருத்தா, விளங்குஞ்சுடர்ச்சோதி யுயரத்தொருத்தா" என்று சொல்லுகிற விவ்விசேஷணங்களுக்குக் கருத்து-மேலாரூர்க்கும் மேலாய் பரமபதத்திலே யெழுந்தருளியிருந்து அவர்களை யநுபவிப்பிக்குமாபோலே, தன்னையநுபவித்த வென்னெஞ்சம் ப்ரீதமாகாநின்றதென்கை. (௬)

ஏழாம் பாட்டு.

உகந்தே யுன்னையுள்ளு மென்னுள்ளத்தகம்பால் * அகந்தானமர்ந்தே யிடங்கொண்டவமலா * மிகுந்தானவன்மார் வகலமிருகூறுநகந்தாய * நரசிங்கமதாயவுருவே.

ப:—அநந்தரம், ஹ்ருத்யனாய்க்கொண் டென்னெஞ்சிலே யிருந்து விரோதிநிரஸநசீலனான வுன்னை யென்னகவாயுகந்தநுபவியாநின்றதென்கிறார்.

(இ-ள்.) அகந்தான் - அகவாயிலே, அமர்ந்து-பொருந்தி, இடங்கொண்ட - இடங்கொண்டு, அதுதானே ப்ரயோஜநமாகவிருந்த, அமலா - உஜ்ஜ்வலஸ்வபாவனாய், ப்ரபலமான துர்மாநத்தை யழித்திருந்தமைக்கு ஸூசகமென்னலாம்படி, மிகும்-வரபலபுஜபலங்களாலேமிக்க, தானவன்-அஸுரனான ஹிரண்யனுடைய, மார்வு-மார்பத்திலே, அகலம்-பெரியவிடத்தை, இருகூறு - இருகூறாம்படியாக, நகம் - நகத்தை, தா-

(க) தி-ச-வி-௧௧அ- (உ) சாந்தோ-

தாவும்படிபண்ணின, நரசிங்கமதாய - நரஸிம்ஹமான, உருவே - ரூபத்தையுடையவனே, என் - என், உள்ளத்து - உள்ளத்தின், அகம்பால் - அகவாயானது, உன்னை - உன்னை, உகந்தே - உகந்தே, உள்ளும் - அநுபவியாநின்றது.

ஆறு:—(உகந்தே) என்னுள்ளே புகுந்தருளின வுன்னழகையுஞ் செயலையு மென்னெஞ்சுகந்து கொண் டநுஸந்திக்க, இதுகாரணமாக நீமிகவும் ப்ரீதனாய், உன்னைக்காணப் பெறாமையாலே கலங்கின வென்னெஞ்சு தெளியும்படி யென்னெஞ்சை யெற்றைக்கு மிடமாகக் கொண்டருளினாயென்கிறார். (எ)

ஈடு; அவ;—தூணிலே தோற்றி ப்ரஹ்லாதனுடைய வார்த்தியைத்தீர்த்தாப்போலே தம்மார்த்தியைத்தீர்த்தபடியை யநுஸந்தித்தேத்துகிறார்.

(உகந்தேயுன்னையுள்ளும்) பிரிந்து க்லேசத்தோடே தலைக்கட்டுமுகப்பன்றிக்கே, ஏகரூபமாக வுன்னையநுபவிக்கும்படி. (என்னுள்ளத்து) * எண்ணே கொண்ட சிந்தையுடைத்தான வென்னுள்ளத்து. (அகம்பாலகந்தான்) உள்ளுக்குமுள்ளே. "உள்ளுளாவி" என்னும்படியே கமர்பிளந்தவிடமெங்கும் மறுநனையும்படி. (அமர்ந்தே) தன் பேறாக வத்யபிநிவேசத்தைப்பண்ணி (இடங்கொண்ட) அவகாசமுள்ள விடமெங்கும் தானேயாம்படி நிறைந்த. (அமலா) இவ்விருப்புக்கவ்வருகொருப்ரயோஜநத்தைக்கணிசித்தன்றிக்கே, ஒருஹேதுவைப்பற்றியு மன்றியேயிருக்கை, "எண்ணேகொண்ட சிந்தையதாய்" என்றத்தை ஸாதநமாக நினைத்திருக்கிறிலர்.

(மிகுந்தானவன்) ப்ராதிகூல்யத்திலே ஓரளவில் நில்லாததானவன். தன்னையில்லைசெய்கையன்றிக்கே, தன்னுயிர்நிலையிலே நலிந்தவன்; (க) "ஜ்ஞாநீத்வாத்மைவ-ஜ்ஞாநீத்வாத்மைவ" என்னக்கடவதிறே. (மார்வகலமிருகூறுநகந்தாய்) அகன்றமார்வானது இரண்டுகூறும்படி பண்ணவல்ல நகத்தையுடையவனே. நகத்தாயென்கிற வல்லொற்றை மெல்லொற்றாக்கிக்கிடக்கிறது. (நரசிங்கமதாய வுருவே) (உ) "ஸமெதகாஶ்வாஶ்வாய - ஸைதகரூபரூபாய" என்கிற விக்ரஹத்தையே! இப்படிகொள்வது; இரண்டுவடிவைக் கொள்ளுவதே!

(க) கீதை-எ-கஅ- (உ) வி-பு-க-உ-க-

இத்தால்சொல்லிற்று யிற்றென்னென்னில்; ஆஶ்ரிதருடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலேவந்துதோற்றுமவனுகையாலே, தூணிலே தோற்றினாப்போலேவந்து தோற்றி, ஹ்ருதயாவகாசமுள்ள விடமெங்கும் புகுந்து, கமர்பிளந்தவிடமெங்கும் நீர்பாய்ச்சுமாபோலே. நிரம்பவென்னை யநுபவிப்பித்தானெனகிறார். (௭)

எட்டாம் பாட்டு,

உருவாகியவாறு சமயங்கட்கெல்லாம் * பொருவாகிநின்றானவனெல்லாப்பொருட்கும் * அருவாகியவாதியைத் தேவர்கட்கெல்லாம் * கருவாகியகண்ணனைக் கண்டுகொண்டேனே.

ப:—அநந்தரம், ஸர்வாந்தராத்மாவாய், ஸர்வகாரணபூதனாய், ஸர்வஸுலபனான வுன்னைக்காணப்பெற்றேனென்கிறார்.

(இ-ள்) உருவாகிய-ஆபாதப்ரதீதியிலொன்றுபோலே யிருக்கக்கடவதான; ஆறுசமயங்கட்கெல்லாம் - சார்வாக பௌத்த க்ஷபண வைசேஷிக ஸாங்க்ய பாசுபதரூபமான பாஹ்யஸமயங்களாறுக்கும், பொருவாகி - (க) "அறுவகைச்சமயமு மறிவருநிலையினை" என்கிறபடியே ப்ரதிபடனாய்க்கொண்டு, நின்றானவன் - அப்ரகம்ப்யனாயிருக்குமவனாய், எல்லாப்பொருட்கும் - ஸமஸ்தபதார்த்தங்களுக்கும் அருவாகிய-அந்தராத்மாவாய்க்கொண்டு, ஆதியை - ப்ராதநனாய், தேவர்கட்கெல்லாம் - ப்ரஹ்மாதிதேவர்களுக்கடங்க, கருவாகிய-காரணபூதனாய், கண்ணனை-ஆஶ்ரித ரக்ஷணார்த்தமாக க்ருஷ்ணனாயவதரித்தவனை, கண்டுகொண்டேன்-கண்டநுபவிக்கப்பெற்றேன். பொரு-எதிர். (௮)

ஆறு;—(உருவாகிய) வேதபாஹ்யமான ஷட்ஸமயங்களில் நான்புகாதபடி பரிஹரித்து, ஸர்வாத்மபூதனான தன்னை யெனக்குக் காட்டியருளினவனை நான்காணவும் பெற்றேனென்கிறார். (௮)

ஈடு; அவ;—ஸகலபதார்த்தங்களுக்கு மந்தராத்மாவாய் ப்ரஹ்மாதிகளுக்குக் காரணபூதனானவனைக் காணப்பெற்றே னென்றினியராகிறார்.

(உருவாகியவாறுசமயங்கட்கெல்லாம்) ஆபாதப்ரதீதியிலொன்றுபோலேயிருக்க, சிலவற்றைவிதிப்பது, சிலவற்றைநிஷேதிப்பது

(க) திருவெழுகூற்றிருக்கை.

நிஷித்தபரிஹாரத்தைச்சொல்லுவதாய்க்கொண்டுஉபதேசிப்பாரும் கேட்பாருமாய்ப் போருகிற. பாஹ்யஸமயங்களெல்லாவற்றாலும். (பொருவாகிநின்றானவன்) பொருவென்று-தனை. அவற்றால் தன்னையில்லை செய்யவொண்ணாதபடி அப்ரதிஹதனாய்நின்றான்.

(எல்லாப்பொருட்கு மருவாகியவாதியை) ஸகலபதார்த்தங்களுக்கு மந்தராத்மாவாய், நியாமகத்வத்தாலே ப்ரதாநனுமானவனை. (தேவர்கட்கெல்லாம் கருவாகிய) ப்ரஹ்மாதிதேவர்களுக்கெல்லாம் காரணபூதனாயுள்ளவனை. (கண்ணனை) கார்யங்களிலே யொன்றுக்குத்தான் கார்யமானவனை. (கண்டுகொண்டேனே) அவதாரத்துக்குப் பிற்பாடராயிருக்க, (கண்டுகொண்டேன்) என்கிறாரிறே; ப்ரேமார்த்ரசித்தர்க்கென்றுங்காணலாம், அவதாரஸமகாலத்திலுங்காணவொண்ணாது சிசுபாலாதிகளுக்கு,

பாஹ்யஸமயங்களாலவிசால்யனாய், ஸர்வாந்தராத்மாவாய்க்கொண்டு ஸர்வநியந்தாவாய், ப்ரஹ்மாதிகளுக்கு முத்பாதகனாயிருந்துவைத்து, ஆச்ரிதஸுலபனானவனைக் காணப்பெற்றேனென்கிறார்.

ஒன்பதாம்பாட்டு.

கண்டுகொண்டேன் கண்ணிணை யாரக்களித்து * பண்டை வினையாயின பற்றோடறுத்து * தொண்டர்க்கமுதுண்ணச் சொன் மாலைகள்சொன்னேன் * அண்டத்தமரர் பெருமானடியேனே.

ப:—அநந்தரம், என்னுடைய ஸ்வரூபாநுரூபமாகக் கண்டநுபவித்து, விரோதியுங்கழிந்து, ப்ராப்யபூதனானவன் விஷயத்திலே, பாகவதர்க்கு போக்யமாம்படி வாசிககிஞ்சித்காரம் பண்ணப்பெற்றேனென்கிறார்.

(இ - ள்.) ஜ்ஞாநப்ரேமாத்மகமான, என் - என், கண் - கண்கள், இணை - இரண்டும், ஆர - வயிறுநிறையும்படி, கண்டுகொண்டு - கண்டுகொண்டு, களித்து - களித்து, இந்த ஸ்வரூபஜ்ஞாநமடியாக, பண்டை - அநாதிஸித்தமான, வினையாயின - அஹங்காரமமகாராதி ஸமஸ்தவிரோதிகளையும், பற்றோடு - ஸவாஸநமாக, அறுத்து - போக்கி, அண்டத்து - பரமபதத்திலே, அமரர்பெருமான் - * அபர்வருமமரர்களதிபதியான ப்ராப்யபூதனுக்கு, அடியேன் - நித்யகிங்கரனான நான், தொண்டர்க்கு-

அவனடியார்க்கு, அமுதுண்ண - உகந்தநுபவிக்கலாம்படி, சொல்மாலைகள் - ஶப்தஸந்தர்ப்பரூபமான வாசிககைங்கர்யத்தை, சொன்னேன் - பண்ணினேன்.

இப்பாட்டில் - மந்த்ரத்தில் ப்ரதம பதார்த்தமான ஸ்வரூபஜ்ஞாநத்தையும், மத்யமபதார்த்தமான விரோதி நிவ்ருத்தியையும், சரம பதார்த்தமான கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையும், கைங்கர்யக்ருத்திவிசேஷத்தையும், மந்த்ரதாத்பர்யமான ததீயசேஷத்வத்தையுஞ் சொல்லிற்றாயிற்று.

ஆறு ;—(கண்டுகொண்டு) இப்படி கண்ணாரக்கண்டுகொண்டு அவனையேத்தவும் பெற்றேனென்கிறார். (௯)

ஈடு; அவ;—தன்னையநுபவிக்கப்பெற்று, அதுக்குமேலே, ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு போக்யமாம்படி திருவாய்மொழி பாடவும்பெற்றேனென்கிறார்.

(கண்டுகொண்டு) "நானழைப்பன்" என்ற விடாயெல்லாங் கெடக் காணப்பெற்று. (என்கண்ணிணையார) "காணக்கருதுமென்கண்ணே" என்ற கண்கள்விடாய்கெட. (கண்ணிணையார - கண்டுகொண்டு) கலியர் 'வயிறாரவுண்டு" என்னுமாபோலே. (களித்து) மறுகின நெஞ்சுகளித்து. (பண்டைவினையாயின பற்றோடறுத்து) இவ்வுகப்புக் கிடைச்சுவரான ப்ராக்தநகர்மங்களை ஸவாஸநமாகப்போக்கி.

(தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்) என்னளவு மன்றிக்கே வைஷ்ணவர்களுக்கு முபகாரகனாகப்பெற்றேன். "நானுமுண்டு, என்பரிகரமும் ஜீவித்து, என்பந்துக்களுக்கும் விருந்திடவல்லேனானேன்" என்பானைப்போலே. (சொன்மாலைகள்சொன்னேன்) ததீயஶேஷத்வபர்யந்தமான பேற்றைப்பெற்றேன். பெற்றபேற்றின் கனமிருந்தபடியாலே, இது தான்றோன்றியான கைப்பற்றடியாகவந்த தொன்றல்ல (அண்டத்தமரர்பெருமானடியேனே) ஸர்வேஶ்வரனாலே விஷயீக்ருதனானேன். (௯)

பத்தாம்பாட்டு.

அடியானிவனென்றெனக்காரருள்செய்யும் * நெடியானைநிறைபுகழஞ் சிறைப்புள்ளின் கொடியானை* குன்றாமலுலகமளந்த வடியானை * அடைந்தடியேனுய்ந்தவாறே. (௧0)

ப:—அநந்தரம், இந்தவநுபவத்துக்கடியான நிருபாதிகஸம்பந்தத்தை யுடையவனைக்கிட்டி நானுஜ்ஜீவித்த ப்ரகார மென்னென்று ஹ்ருஷ்டராகிருர்.

(இ - ள்.) இவன் - இவன், அடியான் - நமக்கு ஸ்வதஃஶேஷபூதன், என்று - என்றுதிருவுள்ளத்திலேகொண்டு, எனக்கு - எனக்கு, ஆர் - பரிபூர்ணமான, அருள் - க்ருபையை, செய்யும் - பண்ணுகிறச்செய்தே, நெடியானை - ஒன்றுஞ்செய்யாதபடி மேன்மேலெனப் பாரிப்பையுடைய பெரியவனும், நிறை - இந்த்ரக்ஷணத்துக் கநுரூபமான, புகழ்-ஶீலஸௌலப்யஜ்ஞாந ஶக்திப்ரமுகமான ப்ரதையையுடையனும், அம் - விலக்ஷணமான, சிறை - சிறகையுடைய, புள்ளின் - பெரியதிருவடியை, கொடியானை - ரக்ஷணப்ரதைக்குக் கொடியாகவுமுடையனும், குன்றமல்-அந்யாபிமாநமாகிற குறைவுவாராமல், உலகம்-லோகத்தை, அளந்த-அளந்துகொண்ட, அடியானை - நிருபாதிகஸம்பந்தப்ரகாஶகமான திருவடிகளை யுடையவனை, அடைந்து-கிட்டி, அடியேன்-ப்ரகாசிதமான ஶேஷத்வஸ்வரூபத்தையுடையநான், உய்ந்தவாறே-உஜ்ஜீவிக்கப் பெற்றபடியே. (௧௦)

ஆறு:—(அடியானிவன்) பெரியதிருவடி, தன் திருவடிகளில் செய்யும் வ்ருத்திகளெல்லாவற்றையும், என்னையிட்டு நிர்ஹேதுகமாகச்செய்வித்துக் கொண்டருளின னொருவனையாஶ்ரயித்து நானுய்யும்படியே! என்கிருர். (௧௦)

ஈடு; அவ;—இப்படி அவனைப்பெற்று க்ருதார்த்தனானேனென்கிருர்.

(அடியானிவனென்று) "மேல் பண்ணப்புகுகிற ஔதார்யம் ப்ராப்தம்" என்று சொல்லுகைக்காக, "அடியான்" என்றொரு பேரையிட்டாயிற்று உபகரித்தது. (எனக்காரருள்செய்யும்நெடியானை) கொள்ளுகிறவென்னளவன்றிக்கே, தன்னளவிலே யுபகரித்த ஸர்வேஶ்வரனை. * அருள்பெறுவாரடியாரிறே. புத்ரர்களுக்கு அம்ஶமேயிறேயுள்ளது ; எல்லாவற்றிலும் கூறுண்டாயிருக்குமிறே யடியார்க்கு.

பிள்ளை யகளங்கப்ரஹ்மராயர், "பட்டரை ஸமாதானம்பண்ணவேணும்" என்று, "இருகைமதவாரணம்" என்கிறவனை வரக்காட்டினாராய், "அவனைத் திருவுள்ளத்திலே விஷயீகரித்திருப்பர்"

என்னுமத்தைப்பற்ற ; அவனும்வந்து சிலவார்த்தைகளை விண்ணப்பஞ்செய்து, திருவுள்ளமும் ப்ரஸந்நமாயிருக்கிறவளவிலே ; " இவனுடைய வைஷ்ணவத்வமிருக்கும்படி திருவுள்ளம்பற்றி யிருக்கையுண்டே " என்றார்களாய்; "சொல்லவேணுமோ, கர்ப்பதாஸர்களன்றோ " என்றது தொடக்கமாக, இப்பாட்டை யருளிச்செய்தார்.

(ஆரருள்செய்யும்) பெறுகிற வென்னளவிலேபன்றிக்கே, தருகிற தன்னளவிலே தந்தான். தனக்களவு தானென்னென்ன (நெடியானை) "ஸர்வேஸ்வரன்" என்னுமித்தனை. (நிறையித்யாதி) இது தான் நானின்றிருந்து உபபாதிக்கவேண்டியிருந்ததோ?. கட்டிக்கொண்டிருக்கிறகொடியிலே தெரியாதோ?. ஶௌர்யவீர்யாதி குணப்ரதையையுடையனுப், நிரந்தர பகவதநுபவத்தாலே தர்ஶநீயமான வேஷத்தையுடையனுயிருக்கிறபெரியதிருவடியை த்வஜமாகவுடையவனை. பெரியதிருவடியை விஷயீகரித்தாப் போலே யென்னை விஷயீகரித்தவனை.

இப்படி விஷயீகரிக்கைக்கு இத்தலையிலென்ன நன்மையுண்டென்னில் (குன்றுமலுலகமளந்தவடியானை;) - குணகுண நிருபணம்பண்ணுதே திருவுலகளந்தருளினுப்போலே, நிர்ஹேதுகமாகவென்கிறார். ஓரடியுங்குறைபாமே பூமிப்பரப்பை யளந்துகொண்ட திருவடிகளையுடையவனை, தன்பெருமையையும் ஸௌலப்யத்தையும் என்னை யநுபவிப்பித்தான். (அடைந்தடியேனுய்ந்தவாறே) ஶேஷத்வமே ஹேதுவாக வுஜ்ஜீவித்தபடியென்!, ஶேஷத்வஜ்ஞானத்துக் கித்தனை ப்ரயோஜநமுண்டோ ! (கo)

பதினேராம் பாட்டு.

ஆறுமதயானை யடர்த்தவன்றன்னை * சேறார்வயல்தென்குருகூர்ச்சடகோபன் * நூறேசொன்னவோ ராயிரத்துளிப்பத்தும் * ஏறேதரும்வானவர்த மின்னுயிர்க்கே.

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக இதினுடைய நித்யஸூரிபோக்யதையை யருளிச்செய்கிறார்.

(இ - ள்) ஆறு-ஒருக்காலும் மட்டுப்படாத, மதம்-மதத்தையுடைய யானை - குவலயாபீடமாகிற வானையை, அடர்த்தவன்றன்னை - நிரஸி

க்த்க்ருஷ்ணனைப்பற்ற, சேறு - சேறு, ஆர் - மிக்க, வயல்-வயலையுடைத்தான, தென் - அழகிய, குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார். நூறே - நூறுநூறாக, சொன்ன - சொன்ன, ஓர், ஆயிரத்துள் - ஆயிரத்துள், இப்பத்தும் - இப்பத்தும், வானவர்தம்-நித்யஸூரிகளுடைய, இன்-உகந்த, உயிர்க்கு - நெஞ்சிலேசென்று, ஏறே தரும்-ஏறுகிற்கும். வானவர்தமின்னுயிர்க்கேறானஸர்வேஶ்வரனைத்தருமென்றுமாம். இது - கலிவிருத்தம். (கக)

ஆறு;—(ஆருமதயானை) ப்ரதிகூலநிரஸநம்பண்ணினாப்போலே யென்னுடைய துக்கத்தையெல்லாம்போக்கி யருளினவனைச் சொன்ன விப்பத்தும் வானவர்தம் இன்னுயிர்க்கேறானவனைத் தருமென்கிறார். (கக)

ஈடு; அவ:—நிகமத்தில், இத்திருவாய்மொழி, தன்போக்யதையாலே நித்யஸூரிகள் ஹ்ருதயத்தை நோவுபடுத்துமென்கிறார்.

(ஆருமதயானையடர்த்தவன்றன்னை) ஒருநாளும் மாறாதமதத்தையுடைய குவலயாபீடத்தை நிரஸித்தவனை. அத்தைநிரஸித்தாப்போலே யென்விரோதியைப்போக்கினவனை. (சேறார்வயல்) குவலயாபீடமோதான், திருநகரியில் வயலையுழுவது நடுவதாகவொட்டாதேகிடந்தது!.

(நூறேசொன்னவோராயிரம்) கிழிகிழியாகக்கொடுப்பாரைப்போலே,நூறுநூறாகச்சொன்னபடி;பாரதராமாயணாதிகளில்காண்டபர்வாதிபேதம்போலே, தரிப்பார்க்கெளிதாம்படி செய்தாரென்கை. இத்திருவாய்மொழி, நித்யஸூரிகள் ஹ்ருதயத்தைப்புண்படுத்துமென்னுதல்; நித்யஸூரிகளுக்கேறான ஸர்வேஶ்வரனைத் தருமென்னுதல். (கக)

நான்காம்திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஒன்பதாம்பத்து.

ஐந்தாந்திருவாய்மொழி.

இன்னுயிர் ப்ரவேஶங்கள்.

ஆறு;—(இன்னுயிர்ச்சேவலும்) இப்படி யெம்பெருமானை ப்ரத்யக்ஷித்தாப்போலே திருவுள்ளத்தாலே விஶதமாகவநுஸந்தித்து, பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே ப்ரவ்ருத்தராய், அதுகைவாராமையாலே, எம்பெருமானோடேகலந்து பிரிந்தாளொரு பிராட்டியைப் போலே அவஸந்நராய், அவளுடைய பாசுரத்தாலே தம்முடைய வ்யஸநத்தைப்பேசுகிறார்.

இப்பிராட்டிதான், எம்பெருமானைப் பிரிந்திருக்கிறஸமயத்திலே சிலகுயில்களுடைய கூக்குரல்களைக்கேட்டுத் தனியேசிந்திக்கிறாள்; எம்பெருமான் "என்னை முடிக்கவேண்டும்" என்றுகோலி, முடிக்குமிடத்தில் ஸ்வவிஶ்லேஷத்தாலல்லது முடிக்கவொண்ணாமையாலே, விஶ்லேஷந்தான் ஸம்ஶ்லேஷத்தை யொழியக்கூடாமையாலே, விஶ்லேஷார்த்தமாக ஸம்ஶ்லேஷித்து, பின்னை விஶ்லேஷிப்பதுஞ்செய்து, "இந்தவிஶ்லேஷத்தாலும் முடியாதொழியிலோ" என்னும் ஶங்கையாலே, "மத்விஶ்லேஷத்திலும் கொடிதானவென்குணங்களை அவளுடைய ஸந்நிதியிலேசொல்லி அவளைமுடியுங்கோள்" என்றுசொல்லிக் குயில்களைப்போரவிட்டானென்று தன்னிலேசிந்தித்து,

ப:— அஞ்சாந்திருவாய்மொழியில், ஃமேழ-மாநஸமாக வபரோக்ஷித்தநுபவித்து ப்ரீதரானவர், அவ்வநுபவாநுரூபமாக பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே யபிநிவேசம்பிறந்து; அநுபாவ்யனான ஸர்வேஶ்வரனுடைய வாஶ்ரிதஸௌலப்யத்தையும், ஸௌஶீல்யத்தையும், தந்நிபந்தநமான ஸாகர்ஷகத்வத்தையும், ஆஶ்சர்யகுணநியோகத்தையும், அநந்யார்ஹத்வாபாதநத்தையும் அநுபாவ்யமான அவயவசோபையையும், சைதில்யஜநகமான ரூபவைலக்ஷண்யத்தையும், அவஸாதகரமான நாமவத்தையையும், போக்யமான புண்டரீகாக்ஷத்வத்தையும், ப்ராப்யதேஶவர்த்தித்வத்தையு மநுஸந்தித்து, ஏவம்பூதனானவனோடே யதாமநோரதங்கலந்து பரிமாறப்பெறுதவார்த்திக்கு மேலே, ஸ்வச்சந்தவர்த்திகளான லௌகிக பதார்த்தங்களும் தத்குணவிக்ரஹாதிகளுக்கு ஸ்மாரகமாக

அத்தாலேஶிதிலராய், கத்யந்தாஶக்யதையாலே அவனுடைய குணாநுஸந்தாநத்தாலே தரித்த ப்ரகாரத்தை, நாயகனை ஈஶ்வரனைப்பிரிந்தாளொருநாயகி தன்னாற்றாமையாலே "லௌகிகமான பக்ஷ்யாதிபதார்த்தங்களைக்கண்டாகிலும் போதுபோக்குவோம்" என்றபிஸந்திபண்ணி பரஸ்பரஸம்ஶ்லிஷ்டங்களாய் ரஸித்துத்திரிகிறவவை அவனுடைய ஸம்ஶ்லேஷத்துக்கும் வடிவுக்கும் பேச்சுக்கும் ஸ்மாரகமாய்க்கொண்டு நலிய, அத்தாலே யீடுபட்டுப் போலிகண்டிரங்கினவள்; பின்னும் போக்கில்லாமையாலே அவனுடையகுணங்களை ஸ்மரித்து தரித்தபாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

ஈடு;—"தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றுகளித்தவர், தம்முடைய ப்ராணரக்ஷணத்துக்கு திர்யக்குக்களின் காலிலேவிழும்படியாயிற்று. "தேவர்கட்கெல்லாம் கருவாகிய கண்ணனைக்கண்டுகொண்டேனே" என்னும்படி வைஶத்யம்பிறந்தபோதே, பாஹ்யஸம்ஶ்லேஷத்திலே யபேக்ஷைபிறந்தது. "இவர்க்கின்னம் விடாயைப்பிறப்பித்து முகங்காட்டவேணும்" என்று இவரபேக்ஷிதத்தைச் சடக்கெனத்தலைக்கட்டிற்றிலன் ஈஶ்வரன்.

நினைத்தபோதே யபேக்ஷிதம் பெறாமையாலே தளர்ந்து, "லௌகிகபதார்த்தாநுஸந்தாநத்தாலே ஹ்ருதயத்தை யந்யபரமாக்கி தரிப்போம்" என்றும், "அவனோடுபோலியானபதார்த்தங்களைக்கண்டாகிலும் தரிப்போம்" என்றும் லௌகிகபதார்த்தங்களிலே கண்வைத்தார்; அவை யாஶ்வாஸஹேதுவன்றிக்கே, ஸ்மாரகமாய் பாதகமாகப்புக்கது. ஏதேனுமொருபதார்த்தம் தோற்றிலும், அவற்றினுடைய ஸத்பாவம் அவனையொழியவில்லாமையாலே, அவனைக்காட்டிக் கொண்டிறே தோற்றுவது. லௌகிகபதார்த்தங்கள் அவனுக்கு ஸ்மாரகமாய் நலிய, அவற்றால் நோவுபடுகிறபடியை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

எம்பெருமானோடேகலந்து பிரிந்தாளொருபிராட்டி, தன்னாற்றாமையாலே "அவனோடு போலியான பதார்த்தங்களைக் கண்டாகிலும் தரிப்போம்" என்று, அவ்வாற்றாமை கைகொடுக்க உத்யாநத்திலேபுறப்பட, அங்குண்டான குயில்மயில் தொடக்கமானவை அவனுடைய பேச்சுக்கும் வடிவுக்கும் ஸ்மாரகமாய்நலிய, "இவைநலிகைக்கு இவற்றோடு நமக்கொருபகையில்லை, இவைநலிகைக்கு ஓரடி

யுண்டாகவேணும், அவன், நம்மை 'முடிக்கவேணும்' என்று பார்த்தான், 'அதுக்கு உபாயம் விஶ்லேஷம்' என்றுபார்த்து, பிரிவுகலவியை யொழியக் கூடாமையாலே கலந்தான் பிரிந்தான். பிரிந்தவிடத்திலும் நாம் முடியாதிருந்தோம், பிரிந்து நோவுபட்டிருக்கிற ஸமயத்திலே 'நம்மோடுபோலியான பதார்த்தங்களைக்காட்டி முடிப்போம்' என்று பார்த்து வரவிட்டானித்தனை; உங்களுக்கு நினைவிதுவாகில் இப்பரிப்பெல்லாம்வேணுமோ" என்று அவற்றுக்கு வார்த்தை சொல்லி. "நம்மைப் பார்த்தாலிறே யிப்படிநோவுபடவேண்டுவது, அவனைப்பார்த்தால் நோவுபடவேண்டாவிறே" என்று அவன் குணஜ்ஞாநத்தாலே, வருந்தி தரித்துத் தலைக்கட்டுகிறதாயிருக்கிறது.

முதற்பாட்டு.

இன்னுயிர்ச் சேவலும் நீருங்கூவிக்கொண்டிங் கெத்தனை * என்னுயிர்நோவமிழற்றேன்மின் குயிற்பேடைகாள் * என்னுயிர்க் கண்ணபிரானை நீர்வரக்கூவுகிலீர் * என்னுயிர்கூவிக்கொடுப்பார்க் குமித்தனைவேண்டுமோ. (க)

ப:—முதற்பாட்டில், ஆஶ்ரிதஸுலபனான க்ருஷ்ணனை வரவழையாதே உங்களில் நீங்களழைத்து மிழற்றி யென்னைநலியாதே கொள்ளுங்கோளென்று, சேவலோடேசேர்ந்த சில குயிற்பேடைகளைப் பார்த்துச்சொல்லுகிறாள்.

(இ-ள்.) குயில்பேடைகாள்-குயிற்பேடைகாள், இன்னுயிர்-பஹிஶ்சரமான ப்ராணன்போலே போக்யமாய் தாரகமான, சேவலும்-சேவலும், இன்னுயிர்நீரும் - அதுக்கினியவுயிராய், என்னோடு ஸ்த்ரீத்வஸாஜாத்யத்தையுடைய நீரும். கூவிக்கொண்டு - ஒருவர்க்கொருவர் ஸம்ஶ்லேஷார்த்தமாக வழைத்துக்கொண்டு, இங்கு-என்ஸந்நிதியிலே, எத்தனை - மிகவும், என் - என், உயிர்-ப்ராணனானது, நோவ-ஈடுபடும்படிக்கீடாக, மிழற்றேன்மின் - அநக்ஷரரஸமான ஸம்ஶ்லேஷ சப்தங்களைப் பண்ணாதே கொள்ளுங்கோள், என் - எனக்கு, உயிர் - தாரகனாயுள்ள, கண்ணன் - க்ருஷ்ணனாகிற, பிரானை - உபகாரகனை, நீர் - நீங்கள், வரக்கூவுகிலீர் - வரும்படி அழைக்கிறிலிகோள், உங்கள்-கூவுதலால், என் - என், உயிர் - ப்ராணனை, கூவி - அபஹரித்து, கொடுப்பார்க்கும் - அவனுக்குக்கொடுப்பார்க்கும். இத்தனை-இத்தனை வ்யாபாரம். வேண்டுமோ-வேணுமோ.

(க)

ஆறு;—இக்குயில்களை நோக்கி "அவன் திருநாமங்களைச் சொல்லிக்கூவி யென்னை நோவுசெய்யாதே கொள்ளுங்கோள், இங்கத்தனைக்கு விஷயமுண்டோ" என்ன, இக்குயில்கள் "உன்னை நோவுசெய்கைக்காகவோ அவனை நாங்கள் கூவுகிறது" என்ன; அன்றாகில். அவனை வரக்கூவுகிறிலிகளோ, என்னை முடிக்கவிறே கூவுகிறது, என்னை முடிக்கும்போ தித்தனை பாரிப்பு வேணுமோவென்கிறார். (௧)

ஈடு-அவ;—சில குயிற்பேடைகளைக்குறித்து, என்னை முடிக்கைக் கித்தனைபாரிப்பு வேணுமோவென்கிறாள்.

(இன்னுயிர்ச்சேவலும்) நற்சீவனான சேவலும், பஹிர்சரப்ராணனைப்போலே கண்வட்டத்திலேவர்த்தியாநிற்கை. பிரிந்து படுகுலையடிக்கும் சேவலைப்போலன்றிக்கே, பேடைக்கு தாரகமாயிருக்கும் சேவலுமுண்டாகாதே?. போக்யமுமாய் தாரகமுமா யிருக்கும் சேவலுமுண்டாகாதே!. (நீரும்) சேவலுக்கின்னுயிரான நீரும். (கூவிக்கொண்டு) சேர்த்தியைக்காட்டி நலிகிறதுக்கு மேலே, பேச்சாலும் நலியவேணுமோ!. ஸம்ஶ்லேஷார்த்தமாக பரஸ்பரநாமக்ரஹணம் பண்ணிக்கொண்டு. (இங்கேத்தனை) இங்கத்தனைக்கு விஷயமுண்டோ! இந்தப்பிரிவாலே சென்றற்றது, உங்கள் பாரிப்புக்கு விஷயமுண்டோ!. (௧) "ஸம்ஹாரோ ஹ்யதிகம் வ்யாபதே" என்னுமாபோலே நலியாநின்றதாயிற்று.

அன்றிக்கே, (எத்தனை யென்னுயிர்நோவமிழற்றேல்மின்) பிரிவிலே தளர்ந்திருக்கிற வென்னுயிர்நோவ மிகவும்ப்ரணயகூஜிதத்தைப்பண்ணாதேகொள்ளுங்கோள். (உயிர்நோவ) என்கையாலே - உடல் பண்டேசென்றற்றதென்கை. ராமசரம்போலே உயிரிலேபுக்குவ்யாபரிக்கவும் வற்றாயிற்றிந்தத்வநி, (என்னுயிர்) என்கையாலே - இவற்றின்பேச்சுக் கேட்கத்தளிர்க்குமவனில் வ்யாவ்ருத்தி. மிழற்றுகையாவது-நிரம்பாமென்சொல்; ஸம்ஶ்லேஷதசையில் சொல்லத் தொடங்கித் தலைக்கட்டாதபேச்சுக்கள். (நோவமிழற்றேல்மின்) இப்பேச்சிவள் செவிப்படில் முடியுமென்றறிந்து, பேசாதிருக்கவேண்டாவோ!. ஸ்த்ரீவதமென்றறிந்தால் மீளவேண்டாவோ!. (குயிற்பேடைகாள்) விஜாதியர்செய்வதை நீங்களுஞ்செய்யவேணுமோ, சேவலைக்கொண்டு கார்யங்கொள்ளநினைத்தாலும், பேடையின்காலிலேறே பிடிப்பது!.

(௧) ரா-கிஷ்-௧-௧௦௦-

(என்னுயிர்க்கண்ணபிரானை) " எங்களைக் காதுகரைச்சொல்லுமாபோலே சொல்லுகிறதென்" என்றினவாகக்கொண்டு; எனக்கு தாரகனான க்ருஷ்ணனை வரக்கூவுகிறிலிகோள். தாரகங்கள், வ்யக்திதோறும் வ்யவஸ்திதங்களாயிறேயிருப்பது. திர்யக்குக்களுக்கு த்ருணம்; மநுஷ்யர்களுக்கு அந்நம், தேவர்களுக்கு அம்ருதம், இவளுக்கு க்ருஷ்ணன்; * எல்லாங்கண்ணனிறே (கண்ணபிரான்) பரார்த்தமாகத்தன்னை யோக்கிவைக்குமவன். (நீர்) அந்வயத்தில் ரஸமறியும் நீங்கள், வ்யதிரேகத்தில் நோவுமறியவேண்டாவோ!. (வரக்கூவுகிலீர்) நீங்களவன்முன்னேசென்று த்வநித்திகோளாகில், தானேசெல்லாமையை நினைத்துவாரானே; அது செய்கிறிலிகோள். என்னை நலியவேண்டுவன செய்திகோளித்தனை; நானுமவனும் சேருகைக்குவேண்டுவன செய்திலிகோள். அழிக்கவல்லவை சேர்க்கவும் வற்றென்றிருக்கிறாள். இவற்றின் வாயதுவானதொன்றிருக்கிறாள்.

(என்னுயிர்கூவிக் கோடேப்பார்க்கு மித்தனைவேண்டுமோ) என்னையுமவனையுஞ் சேர்க்கிறிகோளல்லாதபின்பு, இனியென்னை முடிக்கையாயிருந்ததிறே யுங்களுக்குக்கருத்து; அதுக்கிப்பாரிப்பெல்லாம்வேணுமோ?. பண்டேசென்றற்ற வென்னுயிரைவாங்கி அவன்கையிலேகொடுக்கையாகில்கருத்து, அதுக்கிதெல்லாம்வேணுமோ? நீங்கள்சேரவிருக்கையும், கலக்கையும், அந்யோந்யநாம க்ரஹணம் பண்ணுகையும், ப்ரணயகத்கதத்வநியும், இதெல்லாம்வேணுமோ?. நொந்தாரைஜீவிப்பிக்கையன்றோ அரிது?, முடிக்கையில் பணியுண்டோ?. (க)

இரண்டாம்பாட்டு.

இத்தனைவேண்டுவதன்றந்தோ வன்றிற்பேடைகாள் * எத்தனைநீரும்நுஞ்சேவலுங் கரைதேங்குதிர் * வித்தகன்கோவிந்தன்மெய்யனல்லனொருவர்கரும் * அத்தனையாமினியென்னுயிரவன்கையதே.

ப:—அநந்தரம், பசுக்களுக்கும் ரக்ஷகனாம்படி ஸுசீலனான க்ருஷ்ணனைமெய்யனாகநினைத்து, என்னை யவனுக்காக என்செய்யக்கடவிகிறிகோளென்று, சிலவன்றிற் பேடைகளைச் சொல்லுகிறாள்.

(இ - ள்.) அன்றிற்பேடைகாள் - பிரிவில் தரிக்கமாட்டாத ஸ்வபாவத்தையுடையவன்றிற்பேடைகாள், நீரும் - சேவலின்நினைவறிந்து பரி

மாறும், சேவலும் - சேவலுமாய்க்கொண்டு, எத்தனை - எத்தனைப்ரகாரம், கரைந்து-ஸம்ஶ்லேஷரஸத்தாலே யுள்ளழிந்து, ஏகுதிர்-ஶப்திக்கிறீர்கோள்- இத்தனை - இத்தனையபிப்ரவ்ருத்தி, வேண்டுவதன்று - வேண்டுவதன்று, அந்தோ! - என்னைநலியும்படி யுங்களைவரக்காட்டின, வித்தகன் - விஸ்மநீய சேஷ்டிதனுய், கோவிந்தன் - பசுக்களையும் ரக்ஷிக்குமவனென்கிற ஸௌஶீல்யத்தைப்ரகாசிப்பித்துலோகத்தைவசீகரிக்கும் க்ருஷ்ணனுனவன், ஒருவர்க்கும் - நாட்டாரோடு நல்லவர்களோடுவாசியற வொருவர்க்கும், மெய்யனல்லன்-மெய்பரிமாறுவானொருவனல்லன், ஆனபின்பு, அவன்நினைவின்படி யுங்கள் ப்ரவ்ருத்தியுண்டாகையாலே, இனி - இனி, என்னுயிர் - என்ப்ராணனானது, அவன்கையதேயாமத்தனை - அவன்கையதேயாமத்தனை. (உ)

ஆறு:—(இத்தனை) அன்றிற்பேடைகாள், "நீரும் நுஞ்சேவலும் கரைந்தேங்குதிர்; என்னுயிர்கூவிக்கொடுப்பார்க்கு மித்தனை வேண்டுவதில்லை" என்றுசொல்ல; அவையும், "உன்னோடுள்ளகலவியே தாரகமாக விருக்கிறவனொரு க்ஷணமுன்னைப்பிரியுமளவில் அவனையிங்ஙனே கொடுமைசொல்லவேணுமோ, தானேவருகிறுனிறே" என்ன; அவனங்ஙனே ப்ரணயஸ்வபாவனைப்போலே யிருக்குமத்தனைகாண், அவனொருவர்க்கும் மெய்யாக ஸ்நேஹியல்லன், ஆனபின்பு, அவன்வருகையென்றொரு பொருளுண்டோ, இனியென்னுயிரானது முடிந்ததிறே யென்கிறுள். (உ)

ஈடு; அவ;—சிலவன்றிற்பேடைகளைக்குறித்து, உங்கள்சேவல்களும் நீங்களுமாய் ப்ரணயகூஜிதங்களாலே யென்னை நலிகிறதென்னென்கிறுள்.

(இத்தனைவேண்டுவதன்று) என்னைமுடிக்கைக் கித்தனைவேண்டுவதில்லை. குயில்களைப்பார்த்து, "இத்தனைவேண்டுமோ!" என்றுநிற்கச்செய்தே, இடையிலே அன்றிலினுடைய த்வநிகேளிய, அப்பாசுரமே யிவற்றுக்குஞ் சொல்லவேண்டும்படியிறே பிறந்ததசை· மஹாராஜரும் வாலியும் பொராநிற்க நடுவே பொளியம்பாகப் பெருமாள்விட்டாப்போலே; குயில்களு மிவளுமாய். "கூவாதேகொள்ளுங்கோள்" என்பது, அவையுயரக்கூவுவது, ஆகாநிற்கச்செய்தே, நடுவே அன்றிலானது, செவிவழியே நெருப்பையுருக்கிவார்த்தாப்போலே த்வநிக்க, புரிந்துபார்த்து, "இவையே யமையாதோ! நீங்களும் வேணுமோ!" என்கிறுள்·

இவளிப்படி சொல்லச்செய்தேயும் த்வநிக்கத்தொடங்கிற்று - (அந்தோ) "சரணம்" என்றவாயை யம்பாலே நிறைப்பாரைப்போலே, உங்கள்படி யிருந்தபடியென! ஐயோ! என்கிறாள். (அன்றிற்பேடைகாள்) குயிற்பேடைகளிற்காட்டி லுங்களுக்கொரு வாசிகண்டிலோம்; உங்கள்சேவலிற்காட்டி லொருவாசியுங் கண்டிலோம். நலிகைக்கு, ஸஜாதியரிலும் விஜாதியரிலும் அவ்வருகாயிருந்திகோள். "நாங்களென்செய்தோம்" என்ன (எத்தனை) மிகவும். (நீரும் நுஞ்சேவலும்) சேவலின்கருத்தறிந்து நடத்துகிறநீரும், உங்கள்கருத்தறிந்து பரிமாறுகிறவுங்கள்சேவலும் (க) "அஜ்ஞாதஹிவத்த்ஷ்-அந்தர்ஜாதமபிவ்யக்தம்" என்னுமாபோலே, பேடையின்கருத்தறிந்து பரிமாறுநின்றதாயிற்றுச்சேவல். (கரைந்தேங்குதிர்) பிறரை நலிகைக்காகத் தங்காமையழித்துக் கொள்வாருண்டாகாதே!. ப்ரணயதாரையில் தானழிந்தனமே தோற்றப் பரிமாறுநின்றன. இருவர் கூடக்கலக்கும் ஸமயமோவிது!. கலந்தாற்றான், உங்கள் தனசதோற்ற வாய்விடவேணுமோ!.

(வித்தகனித்யாதி) "அவனொருக்ஷணகாலம் தாழ்க்குமளவில் எங்களையிட்டு அவன் நலிவிக்கிறதைச் சொல்லவேணுமோ" என்ன; அவன்படிகளையுட்புக்க வென்பக்கலிலேகேளுங்கோள் - (வித்தகன்) விஸ்மயநீயன்; இப்போது. அநுகூலர்க்கு * அரியவித்தகன். (கோவிந்தன்) ஸர்வரக்ஷகன் இக்கால் - ஸர்வரக்ஷகரைப்போலேயிருந்து பாதகனுமவன். ரக்ஷகனென்று பற்றப்போகாது, பாதகனென்று விடப்போகாது. (மெய்யனல்லனொருவர்க்கும்) "பரமப்ரணயி, ஸர்வரக்ஷகன்" என்றுநினைத்து அவன்கார்யம செய்யப்போந்த வுங்களுக்கும் பொய்பேசிப்பது.

(உ) "ஸாவிரோதிநா ஹிஹாஷ்டெ-ராமோத்விர்நாபிபாஷதே" (ஙு) "நதத்ஜயம்-நதயஜயம்" (ச) "வனதஃகம்ஶஏ-எதத்வ்ரதம்மம" என்னும் ராமாவதாரம்போலேயன்றே நீங்கள் நினைத்திருக்கிறது; பகலேயிராவாக்குவது, "ஆயுதமெடேன்" என்றாயுதமெடுப்பதாகையிறே யிவ்வவதாரத்துக்கு க்ருத்யம். "ராமாவதாரத்தில் மெய்யும், க்ருஷ்ணாவதாரத்தில் பொய்யுமிறே ஆஸ்ரிதர்க்

(க) ரா-பா-எஎ உஎ. (உ) ரா-அயோ-கஅ-ஙு-

(ஙு) ரா-யு-கஅ-ஙு- (ச) ரா-யு-கஅ-ஙுஉ-

குத்தஞ்சம்; அவன்பொய்யனுகிலென், மெய்யனுகிலென், இருந்த படியுகக்குமத்தனையன்றோநாங்கள் '' என்றுதொடங்கின கார்யத்தி லேமுதிராநின்றன.

(அத்தனையாமினி) இனியத்தனையாகாதே!. இவற்றிலொருப் பாடிருந்தபடியால், அவன்நினைவேதலைக் கட்டிவிட்டதாகாதே! என் கிறுள். என்ப்ராணன் அவன் கைப்பட்டபின்பு, என்னுடைய ரக்ஷ ணத்துக்கு உங்கள்கால் பிடிக்கவேண்டாவே. (௨)

மூன்றும்பாட்டு.

அவன்கையதே யெனதாருயிரன்றிற்பேடைகாள் * எவஞ்சொ ல்லிநீர்குடைந்தாடுதிர் புடைசூழவே * தவஞ்செய்திலாவினைபா ட்டியேனுயிரிங்குண்டோ * எவஞ்சொல்லிநிற்றும்நும்மேங்கு கூக் குரல்கேட்டுமே. (௩)

ப:—அநந்தரம், அவனுடைய ஸௌசீல்யாதிசயத்தாலே ஆக்ருஷ் டப்ராணையாயிருக்கிற நான் உங்கள் ஶப்தத்தைக்கேட்டும் எத்தைச் சொல்லி தரிப்பேனென்று, பின்னையும் அவ்வன்றிற்பேடைகளைக் குறி த்துச் சொல்லுகிறுள்.

(இ - ள்.) அன்றிற்பேடைகாள் - அன்றிற்பேடைகாள், அவன்கை யதே - அந்த ஸௌஶீலனை கோவிந்தன்கையதே. எனதாருயிர் என்னு டைய ப்ராணனுனது, நீர் - நீங்கள், எவம்சொல்லி - எத்தனை உக்திவி சேஷங்களைப்பண்ணி, குடைந்து-ஒன்றுக்கொன்றுள்ளே யாம்படி ஸம் ஶ்லேஷித்து, புடைசூழவே - என்னுடைய பரிஸரத்திலே, ஆடுதிர் - ஸஞ்சரிக்கிறிகோள், தவம் - அவனைப்போலே பிரிவுக்காறியிருக்கும் பாக்யத்தை, செய்திலா - பண்ணுதே, வினையாட்டியேன்-போலிகளன் டுபடும்படியான பாபத்தைபண்ணின வென்னுடைய, உயிர் - ப்ராண ன் அங்கே போனபடியாலே, இங்கு - இங்கு; உண்டோ - உண்டோ நும்-உங்களுடைய, ஏங்கு-ஸம்ஶ்லேஷரீதிலமான; கூக்குரல்-ஶப்தங் களை, கேட்டும் - கேட்டும், எவம்-எத்தை, சொல்லி-சொல்லி, நிற்றும்- நிற்பது. (௩)

ஆறு:—(அவன்கையதே) எம்பெருமானோடு கலந்து பரிமாறு கைக்கு பாக்யஹீனையானவென்னுயிர், நும்மேங்குகூக்குரல்கேட்டு

மயங்கிக்கிடக்கச்செய்தே, அதின்மேலே யேதேனுஞ்சொல்லிக்கொண்டு என்குடைந்து ஆடுகிறீகோள் என்னருகே நின்று என்கிறாள்.

ஈடு; அவ:—அவ்வன்றிற்பேடைகள் தம்மையே, திரியவும், தன் செயலறுதியாலே யிரக்கிறாள்.

(அவன்கையதேயெனதாருயிர்) என் ப்ராணன், அவன்கையதே. மிதுநமானால் ப்ராணன்கள் மாறாடியன்றோவிருப்பது?, உங்களுக்கிது அவ்யுத்பந்நமோ?. (அன்றிற்பேடைகாள்) அந்வயரஸமறிவார், பிரிந்தார் படுவதுமறியவேண்டாவோ?. (எவஞ்சொல்லி) ஏதேனும் சிலவற்றைச்சொல்லி. அவைசொல்லுகிற பாசுரஞ்சொல்லில் தன்வாய் வேம்போலேகாணும்!. (நீர்குடைந்து) ஒன்றிலேயொன்றவகாஹித்து. (ஆடுதிர்) பரிமாறாநின்றீகோள். (புடைசூழவே) சுற்றிலே ஸஞ்சரியாநின்றீகோள் ; அடைமதிட் படுத்துவார் சுற்றிலேவிட்டுக் கொண்டிருக்குமாபோலே. செவியைப் புதைத்துப் பிழைப்பேனோ!, கண்ணைப்புதைத்துப் பிழைப்பேனோ!. பெருமாளும் பரிகரமும் லங்கையை யழிக்கைக்குச் சூழப்போந்தாப்போலே காணும் இவளுக்கிருக்கிறது. பாவியேன்!, உங்கள்பாரிப்புக்கு இங்கு விஷயமுண்டாகப் பெற்றதில்லை;

(தவஞ்செய்திலா) உயிரை யிங்கேவைத்து உங்களுக்குபகரிக்க பாக்யம்பண்ணிற்றிலேன். "அவனைப்போலே பிரிவுக்குச் சிளையாதபடி பாக்யத்தைப் பண்ணப்பெற்றிலேன்" என்று பிள்ளான் பணிக்கும். (உயிரிங்குண்டோ!) வல்லடிக்காரர்க்கு விளக்கேற்றிக் காட்டுமாபோலேகாணும், "இங்குண்டோ!" என்று காட்டுகிறபடி. (எவஞ்சொல்லிநிற்றும்) எத்தைச் சொல்லி தரிப்பது. (நும்மித்யாதி) ப்ரணயபரவசமான உங்களுடைய த்வநியைக்கேட்டும், பிரிவுக்கு தரித்திருக்கிலும், உங்கள் த்வநிக்குப் பிழைக்கவல்லேனோ!. உங்கள் த்வநி, கேட்டாரை முடிக்குமதன்றோ!. உங்கள் செவியைப்புதைத்தோ நீங்கள் கூப்பிடுகிறது?. (௧) "நிலநம்வசூவாகாநாம் நிஶாஸு ஸஹவாஸிநாம் । பஶ்யநீகவிஶாலாக்ஷீ ஶயமேஷா ஸ விஷ்ணுக்ஷி-நிஸ்வநம்சக்ரவாகாநாம் நிஶம்யஸஹசாரிணாம் । புண்டரீக விஶாலாக்ஷீ கதமேஷா பவிஷ்யதி."

(௩)

(௧) ரா-கி-௩௦-௧௦-

நான்காம்பாட்டு.

கூக்குரல்கேட்டும்நங்கண்ணன் மாயன்வெளிப்படான்* மேற்
கிளைக்கொள்ளேன் மின்நீரும்நுஞ்சேவலுங்கோழிகாள் * வாக்கு
மனமுங்கருமமும் நமக்காங்கதே * ஆக்கையுமாவியுமந்தரநின்றுழ
லுமே. (ச)

ப:—அநந்தரம், ஆஸ்சர்யகுணசேஷ்டிதனான க்ருஷ்ணன் வருகி
றிலன், நீங்களெனக்கு பாதகமாம்படி கூப்பிடாதே கொள்ளுங்கோ
ளென்று, சிலமயிற்பேடைகளைக் குறித்துச் சொல்லுகிறான்.

(இ - ள்.) கோழிகாள் - மயில்காள், கூக்குரல் - நீங்களொன்றுக்
கொன்றழைக்கிறகுரல், கேட்டும் - அவனிருந்தவிடத்திலும் கேட்கும்
படியாயிருக்கச்செய்தேயும், நம் - எல்லாரும் "நம்முடையவன்" என்
னும்படி பவ்யனாய், மாயன் - இட்டினாரை யாஸ்சர்யகுண சேஷ்டிதங்
களாலே யீடுபடுத்தும், கண்ணன் - க்ருஷ்ணன், வெளிப்படான் - வரு
கிறிலன், நும் - உங்கள், சேவலும் - சேவலும், நீரும் - நீருமாகச்சேர்ந்
துகொண்டு, மேல் - மேலே, கிளைக்கொள்ளேன்மின் - திரளாகக்கூப்
பிடாதே கொள்ளுங்கோள், நமக்கு - எங்களுக்கு, வாக்கும் மனமும்
கருமமும் - வாங்மநஃகாயங்கள், ஆங்கதே - அவன்பக்கலிலேயாயிற்று;
ஆக்கையும் - சரீரமும், ஆவியும் : ப்ராணனும், அந்தரம் நின்று - நடுவே,
உழலுமே - அலமருகிறவித்தனை.

கோழி - மயில், கிளைத்தல் - சப்தித்தல். (ச)

ஆறு;—(கூக்குரல்) கோழிகாள், நீரும் நுஞ்சேவலும் மேன்
மேலுமவனை யென்செய்யக் கூவுகிறிகளென்ன; "நாங்களவனைவரக்
கூவுகிறோம்" என்று அவைசொல்ல; அவன்வருகைக்குக் கூவுகிறிக
ளாகில் அவன் வாராதொழிகிறதென்?, ஆதலால், அவன்வரக்கூவு
கிறீரல்லீர், என்னை முடிக்கைக்காகக் கூவுகிறீர்தாமே?, முன்னமே
யென்னுடைய ஸர்வகரணங்களும் முடிந்தன, இனி யென்செய்ய
வருந்துகிறீர்கள்? என்ன; கரணங்கள் முடிந்தனவாகி லுன்னுடைய
பேச்சு மிச்சேஷ்டிதங்களும் கூடுகிறபடியெங்ஙனேயென்னில்; முடி
யச்செய்தே, என்னுடைய வாக்கையுமாவியும் நடுவேநின்று பழைய
வ்யஸநவாஸநையாலே யுழைக்கிறனவத்தனை யென்கிறாள். (ச)

ஈடு; அவ:—சிலமயில்களைக்குறித்து, நீங்களுச்சமாகக்கூவி நலி
யாநின்றீகோளென்கிறாள்.

(கூக்குரல்கேட்டும்) நீங்கள் கூவுகிற த்வநியைக்கேட்டு வைத்தும். இவற்றின் த்வநி செல்லாதவிடமில்லை யென்றிருக்கிறாள். (நங்கண்ணன்) வடயக்ஷாத்ரஸித்திபோலேகிடீர் பவ்யமென்னுமிது. (மாயன்) ஆஸ்சர்யசீலன்; கலக்கும் ஸமயத்தில் மெய்போலே பரிமாற வல்லவன். (வெளிப்படான்) "இவள் பிழையாள்" என்று தோற்றுகிறிலன்; (க) "தாஸாரோவிரஸம்ருக-தாஸாமாவிரபூத்" என்னுமவன்கிடீர். ருஷியும், "ஆவிரஸம்ருக ஆவிரபூத்" என்றான்; இவளும், "வெளிப்படான்" என்றாள்.

(மேல்கிளைக் கொள்ளேல்மின்) மேலானகிளை-உச்சமான த்வநி ஜாத்யுசிதமாய் ப்ரணயவ்ருத்தமான உச்சஸப்தத்தைப்பண்ணிக் கொள்ளுங்கோள். இவளீடுபடப்பட, ஒருதானமெழ வைத்துக் கூவாநின்றனவாய்த்து. (நீருஞ்சேவலும்) ஒன்று தொடங்கின கார்யத்தை ஸஹசாமுந்தொடங்கிக் குறையுங்கூட முடியாநின்றது. (கோழிகாள்) ஸ்த்ரீவதம்பண்ணுகைக் கொருஜாதியாக வொருப்படவேணுமோ. கோழியென்கிறது-மயிலை. "'நீர் நலியாதே கொள்ளுங்கோள்' என்னுமளவும் பார்த்தன்றே நாங்களிருக்கிறது, ஸர்வசரணங்களையு மபஹரிக்கவந்த நாங்கள் தவிருவோமோ, தொடங்கினகார்யம் தலைக்கட்டவேணுமே யெங்களுக்கு" என்று கருத்தாக, அதுக்காகில் பின்னை அங்கே போங்கோளென்கிறாள்.

(வாக்கும் மனமும் கருமமும் நமக்காங்கதே) என்னுடைய ஸர்வகரணங்களு மவன்பக்கலின. "அங்கேபோயிவை த்வநிக்க அவனுக்குத் தரிப்பரிதாய்வந்து முகங்காட்டும்" என்னும் நினைவாலே சொல்லுகிறாள். அங்கேபாகி விப்ரபச்சும் சேஷ்டிதங்களும் கூடினபடியென்னென்ன (ஆக்கையுமாவியு மந்தரநின்றுழலுமே) வ்யஸநவாஸனையாலே, தேஹமும் ப்ராணனும் நடுவே நின்று க்லேஸப்படுகிறவித்தனை. பிடித்துவிட்டகொம்புபோலே வாஸனையேயுள்ளது. நோவுபடவேண்டுவதுண்டு, நலிகைக்காஸ்ரயமில்லை. (௪)

ஐந்தாம் பாட்டு.

அந்தரநின்றுழல்கின்ற யானுடைப்பூவைகாள்* நுந்திறத்தேது மிடையில்லை குழறேன்மினோ * இந்திரஞாலங்கள்காட்டி யிவ்வேழுலகுங்கொண்ட * நந்திருமார்வன்நம் மாவியுண்ணநன்கெண்ணினான். (ரு)

(ந) பா ௬-௪0-ரு-௨-

ப:—அநந்தரம்,க்ருத்ரிமசேஷ்டிதங்களைக்காட்டி ஸர்வலோகத்தையும் பிறர்க்காகாதபடி பண்ணுமவன், உள்ளாளானவுங்களையிட்டு நம்முடைய ப்ராணாபஹாரம்பண்ணுகைக்கு நன்றாக வெண்ணினானென்று தன்னுடைய பூவைகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

(இ - ள்.) நலிகைக்கு விஷயமின்றிக்கே யிருக்கச்செய்தே, அந்தரநின்று - நடுவே, உழல்கின்ற - நிஷ்ப்ரயோஜநமாகவலமருகிற, யானுடைப்பூவைகாள் - நான் என்னுடையவை என்றபிமானித்த பூவைகாள், நுந்திறத்து-உங்களிடையாட்டத்தில், என்னை நலிகைக்கு, ஏதுமிடையில்லை ஓரவகாசமில்லை. குழறேன்மின் - நீங்கள், அநக்ஷரரஸமாம்படி சப்தியாதே கொள்ளுங்கோள்; இந்திரஞாலங்கள்காட்டி-இந்த்ரஜாலங்கள்போலே, மெய்யென்று - ப்ரமிக்கும்படியாக குணவிக்ரஹ சேஷ்டிதங்களைக்காட்டி, இ-இந்த, ஏழுலகும்-ஸப்தலோகத்தையும், கொண்ட - பாரிமாநத்தையும் ஸ்வாமிமாநத்தையு மறுத்துத் தனக்கேயாம்படி பண்ணிக்கொண்டு, நந்திருமார்வன் - நமக்கு, தன் திருமார்விலேயிருக்கிற பிராட்டிபக்கல் ப்ரணயித்வத்தைக்காட்டி யகப்படுத்தினவன், நம் - நம்முடைய, ஆவி - ப்ராணனை, உண்ண - க்ரஸித்துக்கொள்ளுகைக்கு, நன்கு - நன்றாக, எண்ணினான் - நிரூபித்தான். (௫)

ஆறு;—(அந்தரநின்று) உங்களுக்கு நானென்ன அநிஷ்டம் பண்ணினேன்; "நீங்கள் நடுவேநின்று அவன் திருநாமங்களைச் சொல்லி யென்னைபாதியாதே கொள்ளுங்கோள்" என்று பூவைகளை நோக்கிச்சொல்லி, பண்டிந்தலோகத்தைத் தனக்காக்கிக்கொள்ளுகைக்குச் சிலபொய்செய்தாப்போலே - என்னோடேகலந்து பரிமாறுகிறானாகத் தோற்றும்படி சிலபொய்களைச் செய்தகன்றுபோனவித்து; என்னை முடிக்கைக்கு நல்விரகுபார்த்தான், என்னசதுரனோ! என்று தன்னிலேநொந்து சொல்லுகிறாள். (௫)

ஈடு; அவ:—தன்னினவாயிருந்தாலிகிற பூவைகளைக்குறித்து, அவன்றான் என்னைமுடிக்கைக்கு நல்விரகுபார்த்தான், இனியுங்களுக்கிங்குவிஷயமில்லை யென்கிறாள்.

(அந்தரநின்றுழல்கின்ற) உங்களுக்கிங்குநலிய விஷயமின்றிக்கேயிருக்க, நடுவேநின்று வ்யர்த்தமே க்லேசப்படுகிறீர்கோளித்தனை (யானுடைப்பூவைகாள்) என்னுடைப்பூவைகாள். ஸர்வஸாதாரணராயிருப்பார் செய்பவற்றை, சிலர்க்கு ஸ்வம்மாயிருப்பார் செய்யக்

கடவதோ?. நான் எனக்கு என்னவளையுமாகாதே பாதிக்கைக்கு!; அவனும் என்னுடையவனாகையிறே நலிந்தது!.

(நுந்திறத்தேதுமிடையில்லை) உங்களிடையாட்டத்தில், என்னை நலிகைக்கோரவகாசமில்லை; உங்கள்பாரிப்புக்கென்பக்கலோரவகாசமில்லையென்றுமாம். (குழறேல்மின்) அநக்ஷரஸமானபேச்சைக் காட்டி முடியாதேகொள்ளுங்கோள். அவன்தானதிகரித்தகார்யத்தில் நெகிழநின்றானிலன்றோ, நீங்களிப்படி முதிரநிற்கவேண்டுவது!; அதுக்கு உங்களுக்கவகாசம்வைத்தானோ!.

(இந்திரஞாலங்கள்காட்டி) கண்டார்க்கு விடவொண்ணாதவடிவையும். சீலத்தையும், சேஷ்டிதத்தையுங்காட்டி. இவைநிலைநில்லாமையாலே "பொய்கள்" என்கிறாள். இந்திரஞாலமென்றும், பொய்யென்றும், பர்யாயம். (ஏழுலகுங்கொண்ட) பிறருடைய வஸ்துவை யபஹரிக்கப்புக்கால், அவர்களுக்கொன்றும் சேஷியாதபடி யபஹரிக்குமவன்.

(நந்திருமார்வன்) ப்ரணயித்வத்தால்வந்த ப்ரஸித்தியையெனக்குக்காட்டி, பிராட்டியோடே பழகிற்றும், ப்ரணயியாயன்று; அத்தைக்காட்டிக்கண்டாரை யகப்படுத்திக்கொள்ளுகைக்காக. சில பொய்களைக்காட்டி பூமியைக்கொண்டாப்போலே, கலந்து பரிமாறுகிறானென்று தோற்றும்படி சிலபொய்களைச்செய்து விஸ்லேஷிக்கை, என்னைமுடிக்கைக்கு உபாயமென்றுமாம். (நம்மாவியுண்ண நன்கெண்ணினான்) நம்மைமுடிக்கைக்கு நல்விரகுபார்த்தான். உங்களுக்கிங்கவகாசமில்லை; ஸர்வஶக்தியுத்யோகித்தகார்யத்திலே குறைகிடப்பதாய், அதிலே நீங்களும் ஸஹகரிக்கிறீர்கோளோ!.

"நம்மைமுடிக்கப் பார்த்தபார்வை அழகிதாகப் பார்த்தான்" என்று தன்னிலே நொந்துசொல்லுகிறாளென்றுமாம். (௫)

ஆறாம்பாட்டு.

நன்கெண்ணி நான்வளர்த்த சிறுகிளிப்பைதலே * இன்குரல்
நீமிழற்றேலென்னாருயிர்க் காகுத்தன் * நின்செய்யவா யொக்கும்
வாயன் கண்ணன் கைகாலினன் * நின்பசுஞ்சாமநிறத்தன் கூட்
டுண்டுநீங்கினான்.

ப:—அநந்தரம், தர்ஶநீயமான அவயவசோபையையுடைய சக்ரவர்த்தித்திருமகன் கலந்துபிரிந்தான், அவனுக்கு ஸ்மாரகமான வடிவோடேயிருந்துஉன்னுடைய ம்ருதுபாஷணத்தாலே நலியாதேகொள்ளென்று, தான்வளர்த்ததொரு கிளியைச் சொல்லுகிறாள்.

(இ - ள்.) என் ஆருயிர்-எனக்கு வ்யதிரேகத்திலே தரிக்கவரிதான ப்ராணனும், காகுத்தன்-(க) "மற்றிலேன் தஞ்சமாகவே" என்னும்படியான சக்ரவர்த்தித்திருமகன், நின் - உன்னுடைய, செய்ய - சிவந்த, வாய் - வாயை, ஒக்கும் - ஒக்கும், வாயன் - வாயையுடையனும், கண்ணன் - அத்தோடொக்கும் கண்ணையுடையனும், கைகாலினன் - அத்தோடொக்கும் கைகாலையுடையனும், நின் - உன்னுடைய, பசும் - பசுமையழியாத. சாமம் - ஶ்யாமநிறம்போலேயிருக்கிற, நிறத்தன் - நிறத்தையுடையவனும்கொண்டு, கூட்டுண்டு-என்னோடேஸம்ஶ்லேஷித்து நீங்கினான் - பிரிந்தான்; நன்கு - எனக்காபத்துக்குதவு வுதியென்கிற நன்மையை. எண்ணி-எண்ணி, நான்-நான், வளர்த்த-வளர்த்துப்போந்த, சிறு - சிறியவடிவையுடைத்தாய், பைதல் - முக்தமான, கிளியே-கிளியே, இன்-இனிமையாலே என்னையீடுபடுத்துகிற, குரல் - குரலை, நீ-அவன்வடிவுக்கு ஸ்மாரகமாய் நலிகிறநீ, மிழற்றேல் - அர்த்தோக்தி ஸரஸமாகப்பண்ணாதே கொள். (௬)

ஆறு;—(நன்கெண்ணி) அவன்பிரிந்ததசையில் அவன்திருநாமங்களையும் சொல்லாமைக்கன்றோ வுன்னைநான்வளர்த்தது?, ஆனபின்பு, அவன்திருவடிவுபோலேயிருக்குமுன்வடிவைக்காட்டி, அதின்மேலே அவன்திருநாமங்களையுஞ்சொல்லி யென்னை நோவுசெய்யாதேகொள்ளாயென்று தன்கிளியைக்குறித்துச் சொல்லுகிறாள். (௬)

ஈடு; அவ:—தன்தசையையறியாதே திருநாமத்தைச்சொல்லுகிறகிளிப் பிள்ளையைக்குறித்து, "எனக்கஸஹ்யமானதசையிலே சொல்லவோ வுன்னைவளர்த்தது" என்று அத்தைநிவர்த்திப்பிக்கிறாள்.

(நன்கெண்ணி) திருநாமம், ஸாத்மிக்குந்தசையறிந்து சொல்லவும் அஸஹ்யமானதசையில் தவிரவுமன்றோ வுன்னைவளர்த்தது?. (நான்வளர்த்த) ஏகபுத்ரைகளைப்போலே யாய்த்துவளர்த்தது நாமொன்றையாதரிக்கவமையுமாகாதே அந்யதாவாகைக்கு!; அவனும் கிளிபோபாதிபவ்யனாயிறேயிருப்பது; (சிறுகிளிப்பைதலே)

சிறுமை - பருவம். பைதல் - வயஸ்ஸுக்குத்தக்க பாகமின்றிக் கேயிருக்கை, உன்பசற்றனமிறே நலிகைக்கடி, (இன்குரல்) "கூரிய வேல்" என்னும்மாபோலே. (நீமிழற்றேல்) நிரம்பாமென்சொல்லா லென்னைமுடியாதேகொள்; மாத்ருவதத்திலேயும் ப்ரவர்த்திப்பா ருண்டோ!

(என்னுருயிர்க்காகுத்தன்) வ்யதிரேகத்தில் தரிக்கையரிதாம் படியிறே கிட்டினபோது பரிமாறிற்று. (க)" தயரதற்கு மகன்றன் னையன்றி மற்றிலேன்தஞ்சமாக" என்றிறே இவரிருப்பது. (நின் செய்யவாயொக்கும்வாயன்) உன்னுடையவர்ப்போலே யிருக்கும் வாயையுடையவன். உபமானத்தைச் சொல்லிச் சேர்த்துவிடு மித்த னையொழிய, உபமேயந்தன்னைப் பேசமுடியாது. (கண்ணன்கைகளா லின்) உன்னைப்போலே சிவந்தகண்ணையும், கையையும், திருவடி களையுமுடையவன்.

(நின்பசுஞ்சாமநிறத்தன்) உன்னுடைய குளிர்ந்த ஸ்யாமமான நிறத்தையுடையவன். (பசுஞ்சாமம்) ஸ்யாமமாய் எரித்திருக்கையன் றிக்கே, குளிர்ந்திருக்கை; ஒருடம்பிலே இத்தனை வகைதேடி வைக்க லாமோ!. (கூட்டுண்டுநீங்கினான்) கலந்து என்ப்ரக்ருதியையறிந்து வைத்துப்பிரிந்தான், அவன்கூடவிருந்தாலன்றோ உன்படிகளறுகூலி மாயிருப்பது? தனியிருப்பில் நலிவார் ராவணாதிகளன்றோ?, அநு கூலரும் நலிவரோ? (௬)

ஏழாம்பாட்டு.

கூட்டுண்டுநீங்கிய கோலத்தாமரைக் கண்செவ்வாய்* வாட்ட மிலென்கருமாணிக்கங்கண்ணன் மாயன்போல் * கோட்டியவில் லோடு மின்னுமேகக்குழாங்கள்காள் * காட்டேன்மின்நும்முரு வென்னுயிர்க்கதுகாலனே. (௭)

ப:—அநந்தரம், தன்னையீடுபடுத்தின க்ருஷ்ணன்வடிவுக்குப் போலியான மேகஸமூஹத்தைக்கண்டு, என்னைமுடிக்கைக்கு ஹேதுவான வுங்களுடையரூபத்தைக்காட்டாதே கொள்ளுங்கோளென்கிறாள்.

(இ - ள்.) கூட்டுண்டு-என்னோடேக்ரஸமாம்படி ஸம்ஶ்லேஷித்து நீங்கிய- பிரிந்தவளவில், கோலம் - தர்ஶநீயமான, தாமரை-தாமரை

போலேயிருக்கிற, கண் - கண்ணையும். செ - சிவந்த, வாய் - அதரத்தை யுமுடையனாய், வாட்டமிலென் கருமாணிக்கம்-இடைவிடாமலெனக்கு ஸ்ம்ருதிவிஷயமான நீலரத்நம்போலேயிருக்கிற வடிவையுடையனாய்க் கொண்டு, எனக்கு கண்ணன்-பவ்யனான க்ருஷ்ணனாகிற, மாயன்போல் ஆஶ்சர்யபூதனைப்போலேயிருக்கிற, கோட்டிய - வளைக்கப்பட்ட, வில்லொடு - வில்லோடேகூட, மின்னும் - மின்னுகிற, மேகக்குழாங்கள் காள் - மேகஸமூஹங்காள், என்-என்னுடைய, உயிர்க்கு-ப்ராணனுக்கு அது - அது, காலன் - ம்ருத்யுரூபமாயிருக்கும், நும்முரு - உங்கள்வடி வை, காட்டேல்மின் - காட்டாதேகொள்ளுங்கோள். (எ)

ஆறு;—(கூட்டுண்டு) என்னோடே கூட்டுண்டுநீங்கி, அதிலொருவாட்டமின்றியே ஆஶ்சர்யமான அழகையுடையவனாய், சார்ங்காதிதிவ்யாயுதோபேதனாய், ஹாரகேயூராதி திவ்யபூஷண பூஷிதனாயிருந்த கண்ணனைப் போலேயிருந்த, கோட்டியவில்லொடு மின்னு மேகக்குழாங்கள்காள், இந்த வ்யஸநத்தின்மேலே, காட்டேல்மின் நும்முரு, என்னுயிர்க்கதுகாலன் என்கிறாள். (எ)

ஈடு; அவ:-அவன்வடிவுக்குப்போலியான மேகமாலையைக்கண்டு, உங்கள்வடிவைக்காட்டி யென்னை முடியாதேகொள்ளுங் கோளென்கிறாள்.

(கூட்டுண்டித்யாதி) "ஏகதத்த்வம்" என்னும்படிகலந்து பிரிந்தபின்பு அவனுடைய அவயவசோபையிருந்தபடி யென்னுதல்; இவளோட்டைக்கலவியால்வந்த சோபையென்னுதல்.(கோலத்தாமரைக் கண்செவ்வாய்) அழகியதாமரைபோலேயிருக்கிற திருக்கண்களையும், சிவந்தவதரத்தையுமுடையனாய்;

(வாட்டமித்யாதி) கலந்தபோதைச்செவ்வி, விரஹத்திலும் தலைச்சாவிவெட்டபோகிறதில்லைகாணும்?. இத்தலை ஐயவெழுந்தறை யாக்கினபின்பு இரட்டித்தபடி. (என்கருமாணிக்கம்) பிரிந்தபின்பும் மறக்கவொண்ணாதபடி நலிகிற, நீலரத்நம்போலேயிருக்கிற திருநிறத்தையுடையனாய். (க) "தெநவஷ்ம்ஸாஜஸேகாநு-நைவதம்ஸாந் நமஸாகாந்" என்று அவனிருக்க, அரைக்ஷணந் தாழ்த்தானென்று இவ்வார்த்தையைச் சொல்லுகிறாளிறே!. (கண்ணன்மாயன்போல்) ஆஶ்சர்யபூதனை க்ருஷ்ணனைப்போலே; கலந்தபோது காலைக்கையைப்பிடித்துப் பரிமாறி பவ்யனாயிருந்தபடி.

(க) ரா-ஸு-ரு-கூ-கஉ.

(கோட்டியவில்லித்யாதி) வளைத்தவில்லோடேகூடி மின்னுகின்றுள்ள மேகஸமூஹங்காள். கௌஸ்துபம் திருமேனிக்கு ப்ரகாஸகமாமாபோலே யிராநின்றதுமின். (காட்டேன்மின்நும்முரு) ம்ருத்யுஸத்ருஸமான வுங்கள்வடிவைக்காட்டாதே கொள்ளுங்கோள். அவ்வடிவைக்கொண்டு அகலவிருந்தவனோடு உங்களோடு வாசியில்லையாயிருந்ததீ! " அதுவென் " என்னில் (என்னுயிர்க்கதுகாலனே) விரஹம் தின்றுபண்டேதற்பற்ற வென்ப்ராணனுக்கு, அது ம்ருத்யுவாகாநின்றது. (குழாங்கள்காள்காட்டேல் மின்நும்முரு) என்றுவைத்து, (அது) என்கிறது. காணமாட்டாமை, முகத்தைமாறவைத்துச் சொல்லுகிறாள். (எ)

எட்டாம்பாட்டு.

உயிர்க்கது காலனென்றும்மை நானிரந்தேற்கு * நீர் குயிற்பைதல்காள் கண்ணன்நாமமே குழறிக்கொன்றீர் * தயிர்ப்பழஞ் சோற்றோடு பாலடிசிலுந்தந்து * சொற்பயிற்றியநல்வள மூட்டினீர் பண்புடையீரே.

ப:—அநந்தரம், அவஸாதகரமானக்ருஷ்ணன் நாமங்களைச்சொல்லவேண்டாவென்னச் செய்தேசொல்லி முடித்திகோளே ! என்றுதான் வளர்த்த சிலகுயில்களைச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) நான்-நான், இவ்வவஸ்த்தையில், அது-அது, உயிர்க்கு - ப்ராணனுக்கு, காலனென்று - ம்ருத்யுரூபங்கிடிகோளென்றுசொல்லி, உம்மை - உங்களைக்குறித்து, இரந்தேற்கு - ப்ரார்த்தித்த வெனக்கு, குயிற்பைதல்காள் - குயிற்பிள்ளைகாள், நீர் - நீங்கள், உங்கள்-பிள்ளைத்தனத்தாலே, கண்ணன்நாமமே - பவ்யனான க்ருஷ்ணனுடைய திருநாமங்களை, குழறி - அநக்ஷரமதுரமாகச்சொல்லி, கொன்றீர் - முடித்துவிட்டிகோளிறே, உங்கள் பால்யத்துக்கீடாக, தயிர்ப்பழஞ்சோற்றொடு இளம்போதைக்குத் தயிரையுடைத்தான பழஞ்சோற்றோடே, பாலடிசிலும் - பிற்காலுக்குப்பாலுஞ்சோறுமாக, தந்து-உங்களுக்குத்தந்து, சொல் - அவன்திருநாமங்களாகிறசொற்களை, பயிற்றிய-அப்யஸிப்பித்தவனுக்கு ப்ரத்யுபகாரமாக, நல்வளம் - நல்லஸம்பத்தை, ஊட்டினீர் - அநுபவிப்பித்தீர், பண்பு-நல்லசீர்மையை, உடையீர்-உடையீராயிருந்தீர். (அ)

ஆறு;—(உயிர்க்கது) "கண்ணனுடைய திருநாமங்களைச்சொல்லில் நான்முடிவன், அவற்றைச்சொல்லாதொழியவேணும்" என்று உங்களை நானிரக்க, பின்னையுமவற்றையேசொல்லிக் கொன்றீகோள்; நானுங்களைவளர்த்த ப்ரயோஜநமழகிதாகப் பெற்றேனென்று, தன் குயில்களை யின்னாதாகிறாள். (அ)

ஈடு; அவ,—சில குயில்களைக்குறித்து. திருநாமஞ் சொல்ல வேண்டாவென்று நானிரக்க, அத்தையே சொல்லி நலிந்திகோள், உங்களை வளர்த்த ப்ரயோஜநம்பெற்றேன் என்கிறாள்.

(உயிர்க்கது) தோற்புரையேபோமதன்று; அதுவென்கிறாள், தன்வாயாலே சொல்லமாட்டாமையாலே (காலனென்று) நலிகை யன்றிக்கே முடிக்குமென்று. (உம்மை) இரந்து என்கார்யஞ்செய்யு முங்களை. (நான்) உங்களுக்கு மறுக்கவொண்ணாதபடி ஜநநியான நான், (இரந்தேற்கு) உங்களைநியமித்தேனோ, என்செல்லாமையாலே சரணம் புகுந்தவெனக்கு.

(நீர்) நியாம்யரானநீங்கள். சரணாகதகாதகரானிகோள். (குயிற் பைதல்காள்) உங்கள்பால்யம் என்ப்ராணனோடே போய்த்திறே; பருவம்நிரம்பாமையிலும் தாய்வாசியறியவேண்டாவோ!, "நாங்கள் செய்ததென்" என்ன (கண்ணன்நாமமே குழறிக்கோன்றீர்) நீரா மாற்றால், நெஞ்சைப்புண்படுத்திவைக்கும் க்ருஷ்ணன் திருநாமங்களையே அவ்யக்தமாகச் சொல்லிமுடித்திகோள். * ம்ருதஸஞ்ஜீவநமான ராமகுணங்களையுமொருக்கால் சொன்னாலாகாதோ!.

(தயிர்த்யாதி) தயிரும் பழஞ்சோறும், பாலும் வெஞ்சோறும் அவ்வவகாலங்களிலேதந்து திருநாமங்களைக்கற்பித்த வதுக்கு ப்ரத்யுபகாரம்பண்ணினிகோள்!, (நல்வளமூட்டினீர்) நல்லஸம்பத்தை புஜிப்பித்திகோள்!. நான் காலந்தோறு முங்களுடைய ரக்ஷணம் பண்ணிப்போந்தேன், நீங்களும் இவ்விடங்களிலேவந்து நலிந்துபோந்திகோள், இக்குயில்களுக்கு அந்நதோஷம் பலித்துவிட்டதோ! (பண்புடையீரே) ப்ராப்தியும் பவ்யதையும்கிடக்க, சாலநீர்மையுடையீராயிருந்திகோள்!. ரக்ஷகவிஷயத்தில் நிர்த்தயராயிருந்திகோள்!.

ஒன்பதாம்பாட்டு,

பண்புடைவண்டோடு தும்பிகாள் பண்மிழற்றேன்மின் * புண்புரைவேல்கொடுகுத்தாலொக்கும் நும்மின்குரல்* தண்பெருநீர்த்தடந்தாமரைமலர்ந்தாலொக்குங் கண்பெருங்கண்ணன் * நம்மாவியுண்டெழ நண்ணினான்.

ப:—அநந்தரம், நிரதிஶயபோக்யமான கண்ணழகையுடைய க்ருஷ்ணன் எங்களுடைய ப்ராணாபஹாரம் பண்ணிப்போனான்; புண்ணிலே வேலைக்கொடு குத்தினாற்போலே பாடாதே கொள்ளுங்கோள் என்று, சிலவண்டுகளையும் தும்பிகளையுங்குறித்துச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) பண்புடை - பாட்டின்சீர்மையை யுடைத்தான, வண்டொடுதும்பிகாள் - வண்டுகளோடுகூடின தும்பிகாள், நும்மின்குரல் - உங்களுடைய இனியகுரலானது, புண்புரை - புண்ணின்புரையிலே, வேல்கொடு - வேல்கொண்டு, குத்தாலொக்கும்-குத்தினாற்போலேயிரா நின்றது, நீங்கள்; பண்மிழற்றேன்மின் பண்ணை மதுரமாக ஶப்தியாதே கொள்ளுங்கோள், தண்-குளிர்ந்து, பெரு - நிரம்பின, நீர்-நீரையுடைய தடம் - தடாகம், தாமரைமலர்ந்தாலொக்கும்-தாமரைமலர்ந்தாப்போலே, பெருங்கண் - கண்ணின்பெருமையையுடைய, கண்ணன் - க்ருஷ்ணனானவன். நம் - நம்முடைய, ஆவி - ப்ராணனை, உண்டு-அபஹரித்து எழநண்ணினான் - அகலப்போனான்.

(பண்புரை) என்று பாடமானபோது, ஸ்வாபாவிகமான ஶப்தத்தையுடையவை யென்றுமாம். (௧)

ஆறு:—(பண்புடை) பண்புடைவண்டொடுதும்பிகாள், அவனைப்பிரிந்த வ்யஸநத்தின்மேலே அவன் திருநாமங்களைப்பாடுகிற விதுவொன்றும் பொறுக்கலாயிருந்ததில்லை, பண்டேமிழற்றேல்மின் என்ன, "அவன்திருநாமங்களைப் பாடுகை உனக்கத்யந்தப்ரியமல்லவோ" என்று அவைசொல்ல; அவன் தன்னழகைக்காட்டி யென்னைமாய்த்துப் போனான்காண் என்கிறாள். (௧)

ஈடு-அவ:—மதுபாநமத்தமாய்ப்பாடுகிறன சிலவண்டுகளையும் தும்பிகளையுங்குறித்து, உங்கள் த்வநி யெனக்கு துஸ்ஸஹமாயிருந்தது, நீங்கள்பாடாதேகொள்ளுங்கோள், என்கிறாள்.

(பண்புடைவண்டொடு தும்பிகாள் பண்மிழற் றேன்மின்) சீர்மையுடைய வண்டோடேகூடின தும்பிகாள், பண்மிழற்றேன்மின்

பண்மிக்க ஆளத்தியையுடைய தேகொள்ளுங்கோள். (பண்புரை) என்று பாடமானபோது, பண்பானவுரையாய்; முரலுகையைச் சொல்லுகிறது; பண்ணேமுரலாநின்றதென்றுமாம்.

(புண்புரைவேல்கொடுகுத்தாலொக்கும் நும்மின்குரல்) முன்பே மற்றையவற்றின் த்வநியாலே புண்பட்டிறேயிருக்கிறது, அதிலே வேலைக்கொடுகுத்தினாப்போலேயிராநின்றது உங்கள் த்வநி.

(தண்பெருநீரித்யாதி) குளிர்ந்த பெரியநீரையுடைய பொய்கையிலே தாமரைப்பூவலர்ந்தாப்போலேயாய் அவ்வளவன்றிக்கே பெரிய கண்ணையுடையக்ருஷ்ணன். (நம்மித்யாதி) அவ்வடிவழகைக்காட்டி யென்னைமுடித்துப் பிரிந்துபோனான். (௯)

பத்தாம் பாட்டு.

ஏழநண்ணி நாமும்நம் வானநாடனோ டொன்றினோம்* பழனநன்னாரைக்குழாங்கள்காள் பயின்றெனினி* இழைநல்ல வாக்கையும் பையவேபுயக்கற்றது * தழைநல்லவின்பந் தலைப்பெய்தெங்குந்தழைக்கவே.

ப:—அநந்தரம், பரமபதநிலயனோடே நாங்களொன்றுபட்டுவிட்டோம்; இனியுங்கள் திரட்சிக்கு ப்ரயோஜநமென்? என்று, சிலநாரைத் திரளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

(இ-ள்.) அவன் நினைவுக்கீடாக, நாமும் - நாமும், ஏழநண்ணி - போக்கிலே யொருப்பட்டு, நம் வானநாடனோடு - நமக்கு ப்ராப்யமான பரமபதத்திலே யிருக்கிறவனோடே, ஒன்றினோம் - ஏகஹ்ருதராய்விட்டோம், பழனம் - நீர்நிலத்திலே, நல் - தர்சநீயமாய்க்கொண்டு, நாரைக்குழாங்கள்காள் - திரண்டிருக்கிற நாரைக்குழாங்கள்காள், இனி பயின்றென் - இனிச் செறிந்து விசாரிக்கிறதுக் கென்னப்ரயோஜநமுண்டு, இழைநல்ல - அவனுக்காபரணம்போலே ஸ்ப்ருஹணீயமான, ஆக்கையும் - சரீரமும், பையவே - க்ரமத்திலே, புயக்கற்றது - கைவிட அப்யஸியாநின்றது, இனி என் துஃகங்காணுமையாலே, எங்கும் - எல்லாதேசமும், தழை - விஸ்தீர்ணமாய், நல்லவின்பம் - நன்றான ஸுகத்தை, தலைப்பெய்து - பெற்று, தழைக்க - ஸம்ருத்தமாகக்கடவது.

"புயக்குதல் - புயத்தல், - வாங்குதலாய், விடுகையைச்சொன்னபடி.

ஆறு:—(எழநண்ணி) அவன்கருத்தின்படியே நானும்முடிந்தேன், என்னுடையவாக்கையுந் தளர்ந்தது, பழனநன்னாரைக் குழாங்கள்காள் பயின்றென்னினி, என்றுசொல்லி, பின்னையும், " நான் பட்டபாடொருவரும் படாதொழிந்திடுக " என்று சொல்லிக்கொண்டு முடிந்தாளென்கிற திப்பாட்டு. (௰)

ஈடு-அவ;—திரளவிருக்கிற நாரைக்குழாங்கள் தன்னைமுடிக்க மந்த்ரிக்கிறனவாகக்கொண்டு, நான் முடிந்தேன், இனி நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென் என்கிறாள்.

(எழநண்ணி) போக்கிலே யொருப்பட்டு. (நாமும்நம்வானநாடனோ டொன்றினோம்) கடலைக் குளப்படியிலே மடுத்தாப்போலே தன்னை யிலக்காக்கி இத்தலையை வெறுந்தரையாக்கித் தன்னைக் கொண்டகன்றான். நாமும்,* அயர்வறுமமரர்க ளதிபதியோடேயொருமிடறானோம். நித்யஸூரிகளு மவனுமாகவிருந்து நம்மைமுடிக்க வெண்ணினபடியே, நாமுமிசைந்தோம். அவன் முடிக்க நினைக்க, நாம் ஜீவிக்கவெண்ணி, இடக்கைப்புரி முறுக்குகைதவிர்ந்து, நாமும் முடிகையிலே துணிந்தோம். நித்யஸூரிகளும் சந்தாநுவர்த்திகளாகையாலே, அவன்கருத்தே கருத்தாயிருப்பர்களிறே.

(பழனநன்னாரைக்குழாங்கள்காள்) நீர்நிலங்களிலே வர்த்திப்பனவாய், தொடங்கினகாரியம் முடிக்கவல்ல ஸாமர்த்யத்தையுடைத்தான நாரைக்குழாங்கள்காள். (பயின்றென்னினி) இனி நீங்கள் திரண்டு ப்ரயோஜநமென். நானவன்கருத்தைப் பின்செல்லாதவன்றன்றோ உங்கள் மந்த்ரத்துக்கு ப்ரயோஜநமுள்ளது; முதலிகள் திரள்திரளாகவிருந்து பெருமாளையும் பிராட்டியையும் சேர்க்கைக்கு விரகு பார்த்தாப்போலே, இவை திரள்திரளாகவிருந்து தன்னையுமவனையும் பிரிக்கைக்கு விரகுபார்க்கிறனவென்றிருக்கிறாள்.

" அவன் வேண்டுவாரைச்சேர்க்கையும், வேண்டாதாரை முடிக்கையும், திர்யக்குக்களுக்குப்பணி " என்றிருக்குமிறே ராமாவதாரத்தில் வாஸநையாலே. " வானநாடன் - நாரைக்குழாங்கள்காள்" என்கையாலே, உபயவிபூதியும் வேணுமோ ஓரபலையை முடிக்கைக்கு. (இழைநல்லவாக்கையும்) ஆபரணத்தாலே அழகிதானசரீரமென்னுதல், ஆபரணம் பூண்டாப்போலேயிருக்கிற விலக்ஷணசரீரமென்னுதல், (பையவே புயக்கற்றது) க்ரமேண பசையற்றதென்னு

தல், க்ரமத்திலே போகத்தொடங்கிற்றென்னுதல்; புயத்தலென்று-போதலாதல், புயக்கென்று - ஆகர்ஷகமாதல்.

(தழைநல்லவித்யாதி) ஈஸ்வரவிபூதி ஸம்ருத்தமாகவேணுமென்கிறாள். " தாந்தாம் முடியநினைப்பார் 'நாடுவாழ்க' என்பாரைப்போலே சொல்லுகிறாள் " என்று ஆளவந்தார் நிர்வாஹம் - " நான்பட்டபாடு நாடுபடாதொழியவேணும் " என்று எம்பெருமானார்; "நான்முடிய என்னார்த்திகண்டு நோவுபடாதே, லோகமடங்கப் பிழைக்குமாகாதே " என்று பட்டர். (க0)

பதினொன்றாம் பாட்டு.

இன்பந்தலைப்பெய்தெங்குந் தழைத்தபல்லூழிக்கு * தன்புகழேத்தத்தனக்கருள் செய்தமாயனை * தென்குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள்ளிவை * ஒன்பதோ டொன்றுக்கு மூவுலகுமுருகுமே.

ப:— அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக, இதுகேட்ட ஸர்வலோகத்தினுடையவும் மநோவிகாரத்தை யருளிச்செய்கிறார்.

(இ - ள்.) இன்பம்தலைப்பெய்து-இன்பத்தை உண்டாக்காநின்றுகொண்டு, எங்கும் தழைத்த - எங்கும் வ்யாப்தமான, தன்புகழ்-தன்னுடைய குணப்ரதையை, பல்லூழிக்கு-காலதத்த்வமுள்ளதனையும், ஏத்த-ஏத்தும்படியாக, தனக்கு - தமக்கு, அருள்செய்த - நிரவதிக க்ருபைபண்ணின, மாயனை - ஆஸ்சர்யபூதனை; தென் - கட்டளைப்பட்ட, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்த; ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளே, இவை ஒன்பதோடொன்றுக்கு - இவ்வொன்பது பாட்டில் க்லேஶமொருகூறும் பத்தாம்பாட்டில் க்லேஶமொருகூறுமான இவற்றுக்கு, மூவுலகும் - த்ரைலோக்யமும், உருகும் - ப்ரேமத்தாலே த்ரவியாநிற்கும்.

இது கலித்துறை. (கக)

ஆறு:— (இன்பம்) பின்னையும் (க) " ஷிரோணஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்ய"-ஷிரோணஸம்ஜ்ஞாம்ப்ரதிலப்ய" என்னும்படியாலேதாமுளராய் மேலருளிச்செய்கிறார்.

(க) ரா-ஸு-௩௨-அ-

அநுபவிதாக்களுக்கு நிரவதிக ஸுகாவஹமாய் லோகமெல்லாம் நிறைந்த தன்புகழை, ஸர்வகாலமு மேதேனும் தூர்த்தஸம்ஸாரிகளுமேத்தும்படி தனக்கருள்செய்தமாயனைத் தென்குருகூர்ச்சடகோபன்சொல்லாயிரத்துள் இத்திருவாய் மொழியில் சொன்னவார்த்தியை அநுஸந்திப்பார் என்படுவார்களோ வென்கிறார். (௧௧)

ஈடு; அவ;—நிகமத்தில் இத்திருவாய்மொழியிற் பாசுரம் ஹ்ருதயத்திலேபடில், ஆரேனுமாகிலும் தரியாரென்கிறார்.

(இன்பந்தலைப்பெய் தேங்குந்தழைத்த) எங்குந்தழைத்த வின்பந்தலைப்பெய்து-லோகமெல்லாம் வெள்ளமிட்ட நிரதிசயப்ரீதியையுடையராய்க்கொண்டு. (பல்லூழிக்குத் தன்புகழேத்த) காலமுள்ளதனையும் குணங்களை யேத்தும்படி. (தனக்கருள்செய்த) ஸம்ஸாரிகளிலே அந்யதமரானவர்க்கு, * மயர்வறமதிநலமருளிச்செய்தபடி. (மாயனை) ஸம்ஸாரிகள்நடுவே யென்னை யொருவனையும் விசேஷகடாக்ஷம்பண்ணின வாஸ்சர்யபூதனை.

அங்ஙனன்றிக்கே, (இன்பந்தலைப்பெய்தேங்குந்தழைத்த - தன்புகழேத்த - பல்லூழிக்கு - தனக்கருள்செய்தமாயனை) அநுபவிப்பார்க்கு நிரதிசயாநந்தத்தை விளைப்பதாய் எங்குமொக்கப்பரம்பின தன்கல்யாணகுணங்களை.;காலதத்வமுள்ளதனையும் நானநுபவிக்கும்படி பண்ணினானென்றுமாம்.

இவர் " குணஜ்ஞாநத்தாலேதரித்தார் " என்கிறது, "தன்புகழேத்தத் தனக்கருள்செய்த " என்ற வித்தைக்கொண்டிறே. நித்யஸூரிகளநுபவத்தையும், தமக்கவர்களோடொத்த ப்ராப்தியையுமநுஸந்தித்து நோவுபட்டார் ; என்றுமொக்க விழந்திருக்கிற ஸம்ஸாரிகள் படியைப்பார்க்கவாறே, இந்நோவுதானே பேறாய்த்தோற்றிற்று. " சடகோபன் சொல் " என்று பரோக்ஷநிர்த்தேசத்தாலே, (தனக்கருள்செய்த) என்னலாமிறே; (௧) "வாஜ்மீகிஹரிவாநுஜீஷி:-வால்மீகிர்ப்பகவாந்ருஷி: " என்னுமாபோலே.

(ஒன்பதோடொன்றுக்கும்) " கீழொன்பதுபாட்டிலுமுண்டான வ்யஸநம் ஸுகம்" என்னும்படி வ்யஸநம் மிக்க பத்தாம்பாட்

(௧) ரா-பா-௪-௧-

டையுடையவிவை. ஸ்மாரகபதார்த்தங்களாலே ஜீவநத்தில் நசை யோடே நோவுபட்டவொன்பதுபாட்டோடே, ஜீவநத்தில் நசையற்ற வொருபாட்டுக்கும். (மூவுலகுமுருகுமே) ஆரேனுமாகிலும் தரியார். "என்னுடைய ஆர்த்தநாதத்தாலே நாடழியவேண்டாவாகாதே" என்றவர்க்கு, பின்னையும் நாட்டார்க்கு ஸைதில்யமே பலித்துவிட் டது.

[எங்குந்தழைத்த-இன்பந்தலைப்பெய்து - பல்லூழிக்குந்தன் புகழேத்த, - தென்குருகூர்ச்சடகோபன்-தனக்கருள்செய்தமாயனை சொல்லாயிரத்துள் ளிவையொன்பதோ டொன்றுக்கும் மூவுலகு முருகும்.] (௧௧)

ஐந்தாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஒன்பதாம்பத்து.

ஆறாந்திருவாய்மொழி.

உருகுமால் - ப்ரவேஶங்கள்.

ஆறு;— (உருகுமால்) இப்படி யெம்பெருமானைப் பிரிந்த வ்யஸநத்தாலே முடிந்து பின்னையும் நெடும்போது கூடலப்த ஸம்ஜ்ஞராயிருந்தவாழ்வார்.

ப:—ஆறாந்திருவாய்மொழியில், கீழ் இவர் ஸ்மாரகதர்ஶநத்தாலே அத்யந்தமவஸந்நரானவளவிலே, ஆஶ்வாஸகரமாம்படி ஈஶ்வரன் தன் குணங்களை ப்ரகாஶிப்பிக்க; அவனுடைய வாஶ்சர்யப்ரகாரத்தையும், அநுபஹித பந்தத்தையும், ஔதார்யஸ்வபாவத்தையும், அதிஶயிதசீலத்தையும், ஆஶ்ரிதபவ்யதையையும். அத்யந்தவ்யாமோஹத்தையும், வ்யாமோஹபர்யவஸாநத்தையும், அபேக்ஷா நிரபேக்ஷமான நித்யாதரத்தையும், அநுபாவ்யஸௌந்தர்யத்தையும் அபிநிவேஶக்லைஶ்யத்தையுமநுஸந்தித்து, இந்தகுணங்களினுடைய வைலக்ஷண்யாநுபவத்தால் பிறந்த ப்ரீத்யதிசயத்தாலே, மிகவும் ஶிதிலராகிறார்.

ஈடு;—“எழுநண்ணிநாமும் நம்வான்நாடனோடொன்றினோம்” என்று தம் ஜீவநத்தில் நசையற்றுச் சொன்னவார்த்தையிறே கீழ்; இவ்வளவில் வந்து முகங்காட்டி யிவரைப் பெறுதல், இல்லையாகில் இழத்தல் செய்யவேண்டும்படியான தசையாய்த்து.

இவ்வவஸ்த்தையிலே; திருவடிசென்று கிட்டினபோது, முன்பு நெடுநாள்பட்ட வ்யஸநமுங்கிடக்கச்செய்தே, பெருமாளும் வாராதிருக்க, (க) “ஸமா த்வாதஶ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே । புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ - ஸமாத்வாதஶதத்ராஹம் ராகவஸ்யநிவேஶநே । புஞ்ஜாநா மாநுஷாந்போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ” என்கிறபடியே, பன்னிரண்டாண்டு பெருமாளுந்தானுமொருபடிப்படக் கலந்த கலவிவந்து பிராட்டிக்கு ஸ்ம்ருதிவிஷயமானாப்போலே; * இருத்தும்வியந்தில் தலைதடுமாறாகப் பிறந்த கலவிவந்து ஸ்ம்ருதிவிஷயமாய்த்து.

(க) ரா·ஸு·௩௩-௧௮.

அதுக்கடி, இவரதிகரித்த கைங்கர்யத்தை முடியச்செய்து தலைக்கட்டுகைக்கீடான இவருடைய ஜீவநாத்ருஷ்டமாவது; அன்றிக்கே, இவர் சொல்லக் கேட்கையிலே பாரித்துக்கொண்டிருக்கிற ஈஶ்வரனுடைய பாக்யமாவது; பகவதநுபவப்ரீதி யுள்ளடங்காமை வழிந்து புறப்பட்ட இவர்சொல்லுக்கேட்டு பகவத்விஷயத்திலே ருசிபிறக்கவிருக்கிற சேதநருடைய பாக்யமாவது. இப்படி * இருத்தும்வியந்தில் ஸம்ஶ்லேஷம் வாரா ஸ்ம்ருதிவிஷயமாய்த்து. [ஸோஜாதஶ - ஸமா த்வாதஶ] பிள்ளாய், "இன்றிங்ஙனே வெறுந்தறையாயிருக்கிறதாள், எங்கள் மாமனார்மாளிகையிலே பன்னிரண்டாண்டொருபடிப்பட ராமகுணங்களை விளைநீரடைத்துக்கொண்டேன்காண்" என்றாளிறே. இங்கு; * இருத்தும் வியந்துதன்னில் "மூவுலகுந்தன்னெறியா வயிற்றிற்கொண்டு - சிறியேனுடைச்சிந்தையுள்ளே - நின்றொழிந்தான்" என்று புறம்பெங்கும் முறையிலே பரிமாறினவன், இவரொருவரளவிலுமிறே முறைகெடப் பரிமாறிற்று;

அப்படிப்பட்ட பரிமாற்றந்தான், இப்போதொரு ஸ்ம்ருதிமாத்ரமாயிருக்கையன்றிக்கே, ததாநீந்தநபுத்திபிறந்தது; அப்படியே, மேன்மையுடையவன், அம்மேன்மையுங்கிடக்கச்செய்தே தாழநின்று பரிமாறினகுணத்தையும் வடிவழகையுஞ்சொல்லி, அதுதான் "இப்போதையநுபவமே" என்னும்படியாயிருப்பதொரு புத்திபிறந்து, அவனுடைய சீலகுணாநுஸந்தாநத்தாலே ஶிதிலராகிறார்.

"கடலைத்தரை காண்பாரைப்போலே, * இருத்தும்வியந்தி லநுபவத்தை யிதிலேகொண்டுவந்து சேர்ப்பதேநம்முதலிகள்!" என்று வித்தராயருளிச்செய்வர், அப்ராப்தியுங்கிடக்கச்செய்தே, ஶீலகுணாநுஸந்தாநத்தாலே ஶிதிலராகிறாராய்த்து. "அப்ரீதிகர்ப்பகுணாநுஸந்தாநம்" என்றாளவந்தாரருளிச்செய்யும்சந்தை இதுக்கு.

(௧) [பஹவோ ந்ருப-பஹவோ ந்ருப] சக்ரவர்த்தி, "பெருமாளைத் திருவபிஷேகம்பண்ணவேணும்" என்றுகோலி, "நாம் அறுபதினாயிரமாண்டுகூட ஒருதலைமிக்க ஒருதலைகிளர இப்படி வருந்தி யடிப்படுத்தின ராஜ்யத்தை இன்று சிறியவன்தலையில்வைத்தால் இதுபொறுக்குமோ" என்றுபார்த்து, "இதுதன்னை நாட்

---

(௧) ரா அயோ-௨-௨௬-

டோடே சேரவிசாரித்துச்செய்வோம்" என்று, ராஜலோகத்தோ டேகூட்டினவிடத்து, (௧) "ஜநௌவொ ஷ ஸஹாஷா விசா நஂகாவ யந்திவ - ஜநௌகோத்குஷ்டஸந்நாதோ விமாநம் கம்பயந்நிவ" என்று - சக்ரவர்த்திமாளிகையழித்துச் செய்யவேணடும்படி யார்த்துக்கொள்ள.

அத்தைக்கேட்டு, நாட்டினைத்தகார்யம் வாய்க்கப்போய்த்து' ஆறுலுமிவர்கள் நினைவுகன்னை யிவர்கள்வாக்காலே சொல்லக்கேட்டாலாகாதோ" என்னுமத்தைப்பற்ற, "வாரிகோள், (௨) "கயம் நஂயியஂ ரண - கதம் நுமயி தர்மேண" என்று - அறுபதினாயிரமாண்டு சிறியத்தைப்பெரியது நலியாதபடியாக பூமிப்பரப்படைய நோக்கிக்கொண்டு, (௩) "வாஂணாஸ்ர தவ தஸ்ய ஜாயாயா ஜரிநஂயா - பாண்டரஸ்யாதபத்ரஸ்யச் சாயாயாம்ஜரிதம்மயா" என்று "முத்தின்குடைநிழலிலேயிருந்து எனக்கென்ன வொருஸங்கோலாதே உங்களுடைய ரக்ஷணதர்மத்தைபேசெய்துகொண்டு போந்தேன், நானொருவார்த்தைகேட்டவிடத்து' இப்போது நீயிருக்கச்செய்தேவேணுமோ, க்ரமத்திலேசெய்துகொள்ளுகிறோம்' என்னுதல்; அன்றியே 'கார்யமாகில் செய்யலாகாதோ' என்று வார்த்தை சொல்லுகையன்றிக்கே, படுகுலையடித்தவனைத்தப்ப ஒருதார்மிகன் மேலேபோதுங்க நினைப்பாரைப்போலே, "என்னைவிட்டுஎன்மகனேய மையும்" என்று நீங்கள்விரும்புகைக்கு நானுங்களுக்குப்பண்ணின அபராதமென்?" என்ன; "நீயெங்களுக்குப்பண்ணிற்றோரபராத மில்லை, உன்மகனுடைய குணபாரதங்கள் இதுக்கடி - நீநோக்கிக்கொண்டுபோந்தபடிகளி லொருகுறையில்லை, குணவானாயிருப்பானொரு புத்ரனைப்பெற்று நாட்டைப்படுகுலையடித்தாய்காண்.

[பஹவ: - பஹவ:] உன்னளவல்லகாண் ரக்ஷணதர்மத்திலவர்க்குண்டானபாரிப்பு. (௪) [யாதந்நாமிவ - தாதநாமிவ] நாட்டிலே சிலரைகுணஹீநரென்று நிந்தித்தும், சிலரை குணவான்களென்றுகொண்டாடுகிறதும், "இன்ன ஆகாரத்திற்பொன்" என்று விலைபெறுமாபோலே, "இவ்வாஶ்ரயத்திலே கிடக்கிறகுணம்", என்றுய்த்துப் புறம்புவிலைபோவது (௫) "ஹ்ருதயாநி ஆமந்த்ரயந்நிவ ஜநஸ்ய குணவத்தயா - ஹ்ருதயாந்யாமமந்தேவ ஜநஸ்யகுணவத்தயா"

---

(௧) ரா-அயோ-௨-௧௮- (௨) ரா-அ-௨-௨௫- (௩) ரா-அ-௨-௭-
(௪) ரா-கிஷ்-௧௫-௨௧- (௫) ரா-அ-௨௬-௨-

முதற்பாட்டு.

உருகுமால்நெஞ்சமுயிரின்பரமன்றி * பெருகுமால்வேட்கையு மென்செய்கேன்தொண்டனேன் * தெருவெல்லாங்காவிகமழ்திருக் காட்கரை * மருவியமாயன்றன் மாயநினைதோறே. (க)

ப:—முதற்பாட்டில், திருக்காட்கரையில் நிற்கிற ஸர்வேஶ்வரனு டைய ஆஶ்சர்யப்ரகாரத்தை யநுபவித்து, அபிநிவேஶத்தாலே யென் னெஞ்சு ஶிதிலமாகாநின்றதென்கிறார்,

(இ-ள்.) தெருவெல்லாம் - வீதிகள்தோறும், காவிகமழ் - செங் கழுநீர் மணங்கமழும்படியான, திருக்காட்கரை-திருக்காட்கரையிலே, மருவிய - பொருந்திவர்த்திக்கிற, மாயன்றன் - ஆஶ்ச்ர்ய பூதனுடைய, மாயம் - அத்யாஶ்சர்யமான ஸௌந்தர்யசீலாதிகளை, நினைதொறும் - அநுஸந்திக்குந்தோறும், நெஞ்சம் - அநுபவப்ரகாரோபகரணமான நெஞ்சு உருகும் - ஶிதிலமாய் த்ரவியாநின்றது, அநுபவஸாரஸ்யாதிசயத்தாலே உயிரின்பரமன்றி - ஆத்மாவுக்குப் பொறுக்கவரிதாம்படி வேட்கை - அபிநிவேசம், பெருகும் - அதிப்ரவ்ருத்தமாகாநின்றது; தொண்டனே ன் - அத்யந்தசபலனான நான், என்செய்கேன் - மனஶ்ஶைஶில்யத்தை மாற்றவோ, அபிநிவேசத்தையடஞ்சுரிப்பபடுத்தவோ, அநுபாவ்யகுணாதி களை விலக்கவோ, ஆஶ்ரயகதமான சாபல்யத்தைத் தவிர்க்கவோ, எது செய்வேன்.

"ஆல்" என்ற அசை - விஸ்மயத்தைக் காட்டுகிறது. (க)

ஆறு;—திருக்காட்கரைமருவியமாயன்பண்டென்னோடுகலந்து பரிமாறின பரிமாற்றங்களை நினைக்க நினைக்க ப்ரீத்யதிசயத்தினாலே யென்னெஞ்சழிந்து நீராயுருகாநின்றது, இப்படிப்படாநின்றால் மாய ங்களை நினைக்கைதவிரலாமிறே, என்னுடைய நிரவதிகமான அபிநி வேஶமானது தவிரவொட்டுகிறதில்லை, நானென்செய்கேனென்கிறார்.

ஈடு; அவ:—திருக்காட்கரையிலெம்பெருமானுடைய ஆஶ்சர் யங்களான பரிமாற்றங்களை நினைதொறு மென்னெஞ்சு ஶிதிலமாகா நின்றதென்கிறார்.

(உருகுமால்நெஞ்சம்) அநுபவத்துக்கு ப்ரதமோபகரணமான நெஞ்சு ஶிதிலமாகாநின்றது. அநுபவிக்கைக்கும் அநுபவித்து நிர்வ ருதராகைக்கும் நெஞ்சுவேணுமிறே, நீஞ்சப்புக்கவனுக்கு வாய்க

ரை தெப்பமொழுகுமாபோலே, பரிகரமான நெஞ்சு சிதிலமாகாநின்றது. (௧) "தொழுதெழு" என்கைக்கும், (௨) "நீயும்நானுமிந்நேர் நிற்கில்" என்கைக்கும் நெஞ்சுவேணுமே. எதிர்த்தலையையுண்டாக்கிக் கலக்கவறியான்காணும். கலக்கைக்கு இரண்டுதலையும் வேணுமென்றிரான்.

(உயிரின்பரமன்றிப் பெருகுமால்வேட்கையும்) ஆத்மாவுக்குப் பொறுக்கவொண்ணாதபடி அபிநிவேசம்பெருகாநின்றது. பிள்ளாய், அணுபரிமாணமான விவ்வஸ்துவினளவல்ல, ஆற்றுப்பெருக்குப் போலே மேன்மேலன பெருகாநின்றது. (ஆல்) விஷாதாதிசயஸூசகம். "நெஞ்சம் - உருகுமால்-வேட்கையும்-பெருகுமால்" என்று, தம்மால் நியமிக்கவொண்ணாத விஷாதந்தோற்றச் சொல்லுகிறார். (என்செய்கேன்) நெஞ்சையுருகாமல் கரைகட்டுவதோ, வேட்கைபெருகாமல் தகைவதோ, இவற்றுக்கடியான அவன்குணங்களைத் தவிர்ப்பனோ; (தொண்டனேன்) அதுக்கடியானவென் சாபலாதிசயத்தைத் தவிர்ப்பனோ. சாபலம், அபூமி என்று கைவாங்கவொட்டுகிறதில்லை; வைலக்ஷண்யம் மறந்தும் தரிக்கவொட்டுகிறதில்லை.

(தெருவெல்லாங்காவிகமழ்) நெஞ்சுருகுகைக்கும் வேட்கை பெருகுகைக்கும் ஹேதுசொல்லுகிறது. (தெருவெல்லாம்) குறுந்தெருவென்று அணைகட்டவொண்ணாதபடி, குறுந்தெருவோடு நெடுந்தெருவோடு வாசியறச் செங்கழுநீரின் பரிமளம் பரக்கிறபடி. ஊரோடுசேர்ந்த பொய்கைகளாகையாலே. உள்ளோடுபுறம்போடு வாசியறப் பரிமளமலையெறிகிறபடி. தெருவிலொருபரிமளம், உள்ளு (௩) "ஸர்வ-காம:-ஸர்வகந்த:" (திருக்காட்கரைமருவிய) இத்தால்-பரத்வத்திலு மேற்றஞ்சொல்லுகிறது. பரத்வம், நெடுங்கைநீட்டு; அவதாரம், காலாவதியுடைத்து. (மாயன்) ஸௌந்தர்யசீலாதிகளாலே பிறரைப் பிச்சேற்றவல்லவன்.

(மாயம்) கிட்டினபோது தாழநின்று பரிமாறினபடி. குறைவாளர் நிறைவாளரைப்பற்றி யநுவர்த்திக்குமாபோலேயாய்த் தநுவர்த்தித்தபடி. (நினைதோறே) ஊரை நினைதொறும், ஸௌந்தர்யத்தை நினைதொறும், ஒரு ஊரும் வடிவுமில்லாதாரைப்போலே தாழநின்ற சீலத்தைதையை நினைதொறும். (நினைதோறும்) எத்தனைகாலம் நினைக்கப்புக்கார், எத்தனைகாலம் மீண்டார். - ஒன்றொன்று

(௧) ௧ ௧-௧. (௨) ௧-௧௦-௫ (௩) சாந்தோ-௩-௧௪.

சேராதன நூறாயிரத்தை யநுபவிப்பிக்கவல்லனவன், ஒருகுணந்த ன்னையே காலதத்வமுள்ளதனையும் கால்தாழ்ந்து * க்ஷணந்தோறும் புதுமைபிறந்து அநுபவிக்கவல்லரிவர் : “அப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதம்” என்னுமவரிறே. (௧)

இரண்டாம்பாட்டு.

நினைதோறுஞ் சொல்லுந்தோறும்நெஞ்சிடிந்துகும்* வினைகொள் சீர்பாடிலும் வேமெனதாருயிர்* சுனைகொள்பூஞ்சோலைத்தென்காட் கரையென்னப்பா * நினைகிலேன்நானுனக்காட்செய்யும்நீர்மையே.

ப—அநந்தரம், நிருபாதிகபந்துவான வுன்னுடைய ஸம்ஶ்லேஷ ப்ரகாரத்தை யநுஸந்திக்கக்ஷமனாகிறிலேனென்று அவன்றன்னை நோக்கி யருளிச்செய்கிறார்.

(இ - ள்.) சுனைகொள் - தடாகங்களையுடைத்தான, பூஞ்சோலை - பூஞ்சோலைகளையுடைய. தென் - தர்ஶநீயமான, காட்கரை-திருக்காட் கரையிலே, என் அப்பா - எனக்கு நிருபாதிகபந்துவாய்க்கொண்டு நிற் கிறவனே, வினைகொள் உன்னுடைய ஸம்ஶ்லேஷாதிஶய வ்யாபாரப்ர காஶகமான. சீர் - சீலஸௌலப்யாதிகுணங்களை, நினைதொறும் - ப்ரதி க்ஷணமநுஸந்திக்கும்தோறும், நெஞ்சு-அநுஸந்தானோபகரணமான நெஞ் சானது, இடிந்து-ஶிதிலமாய், அவ்வநுஸந்தாநம் அபிநிவேஶவாஸனை யாலே வாக்வ்யவஹார விஷயமாய்க்கொண்டு, சொல்லுந்தொறும - சொல்லத்தொடங்கின க்ஷணந்தோறும், உகும் - நெஞ்சுதான் நீராயுரு காநின்றது; அவ்வபிநிவேசமொட்டில் நில்லாமையாலே, பாடிலும் - ‘ பாடியிளைப்பிலம் ” என்கிறபடியே அக்குணங்களைப்பாடி தரிக்கத் தேடிலும், எனதாருயிர் - கரணியான வென்னாத்மாவானது, வேம் - ரஸாதிசயமாற்றமாட்டாமையாலே பரிதப்தமாகாநின்றது; ஆதலால் - நான் - எவம்விதனான நான். உனக்கு - உனக்கு, ஆட்செய்யும் - ஶேஷ வ்ருத்திபண்ணுகைக்குறுப்பான, நீர்மை - ப்ரகாரத்தை, நினைகிலேன் - நினைக்கவும் க்ஷமனாகிறிலேன். (௨)

ஆறு:—(நினைதோறும்) எல்லாருடைய து:கங்களையும் போக் கக்கடவதான வுன்னுடைய விக்குணங்களை நினைத்தல் சொல்லு தல் பாடுதல் செய்யில், என்னெஞ்சும் இவ்வாத்மாவும் மாயாநின்

றனை ; " நீரிங்ஙனேயீடுபடுகைக்கு உம்முடையதிறத்தில் நான்செய்ததென் " என்னில் ; நான், " உன்னையடிமைகொள்ளுகிறோம் " என்று கொண்டுவந்து நீ யென்திறத்துச் செய்தருளின செயல்களை நினைக்கலாமோவென்கிறார். (உ)

ஈடு; அவ;—திருக்காட்கரையி லெம்பெருமானைக் குறித்து, உன்னோடு நான் பரிமாறின பரிமாற்றத்தை நினைக்க க்ஷமனாகிறிலே னென்கிறார்.

(நினைதோறும்) நினைக்கவென்று உபக்ரமிப்பர் : அந்நினைவுமாறாதே செல்லவொண்ணாதபடி பலஹாநிமிருகும், ஆனாலும் மறக்கமாட்டார்; திரிய நினைக்கவென்று உபக்ரமிப்பர், தலைக்கட்டமாட்டார்; எத்தனைகாலம் நினைக்கப்புக்கார். எத்தனைகாலம் மீண்டார்.

(சொல்லுந்தோறும்) நினைக்கவே யரிதானவிஷயத்தை, சொல்லவொண்ணாதென்னுமிடஞ்சொல்லவேண்டாவிறே; (க) "யதோ வாசோ நிவர்த்தந்தே - அப்ராப்ய மநஸா ஸஹ" என்கிற கணக்கன்றிக்கே (உ) " குறளாகியவஞ்சனேயென்னு மெப்போதுமென்வாசகம் " என்கிறபடியே, இவருடையவாக்குத்தான் எப்போதும் பேசாநிற்குமே ; அந்த வாஸனையாலே அஹ்ருதயமாகச் சொல்லாநிற்பர் ; அதுதான் செவிவழியாலே உள்ளேபுக்கு ஊற்றிருந்து, குணதிகவிஷயமாகையாலே நெஞ்சையழிக்கும். (நெஞ்சிடிந்துகும்) நெஞ்சு கட்டழிந்து நீராகாநின்றது, பெருக்காற்றின் கரையிடிந்து பின் நீராய்க்கரைந்துபோமாபோலே, ஓரவயவியாகக் காணவொண்ணாதபடி உக்குப்போகாநின்றது.

(வினைகொளித்யாதி) பாபஹரமான கல்யாணகுணம். ஸர்வார்க்கும் துஃகநிவர்த்தகமான குணங்கள், என்னை யொருவனையு மழியாநின்றன ; அன்றியே, சீரென்று - சீலமாய், வினையென்று - சேஷ்டிதம், அதாவது - சீலகார்யமாய்த் தாழநின்று பரிமாறும் பரிமாற்றம், (ந) " ஸுக்ரீவம் நாதமிச்சதி - ஸுக்ரீவம் நாதமிச்சதி " என்னக்கடவதிறே, என்றுமாம். (பாடிலும்) அடைவுபடப் பேசுமதொழிய, ஆர்வத்தாலேபாடுவதொன்றுண்டு ; அத்தைச் செய்யிலும்.

(வேமெனதாருயிர்) மகஸ்ஸையன்றிக்கே. * அதாஹ்யமான வாத்மவஸ்துவையும் தஹியாநின்றது. எல்லாத்துக்கும் குளிர்த்தி

(க) யஜு-ஆ-அ-கூ-ரு-ங- (உ) ங-அ-உ-
(ங) ரா-கிஷ்-ச-கஅ

யைப் பண்ணக்கடவதான பனி தாமரை யொன்றையும் கருகப்பண்ணுமாபோலே, ஸகலதுஃகநிவர்த்தகமான குணங்கள் எனக்கு பாதகமாகாநின்றன. (வேமெனதாருயிர்) (௧) "அதாஹ்யம் - அதாஹ்யம்" என்கிறது - அக்நிக்கு; பகவத்குணங்கள்புக் கழிக்கமாட்டாததில்லை.

(சுனையித்யாதி) தம்மைக் குமிழ்நீரூட்டின ப்ரதேசங்கள். சுனைகளையும் தர்ஶநீயமானசோலைகளையுமுடைத்தாயிருக்கிற திருக்காட்கரையிலே நிருபாதிகபந்துவாய் ஸந்நிஹிதனானவனே. (நினைகிலேன் நானுனக்காட்செய்யும்நீர்மையே) நானுனக்கடிமைசெய்யும் ப்ரகாரம் நினைக்கமாட்டுகிறிலேன்.

"வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்" என்றிருந்தநான், வகுத்த சேஷியான வுனக்கு. அவன் தாழநின்று பரிமாறினபடியை, விநயத்தாலே "ஆட்செய்யுநீர்மை" என்கிறார். அவன் தமக்காட்செய்த நீர்மையை, தாம் 'ஆட்செய்யுநீர்மை நினைகிலேன்" என்கிறார். இச்சொலவையு மிழக்கவொண்ணாதென்று. "(நானுனக்காட்செய்யும்நீர்மை) என்பானென், 'நீயெனக்காட்செய்யும்நீர்மை' என்னுமல்" என்ன; "இச்சொலவையுமிழப் பரோபாவியார்" என்றெம்பார். (௨)

மூன்றாம்பாட்டு.

நீர்மையால்நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்தென்னை* ஈர்மைசெய்தென்னுயிரா யென்னுயிருண்டான் * சீர்மல்கு சோலைத்தென்காட்கரையென்னப்பன் * கார்முகில்வண்ணன்றன் கள்வமறிகிலேன்.

ப:—அநந்தரம், உதாரமான காளமேகஸ்வபாவனானவன் முறையிலே வருவாரைப்போலேகிட்டி தான் தாழநின்று பரிமாறின முறைகேடான க்ருத்ரிமத்தையே யறுதியிட்டு, அறியமாட்டுகிறிலேனென்கிறார்

(இ-ள்) நீர்மையால் - ஸ்வஸ்வாமிஸம்பந்தமாகிற நீர்மையைப்ரகாஶிப்பிக்கையாலே, நெஞ்சம்-என்னெஞ்சை, வஞ்சித்து-தன்வசமாக்கி, புகுந்து-புகுந்து தன் ஶீலஸௌலப்யாதிகளுக்கு ப்ரகாஶகமானசேஷ்டிதங்களாலே என்னை ஈர்மைசெய்து-என்னை ஈருந்தன்மையைப்பண்ணி என்னுயிராய் - இவ்விரண்டாகாரத்தாலு மெனக்குதாரகனாய், என்னு

(௧) கீதை-௨-௨௪.

யிருண்டான் - என்னைபுஜிக்குமவனாய்க்கொண்டு, சீர்மல்கு - மதுபுஷ்ப ஸம்பத்ஸம்ருத்தியையுடைத்தான; சோலை-சோலையையுடைய, தென்-அழகிய, காட்கரை - திருக்காட்கரையில் ஸந்நிதியாலே. என்னப்பன் - எனக்குபகாரகனாய், கார்முகில்வண்ணன்றன் - கார்காலத்துமேகம்போலே அதிமாத்ரௌதார்யஸ்வபாவனானவனுடைய, கள்வம்-முகப்பொன்றும் முடிவொன்றுமான க்ருத்ரிமசேஷ்டிதத்தை, அறிகிலேன் - இன்னபடியிருக்கிறதென்றறியமாட்டுகிறிலேன்,

நீர்மையென்று - சீலாதிகளாய், ஈர்மையோடே சேர்க்கவுமாம், (௩)

ஆறு;—(நீர்மையால்) உம்மையடிமைகொள்ளுகைக்கு மேற்படச்செய்ததுண்டோவென்னில்; அடிமைகொள்ளுவாரைப்போலே என்னெஞ்சை வஞ்சித்துப்புகுந்து, தன்குணங்களாலும் செயல்களாலுமென்னைமாய்த்து, என்னுயிராய், என்னுயிரை புஜித்தருளினான்; முந்துற மெய்யரைப்போலே வந்துபுகுந்தபடியும், பின்னைச்செய்தபடியும், ஒருவன் வஞ்சித்தபடி யொன்று மறிகிறிலேனென்கிறார். (௩)

ஈடு; அவ:—அடிமைகொள்ளவென்றுபுகுந்து, தன்படிகளைக்காட்டி ஸர்வஸ்வஹரணம்பண்ணினபடிகளை அநுஸந்திக்க க்ஷமனாகிறிலேனென்கிறார்.

(நீர்மையால்நெஞ்சம்வஞ்சித்துப்புகுந்தென்னை யீர்மைசெய்து) (நெஞ்சமவஞ்சித்துப்புகுந்து என்னை - நீர்மையால் - ஈர்மைசெய்து) தான் சேஷியும் நான் சேஷபூதனுமான முறையிலே பரிமாறவேணுமென்று நெஞ்சையிசையப்பண்ணி, க்ருத்ரிமித்துப்புகுந்தான்; முறைகெடப்புகுரவென்னில் இசையாரிறே. க்ருத்ரிமிக்கையாவது - ஒன்றைச்சொல்லி மற்றொன்றைச் செய்கையிறே. அதேதென்னில் (நீர்மையால்-என்னை ஈர்மைசெய்து) நீர்மையாவது - தாழநின்று பரிமாறுகையும், அதுக்கடியான சீலமும்.

(என்னை) "முறையிலே பரிமாறவாரும்" என்றத்தை மெய்யென்றிருந்தவென்னை. (ஈர்மைசெய்து) ஈரும்தன்மைகளைச்செய்து. தன்தாழ்ந்தசெயல்களாலே ஈடுபடுத்தியென்னுதல்; ஈரப்பாட்டை விளைத்தென்னுதல், என்னை நீராம்படிபண்ணியென்கை. (என்னுயிரா யென்னுயிருண்டான்) எனக்குதாரகரைப்போலேபுகுந்து என்னை; பாதகனாப்புகுரில் இவரிசையாரே!; இருவருங்கூட

புஜிக்கப்புகுந்து போக்தாதானேயானான்; அன்றிக்கே, (என்னுயிரா யென்னுயிருண்டான்) எனக்குத்தன்னாலல்லது செல்லாதபடிபண்ணி யென்னைபுஜிப்பதுஞ்செய்தானென்றுமாம்.

(சீர்மல்குசோலை) அழகுமிக்கசோலை. என்னோட்டைக் கலவியாலவனுக்குண்டான பௌஷ்கல்யம் அவ்வூரிற்சோலையே கோட்சொல்லித்தாராநின்றது. (தென்காட்கரையென்னப்பன்) ஸாலபனுமாய் நிருபாதிகபந்துவுமானவன் என்கார்யத்துக்குத்தானேகடவனாயிருக்கிற பந்தந்தோற்ற ஸந்நிஹிதனாயிருக்கிறவன்.

(கார்முகில்வண்ணன்) என்னோட்டைக் கலவியாலே, கடலை முழுக்கப்பருகின காளமேகம்போலேயாய்த்து அவன்வடிவிற் செவ்வியிருப்பது. (க) "தூநீர்முகில்போல்தோன்றாயே" என்றிவராசைப்பட்டபடியே தோற்றி யநுபவிப்பித்துப் போராநின்றபின்பு, அத்தலையிற்செவ்வியிருந்தபடி. (தன்கள்வமறிகிலேன்) முகப்பிலொன்றாய் முடிவிலொன்றான செயல்கள்தெரிகிறதில்லை. அடிமைகொள்ளவென்று புகுந்து அச்செயலைத்தான்செய்து நின்றநிலை யெனக்கொன்றுந்தெரிந்திருக்கிறதில்லை. (அறிகிலேன்) ஸர்வாதிகனிப்படி தாழநின்று பரிமாறுகைகூடாது, நான்ப்ரமிக்கிறேனோ; ஸம்ஸ்லேஷத்தில் "மருள்தானீதோ" என்றத்தைச் சொல்லுகிறார். (௩)

நான்காம்பாட்டு.

அறிகிலேன்தன்னுளனைத் துலகும்நிற்க * நெறிமையால்தானுமவற்றுள்நிற்கும்பிரான்* வெறிகமழ்சோலைத் தென்காட்கரையென்னப்பன் * சிறியவென்னாருயிருண்ட திருவருளே. (௪)

ப:—அநந்தரம். முறைதப்பாதபடி ஸர்வாதார பூதனாய் ஸர்வாந்தராத்மாவானவன், அதிக்ஷுத்ரனான வென்னோடேகலந்தநுபவித்த ஸௌசீல்யாதிஶயத்தாலேவந்த மஹோபகாரத்தை யளவிட்டறிய மாட்டுகிறிலேனென்கிறார்.

(இ - ள்.) தன்னுள்-தன்ஸங்கல்பைகதேசத்திலே அனைத்துலகும்-ஸமஸ்தலோகபதார்த்தங்களும் நிற்க-த்ருதமாகநிற்க, தானும்-தானும், நெறிமையால்-ஶரீராத்மஸம்பந்தப்ரயுக்தமான ஶேஷஶேஷித்வமாகிற முறையாலே, அவற்றுள் - அவற்றுக்குள்ளே, நிற்கும்-நிற்கும், பிரான் -

(க) அ-டு-ரு-

உபகாரகனாய். வெறிகமழ் - விலக்ஷணமான பரிமளத்தைப் ப்ரவஹிக்கிற, சோலை - சோலையையுடைய, தென்காட்கரை - திருக்காட்கரையிலே நிற்கிற, என்னப்பன் - என்ஸ்வாமியானவன், சிறியவென் - அதிக்ஷுத்ரனானவென், ஆருயிர்-ஆத்மவஸ்துவை, உண்ட-மேல்விழுந்தநுபவித்த, திருவருள் - ஸௌசீல்யோபகாரத்தை, அறிகிலேன்-இன்னபடியிருக்கிறதென்றறியமாட்டுகிறிலேன். (ச)

ஆறு:—(அறிகிலேன்) உபாமுடையகிறத்கில் அவனங்ஙனே அபிநிவிஷ்டனானால் சிகனுண்டோவென்னில்; அபிநிவிஷ்டனானான், மற்றுஸ்ரீதரோடு நெறிகெடாமைகலந்து பரிமாறுமாபோலே பரிமாறவமையாதோ, தானென்னைபுஜித்தருளி நெறிகெட்டபடி பரிமாறவேணுமோ, இவ்வபிநிவேசத்துக்கொரு முடிவுகாண்கிறிலேனென்கிறார். (ச)

ஈடு; அவ;—தான்ஶேஷியான முறைதப்பாமேயெல்லாரோடும் கலக்கிறவன், அதிக்ஷுத்ரனானவென்பக்கல்பண்ணின வ்யாமோஹம் எனக்கறிய நிலமன்றென்கிறார்.

(அறிகிலேன்) உகப்பாலேசெய்தானோ, இவ்வஸ்துவை யழிக்கைக்குச் செய்தானோ, அறிகிறிலேன். (தன்னுள்ளனைத்துலகும்நிற்க) என்னை யொழிந்தவிஷயத்தில் அவன் உபகாரமேகிடீர் பண்ணிப்போருவது! ஸகலலோகங்களும் தன்ஸங்கல்பத்தைப்பற்றிக்கிடக்க, தானவற்றினுள்ளே தன்ஶேஷித்வமுறையாலே நிற்குமவன், இவரொருவர்விஷயத்திலுமிறே இப்படி முறைகெடப்பரிமாறிற்று!.

“மூவுலகுந்தன்னெறியாவயிற்றிற்கொண்டு- சிறியேனுடைச் சிந்தையுள் - நின்றொழிந்தார்” என்றத்தைச் சொல்லுகிறார். ப்ரளயாபத்திலே ஜகத்தையடையரக்ஷித்தவன், என்னையொருவனையுமழித்தான். ப்ரதிகூலரை யம்பாலேயழிக்கும், அநுகூலரை குணத்தாலேயழிக்கும், மத்யஸ்த்தரைப்போலேயாகாதே அவன்ரக்ஷிப்பது. அம்புபட்டபுண் மருந்திட்டாற்றலாம்; குணத்தால்வந்தபுண்ணுக்குப் பரிஹாரமில்லையிறே.

(வெறியித்யாதி) அவ்வூரையுடையவனுக்கு ஒருவஸ்து வத்தேஶ்யமாவதே!. பரிமளமலை யெறியாநிற்பதானசோலை. (என்னப்பன்) உத்பாதகன்கிடீ ரழித்தான்! (சிறியவென்னாருயிருண்ட) சிறியேனுடைய நற்சிவனை - அதிக்ஷுத்ரனானவென்னாத்மாவை. அவ

னுடையமேன்மைக் கெல்லைகாண வொண்ணாதவோபாதி, தம்முடைய சிறுமைக்கு மெல்லையில்லையாக நினைத்திருக்கிறார்.

(என்னாருயிருண்ட) இவர் தம்மைச் சிறுகநினைத்திராநின்றார், அவன் இவரை நித்யஸித்தர்க்கு மவ்வருகாக நினைத்திராநின்றான், "இவர் தம்மைச் சிறுகநினைத்தால் ப்ரயோஜநமென், இவர் தம்மைத் தாமறிந்தாரோ" என்று மேல்விழாநின்றான். (திருவருள் - அறிகிலேன்) இதுமுன்னம் ஸ்வரூபஜ்ஞாநத்தாலே செய்ததொன்றன்றே ஸ்வரூபஜ்ஞாநத்தாலேவிரும்பிலிறே ஸ்வரூபத்தளவிலே நிற்பது, வ்யாமோஹம் முறையழிக்குமிறே. (ச)

ஐந்தாம் பாட்டு.

திருவருள் செய்பவன்போல வென்னுள்புகுந்து * உருவமுமாருயிரு முடனேயுண்டான் * திருவளர்சோலைத் தென்காட்கரையென்னப்பன் * கருவளர்மேனி நங்கண்ணன் கள்வங்களே. (ரு)

ப:—அநந்தரம், ஆஶ்ரிதபவ்யனா யிருக்கிற க்ருஷ்ணனானவன். எனக்கு உபகரிப்பாரைப் போலேபுகுந்து என்னுடையஶரீராத்மவிபாகமறத் தான் தனக்கு போக்யமாம்படி யபஹரித்துக் கொண்டானென்கிறார்.

(இ - ள்.) திருவருள் - "அடிமைசெய்யவேண்டுகோம்" என்று நானாசைப்பட்ட படியிலே அடிமைகொள்ளுகையாகிற நிரவதிகமஹோபகாரத்தை, செய்பவன்போல - பண்ணுவாரைப்போலே, என்னுள்-என்னெஞ்சிலே, புகுந்து - புகுந்து உருவமும்-எனக்கும் ஹேயமான ஶரீரத்தையும், ஆருயிரும் - அத்தோடு வ்யாப்தமான வாத்மாவையும், உடனேயுண்டான்! - ஹேயோபாதேய விபாகமில்லாதபடி, நிரதிஶய போக்யமாம்படி விரும்பினான்!, திருவளர் - அழகுமிஞ்சின, சோலை - சோலையையுடைத்தான, தென்காட்கரை - திருக்காட்கரையிலே, என்னப்பன் - என் நாதனாய், கருவளர்மேனி - என்பக்கல் ஸம்ஶ்லேஷத்தாலே ஶ்யாமளதைமிஞ்சிவருகிற திருமேனியையுடையனாய்க் கொண்டு. என்கண்ணன் - எனக்கத்யந்தபவ்யனான க்ருஷ்ணனானவனுடைய, கள்வங்களே! - கள்வங்களிருக்கிறபடியே!

உபகரிப்பாரையோலே போக்யபூதனாய்வருகையும், தான் போக்தாவாய்க் கொண்டு உபக்ருதனாகையும், தேஹாத்மவிபாகத்தை யெனக்குப் பிறப்பிப்பாரைப்போலேவருகையும், தானே தேஹாத்ம விபாகம்

பண்ணாமல் புஜிக்கவும் அத்தாலே ரூபௌஜ்ஜ்வல்யம் பிறக்கையும்; இவை சில ப்ரவ்ருத்திகளாயிருக்கிறனவே!. (ரு)

ஆறு.—(திருவருள்) திருவருள்செய்பவன்போலே யென்னுள்ளேபுகுந்து, என்னைபுஜித்தருளுகை யன்றியே என்னுருவமுங்கூட புஜித்தருளினான், ஒருவனபிநிவேசமிருக்கும்படியேயிது!, முந்துற வந்து புகுந்தருளினபடியது, பின்னை நின்று செய்தருளினபடியது. ஒருவன் கள்வங்களே! என்கிறார். (ரு)

ஈடு; அவ;—என்னை யடிமைகொள்வாரைப் போலேபுகுந்து, என் ஶரீரத்தையு மாத்மாவையுங்கூட புஜித்தான், ஒருவன் வ்யாமோஹமிருந்தபடியென்! என்று விஸ்மிதராகிறார்.

(திருவருள்செய்பவன்போல) ஸர்வஸ்வதாநம்பண்ணி அடிமைகொள்வாரைப்போலே யாய்த்து ப்புகுந்தது; * துயரறுசுடரடி தொழுதெழுகைக்கு * மயர்வறமதிநலமருளுவாரைப்போலேபுகுந்தான். (போல) என்கிறது - என்திறத்தில்செய்ததங்ஙனல்ல, திருவருள் தான்பெற்றானாயிராநின்றான். (என்னுள்புகுந்து) * வழுவிலா வடிமைசெய்யப்பாரித்தவென்பக்கலிலேபுகுந்து.

(உருவமும்) முதலிலே, (க) "அழுக்குடம்பு" என்றதை விரும்பாநின்றான், அவனங்கீகாரத்துக்குமுன்பு இவர்தேஹத்தையேவிரும்பிப்போந்தார்; அவன் இவரை யங்கீகரித்தபின்பு இவர்தேஹத்தை விரும்பப்புக்கான். இவருக்கு அவனோட்டை ஸஹவாஸம் ஸ்வரூபஜ்ஞாநத்துக்குடலாய்த்து; அவனுக்கு இவரோட்டை ஸஹவாஸம் தேஹாத்மாபிமாநத்துக்குடலாய்த்து. (உருவமும்) "இவர்தாம் வேணுமோ, இவர் 'என்னது' என்றபிமாநித்ததென்றமையாதோ" என்றிராநின்றான். (ஆருயிரும்) அபர்யவஸாநவ்ருத்தியா ஆத்மாவளவுஞ்செல்லுதல். இதுதான் தத்பர்யந்தமாயல்ல திராமையாலே அவ்வளவுஞ்செல்லுதல். (உடனேயுண்டான்) அதுதன்னிலும் வாசிவைத்து புஜித்திலன். (உண்டான்) எனக்கவகாஶம்வையாதே தானேபோக்தாவானான்.

(திருவளர்சோலைத் தென்காட்கரையென்னப்பன்) தானே போக்தாவாய் புஜித்தமை. அவ்வூரிற்சோலையும் வடிவும் கோட்சொல்லித்தரும். அழகுவளராநின்றுள்ளசோலை. (கருவளர்மேனி)

(க) திருவி-௧-

கறுப்புவளராநின்றுள்ளவடிவு. (க) "ஸமெதெக௱-௫ஃபு - ஸதைக ரூபம்" என்கிறது இவ்வளவிற்கண்டிலோம். (நங்கண்ணன்) ஆஶ்ரிதபவ்யனான க்ருஷ்ணன். (கள்வங்கள்) முகப்பிலொன்றாய், முடிவிலொன்றாயிருக்கும் வ்ருத்திகள்.

அடிமைகொள்வாரைப்போலே புகுந்து தான் ஸ்வாம்யனாய்த் தாழநின்றும், விரோதியான ஶரீரத்தைக்கழித்துத் தரவென்றுபுகுந்து தேஹாத்மவிபாகம்பண்ண மாட்டாதொழிகையும், போக்யமாய்ப்புகுந்து தான்போக்தாவாகையும், என்பேறாகப்புகுகிறானாகப் புகுந்து தன்பேறாகத்தலைக்கட்டுகையும், இதடங்க வடிவில் வேறுபாட்டாலே தோற்றியிருக்கையும். இத்தலையிலாத்மாபஹாரத்தைத் தவிர்த்தது தன்னாத்மாபஹாரத்தாலே யாய்த்து. (௯)

ஆறாம்பாட்டு.

என்கண்ணன்கள்வமெனக்குச் செம்மாய்நிற்கும் * அங்கண்ணனுண்ட வென்னாருயிர்க்கோதிது* புன்கண்மையெய்திப்புலம்பியிராப்பகல் * என்கண்ணனென்றவன் காட்கரையேத்துமே. (௬)

ப:—அநந்தரம், அதி வ்யாமுக்தனான க்ருஷ்ணனுடைய வ்யாபாரங்கள் எனக்கு ருஜுவாயிருக்குமென்கிறார்.

(இ - ள்.) என்கண்ணன் - என்பக்கலத்யந்தம் வ்யாமுக்தனான க்ருஷ்ணனுடைய, கள்வம் - முகப்பிலொன்றும் முடிவிலொன்றுமாம்படியான க்ருத்ரிமவ்யாபாரங்களானவை, எனக்கு - எனக்கு, செம்மாய் நிற்கும்-ருஜுவாயேயிராநின்றன, எங்ஙனேயென்னில்; அங்கண்ணன்- அவன் வ்யாமோஹத்தாலே சபலனாய்க்கொண்டு, உண்ட - புஜிக்கையாலே, கோது-நிஸ்ஸாரமான, என்னாருயிரிது-இந்தவென்னாத்மாவானது அவன் தன்னை ஸாராபஹாரம்பண்ணினத்தை உபகரித்தானாக நினைத்து அவனைவிடமாட்டாதே, புன்கண்மையெய்தி - தைந்யத்தைப்ராபித்து, என்கண்ணனென்று-எனக்குபவ்யனானவனென்று, இராப்பகல்-இராப்பகல், புலம்பி - ப்ரலாபித்து, அவன்காட்கரை - அவன் ஸந்நிஹிதனாய் நிற்கிற திருக்காட்கரையை, ஏத்தும் - சொல்லாநின்றது.

அங்கண்ணன் - அதிசபலன்; புன்கண்மை - பேகணிப்பாய், தைந்யமென்றபடி ; புல்விதானகண்மையை யெய்தியென்று - அல்பமறிவு பெற்றதென்றுஞ் சொல்லுவார்கள். (௬)

(க) வி-பு-க-உ-க-

ஆறு ;—(என்கண்ணன்) "ஒருநாளிங்ஙனே அவன்வஞ்சனை யிலே யகப்பட்டால், பின்னை யதில் அகப்படாதே பரிஹரிக்கவொண்ணாதோ" என்னில் ;

நாடோறு மிவன் மெய்யே யென்னை யடிமைகொண்டருள வருகிறானென்று எனக்குத் தோற்றும்படிவந்து, அதிசபலமாய் என்னுத்மாவை அறிவழியும்படி புஜித்துப்போம். போனவாறே பின்னையு மிவ்வாத்மாவானது, நெடும்போதோடு கூட்ப்புத்தமாய், அவனையாசைப்பட்டு, "என்கண்ணு, என்கண்ணு" என்றலற்றி, அவனெழுந்தருளியிருந்த திருக்காட்கரையை பேத்தாநிற்குமென்கிறார்!

ஈடு; அவ;—"அவன் க்ருத்ரிமனென்றறிந்தால் அதிலே கிடந்து நெஞ்சாறல்படாதே யகன்றாலோநீர்" என்ன ; அவனைக் கண்டவாறே, அவ்வஞ்சனைகளை மெய்யென்றிருப்பனென்கிறார்.

(என்கண்ணன் கள்வமெனக்குச் செம்மாய்நிற்கும்) எனக்கு பவ்யனைப்போலேயிருக்கிற க்ருஷ்ணனுடைய வஞ்சநங்கள் எனக்குச் செவ்விதாய்த்தோற்றும். ஒருநாள் அவன் களவிலே யகப்பட்டால் பின்னை மீளமாட்டேன். அவன்முகத்திலே விழித்தவாறே அவன்செய்யுமவை யடைய மெய்யாயிருக்குமெனக்கு. (எனக்குச் செம்மாய்நிற்கும்) என்றத்தை, "எனக்குச்சேமமாயிருக்கும்" என்றொரு தமிழன்நிர்வஹித்தான்.

"நங்கண்ணன்கள்வங்கள்" என்று கீழ் முடிய, (என்கண்ணன்) என்று தொடங்குவானென்னென்னில் ; நாமென்றும் யாமென்றும் பர்யாயமாகையாலே, பொருளிசையந்தியா யிருக்கிறது. "நங்கண்ணன் கள்வங்கள்" என்று பாடமாகில் நேரே கிடக்கும். (அங்கண்ணனுண்ட) அதிசபலனானவனநுபவித்த. அதிப்ரவணரை "அங்கண்ணர்" என்னக்கடவதிறே. (என்னுருயிர்க்கோதிது) கோதான வென்னுத்மாவானவிது. ஆத்மா கோதாம்படிகாணும் பரிமாறிற்று.

(புன்கண்மை) பேகணிப்பு. பொல்லா நோக்கையுடைத்தாயென்கை. "மீளவுயிர்ப்பெய்து" என்றுபந்து நிர்வஹிப்பது. "'இதுதான் ஸப்தத்தோடே சேர்ந்திருக்கிற தில்லை, இந்த ஸ்ருதமான வர்த்தத்தோடே ஸப்தத்தையுஞ்சேர வஸிப்பிக்கும்படியெங்ஙனே' என்று விசாரியாநிற்க செயதே, 'கோதானவிதுதிரியவும்

புன்கண்மையெய்தும்போது மீளவு முயிர்ப்பெய்ததாகவேணுமிறே, ஆர்த்தஸ்வபாவத்தாலே தன்னடையேவரும்' என்று நான் சொன்னேன், ஜீயர் போர ப்ரீதராயருளினர் " என்றருளிச்செய்வர்.

(என்கண்ணனென்று-இராப்பகல்-புலம்பி) முன்பெனக்கு பவ்யனை க்ருஷ்ணனென்று அஹோராத்ரவிபாகமின்றிக்கே கூப்பிட்டு, அவன்வர்த்திக்கிற திருக்காட்கரையை யேத்தாநின்றது; (க) " ராகவஸ்ய நிவேசநே - ராகவஸ்ய நிவேசநே " என்னுமா போலே. (௬)

ஏழாம் பாட்டு.

காட்கரையேத்துமதனுள் கண்ணாவென்னும் * வேட்கைநோய்கூரநினைந்துகரைந்துகும் * ஆட்கொள்வானொத் தென்னுயிருண்ட மாயனால் * கோட்குறைபட்ட தென்னுருயிர்கோளுண்டே. (௭)

ப:—அநந்தரம், அவனுடைய அதிவ்யாமோஹத்தினுடைய அபர்யவஸாநத்தாலே என்னுத்மாவானது புக்தமாயிருக்கச்செய்தேயும், அவஸிஷ்டமுண்டென்னலாம்படி யிராநின்றதென்கிறார்.

(இ - ள்.) ஆட்கொள்வானொத்து-அடிமைகொள்வாரைப்போலே, புகுந்து என்னுயிர் - என்னுத்மாவை, உண்ட - தன்பக்கலிலே க்ரஸித்துக்கொண்ட, மாயனால் - ஆச்சர்யபூதனாலே, கோளுண்டே - புஜித்துக்கொள்ளப்படச் செய்தேயும், கோள் - போகம், குறைபட்டது - அவசேஷிக்கப்பட்ட தென்னலாம்படியிருக்கிற, என் ஆருயிர் - என்னுத்மாவானது, காட்கரை - அவனிருக்கிற திருக்காட்கரையை, ஏத்தும் - ஏத்தாநிற்கும், அதனுள் - அதுக்குள்ளேநிற்கிற, கண்ணா என்னும்-கண்ணா என்று பவ்யனானவன்றன்னை யழையாநிற்கும்; அவ்வளவிலேநில்லாதே, வேட்கைநோய்-அபிநிவேசமாகிற ஈடுபாடு, கூர-மேற்கொள்ள, நினைந்து-அவன்பரிமாற்றத்தைநினைத்து, கரைந்து-ஸிதிலமாய், உகும்-த்ரவித்து மங்காநிற்கும். (௭)

ஆறு:—(காட்கரையேத்தும்) இப்படி அவனைக் காணவேணுமென்னுமாசையாலே அவனைநினைத் தலற்றி அவஸந்நமானவாறே, பின்னையும் பண்டுபோலே யென்னையடிமைகொள்வாரைப் போலே வந்துபுகுந்து என்னுயிரை மாள புஜித்து, பின்னையும் புஜியாதானாயிருக்குமென்கிறார். (௭)

(க) ரா-ஸு-௩௩-௧௭-

ஈடு; அவ:—அடிமைகொள்வாரைப்போலே புகுந்து, என்னுயிரை நேராக புஜித்து, பின்னையும் புஜியாதாரைப்போலே யிருக்குமென்கிறார்.

(காட்கரையேத்தும்) அவனிலு மவனிருந்தவூரை யேத்தும். (அதனுட்கண்ணுவென்னும்) பரத்வத்திற்காட்டி லவ்வூரிற் புகுந்த பின்புண்டானவேற்றம். "என்கண்ணன்" என்று, காட்கரையேத்தும்: அவ்வூரையேத்தா, அவனையேத்தும்; இரண்டுக்கும் புறம்பு போகிறதில்லை. (வேட்கைநோய் கூரநினைந்து) அபிநிவேசம் மிகும்படி யநுஸந்தித்து (கரைந்துகும்)ஶிதிலமாய் ஓரவயவியென்று ப்ரதிபத்திபண்ணுதபடி யுகும்.

(ஆட்கொள்வானொத்தென் னுயிருண்டமாயனால்) அடிமைகொள்வாரைப்போலே புகுந்து, என்னை வெறுந்தரையாக்கின ஆஶ்சர்யபூதனாலே. கீழ் "திருவருள்" என்று மறைத்துச் சொன்னத்தை வெளியிடுகிறார். கிட்டினபோது தாழநின்று மின்மினி பறக்கப் பரிமாறின ஆஶ்சர்யம். (என்னுருயிர் கோளுண்டே - கோட்குறைபட்டது) என்னாத்மாவை நிஶ்ஶேஷமாக புஜிக்கச்செய்தேயும், இத்தலையிலே சிறிது சேஷித்தது; அவன் ஸாபேக்ஷனுப் போகையாலே இத்தலையிலே யின்னம் சிறிது ஶேஷித்ததென்றிருக்கிறார்; இப்போதிருந்து க்லேசப்படக் காண்கையாலே சிறிதுதொங்கிற்றுண்டென்றிருக்கிறார்; ஒருஸர்வஜ்ஞன், இல்லாதவொன்றிலே யித்தனை வ்யாமோஹம் பண்ணக்கூடாதென்றிருக்கிறார். (எ)

எட்டாம் பாட்டு.

கோளுண்டானன்றிவந் தென்னுயிர்தானுண்டான்* நாளுநாள்
வந்தென்னை முற்றவுந்தானுண்டான் * காளநீர்மேகத் தென்காட்
கரை யென்னப்பற்கு* ஆளன்றேபட்டதென் னுருயிர்பட்டதே. (அ)

ப:—அநந்தரம், அபேக்ஷாநிரபேக்ஷமாக நித்யாதரத்தைப் பண்ணுகிறவிவர்க்கு என்னுத்மாபட்டபாடே! என்று ஹர்ஷத்தாலே யீடுபடுகிறார்.

(இ - ள்) கோளுண்டானன்றிவந்து - என்னாலே ஸ்வீகரிக்கப்பட்டன்றியே நிர்ஹேதுகமாகவந்து, என்னுயிர் - என்னுத்மாவை, தான்,

உண்டான் - அபிநிவிஷ்டனாய் புஜித்தான், அவ்வளவேயன்றியே, நாளு நாள்வந்து - நாள்தோறும் அபூர்வமாகவந்து. என்னை- ஸ்வரூபத்தோடு குணங்களோடு (ஶரீரத்தோடு) வாசியற என்னை யத்யாதரம்பண்ணி-முற்றவுந்தானுண்டான் - ஒன்றும் சேஷியாதபடி புஜித்தான், காள-கறுத்தநிறத்தையுடைத்தாய், நீர்- நீர்கொண்டெழுந்த, மேகம் - காள மேகம்போலே, தென்காட்கரை-திருக்காட்கரையிலேவர்த்திக்கிற, என்னப்பற்கு - என்ஸ்வாமியானவனுக்கு, ஆட்பட்டதன்றே - அடிமைப்பட்டதித்தனையன்றோ; என்னுருயிர்பட்டதே!-என்னுத்மாபட்டதுதான்!

ஆறு:—(கோளுண்டான்) இப்படி யென்னுயிரைமாளபுஜித்தே, பின்னையும் புஜியாதானாய்வந்து புஜிக்கும்; இப்படியே நாளும் நாளும்வந்து என்னைபுஜித்தருளினான்; நான் தனக்கடிமையான வித்தனையன்றோ; என்னை யிங்ஙனேபடுத்தவேணுமோ வென்கிறார், (அ)

ஈடு; அவ;—நாள்தோறு மென்னையநுபவியாநின்றாலும் பெறாப்பேறுபெற்றாப்போலே புஜிக்கிற விவனுடையகுணவத்தை பொறுக்கவொண்கிறதில்லை யென்கிறார்.

(கோளுண்டானன்றிவந்தென் னுயிர்தானுண்டான்) இதுக்குப்பலபடியுமருளிச்செய்வர் - என்பக்கலொரு உபகாரங்கொண்டன்றிக்கே நிர்ஹேதுகமாக வென்னாத்மவஸ்துவை யநுபவித்தான்; அதவா, இதுக்குமுன்பிப்படி யிருப்பதொரு சரக்குப் பெற்றறியாதானு யென்பக்கலிலே யபிநிவிஷ்டனானு னென்றுமாம்; என்னால் தான்கொள்ளப்படாதிருக்க, தானென்னைக் கைக்கொண்டானென்னுதல்.

(நாளுநாள்வந்து)ஒருநாள்புஜித்து "இனி இதுநாம்புஜித்ததன்றோ" என்று கைவாங்கியிருந்தானோ. நாள்தோறும் நாள்தோறும் வந்து. அவனுடைய * அப்பொழுதைக்கப் பொழுதென்னாராவமுதமிருக்கிறபடி. (என்னைமுற்றவுந் தானுண்டான்) அணுபரிமாணமான விவ்வஸ்துவை விபுவானதான் விளாக்குலைகொண்டு அநுபவித்தானென்கிறவிது தனக்கேற்றமாம்படி கௌரவியாநின்றான். "சிறியவென்னாருயிர்" என்றவது - தம்மைப்பார்த்து; அவனுடைய வநுபவத்தைக்கொண்டு சொல்லுகிறாரிது.

(காளநீர்மேகத்தென்காட்கரை யென்னப்பற்கு) கறுத்தநீர்கொண்டெழுந்த காளமேகம்போலேயிருக்கிற வடிவையுடையனாய்,

அம்மேகந்தான் வர்ஷிக்கும் ஸ்த்தலத்திலே படிந்தாப்போலே திருக்காட்கரையிலேவந்து ஸந்நிதிபண்ணின நிருபாதிகபந்துவுக்கு, வடிவழகது, ஊரது, தனக்கென்ன குறையுண்டா யிப்படிபடுகிறான்!.

(ஆளன்றேபட்டது!) அடிமையன்றேபுக்கது!. ராவணாதிகளைப் போலே எதிரம்புகோத்தேனோ?. (என்னுருயிர்பட்டதே) ஓராத்மவஸ்து படும்பாடேயிது!. எதிர்த்தார், உடம்பிழத்தல், புண்பட்டதுக்கு மருந்துவைத்தாற்றுதல் செய்யுமத்தனையிறே; இங்காருயிரிறே நோவுபட்டது; குணத்தால்வருநோவு ஸ்வரூபகதமாய் பரிஹாரமில்லையிறே.

(அ)

ஒன்பதாம்பாட்டு.

ஆருயிர்பட்டதெனதுயிர்பட்டது * பேரிதழ்த்தாமரைக்கண் கனிவாயதோர்* காரெழில்மேகத் தென்காட்கரைக்கோயில்கொள்* சீரெழில்நால்தடந்தோள் தெய்வவாரிக்கே. (௯)

ப:—அநந்தரம், அநவதிக ஸௌந்தர்யயுக்தனான ஸர்வேஶ்வரனுக்கென்னுயிர்பட்டபாடு ஆருயிர்பட்டது? என்கிறார்.

(இ - ள்.) பேரிதழ்-பெரியவிதழையுடைத்தான, தாமரை-தாமரைபோலேயிருக்கிற - கண் - கண்ணையும், கனி - கனிபோலேசிவந்த, வாயது - வாயையு முடைத்தாயிருப்பது, ஓர் - ஒரு, காரெழில் - கறுத்தவெழிலையுடைத்தான, மேகம் - மேகம்போலே, தென் - அழகிய, காட்கரை - திருக்காட்கரையை, கோயில்கொள் - வாஸஸ்த்தாநமாகக் கொண்டு, சீரெழில்-வீரஸ்ரீயையும் எழிலையுமுடைத்தாய், நால்-நாலுவகைப்பட்ட, தடம் - பெரிய, தோள்-திருத்தோளையுமுடையனாய், தெய்வம் - தெய்வங்களுக்கு, வாரிக்கு - உத்பத்திஸ்த்தாநமான கடலாயிருக்கிறவனுக்கு, எனதுயிர்-என்னாத்மா, பட்டது-போக்யமாய்க்கொண்டுபட்டது, ஆருயிர்பட்டது - நித்யாநுபவம்பண்ணுகிற ஸூரிகள் ஸ்வரூபந்தான்பட்டதோ?.

ப்ரௌடவிஷயபோகத்திற்காட்டில் அபிநவவிஷயம் ஈடுபாடு கனத்திருக்கும் என்றுகருத்து.

(௯)

ஆறு;—(ஆருயிர்) "அவனும்முடையதிறத்தில் விசேஷமாகச் செய்ததுண்டோ, தன்னோடு பரிமாறுவாரையெல்லாரையு மப்படியேயன்றோ படுத்துவது" என்னில்;

அவனால் நான்பட்டபாடு திருநாட்டிலுள்ளார்தான்பட்டாரோ? தனக்கென்னகுறையுண்டா யிப்படிசெய்தருளினானென்கிறார். (௯)

ஈடு; அவ;—"நீரேபோலிப்படிபட்டீர், குணாநுபவமே யாத்ரையான நித்யஸூரிகளும்படும்பாடிதுவன்றோ" என்ன; அவர்கள்தாம் நான்பட்டது பட்டார்களோவென்கிறார்.

(ஆருயிர் பட்டதெனதுயிர்பட்டது) நான்பட்டபாட்டை நித்யஸூரிகளிலே தான்பட்டாருண்டோ?. பகவத்குணங்களுக்கு பூமியாயிருக்கிற ஸம்ஸாரத்திலே நான்பட்டபாட்டை, நித்யவிபூதியிலேயுள்ளவர்கள்தாம் பட்டார்களோவென்கிறார். "இங்கு எனதுயிர்பட்டது அங்கு ஆருயிர்பட்டது?" என்றெம்பெருமானார். "எல்லாரும் குணாநுபவமாகில் பண்ணுகிறது இவர்க்கிவ்வாசிகூடினபடியென்" என்று நான்கேட்க, "நவோடையான ஸ்த்ரீக்கு பர்த்தாவினுடைய கரஸ்பர்ஶம்பட்டவாறே வேர்ப்பது விடுவதாமாபோலே, இவரநுபவத்தில் புதியராகையாலே வருகிறதுகாணும்" என்று ஜீயரருளிச்செய்தார்

உயிரையழித்த ஹேதுக்களைச் சொல்லுகிறது மேல்;—(பேரிதழ்த்தாமரைக் கட்கனிவாயதோர்) பெரியவிதழையுடைய தாமரைபோலேயிருந்துள்ளகண்ணையும்,சிவந்தவாயையுமுடையனாய். (காரெழில்மேகத்தென்காட்கரைக்கோயில்கொள்)கறுத்தவெழிலையுடைத்தான மேகம்போலே வடிவையுடையனாய், திருக்காட்கரையைக்கோயிலாகவுடையனாய். (சீரெழில்நாற்றடந்தோள்) வீர ஸ்ரீயையுமெழிலையுமுடைத்தாய், கல்பகதருபணைத்தாப்போலே நாலாய்ச் சுற்றுடைத்தான தோள்களையுடைய. (தெய்வவாரிக்கு) தெய்வங்கள்படுங்கடலுக்கு. வாரி-கடல். தைவங்களுக்கு உத்பாதகனுக்கு. அபிமானிகளுக்கு உத்பாதகனானவன்கிடீர் அபிமானஸூந்யனான வென்னையழித்தான்!. வடிவழகையும் அவ்வூரிலிருப்பையுங்காட்டியாய்த்து இவரையழித்தது. (௯)

பத்தாம்பாட்டு.

வாரிக்கொண்டுன்னை விழுங்குவன்காணிலென்று* ஆர்வுற்ற வென்னையொழிய வென்னில்முன்னம் பாரித்து* தானென்னை முற்றப்பருகினான்* காரொக்குங்காட்கரையப்பன்கடியனே. (௰)

ப:—அநந்தரம், அபிநிவேசத்திலும் வந்தால் என்னிலும் முற்பாட னாய்க்கொண்டு ஶீக்ரகாரியா யிராநின்றானென்கிறார்.

(இ-ள்.) உன்னைக்காணில் - உன்னைக்காணப்பெறில், வாரிக்கொண்டு - ஸ்வரூபரூபகுணவிபூதியிலே யொன்றும் சேஷியாதபடி, விழுங்குவனென்று - கபளீகரித்துபுஜிப்பனென்று, ஆர்வுற்ற - ஆதரித்த, என்னையொழிய - என்னளவன்றியே, என்னில்முன்னம் - எனக்குமுன்னே தானுள்ளவன்றேதொடங்கி, பாரித்து - பாரித்து, தான் - அபரிச்சிந்ந ஸ்வபாவனான தான், என்னை - அத்யல்பனான வென்னை, பசித்தவன் சோறுகண்டாப்போலே யிருக்கிற வென்னளவன்றியே, தாஹித்தவன் தண்ணீர் குடித்தாப்போலே பெருவிடாய்ப்பட்டு, தான், முற்ற - பூர்ணமாம்படி, பருகினான் - பருகினான், காரொக்கும் - கடலைப்பருகும் காளமேகம்போலே, காட்கரையப்பன் - திருக்காட்கரையிலே நிற்கிற வுபகாரகன், கடியன் - அநுபவத்திலொருவர்க்கும் முற்பாடுகொடாதபடி சீக்ரகாரியாயிருந்தான். (௧௰)

ஆறு;—(வாரிக்கொண்டு) "நீர்தாமவனை புஜியாதே உம்மை புஜிக்கக்கொடுத்துக்கொண்டிருப்பானேன்" என்னில்;

"உன்னைக்காணில் வாரிக்கொண்டுவிழுங்குவன்" என்று நான் மநோரதித்துக்கொண்டிருக்க, எனக்குத்தன்னை புஜிக்கவொண்ணாதபடி யென்னில் முன்னம் பாரித்துத்தானென்னை மாளப்புஜித்தருளினான்; தன்னாலே விளையக்கடவ வ்யஸநத்தினளவுபாராதே, ஸலில கர்ப்பமான மேகம் தன்னளவிலே வர்ஷித்தாப்போலே, என்னுடைய சிறுமைபாராதே யென்னளவிலிங்ஙனே அதிமாத்ரமாகச் செய்தருள வேணுமோ வென்கிறார். (௧௰)

ஈடு; அவ;—தம்மோடு கலந்த வெம்பெருமானுக்குத் தம்மிலு மபிநிவேசம் மிக்கிருந்தபடியைச் சொல்லுகிறார்.

(வாரிக்கொண்டு) "இவ்வஸ்துவில் பிறர்க்கொன்றும் சேஷியாதபடியாக புஜிக்கக்கடவோம்" என்றிருந்தாராய்த்து. அதாவது—"வழுவிலாவடிமைசெய்யவேண்டும்" என்று பாரித்தது. "அநந்த வைநதேயாதிகளுக்கும் அடிமைசெய்யவிடங்கொடேன்" என்றிருந்தாராய்த்து; (௧) "𑌅𑌹𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்கிறபடியே, (உன்னை) ஸர்வசேஷியான வுன்னை. (விழுங்

(௧) ரா-அயோ ௩௧-௨௫-

குவன்) சேஷபூதனுக்குக் கைங்கர்யமிறே தாரகம். (காணில்) உன்னைக் காணப்பெறில். (என்றூர்வுற்ற) இப்படி யபிநிவேசித்த - ஆர்வத்தையுற்ற. (என்னையொழிய) என்னளவுபாராதே.

(என்னில் முன்னம் பாரித்து) நான் பாரித்தவளவுமன்றிக்கே நான் பாரித்தகாலத்துக்குமுன்பே பாரித்து; ஆசார்ய விஷயீகாரத்துக்குப் பின்பிறே யிவருடைய பாரிப்பு; ஸம்பந்தத்துக்குத் திரஸ்காரஹேதுவில்லாமையாலே, அவனுடையபாரிப்பு ஸத்தாப்ரயுக்தமிறே. (தானென்னை) விபுவாய் ஸ்வதந்த்ரனான தான், அணுபரிமாணனுய் பரதந்த்ரனானவென்னை. (முற்றப்பருகினன்) தன்குணசேஷ்டிதங்களைக்காட்டி யென்னை நீராக்கி நிஶ்ஶேஷமாகப் பருகினன்;(க) "வஹஸாஸா நுயிஜெ ஐநஂ ஜொவநாஹ்ராஂ விவெநிவ-விசஸா ஸாந்த்வயித்வைநம் லோசநாப்யாம்பிபந்நிவ" எனகிறபடியே, இத்தலையையழித்துப் பரிமாறினு னென்றபடி.

உண்டபடி சொன்னூர் கீழ்; உண்டவனுக்குத் தண்ணீரு மபேக்ஷிதமிறே; ஆகையாலே, தண்ணீர் குடித்தபடி சொல்லுகிறூர். அவனுடைய *உண்ணுஞ்சோறு பருகுநீருக்கிறபடியிறே யிது. (காரோக்குங்காட்கரையப்பன்) பரமோதாரனுய் ஸந்நிஹிதனானவன். (கடியனே) போகதசையில் விரைந்திருக்கும். இரண்டுதலையாய்ப் பரிமாறப்புக்கால் எதிர்த்தலைக் கிடம்வையான். (க௦)

பதினென்ரும் பாட்டு.

கடியனுய்க்கஞ்சனைக் கொன்றபிரான்றன்னை * கொடிமதிள்
தேன்குருகூர்ச்சடகோபன்சொல்* வடிவமையாயிரத்திப்பத்திறல்
சன்மம் முடிவெய்தி * நாசங்கண்டீர்களெங்கானலே,

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக, ஜந்மவிநாசத்தை யருளிச்செய்கிறூர்.

(இ - ள்.) கடியனுய் - அவன் நினைவுக்கும் தான் முற்பாடனுய்க்கொண்டு, கஞ்சனைக்கொன்ற - கம்ஸனைக்கொன்ற, பிரான்றன்னை - மஹோபகாரகனானக்ருஷ்ணனை, கொடிமதிள்-கொடியையுடைத்தான மதிளையுடைய, தென்குருகூர் - திருநகரிக்குநிர்வாஹகரான. சடகோபன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்த, வடிவமை - பகவத்குணங்க

(க) ரா-யு-கக-எ

கசக திருவாய்மொழி, கூ-ப, சு-தி, கக-பா, கடியனாய் வ்யாக்யாநம்.

னை வடிவுபட ப்ரதிபாதிக்கையில் ஸம்ருத்தமான, ஆயிரத்து - ஆயிரத்திலும், இப்பத்தினால் - இப்பத்தினாலே, எம் - எம்முடைய, சன்மம் - ஜந்மபரம்பரையும், முடிவெய்தி - அவஸாநத்தைப்பெற்று, கானல்-ஸம்ஸாரமாகிற ம்ருகத்ருஷ்ணிகையும், நாசங்கண்டீர் - நசிக்குங்கிடிகோள்.

இது கலிவிருத்தம். (கக)

ஆறு:—(கடியனாய்) ஆஶ்ரிதர்க்காக ஏதேனும்செயல் செய்யிலும் இங்ஙனே பதிமாத்ரமாகச்செய்தருளும் ஸ்வபாவனாயிருந்தவனைச்சொன்ன இப்பத்து, பகவதநுபவவிரோதியான நம்முடைய ஸம்ஸாரத்தை ஸகாரணமாகப் போக்குமென்கிறார். (கக)

ஈடு; அவ:—நிகமத்தில், இத்திருவாய்மொழி யப்யஸிப்பார்க்கு, ஜந்மம் முடிந்து அதுக்கடியான ஸம்ஸாரமும் நசிக்குமென்கிறார்.

(கடியனாய்க்கஞ்சனைக் கொன்றபிரான்றன்னை) கம்ஸன்றான் நினைத்தநினைவை அவன்றன்னோடேபோம்படி பண்ணினான். (கடியனாய்) தன்பக்கலின்றிக்கே வந்தேறியென்கை. (க) "கொண்டசீற்றம்" என்னக்கடவதிறே. (பிரான்றன்னை) முன்பு உபகாரகனை வன்கிடீர் நம்மையழித்தான்!. உகந்தாரையழிக்கையிறேபாதகமாவது; விரோதிகளையழிக்குமது உபகாரமிறே.

(கோடிமதிள்தென்குருகூர்) கம்ஸவிஜயத்துக்குக் கொடிகட்டிற்றுத் திருநகரியாய்த்து; ஸ்வாமிவிஜயத்துக்கு, உரியவடியாரிருந்தவிடத்தேயிறே கொடிகட்டுவது (வடிவமையாயிரம்) ஸமுதாயசோபையையுடைத்தாயிருக்கை, கட்டடங்க அழகிதாயிருக்கை. விஜயமுண்டாகையாலே ப்ரஶஸ்திமாலைகளுஞ் செல்லாநிற்குமிறே (சன்மம்முடிவெய்தி) ஜந்மபரம்பரைக்கவஸாநத்தைலபித்து. (நாசங்கண்டீர்களெங்கானலே) ஜந்மத்துக்கடியான ஸம்ஸாரமும் நசிக்கும்; கானல்-ம்ருகத்ருஷ்ணிகை. இன்னமிங்கே பிறக்கவிராதே பகவத்குணாநுஸந்தாநம் ஸாத்மிக்கும் தேசத்திலேபுகுவர்கள். (கக)

ஆறாந்திருவாய்மொழி முற்றிற்று.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஒன்பதாம்பத்து.

ஏழாந்திருவாய்மொழி.

எங்கானல் - ப்ரவேசங்கள்.

ஆறு:—(எங்கானல்) இந்த வப்ராப்தி கர்ப்பமான குணாநுஸந்தாந ஜநிதப்ரீதியானதுமாறி அப்ராப்த்யம்ஸமே தலையெடுத்து அந்யாபதேசத்தாலே தூதப்ரேஷணம்பண்ணுகிறார். *

ப:—ஏழாந்திருவாய்மொழியில், கீழ் குணஸ்மரணத்தாலே ஸிதிலரானவர், அந்தவைஸதில்யம்பாஹ்யாநுபவபர்யந்தமான அபிநிவேசத்தைப் பிறப்பிக்க அநுபவயோக்யமாம்படி திருமூழிக்களத்திலே யெழுந்தருளியிருக்கிறஸர்வேஸ்வரனுடைய அதிசயிதபோக்யதாகாரத்தையும், அஸாதாரணஜநாநுபாவ்யத்வத்தையும், ஸேஷித்வ ப்ரகாஸரூபவைலக்ஷண்யத்தையும், நித்யாநுபாவ்ய ஸேஷித்வத்தையும், கிரதிஸய விபூதிமத்வத்தையும், நித்யாநபாயநீஸம்பந்தத்தையும், அத்யுஜ்ஜ்வலாவயவத்வத்தையும், ஆபிரூப்யாதிஸயத்தையும், அஸாதாரணஸேஷித்வசிஹ்நத்தையும், அநுபஹித க்ருபாயோகத்தையும், அநுஸந்தித்து. ஏவம்விசிஷ்டனை ஸர்வேஸ்வரனைக்கிட்டி யநுபவிக்கப்பெறாத வார்த்தியாலே கடக முகத்தாலேலபிக்கப்பாரித்தப்ரகாரத்தை, நாயகனை ஸர்வேஸ்வரனைப் பிரிந்தநாயகியானவள் வ்யதிரேகத்தில் தரிக்க வரிதான வவனுடைய வழகை யநுபவிக்கைக்காகச் சிலபக்ஷிகளை யிரந்து தூதுபோகவிடுகிற பாசுரத்தாலேயருளிச்செய்கிறார்.

* அஞ்சிறையமடநாரையிலே - அபராதஸஹத்வம் பற்றாசாகவும், * வைகல்பூங்கழிவாயிலே-ஸேஷித்வஸம்பந்தம் பற்றாசாகவும், * பொன்னுலகாளீரிலே - ஏகரஸத்வம் பற்றாசாகவும், இத்திருவாய்மொழியிலே-ஸௌந்தர்யம் பற்றாசாகவும் தூதுவிடுகிறாள். (க) ,, ஸவாராபஸஹ

ஸவாது விஸொஹாலை நவெஸவாஸ! வொஸாஸ ரஸலைநா ரஸ
வடஸாநுயாவதெ தஜ-நிஃ - அபராதஸஹத்வாச்ச விபோஸ்ஸம்பந்த

வைபவாத் ஐகரஸ்யாச்சஸௌந்தர்யாத் கடகாந்யாசதேமுநிஃ''

ஈடு:—கீழ் அப்ரீதிகர்ப்ப குணாநுஸந்தாநத்தாலே மிகவும் ப்ரீதரானவர், பாக்யஹாநியாலே அப்ரீத்யம்ஸமே தலையெடுத்து, அவனைப்பெற்றுப் பிழைத்தல் பெறாவிடில் முடிகலாம்படியான தம்முடைய தசையை அந்யாபதேசத்தாலே யருளிச்செய்கிறார்.

இயற்கையிலே புணர்ந்து பிரிந்தாளொருபிராட்டி, அவன் வடிவழகிலே யீடுபட்டு அவஸந்நையாய், தன்னாற்றாமை கைகொடுக்க தன்னுத்யாநத்திலேசென்று, அங்கிருக்கிறபக்ஷிகளைக்குறித்து, (க) "பின்னானார் வணங்குஞ்சோதி திருமூழிக்களம்" என்கிறபடியே தூதுபோவார்க் கருமைப்பட டறிவிக்கவேண்டாதபடி திருமூழிக்களத்திலேவந்து நின்றருளினான்; தனக்கு நல்லாரை விடமாட்டாதவனாகையாலே நம்தசை யறியாதிருந்தா னத்தனை, க்ருபாவானாகையாலே நம்தசையறிவிக்கவரும், "உம்மைப்பிரிந்தார்தரிப்பரோ" என்றறிவிக்கவேணுமென்று அவற்றை ஸவிநயமாக விரக்கிறாளொருபிராட்டி பேச்சாலே தம்தசையை யருளிச்செய்கிறார்.

* அஞ்சிறையமடநாரையிலே, "நம்பக்கலபராதத்தாலே வாராதொழிந்தானத்தனை, அவனுடைய அபராதஸஹத்வத்தையறிவிக்கவரும்" என்று அபராதஸஹத்வம் பற்றாசாகத் தூதுவிட்டாள்; * வைகல்பூங்கழிவாயில், "நல்லதுகண்டால் கால்தாழுமவனாகையாலே திருவண்வண்டூரில் ஸம்ருத்தியைக்கண்டு கால்தாழ்ந்தானத்தனை, நம்மார்த்தியையறிவித்தால் தன்னினிமையில் நெஞ்சுவைப்பானொருவனல்லன்" என்று அது பற்றாசாகத் தூதுவிட்டாள்; * பொன்னுலகாளியில், "திருக்கோளூரே றப்போக" என்று தன்னுடைய நகரோபவநத்தளவுஞ்சென்று பலஹாநியாலே போகமாட்டாதே யிருக்கிறபிராட்டி, பின்னையும், அவன்வரக்காணாமையாலே, "வாராதொழிகைக்குநிபந்தநம் - தன்னைஸ்வர்யப் பரப்பாலே; தான் ஆஸ்ரிதரோடேகரஸனாகையாலேவரும்" என்று ஐகரஸ்யம் பற்றாசாகத் தூதுவிட்டாள்; இதில், "தனக்கு நல்லராயிருப்பாரை விடமாட்டாமையாலே வாராதிருந்தானித்தனை, தன்வடிவழகது, குணங்களவை, ஆனபின்பு பிரிந்தார்க்கு ஜீவித்திருக்கப்போமோ" என்று அவன் வடிவழகும் குணங்களும் பற்றாசாகத் தூது விடுகிறாள்.

முதற்பாட்டு.

எங்கானலங்கழிவாயிரைதேர்ந்திங்கினிதமரும்* செங்காலமட
நாராய் திருமூழிக்களத்துறையும் * கொங்கார்பூந்துழாய்முடி யெங்
குடக்கூத்தர்க்கென்தூதாய்* நுங்கால்களென்தலைமேல்கெழுமீரோ
நுமரோடே, (க)

(க) திருநெ-கo

ப:—முதற்பாட்டில், அதிசயிதமான போக்யதா ப்ரகாரத்தை யுடையனுயுள்ள க்ருஷ்ணனுக்கு என்னுதாகப்போனவுபகாரத்துக்காக வென்தலையிலே யுங்கள் கால்களைவைக்கவேணுமென்று சிலநாரைகளை யாதரித் தபேக்ஷிக்கிருள்.

(இ - ள்.) எங்கானலகங்கழிவாய்-உங்களுக்கு விநியோகார்ஹமாம் படி யெங்கள் மமதையிலே வர்த்திக்கிற கடற்கரையிற் சோலையிலகவா யில் கழியிடத்திலே, இரைதேர்ந்து-உங்கள் பந்தாதிஸாயந்தோற்றும்படி இங்குத்தை வஸ்துவை போக்யமாக விரும்பி, இங்கு - ஸந்நிதியிலே, இனிது-ப்ரணயப்ரீதியோடே, அமரும்-வர்த்திக்கக்கடவையாய், செம்- என்தலைக்கலங்காரமென்னலாம்படி சிவந்திருக்கிற, கால-காலையுடை த்தாய், மடம் - நியமித்துக் கார்யங்கொள்ளலாம்படி பவ்யதையையு டைய, நாராய் - நாராய், திருமூழிக்களத்து - திருமூழிக் களத்திலே உறையும்-ஆஸ்ரிதஸுலபனுய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணுமவராய்' கொங்கார் - தேன்விஞ்சி, பூம் - தர்ஸநீயமான, துழாய்முடி - திருத்து ழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையராய், எங்குடக்கூத்தர் க்கு - குடக்கூத்தாடுகிற மநோஹாரி சேஷ்டிதத்தாலே யெங்களுக்கு நிரதிசயபோக்யபூதரானவர்க்கு, என்னுதாய் - என்னுடைய தூதக்ருத் யத்திலேசென்று, அந்தவுபகாராதிசயத்தாலே, நுமரோடே - (க) "[illegible] = குருவத்குருவர்க்கஸ்ஸதரஷ் டவ்ய:" என்கிறபடியே,உன்பந்துக்களான தாரபுத்ராதிகளோடேகூட, நுங்கால்கள் - எனக்காக வழிநடந்த வுங்கள் கால்களை, என்தலைமேல் - அதுக்குப்பாத்ரபூதமாகையாலே உத்தமாங்கமான வென்தலையிலே கெழுமீரோ -சேர்க்கவேணும்.

உபகாரகனுசார்யனேயாகிலும் உபகாரஸ்ம்ருதி தத்ஸம்பந்தி பரம் பரையளவுஞ் செல்லுமிறே. "நாராய்" என்கிற ஒருமை - ஜாத்யேக வசநம். (க)

ஆறு;—தன்னைப்பிரியில் நான்தரிக்கமாட்டாதபடிதொருபடி, தன் னழகாலும் தன்செயலாலும் என்னைத் தோற்பித்தடிமையாக்கி, என் னேடே கலந்தருளிப்போய், திருமூழிக்களத்திலே யிருந்தருளின வெம்பெருமானுக்கு என்திறஞ்சொல்லவேணும், உங்களுக்கடிமை யே நானிருக்கிறேன், என்று நாரைகளை யிரக்கிருள். (க)

கஙிo திருவாய்மொழி; கூ-ப, எ-தி, க-பா, எங்கானல் வ்யாக்யாநம்.

ஈடு; அவ:—சிலநாரைகளைக் குறித்து, அவன் தன்னழகாலும் குணங்களாலும் தன்னைத் தோற்பித்தபடியைச்சொல்லி, என்தசையை அவனுக்கறிவித்துவந்து உங்கள் திருவடிகளை யென்தலைமேலே வைக்கவேணுமென்கிறாள்.

(எங்கானல்) பகவத்விஷயத்தி லுபகாரகரோ டைகரஸ்யம் ப்ராப்தமாயிருக்க, (எம்) என்றது-ஒன்றைத் தம்மதாக்கிக் கொடுத்தல்லது தரிக்கமாட்டாத உபகாரஸ்ம்ருதியாலே சொல்லுகிறது. பிறர்க்குபகரிக்கைக்காகவரும் மமகார முத்தேச்யமாயிருக்குமிறே. தன்னை பகவத்விஷயத்துக் காக்கினவன்றே தன்னதடங்கலுமங்குத்தைக்கு சேஷமாயிருக்க, உபகாரஸ்ம்ருதியிறே யிப்படி சொல்லுவித்தது. ஆத்மஸமர்ப்பணத்துக்கு மடியிதுவிறே, கானலென்கிறது-கடற்கரைச்சோலையாதல், நெய்தல்நிலமாதல். (அகங்கழிவாய்) உள்ளானகழியிடத்து.

அந்தர்க் க்ருஹப்ரவேசத்துக் கநுமதிவேண்டாத படியிறே இவை அந்தரங்கமாயிருக்கிறபடி. (க) "கூழிதா நிரஹஸ்யாநிகதிதாநிரஹஸ்யாநி" என்கிறபடியே வர்த்தியாநின்றன, (இரைதேர்ந்து) இரைதேடி; (உ) "ம்ருஹஸ்-ஹேமு தம்-க்ருஹேபுக்தமபங்கிதம்" என்கிறபடியே பண்டுதனக்குபகரித்தபடியைச் சொல்லுகிறாள் இப்போதுபகரிக்கைக்காக. (இங்கு) இத்தலையைபழித்துத் தூதுவிடவேண்டும்படி அகலவிருந்த வவனைப்போலன்றியே, ஸங்ஷிதராகப் பெற்றேனென்கிறாள். (இனிதமரும்) இனிதாக நம்மோடே ஸஹவாஸம்பண்ணப்பெறுகை; விலக்ஷணபோகங்களை புஜித்து வர்த்திக்குமென்றுமாம்;

(செங்கால) சிவந்தகாலையுடைய. என்மடியிலே யிருக்கும் கால் போலேயிருந்ததி நான் தலையிலே வைத்துக்கொள்ளப்புகுகிற காலும். (மடநாராய்) பவ்யமான நாராய். (திருமூழிக்களத்துறையும்) தூதுபோவார்க் கடுத்தணித்தாகத் திருமூழிக்களத்திலே நிற்கையாலே, பரமபதத்திற்காட்டி லேற்றமிருக்கிறபடி.

(கொங்கார்பூந்துழாய்முடியெங்குட்டக்கூத்தர்க்கு) ஒப்பனையும் மநோஹாரி சேஷ்டிதத்தையும் இரண்டையுமெனக்காக்கிவைத்தவர்க்கு. (எம்) என்கிறது-ஒப்பனையிலும் சேஷ்டிதத்திலு மிரண்

(க) பாரத (உ) பாரதம-

திருவாய்மொழி, க-ப, எ-தி, உ-பா. நமரோடும் வ்யாக்யாநம்.கஞே

டிஇமாகிறது. "எம்" என்று-ஆத்மஸிபஹுவசநம். (என்றுதாய்) அவ்வொப்பனையிலும் சேஷ்டிதத்திலுக்தோற்று அவனைப்பெற்று ஜீவித்தல், இல்லையாகில் முடிதலாயிருக்கிறவென்றுதக்ருத்யத்திலே யதிகரித்து.

(நங்கால்களென்தலைமேல்) உபகாரகரான வுங்களுடையகாலை நீங்களுபகரிக்க ஜீவிக்கவிருக்கிற வென்தலைமேலே; மயிர்கழுவிப் பூச்சூட விருப்பாரைப்போலே. அவற்றின் காலாகில் இவள் தலையிலே யிருக்கக்கண்டனை; இவள் தலையாகில் அவற்றின் கால்வைக்கக் கண்டிருந்தது; இரண்டும் பாரார்த்தமாயிருந்தபடி. (கெழுமீரோ) ஒருவிதி கொண்டு ப்ரவர்த்திக்க வேண்டாவாய்த்திருந்து; அவனுக்காக்கினவாறே உங்களதாயிருக்கும்ஹே. கொடுவர்துசேரிகோளோ. (நமரோடே) (க) "ஸவாந்தவாத்ஸஹமணை - ஸபுத்ரபௌத்ராஸ்ஸகணஃ" என்னுமாபோலே, (ஸபரிகரமாக) (உ) "ஆவாராவதாவா ராவதெதாவருத்திஃ-ஆசார்யவதாசார்யபுத்ரேவ்ருத்திஃ" என்னக்கடவதிறே. (க)

இரண்டாம் பாட்டு.

நமரோடும்பிரியாதே நீரும்நுஞ்சேவலுமாய் *அமர்காதல்குருகினங்காளணிமுழிக்களத்துறையும் * எமராலும்பழிப்புண்டிங்கென்றம்மால்லிழிப்புண்டு - தமரோடங்குறைவார்க்குத் தக்கிலமேகேளீரே, (உ)

ப:—அநந்தரம், "அஸாதாரணபரிஜநங்களோடே யநுபாவ்யராயிருக்கிற தமக்கு நாங்களநுருபரல்லோமோ" என்று சில குருகுகளைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

(இ - ள்.) நமரோடும் - சந்தாநுவர்த்திகளான பந்துஜநங்களோடும், பிரியாதே - பிரியாதே, நீரும் - சேவலையநுவிதாநம்பண்ணும் நீங்களும், நுஞ்சேவலுமாய் - உங்களையநுவிதாநம்பண்ணுஞ் சேவலுமாய், அமர்காதல் - ஸம்ஶ்லேஷித்து வர்த்திக்கும்படியான ப்ரணயத்தையுடைய, குருகினங்காள் - குருகினங்காள், அணி - தர்ஶநீயமான, முழிக்களத்து - திருமுழிக்களத்திலே, உறையும் - நித்யவாஸம் பண்ணுகிற

(க) ரா-பா-க கூகூ- (உ. ஆபஸ்தம்ப தர்மம்-

தம்மால் - தம்மாலே, இழிப்புண்டு-காதாசித்க ஸம்ஶ்லேஷாந்தர முபேக்ஷிக்கப்பட்டு, அதடியாக, எமராலும்-என்னோடு அநுபந்தமுடையவராலும், பழிப்புண்டு - பழிக்கப்பட்டு; இங்கென்! - இங்குத்தையிருப்புக்கு என்னப்ரயோஜநமுண்டு'. தமரோடு - அஸாதாரண பரிஜநத்தோடே, அங்கு - அங்கே, உறைவார்க்கு - நித்யவாஸம்பண்ணுகிறதமக்கு; தக்கிலோம் - நாங்களாகோமோ; கேளீரே - கேளுங்கோள். (உ)

ஆறு;—(நும்மோடும்) "அவருக்குச்சொல்லும் வார்த்தையைக்கேளுங்கோள்" என்று குருகுகளையழைத்துவைத்து, நடுவே தன்னோவாலே, "தம்மாலுமுபேக்ஷிதையாய் என்பந்துக்களாலும் காஹிதையாயிங்கேயிருக்கு மிவ்விருப்பென்செய்ய!, இவ்விருப்பில் முடிகையேநன்று!" என்று தன்னிலேசொல்லி யின்னுதாய், பின்னையும், அவனை விடமாட்டாமையாலே, "தாமும் தம் பரிஜநங்களுமாயிருந்த விருப்புக்காணகைக்கு நானநர்ஹையாயிழந்துபோமித்தனையோ?" என்று கேளீரென்றுகொண்டு, தான்சொல்லப்புக்கவார்த்தையை அவற்றுக்குச்சொல்லி முடிக்கிறாள். (உ)

ஈடு; அவ;—சில குருகினங்களைக் குறித்து, "தாமும் தமக்கு நல்லாருமாயிருந்த விருப்பை நானிழந்தே போமித்தனையோ" என்றறிவியுங்கோளென்கிறாள்.

(நுமரோடும்பிரியாதே) "தமரோடங்குறைவார்" என்றாய்த்து ப்ராப்யவஸ்துவைச்சொல்லநினைக்கிறது; அப்படியே இவையுங்குறைவற்றிருக்கிறபடி. குறைவாளர்கார்யம் குறைவற்றாக்குத் தீர்க்கவேண்டாவோ!. உண்டார்க்கு, பட்டினிகிடந்தார்பசிபரிஹரிக்க ப்ராப்தமிறே. (நீரும் நுஞ்சேவலுமாய்) சேவல்நினைவறிந்து பரிமாறும் நீரும், உம்முடைய கருத்தறிந்து பரிமாறும்சேவலுமாய். ஸம்ஶ்லேஷரஸமறியும் நீங்கள், பிரிந்தாருடைய செல்லாமையுமறியவேண்டாவோ!.

(அமர்காதல் குருகினங்காள்) பரஸ்பரம் பொருந்தினகாதல். ஆசையிலே, விஶ்லேஷத்தை பலிப்பியாதவாசை யுண்டாகாதே!. ஆசையிலுங்குறைவற்று, விஶ்லேஷமுமின்றியிலே, கருத்தறிந்து பரிமாறவுங்கடவதாயிருப்பதே நீங்கள் முன்னம்!. (குருகினங்காள்) என்று ஸம்போதித்துவைத்து தொடங்கினவார்த்தைமுடியச்சொல்லமாட்டாத பலஹாநியாலே ஆத்தோக்தியிலேயத்தைமுடித்து, தானிருக்கிறவிருப்பிலே விஷண்ணையாகிறாள்.

(எமராலும்பழிப்புண்டு-அணிமுழிக்களத்துறையும்- தம்மாலு மிழிப்புண்டு) காதாசித்க ஸம்ஶ்லேஷமே ஹேதுவாக பந்துக்கள் கைவிட்டார்கள், காதாசித்கஸம்ஶ்லேஷத்தளவிலே தாமுமுபேக்ஷித் தார்; பந்துக்கள் கைவிட்டதே ஹேதுவாகக் கைக்கொள்ளவேணும்; பிறபாடர்க்குக் காட்சிகொடுக்கவந்துநிற்கிற நிலையாகையாலும் கைக் கொள்ளவேணும், இரண்டுமென்னளவி லுபேக்ஷாஹேதுவாவதே!. (இங்கேன்!) இவ்விருப்புக்கென்ன ப்ரயோஜநமுண்டு!.

தம்மைப்பெற்றிருக்கிறேனோ, பந்துக்களைப் பெற்றிருக்கிறே னோ; இங்குள்ளார்கைவிட்டால் பின்பு தம்மெல்லைக்குள்ளே யாக்கிக் கொள்ளவேண்டாவோ!; பகவத்விஷயத்திலே புட்புக வட்புக அன் றுதொடங்கிக் கைவிடுவர்களிறே ஸம்ஸாரத்திலுள்ளார்!. ("ஶரீர ஸமநந்தரத்திலே ஒருதேசவிசேஷத்திலே பெறவேண்டித்தான் ஆறி யிருக்கிறேனோ;" என்று தன்னிலே விஷண்ணையாய், அத்தை) அவ்வளவிலே விச்சேதித்து, பின்னையும், தன்செல்லாமையாலே அவற்றைக்குறித்து வார்த்தைசொல்லுகிறாள்.

(தமரோடங்குறைவார்க்கு;) தம்பரிஜநங்களோடே அங்கே நித்யவாஸம்பண்ணுகிறதமக்கு, "நாங்களாகோமோ" என்று கேளுங் கோள். தாமும் தமக்கு நல்லாருமாயிருக்கிற இருப்புக்கு, "அடியார் கள்குழாங்களை-உடன்கூடுவதென்றுகொலோ" என்றிருப்பாராகா ரோ வென்றுகேளுங்கோள். (உ)

மூன்றாம்பாட்டு.

தக்கிலமேகேளீர்கள்தடம்புனல்வாயிரைதேரும்* கொக்கினங் காள் குருகினங்காள் குளிர்முழிக்களத்துறையும்* செக்கமலத்தலர் போலுங் கண்கைகால் செங்கனிவாய் * அக்கமலத்திலைபோலுந் திருமேனியடிகளுக்கே. (ங)

ப:—அநந்தரம், அவயவங்களோடு ஸமுதாயத்தோடு வாசியற அதி ஶயிதபோக்யமானவடிவையுடையவர்க்கு நாங்களயோக்யரோ; கேளுங் கோ ளென்று சில சில கொக்கினங்களையும் குருகினங்களையுங் கூட வபேக்ஷிக்கிறாள்.

(இ-ள்.) தடம் - பெரிய, புனல்வாய் - தடாகத்திலே, இரைதேரும்-ஆமிஷார்த்திகளாய்க்கொண்டு, என்னபிநிவேசாநுகுணமாகத் தனித்தனியே திரள்திரளாயிருக்கிற, கொக்கினங்காள் குருகினங்காள் - கொக்கினங்காள் குருகினங்காள், குளிர்-ப்ரமஹரமான, மூழிக்களத்து திருமூழிக்களத்திலே, உறையும் - நித்யவாஸம்பண்ணுமவராய், செம் - சிவந்த, கமலத்து - கமலத்தின், அலர்போலும் - அலர்போலேயிருக்கிற, கண் - (க) "ஜிதந்தெ-ஜிதந்தே" என்னப்பண்ணும் கண்ணையும், கை - (உ) "ஸவெ௱ஷவ௱ஷெ ஊஊஹஸவக்ஷஂஸரிஷ௱-கீ-அப்யேஷப்ருஷ்டே மமஹஸ்தபத்மம் கரிஷ்யதி" என்று ப்ரார்த்திக்கும்படியே யணைக்கும் கையையும், கால் - (ங) "வாணைஆநூஂவ௱ஜாதீ-சரணத்வந்த்வம் வ்ரஜாமி" என்றாஶ்ரயிக்கும் திருவடிகளையும், செங்கனிவாய் - (ச) "ஶாஶுவஃ-மாஶுச:" என்று ஸாந்த்வநம்பண்ணும் சிவந்தகனிபோன்ற திருப்பவளத்தையும், அக்கமலத்து - அந்தக்கமலத்துக்குப்பரபாகமான, இலைபோலும் - இலைச்செறிவுபோலே யிருக்கிற ஶ்யாமளமான, திருமேனி - திருமேனியையுடையராய், அடிகளுக்கு - அவ்வடிவழகைக்காட்டி யெனக்கு ஸ்வாமியானவர்க்கு, தக்கிலமே - இவ்வழகை யநுபவிக்கைக்கு நாங்கள் யோக்யரல்லோமோ வென்று, கேளீர்கள் - கேளுங்கோள். (ங)

ஆறு;—(தக்கிலமே) தன்னைக்காண்கைக்கு நானர்ஹையன்றியே அவ்வழகையுங் காணப்பெறுதேயிழந்துபோ மித்தனையோ வென்று கேளீரென்கிறாள். (ங)

ஈடு; அவ:—சிலகொக்கினங்களையும் குருகினங்களையும்நோக்கி, தன்னழகுகாண்கைக்கு நாங்கள் யோக்யரல்லோமோவென்று கேளீர் என்கிறாள்.

(தக்கிலமேகேளீர்கள்) நாமொன்றிலேதுணியும்படி அறுதியாகக்கேட்டுப் போருங்கோள். அவன் இன்னம் "இதுவேணும்" என்றிருந்தானாகில் ப்ராணன்களைவருந்தி நோக்கிக்கொண்டுகிடக்கவும், "வேண்டா" என்றிருந்தானாகில் நாமுமொன்றிலே துணியும்படி யறுதியாகக்கேட்டுவிடுங்கோள். (தடம்புனல்வாயிரைதேரும்) மிக்கஜலஸம்ருத்தியையுடையபொய்கையில் நீரிலே இரைதேடுகிற

(க) ஜிதந்தை-க-க.
(உ) வி-பு-ரு-கஎ-உஅ.
(ங) ஜித்-க-உ.
(ச) கீதை-கஅ-சுசு.

ளவாயிருந்ததுங்களுக்கு. (௧) " உபவாஸக்ருஶாஃ - உபவாஸ க்ருஶாம் " என்கிறபடியே; உபவாஸக்ருஶையான வென்னைப்போலன்றியே, இரைமிடற்றுக்குக் கீழிழியும்படியிறே உங்கள் ஸௌஷ்கல்யம்!.

(கோக்கினங்காள் குருகினங்காள்) குருகு-கொய்யடிநாரை. (௨) " யாம்கபீநாம்ஸஹஸ்ராணி - யாம்கபீநாம்ஸஹஸ்ராணி " என்கிறபடியே, கண்ணால்கண்டவற்றையடைய ஏவுகிறாள். "சிலவற்றைப் போகவிட்டோம், அவைநங்காரியம் தலைக்கட்டும் " என்று ஆறியிருக்கும் விஷயமன்றே!, (குளிர்மூழிக்களத்துறையும்) விரஹதப்தையாயிருக்கிறவெனக்கு, அந்த ஶ்ரமஹரமானதேசத்தில் ப்ராப்தியரிதாவதே!.

(செக்கமலமித்யாதி) அக்குளிர்த்திக்கடியான உள்ளில் * வாசத்தடமிருக்கிறபடி ; சிவந்தலர்ந்ததாமரைபோலேயிருக்கிற கண்முதலான திவ்யாவயவங்களையுடையவன் ; முதலுறவுபண்ணுங்கண், அங்கோக்குக்குத்தோற்றாரையணைக்கும்கை; ஸ்பர்ஶத்துக்குத்தோற்றார் விழுந்திருவடிகள், திருவடிகளிலே விழுந்தாரை ஸாந்த்வநம் பண்ணி தரிப்பிக்கும் முறுவல்.

(அக்கமலத்திலைபோலுந்திருமேனி) அவர்களுக்கு உஜ்ஜீவநமானவடிவு. அவயவங்களுக்குப் பரபாகமான செந்தாமரையிலைபோலே யாய்த்துத்திருமேனி; வெண்டாமரையென்னில் விஜாதீயமென்று, " அக்கமலம் " என்கிறது. (அடிகளுக்கு) அந்தவவயவசோபையையும் வடிவழகையுங்காட்டி யெழுதிக்கொண்டவர்க்கு. இவ்வடிவழகுக்குத்தோற்று வைவர்ண்யத்தை தரித்திருப்பார் அங்குத்தைக்கு அபோக்யரோ வென்று கேட்டுப்போருங்கோள். அவன் * புருஷோத்தமனானால், இவள் * நாரீணாமுத்தமையாம்போது இப்படியேயிருக்கவேணுமிறே. (௩)

நான்காம்பாட்டு.

திருமேனியடிகளுக்குத் தீவினையேன்விடுதூதாய்* திருமூழிக்களமென்னுஞ் செழுநகர்வாயணிமுகில்காள் * திருமேனியவட்கருளீரேன்றக்காலும் மைத்தன் * திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே. (௪)

---

(௧) ரா ஸு-௧௫-௧௪ (௨) ரா-ஸு ௩௦-௩

ப:—அநந்தரம், அழகாலே யடிமைகொள்ளுமவர்க்கு என் தூதாய்ச் சென்று, உம்முடைய திருமேனியை யவளுக்கு உபகரியீரென்று ஒரு வார்த்தைசொன்னால் உங்கள் ஸாரூப்யத்தையும் தேசவாஸத்தையுந் தவிர்க்குமோவென்று சிலமேகங்களைக் குறித்து வார்த்தை சொல்லு கிறாள்.

(இ - ள்.) அணி - தர்ஸநீயமான வடிவையுடைய, முகில்காள் - முகில்காள்! திருமூழிக்களமென்னும்-(க) "பின்னானார்வணங்குஞ்சோதி திருமூழிக்களம்" என்னும்படி பாவித்தமான, செழுநகர்வாய் - விலக்ஷணநகரத்திலே வர்த்திக்கிறவராய், திருமேனியடிகளுக்கு (உ) "ரூபமேவாஸ்யைதந்மஹிமாநம் வ்யாசஷ்டே" என்று வடிவுதானே ஸர்வாதிகத்வ ப்ரகாஸகமான ஸேஷித்வத்தையுடையவர்க்கு, தீவினையேன் - அவரோடுறவுண்டாயிருக்க வநுபவிக்கப்பெறாத க்ரூரமான பாபத்தையுடையநான், விடு-விடுகிற, தூதாய் - தூதராய்ச்சென்று, அவட்கு-அவளுக்கு, திருமேனி-உம்முடைய நிரதிஸயபோக்யமானவடிவை, அருளீர்-உபகரித்தருளீர், என்றக்கால் - என்றொரு உக்திநேர்ந்தக்கால், உம்மை - பரார்த்தமாக வார்த்தைசொன்னவுங்களை, தன் திருமேனியொளி - தானடியிலே யுங் களுக்குத்தந்த தன்திருமேனியிலொளியை, அகற்றி-தவிர்த்து, தெளி விசும்புகடியுமே - விலக்ஷணமான ஆகாசத்தில் வர்த்தியாதபடி பண் ணுமோ?

ஸ்வார்த்தமாக வபேக்ஷித்தார்க்குங் கொடுக்குமவன், எனக்காகவபேக்ஷித்ததுக்காக ஸாரூப்யத்தையும் விஷ்ணுபதாஸ்ரயத்வத்தையும் தவிர்க்கை அஸம்பாவிதமென்கிறாள். (ச)

ஆறு;—(திருமேனி) "திருமூழிக்களமென்னுஞ் செழுநகர்வாய் அணிமுகில்காள், திருமேனியவட்கருளீர்" என்றித்தனையுஞ்சொன்னாலும், உங்களுக்குப் பரமதநமான திருமேனியொளியை யுங்களையிழப்பித்து, அவ்வூரில்நின்றும் போகவடிக்குமோ, இத்தனையுஞ் சொன்னாலென்செய்யுமென்கிறாள். (ச)

ஈடு; அவ:—சிலமேகங்களைநோக்கி, என்வார்த்தையை யவனுக் குச்சொன்னால் உங்களை தண்டிக்குமோ வென்கிறாள்.

(க) திருநெ-கo (உ) யஜு-ஙி-காண்-க-ப்ர-கூ

(திருமேனியடிகளுக்கு) ஸ்வரூபரூபகுணவிபூதிகளையொழிய வடிவழகாலே ஸர்வஸ்வாமியென்று தோற்றும்படியிருக்கிறவர்க்கு; வடிவழகாலே ஜகத்தையடையத் தோற்பித் தடிமைகொண்டிருக்கிற வர்க்கு என்றுமாம். (க) "கவஸா:ஒ திவெஷிலெ-அவஸா:ப்ரதி பேதிரே" என்கிறபடியே ப்ரதிகூலர்க்கு மாகர்ஷகமாயிறே வடிவிருப்பது. (தீவினையேன் விடுதூதாய்) ஸர்வஸாதாரணமான உடம்பையிழந்து உங்கள் காலிலேவிழவேண்டும்படியான பாபத்தைப்பண்ணின வென்னுடைய தூதக்ருத்யத்திலேபதிகரித்து.

(திருமூழிக்களமென்னும்) ஆர்த்தரக்ஷணத்துக்காகவந்து நிற்கிறவிடமென்று ப்ரஸித்தமானதேசம். (சேழுநகர்) பரமபதத்திற் காட்டிலுண்டானவேற்றம், செழுநகர்வாய்வாத்திக்கிற அழகியமூழிக்களமென்னுதல்; செழுநகர்வாயடிகளுக்குச் செப்புமின்களென்னுதல்.

(திருமேனியவட்கருளீர்) பரார்த்தமான உடம்பை, ஆசைப்பட்டார்க்குக் கொடுத்தாலாகாதோ?. (உ) "ஹ்ருதா நாழ்-பக்தாநாம்" என்கிறபடியே, இவ்வுடம்பு ஆசைப்பட்டாரதன்றோ? என்றுசொல்லுங்கோள். காமிநிகளுக்கு ஸ்வரூபாதிகளிற்காட்டில் வடிவிலேயிறேயபேக்ஷை. (அருளீர்) ப்ரணயித்வமன்றோ குடிபோய்த்து, க்ருபையும் மறுத்ததோ?. (என்றக்கால்) (ங) "வாவாய ஐ-ஐவாவுநு-ஷி-வாசாதர்மமவாப்நுஹி" என்று உங்களுக்கொருவார்த்தையன்றோ நேரவேண்டுவது!. (உம்மை) இப்படி உபகாரகரான உங்களை.

(தன்திருமேனியொளியகற்றித் தெளிவிசும்புகடியுமே?) உங்கள் வடிவிற்புகரையும்போக்கி நிர்மலமான வாகாஶத்தினின்று மூங்களையோட்டுமோ?. உங்களுக்கு இதுக்குமுன்பில்லாதவற்றையும் உண்டாக்குமதொழிய, பண்டுள்ளவற்றைத்தவிர்த்து உங்களை தண்டிக்குமோ?, அல்பஸாத்ருஶ்யத்தைத்தவிர்த்து, (ச) "ஹரஐலைஸாஐ-ஐவெதி-பரமம்ஸாம்யமுபைதி" என்கிறபடியே ஸர்வதாஸாத்ருஶ்யத்தையுந்தந்து, ஆகாசமாத்ரஸ்த்திதிகளன்றிக்கே பரமாகாஶத்தையுந்தாராநோ?. உங்களுடைய உக்திமாத்ரத்தாலே யென

(க) பார-ஸபா-　　　　(உ) ஜித ரு-
(ங) ரா-ஸ-ங-கு-ங௦-　　　　(ச) முண்ட-ங-கங-

கஙிஅ திருவாய்மொழி, கூ-ப, எ-தி, ரு-பா, தெளிவிசும்பு வ்யாக்யாநம்

க்கு மூன்க்ளுக்கும் ப்ரயோஜநமொத்திருக்க, ஆறியிருக்கக் கடவி கோளோ, (ச)

ஐந்தாம் பாட்டு.

தெளிவிசும்புகடிதோடித் தீவளைத்துமின்னிலகும்* ஒளிமுகில் காள்திருமூழிக்களத்துறையு மொண்சுடர்க்கு* தெளிவிசும்புதிருநா டாத்தீவினையேன்மனத்துறையும் * துளிவார்கட்குழலார்க் கென் தூதுரைத்தல் செப்புமினே. (ரு)

ப:—அநந்தரம், பரமவ்யோமமஹப்தவாச்யமான நிரதிசயவிபூதியில் இருக்குமாபோலே என்னெஞ்சிலே யிருக்கிறவனுக்கு என்தூதாய்ச் சென்று வார்த்தைசொல்லக்குறைறயில்லை யென்று, அம்மேகந்தன்னை யேபார்த்துச் சொல்லுகிறாள்.

(இ - ள்.) தெளிவிசும்பு - நிர்மலமான வாகாசத்திலே, கடிதோடி - நிலத்திலே நடப்பாரைப்போலே என்கார்யத்துக்கு த்வரிக்கிறிகோ ளென்னலாம்படி கடிதாகவோடி, தீவளைத்து - அலாதசக்ரம்போலே மின் இலகும் - அழகிய மின் விளங்காநிற்க, ஒளிமுகில்காள் - அத்தா லே வடிவிலழகு வளர்ந்து தோற்றும்படியான முகில்காள், திருமூழிக் களத்து - திருமூழிக்களத்தில், உறையும் - நித்யவாஸத்தாலே. ஒண்சுட ர்க்கு - ஸௌசீல்ய ஸௌலப்யாதி விலக்ஷண குணௌஜ்ஜ்வல்யத்தை யுடையராய், தெளிவிசும்பு-விமலமான திவ்யாகாசத்தை. திருநாடா - நிரதிசயவிபூதியாகவுடையராய்வைத்து, தீவினையேன்மனத்து ஸம்ஶ் லேஷமூகத்தாலே பரிதாபஹேதுவான பாபத்தையுடைய வென்னெ ஞ்சிலே, உறையும் - முகந்தோன்றாமலிராநின்றுகொண்டு, துளி - துளித்து, வார் - ஒழுகுகிற, கள் - மதுவையுடைத்தான, குழலார்க்கு- மயிர்முடியழகை ப்ரகாசிப்பித்துக்கொண்டிருக்கிறவருக்கு, என்தூ துரைத்தல் - * கேசவனுனவிது க்லேஶநாசகனுகைக்கன்றோ என்கிற தூதவாக்யத்தை, செப்புமின் - சொல்லுவகோள்.

திருக்குழல் மதுவாருகிறது - அகவிதாகவைத்த பூவிற் செவ்வி யாலே. (ரு)

ஆறு:—(தெளிவிசும்பு) அவனுக்கருளீரென்னவமையுமோ, இன்னுருக்கருளீரென்னவேண்டாவோவென்னில் ; யாவனொருத்தி

யுடைய நெஞ்சையுமக்குத் திருநாடாகக்கொண்டு நீருறைகிறீர், அவனுக்கருளீர் என்று சொல்லிகோளென்கிறாள். (ஓ)

ஈடு; அவ;—"எங்கள் வார்த்தையை அவனங்கீகரிக்குமோ" என்றிருந்தனவாக; பரமபதத்திற்பண்ணின வாதரத்தை யென் பக்கலிலே பண்ணினவன் அங்கீகரியாதொழியான், ஆனபின்பு என க்காக வொருவார்த்தைவிண்ணப்பஞ்செய்யவேணு மென்கிறாள்.

(தெளிவிசும்புகடிதோடி) நிர்மலமாய் நிராலம்பநமானவாகா சத்திலே, பூமியிலே ஸஞ்சரித்தாப்போலே கடுநடையிலே ஸஞ்சரித் து. இவற்றின் த்வரையெல்லாம் தன்கார்யத்துக் குடலென்றிருக் கிறாள். (தீவளைத்துமின்னிலகும்) கொள்ளிவட்டம்போலே மின் விளங்கா நிற்கிற. தன்வடிவி லிருட்சிக்குக் கைவிளக்குக்கொண்டு திரிவாரைப் போலேயாய்த்து மின்னிக்கொண்டு ஸஞ்சரிக்கிறபடி. (ஒளிமுகில்காள்) பரபாகத்தாலே அழகிதான வடிவையுடைய முகில்காள்.

(திருமூழிக்களத் துறையுமொண்சுடர்க்கு) திருமூழிக்களத் திலே நித்யவாஸம்பண்ணுகையாலேபுகர்மிக்கிருக்கிறவர்க்கு; அவன் வடிவுக்குப் போலியாயிறே உங்கள்வடிவிருப்பது. (தெளிவிசும்பித் யாதி) பரமபதத்திற்பண்ணும் வ்யாமோஹத்தை யென்னெஞ்சிலே பண்ணி வர்த்தியாநின்றான். (தீவினையேன்) நெஞ்சிலே ப்ரகாசியா நிற்க, காணவொண்ணாதபடி பாபத்தைப் பண்ணினேன்.

இதுக்கு, சிற்றாள் கொண்டான், "கொம்பது பருத்தியாக அங்காடிபாரித்து, தனக்குப் பரமபதங்கலவிருக்கையாயிருக்க, அத் தைக் காற்கடைக்கொண்டு ஸந்நிஹிதரைப்போலேயிருக்களன்னெஞ் சிலே ப்ரகாசியாநின்றான்" என்று. இதுதான் இத்திருவாய்மொ ழிக்குச் சொன்ன வாக்யார்த்தத்தோடு சேராது; ஓரோரவஸரங்க ளிலே சொல்லிப்போம் வார்த்தையிறே.

(துளிவார்கள்குழலார்க்கு) துளியொழுகும் மதுவையுடைத் தான திருக்குழலையுடையவர்க்கு. வல்லார் பூமுடித்தால் பூத்தோற் றக்கடவதன்றிக்கே மதுவொழுகக்காணு மத்தனையிறே. (என்தூது ரைத்தல் செப்புமினே) தலையிற் பூச்சருகாயிருக்கிற வென் தூத வாக்யத்தை யவர்க்குச் சொல்லுங்கோள். அபிநிவிஷ்டராய்த் தா

மே வருவாராகச்சொல்லிவைத்து, இப்போது தூதுவிட விருக்கிற படியை யறிவியுங்கோள். (ரு)

ஆறும்பாட்டு.

தூதுரைத்தல்செப்புமின்கள் தூமொழிவாய்வண்டினங்காள்* போதிரைத்துமதுநுகரும் பொழில்மூழிக்களத்துறையும்* மாதரைத் தம்மார்பகத்தேவைத்தார்க்கென்வாய்மாற்றம் * தூதுரைத்தல்செப் புதிரேல்சுடர்வளையுங்கலையுமே. (சா)

ப:—அநந்தரம், நித்யாநபாயிநியான பிராட்டியைத்திருமார்விலே யுடையவர்க்கு, உங்கள் வார்த்தை யீடேறும்படி யச்சேர்த்தியிலே சொல்லுங்கோள் என்று, சிலவண்டுகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

(இ - ள்.) தூமொழிவாய் - கந்தலற்றபேச்சில் வாய்ப்பையுடைய, வண்டினங்காள் - வண்டினங்காள், போதிரைத்து-புஷ்பவிகாஸதசை யில் ஹர்ஷத்தாலேகோலாஹலம் பண்ணிக்கொண்டு, மதுநுகரும்-உங் களுக்குமதுபாநம் பண்ணலாம்படியான, பொழில் - பொழிலையுடைத் தான, மூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - வர்த்திப்பா ராய், மாதரை * காரீணுமுத்தமையானலக்ஷ்மியை, தம்மார்பகத்தே வைத்தார்க்கு - அவளும் "அகலகில்லேன்" என்னும்படி போக்யமான தன்திருமார்விலே நித்யவாஸம்பண்ணும்படி வைத்தவர்க்கு, என்வாய் மாற்றம் - என்வாக்கின்பாசுரமான, தூதுரைத்தல் - தூதவாக்யத்தை, செப்புதிரேல் - சொல்லப்பார்த்திகோளாகில், சுடர் - உஜ்வலமான, வளையும் - வளையையும், கலையும் - வஸ்த்ரத்தையும், தூதுரைத்தல் - தூதுக்குப்பாசுரமாக, செப்புமின்கள் - சொல்லுங்கோள். (சா)

ஆறு.—(தூதுரைத்தல்) தூமொழிவாய்வண்டினங்காள், என்னு டையசுடர்வளையும் கலையுமிழந்தேனென்று சொல்லவேணும்; சொல் லுமிடத்தில், அவனுங்கள்வார்த்தையை அநாதரியாமே, பிராட்டி ஸந்நிதியிலேவைத்துச் சொல்லவேணுமென்கிறாள். (சா)

ஈடு; அவ;—சிலவண்டுகளைக்குறித்து, உங்கள்வார்த்தை விலைச் செல்லும்படி பிராட்டி ஸந்நிதியிலே சொல்லுங்கோள் என் தூத வாக்யத்தையென்கிறாள்.

(தூதுரைத்தல் செப்புமின்கள்) என்று தவாக்யத்தை யறிவிக்கவமையும், கொண்டுவரவேண்டா. (தூமொழிவாய் வண்டினங்காள்) இனியபேச்சையுடையவண்டுகாள். அவனநாதரிக்கிலும் உங்கள் பேச்சினிமையாலே வரவேண்டும்படியிறே பேச்சிருப்பது. பெருமாளு மிளையபெருமாளும் கையும் வில்லுமாய் வருகிறபடியைக் கண்டு, "இவர்கள்வாலிவரவிட வருகிறார்களோ" என்றஞ்சி மஹாராஜர் நாலுமூன்றுயோஜநமவ்வருகேயோட, மீண்டுவந்து (க) "வாநராணாம் நராணாஞ்ச - கதமாஸீத்ஸமாகம:" என்று விஜாதியமான விரண்டுதலையும் பொருந்தும்படியாக (உ) "சுபஸம்ஹ்ருதஸம்பந்ந:-அதஸம்ஸ்காரஸம்பந்ந:" என்கிறபடியே வார்த்தைசொன்னனிறே.

(போதிரைத்துமதுநுகரும்பொழில்) பூக்களிலே இரைத்துக் கொண்டு மதுபானம்பண்ணும்பொழிலென்னுதல்; போதிலே-காலத்திலேயென்னுதல், உங்களுக்கு மீட்சியிலேயாகவும்வேண்டா, * ததிமுகாதிகள் காப்பாருமில்லை, முன்பு மதுபானம்பண்ணுகிறவர்களோடே மதுபானம்பண்ணவமையும். (மாதரைத்தம்மார்பகத்தேவைத்தார்க்கு) நீங்கள் சொல்லுமத்தனையேவேண்டுவது. உங்கள்வார்த்தைகேட்டிருக்கவும், கேட்டுக்கொண்டாடுகைக்கும் புருஷகாரமுண்டென்கை.

(என்வாய்மாற்றமித்யாதி) என்பாசுரமான தூதவாக்யத்தைச் சொல்லப்பார்த்திகோளாகில், என்னுடைய வழுகியவளையும் கலையும் மிதிலமானபடியைச் சொல்லுங்கோள். செப்புதிகோளாகில், அது தானே யெனக்குச்சுடர்வளையும் கலையுமென்னுதல். அறிவிக்குமத்தனை குறை, அவர்வரவுதப்பாது. (சு)

ஏழாம்பாட்டு.

சுடர்வளையுங்கலையுங் கொண்டருவினையேன் தோள்துறந்த *
படர்புகழான்திருமூழிக்களத்துறையும்பங்கயக்கண் * சுடர்பவள
வாயனைக்கண்டொருநாளோர்தூய்மாற்றம் * படர்பொழில்வாய்க்
குருகினங்காளெனக்கொன்று பணியீரே. (எ)

(க) ரா ஸுந்-ரு-கஅ-
(உ) ரா·யு·கஎ-௩அ-

ப:—அநந்தரம், அத்யுஜ்ஜ்வலமான அவயவசோபையை யுடைய வரைக்கண்டு எனக்கொருவார்த்தை சொல்லுங்கோளென்று,சிலகுருகுகளை யபேக்ஷிக்கிறாள்.

(இ - ள்.) படர் - பரந்த, பொழில்வாய் - பொழிலிடத்தேவர்த்திக்கிற, குருகினங்காள் - குருகினங்காள், சுடர் - ஒளியையுடைத்தான, வளையும் - வளையையும், கலையும் - கலையையும், கொண்டு - கைக்கொண்டு, அருவினையேன் - கடக்கவரியபாபத்தையுடையேனான வென்னுடைய, தோள்துறந்த-தோளிலே யதிவ்யாமுக்தனாய்ச் சேர்ந்தவன் அத்தை யநாதரித்து, அதுதானே, படர் - லோகவ்யாப்தமான, புகழான்-புகழாகவிருக்குமவனாய், திருமூழிக்களத்துறையும் -அத்யாஸக்தியாலே ஆர்த்தியை அதிசயிக்கும்படி திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுமவனாய், பங்கயக்கண் - கலந்தபோதோடு பிரிந்தபோதோடு வாசியற செவ்வியழியாதபடி பங்கயம்போன்ற திருக்கண்களையும், சுடர் - ஒளியையுடைய, பவளம் - பவளம்போன்ற, வாயனை - திருவதரத்தையுமுடையவனை, கண்டு - கண்டு, எனக்கு-ஆர்த்திவடிவிலே தோன்றும்படியான வெனக்காக, ஒருநாள்-நித்யாக்நி ஹோத்ரம்போலே பலநாள் வேண்டாதபடி ஒருநாள், ஓர் - ஆர்த்தரக்ஷணார்த்தமாகையாலே அத்வி தீயமாய், தூய்மாற்றம் - தெளிவாலே ஶ்லாக்யமான வார்த்தையை ஒன்று - பரப்பற்று ஒன்றாயிருக்கும்படி, பணியீரே - பணிக்கவேணும்; ; பணியுங்கோளென்று கௌரவ்யதை தோன்றச் சொல்லுகிறாள். (௭)

ஆறு:— (சுடர்வளையும்) படர்பொழில்வாய்க் குருகினங்காள், உன்னழகாலே யவளைவஶீகரித்து அவளோடேகலந்து பின்னை யவளைத்துறந்ததுவே புகழாகக்கொண்டிருக்கிற விருப்பு உனக்குப் போருமோ வென்றுசொல்லீகோளென்கிறாள். (௭)

ஈடு; அவ;—சிலகுருகினங்களைக்குறித்து, சிலரோடே கலந்து அவர்களைத்துறந்து அதுவே புகழாக்விருக்கைபோருமோவென்று அவர்க்கறிவியுங்கோளென்கிறாள்.

(சுடர்வளையுங்கலையுமித்யாதி) இத்தலையில் தனக்கு ப்ரயோஜநமான வம்ஶத்தைக்கொண்டு என்னைப் பொகட்டுப்போனான்; தனக்கு தாரகமானவற்றைக்கொண்டு அல்லாதவற்றைப் பொகட்டுப் போனான்; கைக்கடங்கினத்தையுங்கொண்டு மடிச்சரக்கையுங் கொ

ண்டு போனான்; (அருவினையேன்) ஆதரித்துவந்து கலந்தவன், பொகட்டுப்போம்படியான பாபத்தைப்பண்ணினேன். (தோள்துறந்த) அந்த வ்யாமோஹமெல்லாங்கொண்டு தோளுக் கவ்வருகு போகமாட்டிற்றிலன்போலேகாணு மவன்றான்.

(படர்புகழான்) "தன்னாலல்லது செல்லாதாரை இங்ஙன் விடவல்லாரில்லை" என்று இதுவே புகழாகக் கொடியும் காளமுமெடுத்துப் புகழ்வித்துக் கொண்டிருக்கிறானாய்த்து. (திருமூழிக்களத்துறையும்) தூரஸ்தனென்றாறியிருக்கவொண்ணாதபடி திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகிறவனை. (பங்கயக்கண்சுடர்பவளவாயனை) பொகட்டுப் போனானென்று பொகட்டிருக்கவொண்ணாத அவயவசோபையையுடையவனை; என்னையிப்பாடுபடுத்துகையாலே புதுக்கணித்த அவயவசோபையை யுடையவனை யென்றுமாம். (கண்டு) அந்நோக்கையும் முறுவலையும் காண்கையாலே, உங்களுக்கு என்னிற்காட்டில் பேறு முற்பட்டிறேயிருக்கிறது.

(ஒருநாள்) ஒருநாளேயமையும், பிற்றைநாள் சொல்லவேண்டுவதில்லை. இரண்டாநாள் சொல்லுமது பழியென்றிருக்குமவளிறே. (ஓர்தூய்மாற்றம்) அத்விதீயமான நல்லவார்த்தை; முடிகிறாளொருபலை யுஜ்ஜீவிக்கச் சொல்லுகிற வார்த்தையிறே. (படர்பொழில்வாய் குருகினங்காள்) பரந்தபொழிலிடத்தே வர்த்திக்கிற குருகினங்காள். நான் * உபவாஸக்ருசையாயிருக்க, நீங்கள் ஜீவித்துக் களித்திருக்கை போருமோ; நான் முடிந்தால் உங்களுக் கிந்தச்சோலைப் பரப்பெல்லாம் நோக்கித்தருவாரார்.

(எனக்கு) என்வடிவிருக்கிறபடி கண்டிகோளிறே. (ஒன்றுபணியீரே) இரண்டாம்வார்த்தை சொல்லவேண்டா. (பணியீரே) தான் ஜநககுலத்திலேபிறக்கவுமாம்; எதிர்த்தலை திர்யக்குக்களாகவுமாம், பகவத்விஷயத்தில் கடகரைச் சொல்லும்படியிறேயிது. (எ)

எட்டாம்பாட்டு.

எனக்கொன்றுபணியீர்களிரும்பொழில்வாயிரைதேர்ந்து* மனக்கின்பம்படமேவும் வண்டினங்காள்தும்பிகாள்* கனக்கொள் திண்மதிள்புடைசூழ் திருமூழிக்களத்துறையும் * புனக்கொள்காயாமேனிப்பூந்துழாய்முடியார்க்கே. (அ)

ப:—அநந்தரம், வடிவழகையு மொப்பனையையு முடையரா யிருக்கிறவர்க்கு எனக்கொருவார்த்தை சொல்லவேணுமென்று சிலவண்டுகளையும் தும்பிகளையும் பார்த்துச் சொல்லுகிறாள்.

(இ - ள்.) இரு - பெரிய, பொழில்வாய் - பொழிலிடத்தே, இரை தேர்ந்து - போக்யமான மதுவைத் தேடாநின்றுகொண்டு, மனக்கு - மநஸ்ஸுக்கு, இன்பம்பட - இனிமையுண்டாம்படி, மேவும்-ஸம்ஶ்லேஷித்து வர்த்திக்கிற, வண்டினங்காள் தும்பிகாள்-வண்டினங்காள் தும்பிகாள், கனக்கொள் - கனத்தையுடைத்தாய், திண் - சிக்கென, மதிள்-மதிளாலே புடை - சுற்றும், சூழ் - சூழப்பட்ட, திருமூழிக்களத்து-திருமூழிக்களத்திலே, உறையும்-நித்யவாஸம்பண்ணுமவராய், புனக்கொள்-தன்னிலத்தில் நிலையையுடைத்தான, காயாமேனி-காயாம்பூவின் நிறத்தையுடையராய், பூந்துழாய்முடியார்க்கு - தர்ஶநீயமான திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையவர்க்கு, எனக்கு - எனக்காக, ஒன்று - ஒருவார்த்தை, பணியீர் - சொல்லவேணும். (அ)

ஆறு ;—(எனக்கொன்று) வண்டினங்காள் தும்பிகாள், உன்னழகைக்காணப்பெறாதே அவளிழந்துபோ மித்தனையோ வென்று சொல்லீகோளென்கிறாள். (அ)

ஈடு; அவ;—சிலவண்டுகளையும் தும்பிகளையும் குறித்து, அங்குத்தைக்குபயப்படவேண்டாதபடி ஸுரக்ஷிதமான தேசத்திலேயிருக்கப்பெற்றீரும், இனி யென்னார்த்தியை யறிவியுங்கோளென்கிறாள்.

(எனக்கொன்று பணியீர்கள்) நீங்க ளொருவார்த்தை சொல்லாவிடில் முடியும் தசையாயன்றோ என்தசையிருக்கிறது. (இரும்பொழில்வாயிரைதேர்ந்து) பரந்தசோலை யிடமெங்கும்புக் கிரைதேடி. (மனக்கின்பம்படமேவும்) மநஸ்ஸிலே இனிமை பிறக்கும்படியன்றோ நீங்கள் கலக்கிறபடி. விரஹத்தால் வரும் க்லேசம் பவியாதபடியாகக் கலவாநின்றதாய்த்து - பிரிவிலும் வற்றாத ஆநந்தமுண்டாம்படி கலவாநின்றதாய்த்து.

(கனக்கொளித்யாதி) கனத்துத் திண்ணிதான மதிள் சுற்றும் சூழ்ந்திருந்துள்ள திருமூழிக்களத்திலே நித்யவாஸம்பண்ணுகிறவர்க்கு. அத்தலையில் ஸௌந்தர்யத்தை யநுஸந்தித்தால், ரக்ஷை தேட்டமாயேயிருப்பது. அவனோடே கிட்டிக் கலக்கப் பெறுமையா

லே வருவதும் ஓராற்றுமையுண்டு, அவனுக்கெங்கே யென்னதிங்கு வருகிறதென்று மோராற்றுமையுண்டு; அதிலேயொன்று தீரப் பெற்றது முந்துறமுன்னம்.

(புனக்கோள்காயாமேனிப் பூந்துழாய்முடியார்க்கே) தன்னி லத்திற் காயாவின் நிறம்போலேயாய்த்து நிறமிருப்பது; அவ்வடி வழகுக்குமேலே ஒப்பனையழகையுமுடையவர்க்கு; வடிவழகது, ஒப் பனையழகது. அவ்வடிவழகையு மொப்பனையழகையு மநுபவித்துப் பிரிந்தவெனக்கு ஒருவார்த்தை சொல்லுங்கோள். (அ)

ஒன்பதாம்பாட்டு,

பூந்துழாய்முடியார்க்குப் பொன்னாழிக்கையார்க்கு * ஏந்துநீ ளிளங்குருகேதிருமூழிக்களத்தார்க்கு * ஏந்துபூண்முலைபயந்தென்னி ணைமலர்க்கண்ணீர்ததும்ப* தாந்தம்மைக்கொண்டகல்தல்தகவன் றென்றுரையீரே. (க)

ப:—அநந்தரம், அஸாதாரண ஶேஷித்வ சிஹ்நத்தையுடையரான வர்க்கு, தம்மைக்கொண்டு தாம்போதல் தகுதியல்லவென்று சொல்ல வேணுமென்று, ஒருகுருகைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

(இ - ள்.) ஏந்துநீர் - நீருக்கஞ்சவேண்டாதபடி யதுதானேதரிக் கும்படியாய், இளம் - கமநஸாமர்த்த்யத்துக்குறுப்பான விளமையையு டைய, குருகே-குருகே; பூந்துழாய்முடியார்க்கு-ஸர்வஶேஷித்வ ஸூச கமாம்படி தர்ஶநீயமான திருத்துழாயை முடியிலேயுடையராய், பொ ன் - ஸ்ப்ருஹணீயமான, ஆழி - திருவாழியை, கையார்க்கு - கையிலே யுடையராய், திருமூழிக்களத்தார்க்கு - திருமூழிக்களத்திலே ஆஸந்ந மாகநிற்கிறவர்க்கு, பூண் - ஆபரணத்தை, ஏந்து - ஏந்தின, முலை-முலை யானது, பயந்து - பயற்பையுடைத்தாய், என் இணைமலர்க்கண் இணை மலர்போலே தன்னைக்கண்டபோதே விகஸிதமாம்படியானவென்கண் கள், நீர்ததும்ப - விரஹத்தாலே ஶோகாஶ்ருபூரம்பும்படியாக, தாம் - ஶேஷித்வத்தையும் போக்யத்வத்தையும் சீலத்தையுமுடையதாம், தம் மைக்கொண்டு - தம்மையறிந்துவைத்துக்கொண்டு, அகல்தல் - அகலப் போகை, தகவன்றென்று - தம்முடையதயைக்குப்போராதென்று, உ ரையீரே - சொல்லீரென்று உபசரித்துச் சொல்லுகிறாள். (க)

ஆறு:—(பூந்துழாய்) ஏந்துநீரிளங்குருகே, ஏந்துபூண்முலைபயந் தென்னிணைமலர்க்கண் நீர்ததும்பத் தாம் தம்மைக்கொண்டகலுகை தம்முடைய க்ருபைக்குப் போராதென்று சொல்லிகோளென்கிறாள்.

ஈடு; அவ:—ஒருகுருகைக்குறித்து, நிரதிசயபோக்யரான தாம் போம்போது தம்மைக்கொண்டுபோகை தம்முடைய தகவுக்குப் போருமோவென்று விண்ணப்பஞ் செய்யென்கிறாள்.

(பூந்துழாய்முடியார்க்கு) திருமுடிக்கு ஒப்பனையானவளையமி ருக்கிறபடி. (பொன்னாழிக்கையார்க்கு) திருக்கைக்கு வளையமிருக் கிறபடி. (ஏந்துநீரிளங்குருகே) மிக்கபுனலிலே, தரையிலே நடப்பா ரைப்போலே நடக்கவல்ல விளங்குருகே. உன்கமநஸாமர்த்யத்தாலு ண்டானபலம் நான்பெறவிறே புகுகிறது; நடுவே நீரிடைச்சுவரா லும் தேங்கவேண்டாவிறேயுனக்கு. (திருமூழிக்களத்தார்க்கு) வளை யம்போலேயு மாபரணம்போலேயும் அவ்வூரில் நிலையுமழகுக்குடலா யிருக்கும்படி. அவை விக்ரஹத்துக்காபரண மானாப்போலே, ஶீலம் ஸ்வரூபத்துக்காபரணமிறே. அழகும் குணங்களு மொருதலைத்த விஷயமிறே.

(ஏந்துபூண்முலைபயந்து) ஆபரணங்களை தரிக்கக்கடவமுலை வைவர்ண்யத்தைதரித்து. ஆபரணங்கள் ஸம்ஶ்லேஷார்த்தமாகக் கழற்றுமவை, இது ஸம்ஶ்லேஷத்தாலல்லது கழலாதிறே; வ்யதிரே கத்திலிப்படி யிருக்கையிறே ஸ்த்ரீத்வமாவது; இங்ஙனிராதவன்று பும்ஸத்வாத் வ்யாவ்ருத்திகூடாதிறே. (என்னிணைமலர்க்கண்ணீர் ததும்ப) இணைமலர்போலே யிருக்கிறவென்கண். தம்மழகையே யிலக்காக வுடையகண், ஶோகாஶ்ருவுக்கிலக்காம்படி. அவன்சொல் லும்படி யறிந்திருக்கையாலே சொல்லுக்ருளித்தனைபோக்கி அல் லது தன்கண்ணை யிப்படி சொல்லக்கூடாதிறே. (ததும்ப) ஆநந்தாஶ் ருவுக் கர்ஹமானகண் ஶோகாஶ்ருவாலே நிறையும்படி.

(தாம்) "பூந்துழாய்முடியார், பொன்னாழிக்கையார், திருமூழிக் களத்தார்" என்றுவைத்து, "தாம்" என்கிறாளிறே. "பூந்துழாய் முடியார்க்குப்பொன்னாழிக்கையார்க்கு" என்கையாலே - வடிவழ கைச்சொல்லிற்று; "திருமூழிக்களத்தார்க்கு" என்கையாலே-குணஞ் சொல்லிற்று; இப்படிப்பட்ட வடிவழகையும் குணங்களையுமுடைய தாம். (தம்மைக்கொண்டகல்தல்) தமக்ககலவேண்டினால் " ..வ்வ

டிவைப்பிரிந்தார்பிழையார்" என்றத்தை வைத்தன்றேபோவது- தம்மைக்கண்ணுடிப் புறத்திலேகண்டறிவரே. தம்மைப்பிரிந்ததசைக்கு உதவுகைக்கன்றோ தம்மைக்கண்டது; (௧) "[illegible] - இமாமவஸ்த்தாமாபந்நோ நேஹ பஶ்யாமிராகவம்" என்கிறபடியே. ஆற்றாமை எல்லாம் சொல்லுவிக்குமிறே. எனக்கோராற்றாமைக ளுண்டானவளவில் கிட்டிநின்று முகங்காட்டி ஈரக்கையாலே தடவி நோக்குகைக்கன்றோ தம்மைப் பெற்றது. தம்மைப்பிரிந்து நோவுபடுகிற விற்றைக்குமேற்பட ஆற்றாமையில்லையிறே யெனக்கு. இவ்வளவில் நான்பெருமாளைக் காணகிறிலேன் என்றாளிறே.

அதவா, (தாந்தம்மைக்கோண்டகல்தல்) தாமென்னைக்கொண்டகலுமதொழிய தம்மைக்கொண் டகலக்கடவரோ; தம்மைக் கொண்டகலவேண்டினால் தமக்கு போஷமானத்தைப் பொகட்டுப் பிறர்க்கு போஷமானத்தையோ கொடுபோவது. (௨) "ஸுகநாஹ- பக்தாநாம்" என்றிறே அவனுடம்பிருப்பது. * "தனக்கேயாக வெனைக்கொள்ளவேணும்" என்றிறே இத்தலையிருப்பது.(தகவன்றென்றுரையீரே) ப்ரணயித்வமும் மென்மையுமெல்லாங்கிடக்கச்செய்தே இது நிர்த்தயர்செய்யும் செயலென்றுசொல்லுங்கோள். ஸ்த்ரீவதத்துக்கஞ்சாதார் செய்யவற்றைச் செய்தீரென்று சொல்லுங்கோள்.

பத்தாம்பாட்டு.

தகவன்றென்றுரையீர்கள்தடம்புனல்வாயிரைதேர்ந்து * மிகவின்பம் படமேவு மென்னடையவன்னங்காள் * மிகமேனிமெலிவெய்தி மேகலையுமீடழிந்து* என்னகமேனியொழியாமே திருமூழிக்களத்தார்க்கே. (௧௦)

ப:—அநந்தரம், திருமூழிக்களத்திலாஸக்தியாலே நிரவதிகதயாவானென்னும்படியிருக்கிறவர்க்கு, என்ஸத்தையழிவதற்குமுன்னே "இது தம்முடையதயாநுரூபமல்ல" என்று சொல்லுங்கோளென்று, சிலவன்னங்களைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

---

(௧) ரா-அயோ-௫௯-௨௬- (௨) ஜிதந்தை-௧-௫

(இ-ள்.) தடம் - பெரிய, பொழில்வாய்-பொழிலிடத்தில், இரை-இரையை, தேர்ந்து - ஸம்பாதித்து, மிக - மிகவும், இன்பம் - ஆனந்தம் பட - உண்டாம்படி, மேவும் - சேர்ந்துவர்த்திக்கிற, மெல்நடைய-மெல்லிய நடையையுடைய, அன்னங்காள் - அன்னங்காள், மேனி - சரீரம் மிக - மிகவும், மெலிவெய்தி - மெலிவையெய்தி, அத்தாலே, மேகலையும் - பரிவட்டமும், ஈடழிந்து - கட்டேக்குலைந்து, அதுக்குமேலே, என் அகமேனி - அகவாயில் ஸ்வரூபமும், ஒழியாமே - குலையாதபடி, திருமூழிக்களத்தார்க்கு-ஆஶ்ரிதாநுக்ரஹார்த்தமாகத் திருமூழிக்களத்திலே நிற்கிறவர்க்கு, தகவன்றென்று - இந்நிலையின் ப்ரயோஜநம் பெருமையாலே இதுதயையின் கார்யமல்லவென்று, உரையீர்கள் - சொல்லுங்கோளென்கிறாள். (௧௦)

ஆறு:—(தகவன்றென்று) மென்னடைய வன்னங்காள், தாந் தம்மைக் கொண்டகல்தல் தகவன்றென்று நீங்கள் சொல்லவேணும்; சொல்லுமிடத்தில், என்னுடைய மேனியும் மிக மெலிவெய்தி மேகலையு மீடழிந்து என்னுத்மாவும் முடிவதற்குமுன்னே சென்று சொல்லவேணுமென்கிறாள். (௧௦)

ஈடு; அவ:—சில வன்னங்களைக் குறித்து, நான் முடிவதற்கு முன்னே அவனுக்கென்தசையை யறிவியுங்கோளென்கிறாள்.

(தகவன்றென்றுரையீர்கள்) அவனுடைய ஸத்தை யழிக்கைக்குத் தகவில்லை யென்னுங்கோள். அதாவது - நிர்த்தயனென்கை. அவனுக்கு நிரூபகம் தயை யாகையாலே, அவனுடைய மர்ம மறியுமவளாகையாலே, அத்தை யில்லையென்கிறாள். (தடம்புனல்வாயிரைதேர்ந்து) மிக்கநீர்வெள்ளத்தையுடைத்தான பொய்கைகளிலே யிரைதேடி. கலவிக்குறுப்பான வ்யாபாரமேயாயிருக்கிறபடி.

(மிகவின்பம் படமேவும்) ஸுகம்கரைபுரளும்படியன்றோ நீங்கள் ஸம்ஶ்லேஷிக்கிறபடி. பிரிவுதேட்டமாய் உங்கமஸ்தகாஸமாய்ச் செல்லுகிறபடி. விஶ்லேஷியாவிடி லிரண்டாஶ்ரயமு மழியும்படியாய்த்து இவைபரிமாறுகிறபடி. (மென்னடையவன்னங்காள்) கலவியின்மிகுதி நடையிலே தொடைகொள்ளலாம்படி ஸஞ்சரியாநின்றனவாய்த்து,

(மிகமேனிமெலிவெய்தி) ஸரஸஸஞ்சாரமெல்லாம்குலைந்ததிறே யுங்களுக்கு; கண்டிகோளிறே நானிருக்கிறபடி; என்தசையைக் கண்

டால் தரித்திருக்கலாயிருந்ததோ; உங்கள் கலவியின்மிகுதியோபாதி போரும் என்னுடம்பின் மெலிவும். (மேகலையுமீட்டழிந்து) பரியட்டமும் கட்டுக்குலைந்து; மேகலை தொங்கும்போது ஆஸ்ரயம்வேணுமே.

(என்னகமேனியொழியாமே) புறம்புள்ள தடையக் கழன்றது; இனி அகவாயில் ஸ்வரூபம் கழல்வதற்குமுன்னே; நான்முடிவதற்கு முன்னேயென்கை. (திருமூழிக்களத்தார்க்கு) தம்மையொழியச் செல்லாதார் ஸத்தைநோக்குகைக்காகவந்து கிடக்கிறவர்க்கு. (திருமூழிக்களத்தார்க்கு - தகவன்றென்றுரையீர்கள்) பொரிபுறந்தடவி அத்தலையைப்பேணியுண்டதையும், இனி அவர்படியை நேராகச் சொல்லிப் போருவதோள்.

அப்படி முன்புபேணினோ இவளென்னில்; "எனதகவாவண்ணார்தகவுகள்" என்று திருத்தாயார்சொல்லிற்றுப் பொறுமல, "தகவுடையவனே" என்று, "கெடுவாய் ஆகாத்தில் தகவுமறுக்குமோ" என்றாளிறே; அத்தைச் சொல்லுகிறாள். (கo)

பதினொன்றாம்பாட்டு.

ஒழிவின்றித்திருமூழிக்களத்துறையு மொண்சுடரை * ஒழிவில்லாவணிமழலைக் கிளிமொழியாளலற்றியசொல் * வழுவில்லா வண்குருகூர்ச் சடகோபன் வாய்ந்துரைத்த * அழிவில்லாவாயிரத்திப்பத்து நோயறுக்குமே. (கக)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக. பகவத்விஸ்லேஷ ரூபமான வ்யாதியினுடைய ஸாந்தியை யருளிச்செய்கிறார்.

(இ-ள்) ஒழிவின்றி - ஒருக்காலும் விஸ்லேஷமில்லாதபடி, திருமூழிக்களத்து - திருமூழிக்களத்திலே, உறையும் - நித்யவாஸம்பண்ணுகையாலே, ஒண்சுடரை - விலக்ஷணமான தேஜஸ்ஸையுடையவனை. ஒழிவில்லா - பிரியில்தரியாதபடியாய், அணி - அழகிய, மழலை - முக்தோக்தியையுடைத்தான, கிளிமொழியாள் - கிளியோடொத்த பேச்சையுடையவள், அலற்றிய - தன்னார்த்தியாலே அக்ரமமாகச் சொன்ன, சொல் - பாசுரத்தை. வழுவில்லா - அந்த ப்ரேமத்தில் குறைவில்லாதபடியாய், வண்குருகூர் - விலக்ஷணமான திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், வாய்ந்துரைத்த - அவனுடைய ஸ்வபாவங்களைக்கிட்டியநுபவித்துரைத்ததாய், அழிவில்லா - போக்தாக்கள் நெஞ்சில்நின்றும்போகாத

ஆயிரத்திப்பத்தும்-ஆயிரத்திப்பத்தும், நோய்-பகவத்விஶ்லேஷஹேது வான ஸம்ஸாரவ்யாதியை, அறுக்கும் - தீர்த்துக் கொடுக்கும்.

இது நாலடித்தாழிசை. கலிவிருத்தமென்பாருமுளர். (கக)

ஆறு;—(ஒழிவின்றி) எம்பெருமானைப் பிரியில் தரிக்கமாட்டாத ஸ்வபாவையாயிருப்பாளொருபிராட்டி அவனைப்பிரிந்தலற்றின பாசுரத்தாலே, தத்ஸத்ருஶ ஸ்வபாவரான வண்குருகூர்ச்சடகோபன் எம்பெருமானைப்பிரிந்தலற்றின விப்பத்து, தத்விஶ்லேஷரூப வ்யாதியைப் போக்குமென்கிறார். (கக)

ஈடு; அவ;—நிகமத்தில், இத்திருவாய்மொழியை யப்யஸித்தார்க்கு, பிரிவுக்கடியான ஸம்ஸாரதுரிதத்தை இதுதானே யறுத்துக் கொடுக்குமென்கிறார்.

(ஒழிவின்றித் திருமூழிக்களத்துறையும்) ஒருநாளும் விடநினையாதே அவ்வூரில் நித்யவாஸம்பண்ணுமவனை. (ஒண்சுடர்) (க) "பின்னானார்வணங்குஞ்சோதி" என்கிறபடியே, அவ்வூரில் நிலையால் வந்தபுகரிருக்கிறபடி;—அவ்வூரில் போக்யதையால் வந்த புகர்; பிற்பாடர்க்கு முகங்கொடுக்கும் நீர்மையால்வந்த புகர்.

(ஒழிவில்லா) அவனவ்வூரையொழியில் தரிக்கமாட்டாதாப்போலே, அவனையொழியில் தரிக்கமாட்டாதவளென்கை; (உ) "ந ஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்" என்னுமவளிறே. (அணிமழலைக்கிளிமொழியாள்) அழகிய முக்தமான, கிளியின் பேச்சுப்போலே யிருக்கிற பேச்சையுடையவள். (அலற்றியசொல்) தன்னாற்றாமையாலே யக்ரமமாகச் சொன்ன பாசுரத்தை.

(வழுவில்லாவண்குருகூர்ச்சடகோபன்) பிராட்டிபடியி லொன்றும் குறைவற்றிருக்கிறவாழ்வார். (வாய்ந்துரைத்த) கிட்டியுரைத்த; பாவபந்தத்தாலே சொன்னவென்றபடி.

(அழிவில்லாவாயிரத்திப்பத்து) கேட்டவர்கள் நெஞ்சை யொருநாளும் விடாதே வர்த்திக்கிற விப்பத்து. இப்பாசுரத்தைக் கேட்டார்க்கு, ஸமகாலத்திற்போலே ஸர்வகாலமும் ரஸம்பிறக்கும்படியாய்த்திருப்பது. (நோயறுக்குமே) பகவத்விஶ்லேஷமாகிறநோயையறுக்கும்;-கலந்து பிரிந்து திர்யக்குக்களின் காலிலேவிழுந்து க்லேசிக்கவேண்டா, விஶ்லேஷமில்லாத தேசத்திலே புகப்பெறுவர். (கக)

ஏழாந்திருவாய்மொழி முற்றிற்று.

(க) திருநெ-கO (உ) ரா-அயோ-ருரு-நக.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஒன்பதாம்பத்து.

எட்டாந்திருவாய்மொழி.

அறுக்கும்வினை - ப்ரவேஶங்கள்.

ஆறு;—(அறுக்கும்வினை) இப்படி தூதப்ரேஷணம்பண்ண பின்னையுமெம்பெருமானை வரக்காணாமையாலே அவஸந்நராய்.

ப:—எட்டாந்திருவாய்மொழியில், இப்படி கடகமுகத்தாலே ப்ராபிக்க வபிநிவேஶித்தவர், ப்ராப்யத்வராதிஶயத்தாலே, அவன் பரிபூர்ணனாய்க்கொண்டு திருநாவாயிலே எழுந்தருளியிருக்கிறபடியை ப்ரகாஶிப்பிக்கக்கண்டு; அவனுடைய அநுபவவிரோதி நிராஸக தேஶவர்த்தித்வத்தையும், அநுபாவ்யத்வ வைபவத்தையும், அஸாதாரண ஸம்பந்தத்தையும் நித்யகைங்கர்ய விஷயத்வத்தையும், பத்நீபரிஜநஸ்த்தாநாதி பூர்த்தியையும், ஆஶ்ரிதபவ்யதையையும், ஶேஷித்வரக்ஷகத்வாத்யாகார பூர்ணதையையும், அநுபவஜ்ஞாந ப்ரதத்வத்தையும், தாரக ஸர்வேஶ்வரத்வத்தையும், அதிரமணீயவிக்ரஹயோகத்தையு மநுஸந்தித்து, ஏவம்பூதகாரணனான ஸர்வேஶ்வரனெழுந்தருளியிருக்கிற தேசத்தைக்கிட்டி யநுபவிப்பதொருநாளே என்று பஹுமுகமாக மநோரதிக்கிறார்.

ஈடு;—திருவடிசென்று பிராட்டியைத் திருவடிதொழுது மீண்டவநந்தரம் பெருமாளைக்கிட்டுவதற்குமுன்பு பிராட்டிக்குப்பிறந்த மநோரதம்போலே, கீழ்விட்டதூதர் அத்தலைப்பட்டு அவனைக்கொண்டு வருவதற்குமுன்னே இவர்க்குப்பிறந்த மநோரதத்தைச் சொல்லுகிறது.

இப்படி தம்முடையவார்த்தியறிவிக்கச்செய்தேயும் அப்போதே வரக்காணாமையாலே அவஸந்நரானவர், தூதப்ரேஷணத்தாலும் அவன்குணாநுஸந்தாநத்தாலும் மந:ப்ரஸாதத்தாலும் "அவன்வந்து நம்மைவிஷயீகரித்து அமர்ந்தநிலமான திருநாவாயிலே கொடுபோகைநிஶ்சிதம்" என்று அத்யவஸித்து, க்ரமத்தால் போகப்பற்றாமையாலே பதறி, "அங்கேபுகவல்லேனே, புகும்நாளென்றோ, அங்கேபுக்கு என் கண்ணாரக்கண்டமைசெய்யவல்லேனே" என்று இப்படியநேகமநோரதங்களைப் பண்ணுகிறார்.

"உபாயோபேயங்களிரண்டு மீஶ்வரனே" என்றத்யவஸித்தார்க்கு, ப்ராப்யருசி கண்ணழிவற்றால் விளம்ப ஹேதுவில்லாமையாலே, ப்ராப்யஸித்தியளவும் மநோரதம் செல்லாநிற்குமிறே. இம்மநோரதந்தான் இவனுக்குத் தவிராததுமாய், அதுதானினியதுமாய். இவனுடைய ஸ்வரூபத்தோடு சேர்ந்திருப்பது மொன்றிறே.

பெரியமுதலியார், ப்ராப்யஸித்தியில் த்வரையாலே எப்போதுமித் திருவாய்மொழியை யநுஸந்தியாநிற்பர்; ஆகையாலே, இத்தை "பெரியமுதலியார் திருவாய்மொழி" என்றும் த்துச்சொல்லுவது. அதவா, "விட்டதூதர்கள் தாழ்த்தார்களென்று தாமே அவன்வர்த்திக்கிற தேசத்தேறப்போக வொருப்படுகிறார்" என்பாருமுண்டு.

முதற்பாட்டு.

அறுக்கும்வினையாயினவாகத்தவனை* நிறுத்தும் மனத்தொன்றியசிந்தையினார்க்கு*வெறித்தண்மலர்ச் சோலைகள்சூழ்திருநாவாய்*
குறுக்கும்வகையுண்டுகொலோ கொடியேற்கே. (௧)

ப:—முதற்பாட்டில், ஆஶ்ரிதாநுபவவிரோதிநிரஸகமாய் நிரதிசய போக்யமான திருநாவாய் எனக்குக்கிட்டும் வழியுண்டோவென்கிறார்

(இ-ள்.) ஆகத்து - தங்களகவாயிலே, அவனை - ஸமஸ்தவிரோதிநிவர்த்தகனுய் நிரதிஶயபோக்யனுன ஸர்வேஶ்வரனுனவனை. நிறுத்தும்-நிறுத்தவேணுமென்கிற. மனத்து - நெஞ்சிலே, ஒன்றிய - ஒருமைப்பட்ட, சிந்தையினூர்க்கு-மநோரதத்தையுடையவர்களுக்கு, வினையாயின-அவித்யாகர்மவாஸநாருசிகளான அநுபவவிரோதிகளையடைய, அறுக்கும் - போக்குவதாய், வெறி - பரிமளப்ரசுரமான, தண் - ஶ்ரமஹரமாய், மலர் - புஷ்போத்தரமான, சோலைகள்சூழ்-சோலைகளையுடைய, திருநாவாய் - திருநாவாயானது, கொடியேற்கு-அநுபவாபிநிவேஶாநுரூபமாகக் கிட்டப்பெறுதகொடுமையையுடையவெனக்கு, குறுக்கும் வகையுண்டுகொலோ - கிட்டும்விரகுண்டாமோ. (௧)

ஆறு:—பகவத்தர்மஸநாபேக்ஷராயிருப்பாருடைய துக்கங்களைப்போக்கும் திருநாவாயைநமக்கு மொருக்கால் குறுகுகைக்கு உபாயமுண்டேயோவென்கிறார். (௧)

ஈடு; அவ:—எனக்குத் திருநாவாய் குறுகுகைக்கு உபாயமுண்டோ வென்கிறார்.

(அறுக்கும்வினையாயின) வினையென்று பேர்பெற்றவை யடங்கலும்போக்கும்; —ருசிவிரோதி, உபாயவிரோதி, ப்ராப்யத்தை ப்ராபிக்குமிடத்தில் வரும்விரோதிகள், வர்த்தமானதேஹத்தளவிலே பர்யவஸிக்கையன்றிக்கே ப்ராரப்தஶேஷமாய்நின்று அவ்வருகேயும் போம்படி விளம்பிக்கக்கடவவை. நின்றநின்றநிலைகள்தோறு முண்டாயிருக்குமிறே விரோதிகள்.

புதுப்புடைவை யழுக்குகழற்றுமாபோலே க்ரமத்தாலேபோக்க வேண்டுவது தான்போக்குமன்றிறே; பகவத்ப்ரஸாதத்தாலே போமன்று ஒருக்காலேபோமிறே; (௧) "ஜ்ஞாநாஜ்ஞாநதோவாபி - ஶ்ருமந்த்ரமாத்ரேண" (௨) "ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" (௩) "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிறபடியே யாகக்கடவதிறே. ப்ரஹ்மஹத்யைக்கு ப்ராயஶ்சித்தம் பண்ணில். கோ[illegible] ப்ராயஶ்சித்தம் பண்ணவேணுமவனடி வருமிறே; அங்ஙன்வேண்டாவிறே பகவதநுக்ரஹங்கொண்டு கார்யங்கொள்ளுமிடத்தில்.

ஆர்க்குத்தானிப்படி செய்வதென்னில் (ஆகத்தித்யாதி) ஹ்ருதயத்திலே அவனைநிறுத்த வேணுமென்னு மத்யவஸாயத்திலே யொருமைப்பட்ட மநோரதத்தையுடையார்க்கு. (வெறியித்யாதி) வினையைப்போக்காதே வர்த்திப்பிக்கிலும் விடவொண்ணாதபடியாய்த்து தேசமிருப்பது. பரிமளத்தையுடைத்தாய் ஶ்ரமஹரமாய் நித்யவஸந்தமான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாய்.

(குறுக்தும்வகையுண்டுகொலோ) குறுகப்பண்ணும்வகை யேதோவென்னுதல்; குறுகும் விரகேதோவென்னுதல்; குறுக்குமென்று-அத்தேசபாஷை. எம்பெருமானார் திருவடித்தொழ வெழுந்தருளாநிற்க, "திருநாவாயெத்தனையிடம்போரும்" என்று எதிரேவருகிறார் சிலரைக்கேட்டருள, "குறுக்கும்" என்றார்களாய், அத்தைக்கேட்டு "இப்பாஷையாலே யருளிச்செய்வதே ஆழ்வார்!" என்று போரவித்தராயருளினர். (கோடியேற்து) கொடியேனுக்கு. ஆசாலேசமுடையார்க்கு ப்ராபிக்கலாம் தேசமாயிருக்க ஆசையும் கண்

(௧) விஷ்ணுதர்ம-௭௮-   (௨) சாந்தோ-௫-௨௪-
(௩) கீதை-௧௮-௬௬-

ணழிவற்றிருக்க புகப்பெறாதே நோவுபடுகைக்கடியான பாபத்தைப் பண்ணினவெனக்கு.

[ஆகத்தவனைநிறுத்தம் மனத்தொன்றியசிந்தையினார்க்கு-வினையாயின-அறுக்கும் - வெறித்தண்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய்-கொடியேற்கு - குறுக்கும் வகையுண்டுகொலோ·] (௧)

இரண்டாம்பாட்டு,

கோடியேரிடைக்கோகனகத்தவள்கேள்வன் * வடிவேல்தடங்கண்மடப்பின்னைமணாளன் * நெடியானுறைச்சோலைகள் சூழ்திருநாவாய் * அடியேனணுகப் பெறுநாளெவைகோலோ. (உ)

ப:—அநந்தரம், மஹிஷ்யாதிபோக்யதாவைபவத்தை யுடையவன் வர்த்திக்கிற திருநாவாயை நான்கிட்டும் நாள்க ளெவையென்கிறார்.

(இ - ள்.) கொடியேரிடை - கொடிபோலழகிய இடையையுடையளாய், கோகனகத்தவள் - தாமரைப்பூவிற் பிறப்பாலே நிரதிஶயபோக்யையானலக்ஷ்மிக்கு, கேள்வன் - ஸத்ருஶனாய், வடிவேல் வடித்தவேல்போலே யொளியையும் கூர்மையையுமுடைத்தான, தடங்கண்-பெரிய கண்களையும், மடம் - மடப்பத்தையுமுடைய, பின்னை - நப்பின்னைப்பிராட்டிக்கு, மணாளன் - போக்தாவாய், இவ்வளவன்றியே, நெடியான் - அபர்யந்தபோக்யதாதிசயத்தையுடையவன், உறை-வர்த்திக்கிற தேசமாய், சோலைகள்-நாநாவிதமானசோலைகளாலே, சூழ் சூழப்பட்ட, திருநாவாய்-திருநாவாயை, அடியேன்-அநந்யபோக்யனானான், அணுகப்பெறுநாள் - அணுகப்பெறுநாள்கள், எவைகொலோ - எவையோ.

வடியென்று-மாவடுவாய், மாவடுப்பிளவுபோலவும் வேல்போலவுமென்றுமாம். (உ)

ஆறு;—(கொடியேரிடை) பெரியபிராட்டியாரோடும் நப்பின்னைப்பிராட்டியாரோடுங்கூட அவன் எழுந்தருளியிருக்கிற திருநாவாயிலே போய்ப்புகுவதென்றோவென்கிறார். (உ)

ஈடு-அவ:—திருநாவாயிலே புகும்நாளென்றோ வென்கிறார்.

(கொடியேரீத்யாதி) கொடிபோலே யழகிதான இடையை யுடையளாய் புஷ்பத்திற் பரிமள முபாதாநமாகப் பிறந்த பிராட்டிக்கு

வல்லபனானவன். (௧) "நகஸ்சிந்நாபராத்யதி - நகஸ்சிந்நாபராத்யதி" என்பாருமருகேயிருக்க இழக்கவோவென்கிறார். (வடிவேற்றடங்கண்மடப்பின்னைமணாளன்) கூரிய வேல்போலே, ஓராறுமொருநோக்கும் நேராய்போக்தாவினளவல்லாத போக்யதையையுடைத்தான கண்ணையுடையளாய், ஆத்மகுணோபேதையான நப்பின்னைப்பிராட்டியுடைய செவ்வி புஜிக்கைக்கு இட்டுப்பிறந்தவனாய்த்து.

(நெடியான்) இப்படிப்பட்ட மஹிஷீபரிஜநாதிகளாலெல்லை காணவொண்ணாதவன். (உறையித்யாதி) அவனுக்கும் அவன்விபூதிக்கும் குறைவற வர்த்திக்கலாம்படி இடமுடைத்தான சோலைகளாலே சூழப்பட்ட திருநாவாயை. (அடியேன்) வநவாஸத்துக்குப் பெருமாளும் பிராட்டியுமாய்க் கலக்குமிடத்தில் (௨) * ஸவாம்ஸ்து பவாம்ஸ்துவிற்படியே எல்லாவடிமைகளும் செய்கைக்கு இளைய பெருமாள் நேர்பட்டாப்போலேயாய்த்து, இங்குத்தைக் கடிமை செய்கைக்கு இவர் நேர்பட்டபடியும். இளையபெருமாளைப்போலே அடிமைசெய்வித்துக்கொள்ளுகிறவிஷயத்திற் குறையில்லையாய்த்திவாக்கு; ஸ்ரீஜநகராஜன் திருமகளொருத்தியுமிறேயங்கு. (அணுகப்பெறுநாளெவைகொலோ) அத்தேசத்தை நான்கிட்டப் பெறும் நாளேதோ. (௨)

மூன்றாம்பாட்டு.

எவைகொலணுகப்பெறுநாளென் றெப்போதும் * கவையின்
மனமின்றிக்கண்ணீர்கள்கலுழ்வன் * நவையில் திருநாரணன்சேர்
திருநாவாய் * அவையுட்புகலாவதோர்நாளறியேனே. (௩)

ப:—அநந்தரம், அஸாதாரணஸம்பந்த விஶிஷ்டனான நாராயணன் வர்த்திக்கிற திருநாவாயோலக்கத்திலே புகுவதொருநாளறிகிறிலேனென்கிறார்.

(இ - ள்.) அணுகப்பெறுநாள் - கிட்டப்பெறுநாள், எவைகொலென்று - எவையென்று, எப்போதும் - ஸர்வகாலத்திலும், கவையில்மனமின்றி - வேறொன்றிற் புகுரும் நெஞ்சின்றியே ஏகாக்ரசித்தனாய்க்கொண்டு, கண்ணீர்கள் - கண்ணீர்கள், கலுழ்வன் - மல்காநிற்பன்; நவை

---

(௧) ரா-யு-௧௧௬-௨௨-   (௨) ரா-அயோ-௩௧-௨௫

களசு திருவாய்மொழி, கூ-ப, அ-கி, ச-பா, நாளேல் வ்யாக்யாநத்தி

யில்-துர்லபத்வ ஸௌபாதிகத்வாதிகளாகிற குற்றமின்றியே, திருநாரணன்-ஸுலபனாய் நிருபாதிகபந்துவாய் ஸ்ரிய:பதியான நாராயணன், சேர்-வர்த்திக்கிற, திருநாவாய் - திருநாவாயிலே, அவையுள் - அவனுடையவோலக்கத்திலே, புகலாவது - ப்ரவேசிக்கலாவது, ஓர்நாள் - ஒருநாள், அறியேனே - இன்னதென்றறிகிறிலேன்.

நவை - குற்றம், அவை - ஓலக்கம். (௩)

ஆறா;—(யவைகோல்) என்றோ திருநாவாயை யணுகப் பெறுவதென்றுஎப்போதும் ததேகசித்தனாய் கண்ணீர்சோரவிருக்கிறநான் ஹேயப்ரத்யநீகனான திருநாரணன்சேர் திருநாவாயிலே அவனுடைய திவ்யபரிஷத்திலேபோய்ப் புகுநாளென்றென்றறிகிறிலேனென்கிறார். (௩)

ஈடு; அவ;—திருநாவாயில் திருவோலக்கத்திலே புகும்நாளென்றென்றறிகிறிலேனென்கிறார்.

(யவைகோலித்யாதி) நான்வந்து கிட்டப் பெறும்நாள் யவையென்று. (எப்போதும்) ஒருக்காலித்தைச் சொல்லி, அல்லாதபோது அந்யபரதைபண்ணுகிறேனோ. (கவையில்மனமின்றி) அதுதன்னிலு மிதுவும் முகாந்தரமுமாய்ச் செல்லுகிறதோ, இருதலைத்த நெஞ்சின்றிக்கே, (கண்ணீர்கள்கலுழ்வன்) கண்ணீர்கள் வெள்ளமிடவிருப்பன்.

(நவையில்திருநாரணன்) துர்லபத்வாதி தோஷமின்றிக்கேயிருக்கிற ஸ்ரீமானான நாராயணன்; ஸௌலப்யத்துக்கூற்றான பிராட்டியோடேகூடத்திருநாவாயிலேவந்து ஸுலபனானவன். திருநாவாயிலே பேரோலக்கமாக விருக்க, "அடியார்கள்குழாங்களை - உடன்கூடுவதென்றுகொலோ" என்றாசைப்பட்டநான் அத்திரளிலேசென்று கூடப் பெறும்நாளென்றென்றறிகிறிலேன்.

அவை - ஸபை. நவை - குற்றம். (௩)

நான்காம் பாட்டு.

நாளேலறியேனெனக்குள்ளனநாளும் * மீளாவடிமைப்பணி செய்யப்புகுந்தேன் * நீளார்மலர்ச்சோலைகள்சூழ்திருநாவாய் * வாளேய்தடங்கண்மடப்பின்னைமணாளா. (௪)

ப:—அநந்தரம், நித்யகைங்கர்யத்திலே அந்விதனாய்ப்புகுந்தநான் அந்தகைங்கர்யோபயுக்தமான நாள்களுள்ளவானபடி யறிகிறிலேனென்கிறார்.

(இ - ள்.) நீள் - ஓங்கி, ஆர் - நிறைந்த, மலர் - பூவையுடைத்தான, சோலைகள் - சோலைகள், சூழ் - சூழ்ந்த, திருநாவாய் - திருநாவாயிலே, வாளேய் - வாள்போலே (நீண்ட) ஒளியையுடைத்தான, தடங்கண் - பெரியகண்ணையுடையளாய். மடப்பின்னை-ஆத்மகுணபூர்ணையான நப்பின்னைப்பிராட்டிக்கு, மணாளா-நிரதிசயபோக்தாவானவனே, ஸூரிகளைப்போலே, நானும்-நானும், மீளாவடிமைப் பணிசெய்ய-விச்சேத ரஹித நிரந்தரகைங்கர்யம் பண்ணுகைக்கு, புகுந்தேன்-அந்வயித்தேன்; அதுக்கு, எனக்கு - எனக்கு, உள்ளன-உளவாகக் கற்பித்துவைத்த, நாளேல்-நாளாகில், அறியேன் - அவைநானறிகிறிலேன். (ச)

ஆறு:—(நாளேலறியேன்) நிரவதிக ஸௌந்தர்யகுண விசிஷ்டையான நப்பின்னைப்பிராட்டிக்கு போக்யனான வுனக்கு மீளாதவடிமைப்பணிசெய்யப்புகுந்தேன், அடிமைசெய்யும்நாளென்றென்றறிகிறிலேனென்கிறார். (ச)

ஈடு-அவ;—ஆத்மாந்ததாஸ்யம்பண்ணும்படி விஷயீகரித்தனான நான், நப்பின்னைப் பிராட்டியோடேகூட விருக்கிற விருப்பிலே யடிமைசெய்யப்பெறும் நாளென்றென்றறிகிறிலேனென்கிறார்.

(நாளேலறியேனெனக்குள்ளன) பெறக்கடவநாளென்றென்றறிகிறிலேனென்னுதல்; நான் பிரிந்திருக்கக்கடவ நாளெத்தனையுண்டென்றறிகிறிலேனென்னுதல். பேறு ஸித்தமானபின்பு பதறுகிறதென்னென்னில் (நானும்மீளாவடிமைப் பணிசெய்யப்புகுந்தேன்) நித்யஸூரிகள் பண்ணுமாத்மாந்ததாஸ்யத்திலேயன்றோ நானுமதிகரித்தது. ஒரு ப்ரயோஜநத்தைக்கொள்ளக் கிட்டினவனாயறியிருக்கிறேனோ, தாஸ்யபரிமளத்திற் சுவடறியாதவனாயறியிருக்கிறேனோ.

(நீளார்மலர்ச்சோலைகள்) ஓங்கிப் பரப்புமாறப்பூத்த சோலைகளையுடைத்தானதேசம். அடிமைசெய்கைக்குப் புஷ்பாத்யுபகரணங்களால் குறைவற்றதேசமென்னுதல், நப்பின்னைப்பிராட்டியும் தானுமாகப் புஷ்பாபசயம்பண்ணலாம் தேசமென்னுதல்.

(வாளேய்தடங்கண்) ஒளியையுடைத்தான பரந்தகண்ணென்னுதல்; வாள்போலேகண்டாரை யழிக்கவல்ல பரந்தகண்ணென்னுதல்: அவனை யநந்யார்ஹமாக்கவல்ல கண்ணழகையுடையவளென்கை. (மடப்பின்னைமணாளா) அழகே யன்றிக்கே ஆத்மகுணங்களாலும் துவக்கவல்லவளுக்கு வல்லபனானவனே. தேசாந்தரம் போன ப்ரஜை ஊரணித்தானவாறே தாய்மாரைப் பலகால் நினைக்குமாபோலே, ப்ராப்யதேசமணித்தானவாறே திரளவும் தனித்தனியும் பிராட்டிமாரை அநுஸந்திக்கிறார். (ச)

ஐந்தாம்பாட்டு.

மணாளன்மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும் * கண்ணாளனுலகத்துயிர் தேவர்கட்கெல்லாம் * விண்ணாளன்விரும்பியுறையுந் திருநாவாய் * கண்ணாரக்களிக்கின்றதிங்கென்றுகொல்கண்டே. (ரு)

ப:—அநந்தரம், பத்நீபரிஜநஸ்த்தாநாதி பரிபூர்ணனானவன் வர்த்திக்கிற திருநாவாயை என்கண்ணானது நிறையும்படி கண்டநுபவிப்பதென்றோவென்கிறார்.

(இ - ள்.) மலர்மங்கைக்கும் - பத்மவாஸிநியானலக்ஷ்மிக்கும், மண்மடந்தைக்கும் - ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும், மணாளன் - போக்தாவாய், உலகத்து - லோகத்தில், உயிர்தேவர்கட்கெல்லாம் - ப்ராணிகள் தவைதைகள் எல்லார்க்கும், கண்ணாளன் - நிர்வாஹகனாய், விண்ணாளன் - பரமவ்யோமஶப்தவாச்யமானபரமபதத்திலுள்ளாரையும் அடிமைகொள்ளுமவன், விரும்பி - இந்தவிபூதித்வயத் திலும்விரும்பி, உறையும் - வர்த்திக்கிற, திருநாவாய் - திருநாவாயை, கண் - கண்கள், ஆர - பரிபூர்ணமம்படி, கண்டு - கண்டு, இங்கு - இங்கே, களிக்கின்றது - நிரதிஶயாநந்தியாவது, என்றுகொல் - என்றோ. (ரு)

ஆறு;—(மணாளன்) லக்ஷ்மீபூமிநீளாநாயகனாய், தேவாதிஸ்த்தாவராந்தநிகிலஜநநிர்வாஹகனாய், ஸ்ரீவைகுண்டநிலயனானவெம்பெருமான் விரும்பியுறையும் திருநாவாயை, இப்ப்ரக்ருதியோடே கண்ணாரக்கண்டு களிப்பதென்றோவென்கிறார். (ரு)

ஈடு-அவ:—திருநாவாயைக் கண்ணின்விடாய்தீரக் கண்டநுபவிப்பதென்றென்கிறார்.

(மணாளனித்யாதி) பெரியபிராட்டியார்க்கும் ஸ்ரீபூமிப்பிராட்டியார்க்கும் வல்லபனானவன். புருஷகாரமாவாரும் பொறைக்கு உவாத்தாவாருமுண்டாயிருக்க விழக்கவேணுமோ. (கண்ணாளனித்யாதி) லோகத்தில் மநுஷ்யர்களென்ன, தேவர்களென்ன, எல்லார்க்கும் நிர்வாஹகனானவன். அவர்கள் படுக்கைப்பற்றுநோக்குகிறபடி.

(விண்ணாளன்) படுக்கைதானிருக்கிறபடி;-பிராட்டிமாரும்தானும் தனக்குத்தகுதியான பரமபதத்தில் திவ்யபர்யங்கத்திலேயிருந்து நித்யஸூரிகளை நிர்வஹிக்கிறவன். (விரும்பியுறையும் திருநாவாய்) உபயவிபூதிநாதன், பெறாப்பேறாக வாதரித்து வர்த்திக்கிறதேசம். அவன்விரும்புகிறதேசமல்லது ப்ராப்யமில்லையிறே.

(கண்ணார) காண்கையிலே விடாய்ப்பட்டகண், ஆர - வயிறு நிறைய. (களிக்கின்றதிங்கென்றுகோல்) (௧) "அஹமந்நமஹமந்நம-அஹமந்நமஹமந்நம்" என்றொரு தேசவிசேஷத்தே களிக்கையொழிய, இங்கேகளிக்கப் பெறுவதென்றோ. (கண்டே) "காண்கைநிஸ்சிதம்" என்னும் விஸ்வாஸத்தால் களிக்கையன்றிக்கே, கண்டே களிப்பதென்றோ. (௫)

ஆறும்பாட்டு.

கண்டேகளிக்கின்றதிங்கென்றுகோல்கண்கள் * தொண்டே
யனக்காடொழிந்தேன்துரிசின்றி * வண்டார்மலர்ச்சோலைகள்சூழ்
திருநாவாய் * கொண்டேயுறைகின்ற வெங்கோவலர்கோவே, (௬)

ப:—அநந்தரம் திருநாவாயிலேவர்த்திக்கிற வாஸ்ரிதஸுலபனானவுன்னைக்கண்டு என்கண்கள் களிப்பதென்றென்கிறார்.

(இ - ள்.) வண்டார் - வண்டுகள்நிறைந்த, மலர்ச்சோலைகள் - மருவையுடையசோலைகள். சூழ் - சூழ்ந்த, திருநாவாய் - திருநாவாயை, கொண்டு - வாஸஸ்த்தானமாகத் திருவுள்ளத்திலேகொண்டு, உறைகின்ற - நித்யவாஸம்பண்ணுமவனாய், எங்கோவலர்கோவே - எனக்கும் கோபாலர்க்கும் ஸௌலப்யத்தைக்காட்டி ஸ்வாமியான க்ருஷ்ணனே, துரிசின்றி - க்ருத்ரிமமின்றியே, உனக்கே - உனக்கே, தொண்டாயொழிந்தேன் - சபலனாய்விட்டேன், கண்கள் - என்கண்கள், இங்கு -

---

௧) தை-ப்ருகுவல்லி-௧௦

கஅ0 திருவாய்மொழி, கூ-ப, அ-தி, எ-பா, கோவாகிய வ்யாக்யாநம்.

இங்கே, கண்டேகளிக்கின்றது - நிரந்தரமாகக் கண்டேகளியாநிற்பது, என்றுகொல் - என்றோயிருக்கிறது. (சு)

ஆறு:—(கண்டே) எனக்காகத் திருநாவாயைக் கோயிலாகக் கொண்டுறைகிற கோவலர்கோவே, உன்பக்கலிலே அநந்யப்ரயோஜநமான ஸ்நேஹத்தையுடையேனான என்னுடையகண்கள் திருநாவாயிலே உன்னைக்கண்டு களிப்பதென்றோவென்கிறார். (சு)

ஈடு;- அவ;— ஊரையன்றிக்கே ஊரில் நின்றருளின வுன்னைக் கண்டு களிப்பதென்றோ வென்கிறார்.

(கண்டேகளிக்கின்றதிங்கென்றுகோல்கண்கள்) நான்செய்தபடிசெய்ய; கண்களின்விடாய் கெடுவதென்றோ. ஒருநாளிலேகாண்கை நிஶ்சிதம். ஆனபின்பு, இந்நிர்ப்பந்தக்துக்குப் பலமென்னென்னில் (தொண்டேயுனக்காயோழிந்தேனித்யாதி) அந்யபரதையின்றிக்கே உன் திருவடிகளிலே அதிசபலனானேன்; அரைக்ஷணமிழக்க மாட்டாதப்படியன்றோ என்சாபலமிருப்பது. துரிசாகிறது - மாநஸ ஸாக்ஷாத்காரமாத்ரமன்றிக்கே ஹேயவிஷயஸ்பர்ஶம்.

(வண்டித்யாதி) பரிமளத்தாலே தோபாதி வண்டுகளும் படிந்துகிடக்கும்படி புஷ்பிதமான சோலையுடைத்தானதேசம். (க) "நவை-நநாவஹ்ருதெ-நசபுநராவர்த்ததே" என்கிறபடியே புக்காரை மீளவொட்டாதபடி நிரதிசயபோக்யமான தேசம். (கோண்டேயுறைகின்ற) "நமக்கும் நம்மையுகந்தார்க்கும் நினைத்தபடி பரிமாறியநுபவிக்கலாம் தேசம்" என்று திருவுள்ளத்தாலே யாதரித்துக்கொண்டு வர்த்திக்கிற தேசமாய்த்து. (எங்கோவலர்கோவே) க்ருஷ்ணனாய் வந்தவதரித்து இடையர்க்கு ஸுலபனானாப்போலே, திருநாவாயிலே வந்தெனக்கு ஸுலபனானவனே. (சு)

ஏழாம்பாட்டு.

கோவாகியமாவலியை நிலங்கோண்டாய் * தேவாசுரஞ்சேற்றவனேதிருமாலே* நாவாயுறைகின்ற வென்னாரணநம்பீ* ஆவாவடியானிவனென்றருளாயே. (எ)

ப:—அநந்தரம், சேஷித்வ ரக்ஷகத்வ ப்ராப்யத்வ ரூபமான வாகாரபூர்த்தியையுடைய நீ, உறவைப்பார்த்து க்ருபைபண்ணவேணுமென்

(க) சாந்தோ-அ-கரு-

(இ-ள்) கோவாகிய - த்ரைலோக்யத்துக்கும் சேஷியாகத் தன்னையபிமாநித்திருந்த, மாவலியை - மஹாபலியை, நிலங்கொண்டாய் - பூமியை அபேக்ஷித்துவாங்கி அதினுடைய வந்யசேஷத்வம்போய் அநந்யார்ஹமாம்படி சேஷியானவனாய், ஶேஷமான ஜகத்துக்கு, தேவாசுரம் - தேவாஸுரவிபாகத்தால் வருகிறவிரோதத்தை, செற்றவனே - ஶமிப்பித்துத்வதேகஶரணனுக்குமவனாய், நாவாயுறைகின்ற - திருநாவாயிலே நிரந்தரவாஸம்பண்ணுகிற, என், நாரணநம்பீ - ஸமஸ்தகுணவிபூதி விசிஷ்டத்வத்தால்வந்த நாராயணத்வ பூர்த்தியையுடையையாய், திருமாலே - இந்தஶேஷித்வரக்ஷகத்வப்ராப்யத்வபூர்த்திக்கு அஸாதாரணமானஶ்ரிய:பதித்வத்தையுடையவனே, * காருண்யரூபையானவளோட்டைச்சேர்த்தியாலே, ஆ ஆ ஐயோ, இவன் - இவன், அடியானென்று - நமக்கு ஶேஷபூதனென்று, அருளாயே - * ஆகாரத்ரயவிஶிஷ்டஸம்பந்தத்தைப்பார்த்து இரங்கியருளவேணும். (௭)

ஆறு;—(கோவாகிய) ஆஶ்ரிதஜந ஸமீஹிதப்ரதனாய், ஆஶ்ரிதஜநாநிஷ்ட நிவாரணஸ்வபாவனுமாய், ஆஶ்ரிதவத்ஸலனுமாய், ஆஶ்ரிதசுலபத்வார்த்தமாகத் திருநாவாயிலே யவதீர்ணனுமாயிருந்த நாராயணநம்பீ, ஆவாவடியானிவனென்றருளாயென்கிறார். (௭)

ஈடு - அவ;—ஆஶ்ரிதார்த்தமாகத் திருநாவாயிலே நித்யவாஸம்பண்ணுகிற தேவர், அநந்யகதியென்று என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

(கோவாகியமாவலியை நிலங்கொண்டாய்) ஸர்வேஶ்வரன் இந்த்ரனை த்ரைலோக்யாதிபதியாக்கிவைத்தான், அவனைத்தள்ளி அந்தப்பதத்தைத் தானெறட்டுக்கொண்டு "நானே அரசு" என்றிருந்தானாய்த்து. நீகொடுக்கக்கொள்ளைகையன்றிக்கே, அதுக்கெல்லாம்தானே நியாமகன் என்றபிமாநித்திருந்தானாய்த்து. "வெறும்புறத்திலே, தன்னதல்லாதத்தை 'தன்னது' என்றெறட்டுக்கொண்டிருக்கக்கடவவன்கையிலே இவ்விஷயமுங்கிடக்குமாகில் நாடுகுடிக்கிடவாது" என்றுபார்த்தருளி, இந்த்ரனதானவிபூதியை அவன்பக்கலில் நின்றும்வாங்கினான்.

(தேவாசுரஞ்செற்றவனே) தேவாஸுரஸங்க்ராமத்திலே அவர்கள் படுவது இவர்கள் படுவதாய் இங்ஙனே யுருவச்செல்லப்புக்கவாறே, ஒருதலையையழித்து தேவஜாதிக்குக்குடியிருப்புப்பண்ணிக்கொடுத்தானாய்த்து.

(திருமாலே) ஆஸ்ரிதரக்ஷணத்துக்கும் தத்ப்ரதிகூல நிரஸநத்துக்குமடி ஸ்ரிய:பதியாகை. (நாவாயுறைகின்ற) இப்படி ரக்ஷிக்குமிடத்தில் அடித்தணித்தாக முகந்தோற்றத் திருநாவாயிலே நித்யவாஸம்பண்ணுகிற (என்னாரணநம்பீ) ஆஸ்ரிதவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே நோக்காக ஸர்வாந்தர்யாமியானவன். (நாரணநம்பீ) அதுக்குறுப்பாக ஆஸ்ரிதவத்ஸலனாய் அவர்களுக் குறுப்பாகப்பெற்றோமென்றத்தாலே பரிபூர்ணனானவனே.

(ஆவாவித்யாதி) (க) "க்ருபாமாத்ரமநோவ்ருத்தி: - க்ருபாமாத்ரமநோவ்ருத்தி:" என்கிறபடியே, ஐயோ, இவனநந்யகதி, இவனுக்கு வேறொருபுகலில்லை என்று, என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும். (அடியான்) அவன் அருளுகைக்கும் இவன் அருள்கொள்ளுகைக்கும் ஸம்பந்தஞ் சொல்லுகிறது, (கூ)

எட்டாம்பாட்டு.

அருளாதொழிவாயருள் செய்தடியேனை * பொருளாக்கியுன்
பொன்னடிக்கீழ்ப்புகவைப்பாய்* மருளேயின்றியுன்னை யென்னெஞ்
சத்திருத்தும் * தெருளேதருதென்திருநாவாயென்தேவே. (அ)

ப:— அநந்தரம், நீயருளாதிருக்கவுமாம், அருளவுமாம், ஒருசலக்கமில்லாதபடி யுன்னை யென்னெஞ்சிலே வைத்தநுபவிக்கும்படியான ஜ்ஞாநத்தைத் தந்தருளவேணுமென்கிறார்.

(இ-ள்.) அருளாதொழிவாய் - இவன் செய்தபடி செய்கிறான் என்று க்ருபைபண்ணாதிருக்கிலுமிருக்கிறாய், அடியேனை - அநந்யகதியாம்படி யுனக்கேயாயிருக்கிற வென்னை அருள்செய்து - நிரவதிக க்ருபைபண்ணி, பொருளாக்கி - லப்தஸத்தாகனாக்கி, உன் பொன்னடிக்கீழ் - உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளின்கீழே, புக - ப்ரவேசிக்கும்படி, வைப்பாய் - வைக்கிலும் வைக்கிறாய், தென் - கட்டளைப்பட்ட திருநாவாய் - திருநாவாயிலே, என் தேவே - எனக்குப் பரமப்ராப்யபூதனாயிருக்கிறவனே. மருளேயின்றி - ஒருக்காலும் அஜ்ஞாநகந்தமில்லாதபடி, உன்னை, ஸர்வப்ரகாரபரிபூர்ணனாய் போக்யனானவுன்னை, என் நெஞ்சத்து - அத்யந்தாபிநிவிஷ்டனான வென்னெஞ்சிலே, இருத்தும் - இருத்தியநுபவிக்கும்படியான, தெருளே - தெளிந்த அறிவை, தரு - எனக்குத் தந்தருளவேணும்.

தருவென்று - தருதியாகவேணுமென்படி. (அ)

(க) வி-பு-௬-எ௦

ஆறு;—(அருளாதொழிவாய்) அஜ்ஞாநகந்த மில்லாத தொரு படி உன்னுடைய ஸ்வரூபரூப குணவிபூதிவிஷய திவ்ய ஜ்ஞாநத்தை உன்க்ருபையாலே யெனக்குத் தந்தருளினநீ, இன்னமு முன்க்ருபையாலே "நம்மடியானிவன்" என்று விஷயீகரித்தருளி, அடியேனை யுன்பொன்னடிக்கீழ்ப் புகவைத்தருளுவாய், வைத்தருளாதொழிவாய், திருவுள்ளமானபடிசெய்தருள் என்றுகொண்டு எம்பெருமானை யின்றுதாகிறார். (அ)

ஈடு-அவ;—அப்போதே யபேக்ஷிதம் பெறுமையாலே, " அருளவுமாம், தவிரவுமாம், அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை யென் னெஞ்சிலே யிருத்தும்படி தெளிவைத்தரவேணும்" என்கிறார்.

(அருளாதொழிவாய்) என்பக்கல் க்ருபைபண்ணாதே இவன் பட்டது படுகிறுனென்றிருக்கிலுமிரு. (அருள்செய்து) அன்றிக்கே, என்துர்க்கதியைக்கண்டு க்ருபைபண்ணி. (அடியேனையித்யாதி) அஸத்கல்பனாயிருக்கிற வென்னை, (க) "ஸஜ்ஜௌநஷ்ட-ஸந்தமேநம்" என்கிறபடியே ஒருவஸ்துவாம்படிபண்ணி, நிரதிசயபோக்யமான உன் திருவடிகளின்கீழே வைத்துக்கொள்ளிலும் கொள். பொருளானாரை வைத்துக்கொள்ளும் ஸ்தாநம் பொன்னடிக்கீழ்போலேகாணும்,

(மருளேயின்றியித்யாதி) அடியில் * மயர்வறமதிநலமருளினபடியே, அஜ்ஞாநகந்தமில்லாதபடி உன்னை யென்மநஸ்ஸிலே யெப்போதும் வைத்துக்கொள்ளும்படி, (உ) "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிற தெளிவைத் தரவேணும். " தென்திருநாவாயென் தேவே - தெருளைதரு" என்று க்ரியை;

அன்றிக்கே, "மருளேயின்றியுன்னை யென்னெஞ்சத்திருத்தும் தெருளேதருதென் திருநாவாயென்தேவே - அருளாதொழிவாய். அருள்செய்தடியேனைப் பொருளாக்கியுன்பொன்னடிக்கீழ்ப்புகவைப்பாய், திருவுள்ளமானபடிசெய்" என்றும் பிள்ளான்பணிப்பது. (அ)

(க) தை-ஆந-　　　　(உ) உ-கூ-ச-

ஒன்பதாம்பாட்டு

தேவர்முனிவர்க்கென்றுங் காண்டற்கரியன் * மூவர்முதல்வ
னொருமூவுலகாளி * தேவன்விரும்பியுறையுந்திருநாவாய் * யாவ
ரணுகப்பெறுவாரினியந்தோ. (கூ)

ப:—அநந்தரம், அறிவுடையார்க்கும் அறியவரியஸர்வாதிகன் வர்த்
திக்கிற திருநாவாயை, அத்யந்தாபிநிவிஷ்டனான நான் பெற்றிலேன்,
இனி யார்பெறப்புகுகிறார் என்கிறார்.

(இ - ள்.) தேவர்முனிவர்க்கு - ஸமஸ்ததேவர்களுக்கும், ஸநகாதி
முனிவர்களுக்கும்ஸ்வயத்நத்தால், என்றும்-ஸர்வகாலமும், காண்டற்கு-
காண, அரியன் அரியனாய், மூவர் - ப்ரஹ்மருத்ராதிகளுக்கு, முதல்
வன் - ஸத்தாதிஹேதுபூதனாய், ஒரு - அத்விதீயமான, மூவுலகு - ஜகத்
த்ரயத்தையும், ஆளி-தன்ஸங்கல்பத்தாலேநிர்வஹிக்குமவனாய், தேவன்-
ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான வீஶ்வரன், விரும்பி - அத்யாதரம்பண்
ணி, உறையும் - வர்த்திக்கிற, திருநாவாய் - திருநாவாயை, அந்தோ -
ஐயோ, இனி - இனி, அணுகப்பெறுவார்யாவர்-அணுகப்பெறுவாரார்.
இவ்வபிநிவேசாதிசயத்திலும் கிட்டாதது இனிக்கிடைக்கிறதோ வெ
ன்று கருத்து (கூ)

ஆறு;—(தேவர்) ப்ரஹ்மாதிகளுடைய சக்ஷுராதி ஸர்வகர
ணங்களுக்கு மகோசரனாய், ப்ரஹ்மாதி ஸ்தாவராந்த ஸமஸ்தஜந்
து நிர்மாணத்ராண ஸம்ஹாரணலீலனான வெம்பெருமான் விரும்பிக்
கொண்டு ஸர்வஸுலபனாயுறைகிற திருநாவாயை யணுகப்பெறுமா
வர்கள் என்னபாக்யம் பண்ணினார்களோ, நான் பாக்யஹீனனாயிழந்
தேனென்று நோகிறார். (கூ)

ஈடு-அவ;—இப்படி சொன்னவிடத்திலுமொருவிசேஷகடா
க்ஷம்பண்ணாமையாலே, "நானிவ்வாசையோடே முடியாநின்றேன்,
என்னபிமதம்பெறப்புகுகிற பாக்யாதிகராரோ" என்கிறார்.

(தேவர்முனிவர்க்கென்றும்காண்டற்கரியன்) ப்ரஹ்மாதிகளுக்
கும் ஸநகாதிகளுக்கும் ஸ்வயத்நத்தாலேயென்றுமொக்கக் காண
வரியனாயுள்ளவன். (மூவர்முதல்வன்) ப்ரஹ்மருத்ரர்கள் நடுவேவந்
தவதரித்து அவர்களுக்கு நிர்வாஹகனென்னுதல்; ப்ரஹ்மருத்ரே

திருவாய்மொழி, கூ-ப. அ-தி, கO-பா, அந்தோ வ்யாக்யாநம். கஅ[illegible]

ந்த்ரர்களுக்கு நிர்வாஹகனென்னுதல் ; (ஒருமூவுலகாளி) இந்த்ர முகத்தாலேநின்று த்ரைலோக்யத்தையும் ரக்ஷிக்கும்படியைச் சொல்லுதல் ; அன்றிக்கே, கீழும்மேலும் நடுவுமான ஸர்வலோகத்துக்கும் அத்விதீய நாயக னென்னுதல்.

(தேவன்) ஸர்வவிஸஜாதீயன். (விரும்பியுறையுந்திருநாவாய்) இப்படி ஸர்வநிர்வாஹகனானவன், தனக்கென்ன வொருகுடி யிருப்பில்லாதானொருவன் குடியிருப்புப் பெற்றாப்போலே, "ஆஶ்ரிதாக்ஷணத்துக்குப் பாங்கானதேசம்" என்று அத்யாதரம்பண்ணி வர்த்திக்குந்தேசத்தை (யாவரணுகப்பெறுவாரினி) நான் முடியப்புகாநின்றேன், இனிப் பெறவிருக்கிறாரார்; (க) "நமெகஂநஹஷ்ரா: நதேமநுஷ்யா:" என்கிறபடியே, அவர்கள் மநுஷ்யர்களுக்குக்கூட்டல்லர். (இனி) என்கிறபதத்தாலே - நான்முடிந்தே னென்கிறது ஸூசிக்கிறது. (அந்தோ) என்கிறபதத்தாலே எனக்குள்ளது அவனுக்குண்டாகப் பெறுமொழிவதே.

[நமெகஂநஹஷ்ரா: - நதேமநுஷ்யா:] அவர்கள் செத்துப் பிறக்கிறவர்களுக்குக் கூட்டல்லர்கள். [தெவா:-தேவா:] அவர்கள் நித்யாநுபவம்பண்ணுகிறவர்களுக்குக் கூட்டாமித்தனை. [யஊக்ராஷி-யஇத்யாதி] பதிநாலாண்டு மொருபடி தப்பிக்கிடந்து அவர் மீண்டுவந்தால் அவ்வொப்பித்த முகத்தைக்காணப்பெறும் பாக்யாதிகராரோ!. இங்கே, காதாசித்காநுபவம் பண்ணுமவர்கள், நித்யாநுபவம்பண்ணுமவர்களிலும் சீரியரே; (உ) "விண்ணுளாரிலும்சீரியரே." [வஷெஹவஊ உஶெஷநஂ - வர்ஷேபஞ்சதஶேபுந:] பதிநாலாண்டும் கழித்துப் பதினைந்தாமாண்டைக் கிருப்பாரிறே காணப்பெறுவார். காலம்முடிந்ததென்றிருக்கிறானொய்த்து சக்ரவர்த்தி.

பத்தாம்பாட்டு.

அந்தோவணுகப்பெறுநாளென்றெப்போதும் * சிந்தைகலங்கித் திருமாலென்றழைப்பன் * கொந்தார்மலர்ச்சோலைகள்சூழ் திருநாவாய் * வந்தேயுறைகின்ற வெம்மாமணிவண்ணா. (கO)

(க) ரா-அயோ-கூச-கூகூ- (உ) திருவி-எகூ

ப:—அநந்தரம், விடவொண்ணாத ரமணீயவிக்ரஹத்தையுடைய வுன்னைக்கிட்டப் பெறுநாளுண்டாவதுகாண் என்று நெஞ்சுகலங்கிக் கூப்பிடாநின்றேனென்கிறார்.

(இ - ள்.) கொந்தார் - கொத்தாகநிறைந்த, மலர்ச்சோலைகள் - பூவையுடைத்தானசோலைகள், சூழ் - சூழ்ந்த திருநாவாய் - திருநாவாயிலே, வந்தே-பரமபதாதிகளைவிட்டேவந்துநிற்குமவனாய் உறைகின்ற-நித்யவாஸம்பண்ணுகிற, எம்மாமணிவண்ணா - நிரதிஶய போக்யமான நீலரத்னம்போலேயிருக்கிற வடிவையுடையவனே, அந்தோ - ஐயோ!, அணுகப் பெறுநாள் என்று - உன்னை யணுகப் பெறுநாளாவதுகாண் என்று, எப்போதும் - ஸர்வகாலமும், சிந்தைகலங்கி - நெஞ்சுகலங்கி, திருமாலென்று-ஸ்ரீமானேயென்று, அழைப்பன்-கூப்பிடாநின்றேன்.

ஆறு;—(அந்தோ) இப்படி யுன்னை யாசைப்பட்டுப் பெறாதே யொழிந்தாலும் நிராஶனாய்விடமாட்டாதே, பின்னையும், என்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்காகத் திருநாவாயிலே வந்திருந்தருளின விக்ருணத்தையநுஸந்தித்து, என்றோவுன்னை நானணுகப்பெறுவதென்று எப்போதும் சிந்தைகலங்கித் திருமாலென் றழையாநிற்பனென்கிறார். (௧௦)

ஈடு; அவ;—உன்னைக் காணப்பெறாமை நெஞ்சழிந்து கூப்பிடாநின்றேனென்கிறார்.

(அந்தோவணுகப் பெறுநாளென்றெப்போதும்) சொல்லத்தொடங்கினது தலைக்கட்டமாட்டாத பலஹாநியாலே, அந்தோ! என்கிறார். "அணுகப்பெறுநாள்யவைகொல்" என்னவிறே நினைப்பது. (எப்போதும்) ஒருகால் சொல்லப்புக்கு இளைத்தால் விடுகை யன்றிக்கே, ஸர்வகாலமும். (சிந்தைகலங்கி) ஹ்ருதயங்கலங்கி, மாதா பிதாக்கள் பேரைச்சொல்லி ஆர்த்தனான ப்ரஜை கூப்பிடுமாபோலே திருமாலென்றழைப்பன்.

(கொந்தாரித்யாதி) கொத்துமிக்க மலரை யுடைத்தான சோலையாலேசூழப்பட்ட திருநாவாயிலே. நித்யவஸந்தமான சோலையையுடைத்தாகையாலே நிரதிஶயபோக்யமான தேசமென்கை. (வந்தேயுறைகின்ற) ஒரு தேசவிசேஷத்திலே சென்று காணக்கடவதான வடிவைக்கொண்டு ஆஶ்ரிதார்த்தமாகவந்து நித்யவாஸம்பண்ணுகிற

வனே. அவ்வடி வெனக்குக் காட்டாதவன்று உன்வரவு அஸத்ஸம மென்கை. (கo)

பதிற்றென்றும்பாட்டு.

வண்ணம்மணிமாடநன்றுவாயுள்ளானை * திண்ணம்மதிள் தென்குருகூர்ச்சடகோபன் * பண்ணார்தமிழாயிரத்திப்பத்தும் வல்லார் * மண்ணாண்டுமேணங்கமழ்வர்மல்லிகையே. (கக)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக, உபயவிபூதியிலுண்டான வாதரணீயதையை யருளிச்செய்கிறார்.

(இ-ள்.) வண்ணம்-நாநாவர்ணங்களையுடைத்தான, மணி-மாணிக்கங்களாலேசமைந்த மாடம் - மாடங்களையுடைத்தாய், நல்-நிரதிசயபோக்யமான, நாவாயுள்ளானை - திருநாவாயிலேவர்த்திக்கிறவனைப்பற்றவுண்டாய், திண் - திண்ணியதாய், அம் - அழகிய, மதிள் - மதிளையுடைய, தென்குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாருடையதாய், பண்ஆர் - பண்நிறைந்த, தமிழாயிரத்து - தமிழானவாயிரத்து, இப்பத்தும் - இப்பத்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், மண் - பூமியுபலக்ஷிதமான லீலாவிபூதியை, ஆண்டு - தங்கள் நினைவின்படியே பகவத்பரமாக நிர்வஹித்து நித்யவிபூதியிலும் பகவதநுபவஜ்ஞாநத்தாலே, மல்லிகை - மல்லிகைபோலே பரிசுத்தமான, மணம்கமழ்வர் - யஶஸ்ஸௌரப்யவிகாஸத்தையுடையராவர். (கக)

இது கலிவிருத்தம்.

ஆறு:—(வண்ணம்) இத்திருவாய்மொழிவல்லார், ஐஹிகாமுஷ்மிக ஸகலபோகங்களையும் புஜிக்கப்பெறுவரென்கிறார். (கக)

ஈடு; அவ;—நிகமத்தில், இத்திருவாய்மொழிகற்றார், ஐஹிகாமுஷ்மிகஸகலபோகங்களையும் புஜிக்கப்பெறுவரென்கிறார்.

(வண்ணம்மணிமாட நன்றுவாயுள்ளானை) நாநாவர்ணங்களான ரத்நங்களாலே செய்யப்பட்ட மாடங்களையுடைத்தாய், நிரதிஶயபோக்யமான திருநாவாயிலே நின்றருளினவனை.

(திண்ணமித்யாதி) திண்ணிதான மதிளையுடைத்தான திருநகரியையுடைய வாழ்வாரருளிச்செய்த, திருநாவாய்க்குரமைக்ஷ திரு

நகரியில் மதில்போலேகாணும், ஆழ்வார்பரியவே அப்பரிவுதானே அவ்வூருக்கு ரக்ஷையென்னுதல்; ஈஶ்வரனுக்குநகம் ஆழ்வாராகை யாலே நகம்கிடந்த விடத்தேயிறே மதிளிடுவதென்னுதல்.

(பண்ணார்தமிழ்) பண்மிகுந்ததமிழ், (மண்ணூண்டு) இஹலோகத்திலே வைஷ்ணவ ஸ்ரீயால் ஸம்பந்நராய். (மணங்கமழ்வர்மல்லிகையே) மல்லிகை மணங்கமழ்வர். இது உபலக்ஷணமாய், (க) "ஸர்வகந்த: ஸர்வரஸ:" என்கிறவிஷயத்தோடு ஸாம்யாபத்தியைப்பெறுவர். இவருடையமநோரதம் அவர்கள்பேறாய்க்கூடலாம்.

எட்டாந்திருவாய்மொழி முற்றிற்று.

(க) சாந்தோ-௩-கச-

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஒன்பதாம்பத்து

ஒன்பதாந்திருவாய்மொழி

மல்லிகை - ப்ரவேசங்கள்

ஆறு:—(மல்லிகை) இப்படி வ்யஸநமதிமாத்ரமானவாறே, அந்யாபதேசத்தாலே தம்முடைய வ்யஸநத்தைப் பேசுகிறார். வண்டுவரைப்பெருமானோடே கலந்தாளொருபிராட்டி, அவன்பசு மேய்க்கப்போய் மீண்டுவரக்கடவிய * அந்தியம்போதானது வந்து அவன்றான் வாராமையால் அத்யந்தமவஸந்நையாய். *

ப:—ஒன்பதாந்திருவாய்மொழியில், கீழ்ப்ராப்யவிஷயமான வபி நிவேசத்தாலே யீடுபட்டவர், அநுபவயோக்யாவஸ்தை ஸந்நிஹிதை யாயிருக்கச்செய்தேயும் அநுபாவ்யனனவீஶ்வரன் அஸந்நிஹிதனுகை யாலே, விளம்பாக்ஷமதையடியாக; போக்யபூதனுனவனுடையரஞ்ஜநீய ஸ்வபாவதையையும், ரக்ஷணப்ரகாரத்தையும், ரமணீயாவயவத்வத்தை யும், அபிரூபவாஹநத்தையும், ஆஶ்ரிதஸௌலப்யத்தையும், அநவதிக ஸௌசீல்யத்தையும், அத்யுதாரரூபதையையும், அதிஶயித ஸம்ஶ்லே ஷத்தையும் ஸாபிப்ராய சேஷ்டிதங்களையும், விஶ்லேஷாஸஹ்யமான வாஶ்சர்யரூபதையையுமநுஸந்தித்து, ஏவம்ப்ரகாரவிசிஷ்டனுன போக் யபூதனை யதாமநோரதமநுபவிக்கப் பெருதவார்த்தியாலும், ஸ்மாரக மாயும் ஆஸக்திஸூசகமாயுமிருக்கிற பதார்த்ததர்ஶநத்தால்வந்த ஶைதி ல்யத்தாலும், அல்பகாலவிளம்பமும் பொறுக்கமாட்டாமல் கூப்பிட்ட ப்ரகாரத்தை பசுமேய்க்கப்போந்தக்ருஷ்ணன், ஸந்த்யைவந்திருக்கச் செய்தேயும் வாராதவிளம்பம் பொறுக்கமாட்டாமல், கோபீஜநங்கள் தத்கால (ஷி) சித்தபோதங்களாலேயீடுபட்டு, பொழுதுகண் டிரங்கிக் கூப்பிட்டபாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

ஈடு- அவ:—“ படைவிட்டிருந்தால் மாமனார் மாமியாருக்குக் கூறிப்பெருமாளுடன் நினைத்தபடி பரிமாறப்போகாது” என்று காட்டிலே யேகாந்தமாகவநுபவிப்பதாக மநோரதித்துப்போந்த பிராட்டியை (க) “ ஶாகோபநிஷதௌ ... விஸ்ருஷ்டா ... வனவனஸஞ்சாரவ ... கான்தாரமத்யே விஜநே விஸ்ருஷ்டா பாலேவ கந்யா விலலாபஸீதா” என்கிறபடியே கூப்பிடப்பண்ணினுப்போலே; அத்

(க) ரா ஸு-ஊ-அ-உ-

திருநாவாயிலேபுக் கநுபவிப்பதாக மநோரதித்தவிவர்க்கு, பாதகவர்க்கத்துக்கஞ்சிக் கூப்பிடும்படியாய் விளைந்தது.

பெற்றி. ஒருநாள் நம்பிதிருவரங்கநாராயணதாஸர் என்பாரொருவர் என்பக்கலிலே திருவாய்மொழிகேட்டு அங்கேசென்றாராய், "இன்றுபிள்ளைபாடுவிநோதமென்" என்று கேட்டவாறே, * "அறுக்கும்வினை சாற்றினோம்" என்றாராய், "நாளைமல்லிகைகமழ்தென்றலும் மாலைப்பூசலும் என்னாய்" என்று பணித்தாராம்.

"ப்ராப்யவஸ்துவைப் பெறும்படியை மநோரதித்தார் கீழ்த்திருவாய்மொழியிலே; மநோரதஸமநந்தரம் பெறக்காணாமையாலே, திருவாய்ப்பாடியிலுள்ளார் க்ருஷ்ணனைப்பிரிந்து ஒருராத்ரிபட்ட வ்யஸநத்தை இவரொருத்தரும்படுகிறார்" என்று வந்தாரருளிச்செய்யும்படி." என்று திருமாலையாண்டான்பணிக்க. அத்தை யெம்பெருமானார்கேட்டருளி, "முன்பே ஆற்றாமையாலே தறபற்றிருக்கிறவராகையாலே அத்தனையாடல்கொடுக்கைக்குவேண்டுமாஶ்ரயம் போராது, ஆனபின்பு அவனைப்பிரிந்தொரு ஸந்த்யையிற்பட்டதோ வைப்படுகிறார்" என்றருளிச்செய்வர்.

இது தன்னிற்செய்ததாகிறதென்னென்னில்; ஜ்ஞாநம்பிறந்த பின்பு விரோதியான ஸம்ஸாரத்தினின்றும் கால்வாங்கவும்மாட்டாதே, ப்ராப்யபூமியில் மநோரதத்தாலும், பாதகவர்க்கத்துக்கிரலாம்படி பதஞ்செய்ததாய்த்து. * பொய்நின்றஞானத்தில், "பகவத்விஷயத்தில் ஜ்ஞாநம்பிறந்தபோதே, விரோதியான ஸம்ஸாரத்தில் ஸம்பந்தத்தை யறுத்துத்தந்தருளவேணும்" என்றபேக்ஷிக்கச்செய்தேயும், "இவரைக்கொண்டுசில ப்ரபந்தங்கள் கலைக்கட்டவேணும்" என்றிருக்கையாலே, அப்போதே யப்படி செய்திலன்; அந்தவிரோதியிலருசி இவ்வளவும்வர நிலைநின்றபடி சொல்லுகிறதிறே.

இதுதான்செய்கிறவிது வேதாந்தங்களிற்போகிற கட்டளையிலென்னவென்னில்; (௧) "தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே" என்கிறவர்த்தத்தைச் சொல்லுகிறதிறே, * தஸ்ய தாவதேவசிரம்; * யாவந்நவிமோக்ஷ்யே, அதஸம்பத்ஸ்யேயிதிறே அநந்தரம். * முடியானேயில் தம்முடைய கரணங்களுக்குண்டான வைலக்ஷண்யத்தைச்சொன்னார்; இதில் - அந்தக்கரணங்களோடேகூட அவற்றுக்கு ஆஶ்ரயமான அவயவிதானென்றாக வழிகிறபடியைச் சொல்லுகிறது ஜ்ஞாநேந்த்ரியங்களோடு கர்மேந்த்ரியங்களோடு வாசியற ஒன்றாக வழிகிறபடியைச் சொல்லுகிறது.

(௧ சாந்தோக். ௬. ௧௪-

ராமாவதாரத்தில் பதினாலாண்டுபோலேயாய்த்து, திருவாய்ப்பாடியிற் பெண்களுக்கு க்ருஷ்ணவிரஹத்தாலொருஸந்த்யை. குணாதிகவிஷயத்தைப் பிரிகையாலே அங்குப் பதினாலாண்டாய்க்கழியவுங்கூடுமிறே; இங்கு இவன் நீர்மையிலே கையடியுண்டிருக்கையாலே, * ஒருபக லநேககல்பமாய்த்தோற்றுமிறே. குணங்கள்தான் காற்கட்டுகிறது குணமாயல்லவிறே; அவ்வாஶ்ரயத்திலே கிடந்தவையாயிறே இங்குத்தர்மி யதுவேயாய் அதுக்குமேலே தீம்புமானால் பாடாற்றப்போகாதிறே; நாட்டார்போக்யதாபுத்திபண்ணியிருக்கிற ஶப்தாதி விஷயங்களடையத் தமக்குபாதகமாக, ப்ராப்யவஸ்துவைப்பெறாதே, நடுவே, ஆண்புலியான ஸ்ரீபீஷ்மர் அர்ஜுநன்கையிலம்புகளாலே, உளைய ஏவுண்டுகிடந்து துடித்தாப்போலே, கிடந்து துடிக்கிறார்.

திருவாய்ப்பாடியிலுள்ளார், க்ருஷ்ணன் "பசுமேய்க்க" என்று புறப்பட்டால், அவன் வருமளவும் அவர்கள்படும்பாடுசொல்லுகிறது; அதாவது ப்ராஹ்மணர்க்கு ஸந்த்யாவந்தநம்போலேயிறே இடையர்க்குப்பசுமேய்க்கை ஜாத்யுசித தர்மமாகையாலே தவிரவொண்ணாதிருக்குமிறே இப்படியாலே அவனைப் பசுக்களின்பின்னே புறப்படவிட்டு, அவன்வரும் ஸந்த்யையைப்பார்த்திருக்குமத்தனையாய்த்து. ஆக அவன் பசுமேய்க்கப்போனால் பகல்பொழுதைவருந்தியொருபடியாற்றினால், அவன்வருங்காலமான ஸந்த்யையும் வந்துமுகங்காட்டி, பசுக்களின் முற்கொழுந்துவந்து தலைவைக்கச்செய்தே அவன்றன்னை வரக்காணவிட்டா லாற்றப்போகாதிறே.

அதாவது - அவன்றான் முற்கொழுந்திலேவாராதே பிற்குழையிலேநிற்குமாய்த்து, நடுவுபடுமலாப்புக்காண்கைக்காக. அவன் வரக்கடவகாலமான ஸந்த்யையும் வந்தது, கூடவரும்பசுக்களும்வந்தன, அவன்றான் வரக்காணவிட்டவாறே, அக்காலத்தில், மல்லிகையின் பரிமளம், நல்லகுறிஞ்சியிசை தொடக்கமான அநுகூல பதார்த்தங்கள், தென்றல், நிலா, கடலோசை, அன்றில், குழலோசை முதலானவை பாதகமாகத்தொடங்கிற்று. குழலோசையும், அவ்வழியே யவனுடையகுணங்களை ஸ்மரிப்பித்து நோவுபடுகைக்குடலாயிருக்குமிறே. அப்படியிருக்கிற பாதகபதார்த்தங்களெல்லாம், முன்பு

தனித்தனியே பருஷபாஷணங்களைப்பண்ணி நலிந்த ஏகாக்ஷி ஏககர்ணியுள்ளிட்ட ராக்ஷஸிகள் பின்பு அவ்வளவில் நில்லாதே யெல்லாருமொக்க மேல்விழுந்து அதுக்குமேலே சிலநலிவுகளைப்பண்ணினைத்தாப்போலே, பாதகவர்க்கமடைய, தனித்தனியும் திரளவும் மேல்விழுந்துநலிய, அவற்றாலே நலிவுபட்டவர்களெல்லாரும் கூப்பிட்டகூப்பீட்டை இவரொருத்தருமே கூப்பிடுகிறார். *

முதற்பாட்டு.

மல்லிகைகமழ்தென்றலீரும்மாலோ வண்குறிஞ்சியிசை தவழுமாலோ * செல்கதிர்மாலையும் மயக்குமாலோ செக்கர்நன்மேகங்கள் சிதைக்குமாலோ * அல்லியந்தாமரைக் கண்ணனெம்மானாயர்களேறரியேறெமமாயோன் * புல்லியமுலைகளுந் தோளுங்கொண்டு புகலிடமறிகிலந்தமியமாலோ. (௧)

ப:—முதற்பாட்டில், ஸந்த்யைவேளையில் தென்றல்தொடக்கமான பதார்த்தங்கள் நலியாநின்றன; நிரதிசய போக்யபூதனான க்ருஷ்ணன் விரும்பின வவயவங்களைக்கொண்டு ஒதுங்க விடங்காண்கிறிலோமென்று கூப்பிடுகிறாள்.

மல்லிகைகமழ்-மல்லிகையிற்பரிமளத்தையுடைத்தான. தென்றல்-தென்றலானது, ஈரும்-நஞ்சூட்டின வாள்போலே ஸர்வதோமுகமாக வீராநின்றது. வண்-ஶ்ராவ்யமாய் அபுபுக்ஷிதக்ராஹ்யமான. குறிஞ்சியிசை-குறிஞ்சியாகிறபண்ணையுடைத்தான விசையானது. தவழும்-அந்தர்க்கதமாகத் துளையாநின்றது. செல்-அஸ்தமயோந்முகனான. கதிர்-ஆதித்யனையுடைத்தான. மாலையும்-ஸந்த்யாவேளையானது. மயக்கும்-கூப்பிட்டாற்றவொண்ணாதவகை அறிவழியும்படி மோஹிப்பியாநின்றது; செக்கர்-ஸந்த்யையில் செக்கர்நிறத்தையுடைத்தான நல்-தர்ஶநீயமாயுள்ள, மேகங்கள்-மேகங்களானவை. சிதைக்கும்-*பொன்னொத்தவாடை யுடையவன் வடிவுக்கு ஸ்மாரகமாய்க்கொண்டு ஶரீரத்தைச் செதுக்காநின்றது; இப்படி நாலுபாடும் விரோதயானபின்பு, அல்லி-விகஸிதமாய். அம்-தர்ஶநீயமான. தாமரைக்கண்ணன்-தாமரைப்பூப்போலேயிருக்கிற கண்ணழகையுடையனாய், எம்மான்-அத்தாலே ‘‘ஜிதம்-ஜிதம்’’ என்னும்படி நம்மைத் தோற்பித்தஸ்வாமியாய். ஆயர்

களேறு-ஸஜாதீயரான கோபரு மீடுபெடும்படியான செருக்கையுடையனாய். அரியேறு-ஸ்த்ரீயும் விபாகமற விப்படி யழிக்கையாலே ஸிம்ஹஶ்ரேஷ்டம்போலே மேனாணித்திருப்பானாய். எம்மாயோன்-ஸம்ஶ்லேஷதசையில் தாழநின்று நம்மோடே பரிமாறுமாஶ்சர்ய சேஷ்டிதங்களையுடையவன். புல்கிய-அத்யந்தாபிநிவிஷ்டனாய்க் கொண்டு ஸம்ஶ்லேஷித்த. முலைகளும் - முலைகளையும். தோளும் - தோள்களையும். கொண்டு-கொண்டு; தமியம் - அவனைப் பிரிந்து தனிமைப்பட்டோம். புகலிடம்-ஒதுங்கவிடம், அறிகிலம்-அறிகிறிலோம்.

ரக்ஷகனானவன் அஸந்நிஹிதனானான். நாம் அஸஹாயரானோம், சுற்றும் முற்றும் பாதகமாய்த்து, அவன் விரும்பின வஸ்துவை நோக்கிக் கொடுக்க விரகறிகிறிலோமென்று கருத்து தவர்தல் - துளைத்தல், சிதைக்கை - செதுக்குகை, ஆலும் ஓவும்-விஷாதாதிசய ஸூசகமான வசைகள். அடிதோறும் கூப்பிட்டது, ஒவ்வொன்றால்வந்த ஆர்த்த்யதிசயத்தாலே.

ஆறு: — மல்லிகைகமழ்தென்றல் முதலான பதார்த்தங்கள் என்னை பாதியாநின்றன, ஆஶ்சர்யமான ஸௌந்தர்யாதிகுணங்களை யுடையனாயிருந்த வெம்பெருமானைப்புல்கி அதுவே தாரகமாயிருந்த விம்முலைகளையும் தோள்களையும் கொண்டு புகலிடமறிகிறிலோம்; முடிவுநோம் என்று கூப்பிடுகிறாள். (க)

ஈடு; அவ;—ஸந்த்யாகாலத்தில் தென்றல்தொடக்கமான பதார்த்தங்கள் தனித்தனியே தனக்கு பாதகமாகிறபடியைச் சொல்லுகிறாள்.

(மல்லிகை) " மல்லிகை " என்று தொடங்கி " செக்கர்நன் மேகங்கள் சிதைக்குமாலோ" என்னுமளவும் இவளார்கேட்கக் கூப்பிடுகிறாள்தான். (மல்லிகைகமழ்தேன்றல்) வெறும்புறத்திலே நலியவற்றான தென்றல்; அதுக்குமேலே மல்லிகையின் பரிமளத்தை யெறட்டுக்கொண்டு வாராநின்றது. வதபரிகரமான பத்திரத்திலே நஞ்சூட்டினாப்போலேயாய்த்து, தென்றல் பரிமளத்தைக் கொண்டு வருகிறபடி.

அவன் கூடவிருந்தபோது அநுகூலமான பதார்த்தங்களடைய இப்போது பாதகமாயிருக்கிறதிறே. (க) " யாநி ஸ்ம ரமணீயாநி

(க) ரா-கிஷ்-௧-௯௯-

தயா ஸஹ வஸதிஶே । தாநி ந்ருவாரணீயாநி ஜீவதோ மே தயா விநா- யாநி ஸ்ம ரமணீயாநி தயா ஸஹ பவந்தி மே । தாந்யேவாரமணீயாநி ஜீவதோ மே தயா விநா ” (க) “ ஸஷட்பத ஸம்வேஹாவாய ஸ்வஸ்வரே ஹிதவஹம் । தாம் விதிஞ்ஜய தஃகாங்கம் வாவகஸ்ருதிஶேஶ - ஏஷபுஷ்பவஹோ வாயுஸ் ஸுகஸ்பர்ஶோ ஹிமாவஹஃ । தாம் விசிந்தயதஃ காந்தாம் பாவகப்ரதிமோ மம ” “ ஸதா ஸம்வேஹம்ஶெந்யம் வஸாநவஹஸீ தயா । ஶாஸ கவிநா ஸீதாம் ஶோகஸந்தநஶொரீஶ - ஸதா ஸுகமஹம் மந்யே யம் புரா ஸஹ ஸீதயா । மாருதஸ் ஸ விநா ஸீதாம் ஶோகஸஞ்ஜநநோ மம ” (உ) “ பத்மஸௌகந்திகவஹம் ஶிவம் ஶோகவிநாஶநம் - தந்யா லக்ஷ்மண ஸேவந்தே பம்போபவநமாருதம் ” என்று கூப்பிடுவானவனிறே. இருவராயிருப்பார் காற்றைத்தேடிப் படுக்கையிடாநிற்க, (ங) “ இக்காலமிவ்வூர் பனிப்பியல்வெல்லாம் தவிர்ந்தெரிவீசும் ” என்னுமாபோலே, இவரொருவர்க்குமேயாய்த்து பாதகமாகிறது.

(மல்லிகைகமழ்தேன்றல்) க்ராணேந்த்ரியத்துக்கும் பாதகமாய், ஸ்பர்ஶேந்த்ரியத்தையு மழியாநின்றது; இராப்படை யேறுவாரைப்போலே உடம்பிலேபடக் காணும்தனைபோக்கி, கண்ணுக்குத்தோற்றுதாய்த்து; கண்டுதப்பவொண்ணாது. இத்தென்றலுக்கு கண்டவிடமெங்கும் வாயாயிராநின்றது. (ஈருமாலோ) பண்டே பிரிவாலே சென்றற்றிருக்கிறவுடம்பை, பலகைபலகையாக வீராநின்றது.

(வண்குறிஞ்சியிசைதவருமாலோ) அழகிய குறிஞ்சியிசையானது, துளையாநின்றது. காற்றீர்ந்து பொகட்ட புண்ணின்மேலே துளைத்துப் பொகடாநின்றது. தென்றல், புறம்பேநலிகிறவித்தனை; இசை, செவிவழியே யுள்ளேபுகுந்து நலியாநின்றது. (வண்குறிஞ்சி) இசைக்கெவ்வளவு செவிப்பாடுண்டு, அவ்வளவும் பாதகமாமித்தனையிறே. அவன்கூடவிருந்தபோ தெவ்வளவு போக்யமாயிருக்கும், வ்யதிரேகத்தி லவ்வளவும் நலியுமிறே. குறிஞ்சியும் தென்றலும் கூடி க்ருதஸங்கேதிகளாய்வந்து, ஒன்றதிகரித்த கார்யத்தின் சேஷத்தை யொன்றுசெய்யாநின்றது. “நற்கொலையாகக் கொல்லவொண்ணாது;

(க) ரா-கிஷ்-க-ருஉ- (உ) ரா-கி-க-கO௯-

(ங) திருவிரு-ரு

உயிர்க்கொலையாகக்கொல்லவேணும், அதில் நீயிவ்வளவுசெய், நானி வ்வளவுசெய்கிறேன் '' என்று க்ருதஸங்கேதராய் வந்தாரைப்போ லே யாய்த்திருக்கிறது.

(செல்கதிரித்யாதி) செல்லப்பட்டிருந்துள்ள கிரணையுடைத் தான மாலையானது, மயங்கப்பண்ணுகின்றது. அஸ்தமியாநின்றுள்ள வாதித்யனையுடைய ஸந்த்யையானது, மோஹிப்பியாநின்றது. வாயி லே சீரையைத் துறத்துக் கொல்லுவாரைப்போலே, ஆற்றாமைக்கு ப்போக்குவிட்டுக் கூப்பிட்டு தரிக்கவுமொட்டுகிறதில்லை. (செக்கர்நன் மேகங்கள் சிதைக்குமாலோ) ஸந்த்யாராகத்தையும் ஶ்யாமமான நிறத்தையு முடைத்தான மேகங்கள், அவனுடைய அவயவஶோ பைக்கும் வடிவுக்கும் ஸ்மாரகமாய், “இவையென்னம்புசெய்தது” என்று அவற்றை கர்ஹித்துக்கொண்டு, “ஆஶ்ரயங்கிடக்கவோ நலி வது” என்று வயிரத்தைச் செற்றுநின்றது,

(அல்லியந்தாமரைக்கண்ணனித்யாதி) நாமிவற்றை யின்னுதா கிறதென், அவன்றான் முன்னே நம்மை முடிக்கக் காரியம்பார்த்து வைத்திலனோ?. “கலந்துபிரியவே இவள்முடியும்” என்றன்றோ அவன் பிரிந்தது?. இவையானால் போக்குவிட்டடித்தனவிறே; புக லறுத்தானவனிறே. (அல்லியித்யாதி) அல்லியையுடைத்தா யழகிய தாமரைபோலேயிருந்த திருக்கண்களையுடையவன். முதலுறவுபண் ணுவது கண்ணிறே.— திருஷ்டிபந்தம் பிறந்திறே ஸம்ஶ்லேஷிப் பது. (எம்மான்) அக்கண்ணழகாலே யென்னை அநந்யார்ஹையாக் கினவன்.

(ஆயர்களேறு) அவ்வழகாலே இடையரைத் தோற்பித்தாப் போலே. (க) [வ்யூடோரஸ்கம் புஂஸாம்] வயிரவுருக் காயிற்று அவனு டைய ஸௌந்தர்யம். தன்னோடொத்தாரை அப்படி நலியாநின்றால், அபலைகளை நலியச் சொல்லவேண்டாவிறே. (அரியேறு) கண்ணாலே குளிரநோக்கி இவளை அநந்யபரையாக்க; இவளோடே ஸம்ஶ்லே ஷித்து, அத்தாலே தான் பெறும்பேறு பெற்றானாப் மேனாணிப்புத் தோற்ற நின்றபடி, ஸிம்ஹஶ்ரேஷ்டம். (எம்மாயோன்) அம்மேன் மையையுடையவன். தாழ்ந்தார்சிலருபர்ந்தவர்களோடே கலக்குமா போலே, கையைக்காலைப்பிடித்துத் தாழநின்று பரிமாறினபடி. கலக் கிறபோது மின்மினி பறக்கும்படிகாணும் கலந்தது.

(க) ரா-அயோ-௩-௨அ-

(புல்லியமுலைகளுந்தோளுங்கொண்டு) அவனும் வாராதிருக்கிறான். நானும் வருந்தி பொருபடி ஜீவித்துக்கிடக்கிறேன், அவனுக்குப்பிறந்த ப்ரஜைகளைக்கொண்டு புகலிடமறிகிறிலேன். நான் செய்தபடிசெய்ய, இம்முலைகளின் வீக்கம் தீர அநுபவிக்கப்பெறுவதிகப் போதோ!; க்ஷாமகாலத்தில் ப்ரஜைகள் "சோறு, சோறு" என்னுமாபோலே படுத்தாநின்றன. அவன்றானும் கலக்கிறபோது ஸர்வாங்க ஸம்ஸ்லேஷ க்ஷமனன்றுபோலேகாணும். அவனிழிந்ததுறையும், இளைப்பாறினவிடமும். (புல்லியவித்யாதி) கலக்கிறபோதை அவனுடைய வலமார்பையும், தம்முடைய கரணங்களுக்குண்டான ப்ராவண்யாதிசயத்தையும், அவன் பெறாப்பேறு பெற்றானாய் நின்று பரிமாறினபடியையும், தமக்கொரு புகலற்றிருக்கிறபடியையும் சொல்லுகிறது.

(புகலிடமறிகிலம்) வ்யதிரேகத்தில் தென்றல் முதலான பதார்த்தங்களைத் தப்பிச் சென்று புகுகைக்கு இடங்காண்கிறிலோம். (தமியமாலோ) இத்தசையில் ரக்ஷகனானவனும் வாராமையாலே தனிமைப்படாநின்றோம். இப்படித்தனி விபூதியாக பாதகமானால், பகதத்தன் விட்ட அஸ்த்ரத்துக்கு அர்ஜுநனைத்தள்ளித் தான் மார்வையேற்றாப்போலே, "இவைவரும்" என்றறிந்தால் தான் கூட விருக்கவேண்டாவோ. அவன்கூடவிருந்தானாகில் இவைதாமிழிதொழில்செய்யத் தொடங்குமோ. (க) "ஸ தாம் புஷ்கரிணீம் கத்வா-ராமஸ்ஸௌமித்ரிஸஹித:" என்று அவர் தாமே நோவுபட்டுக் கூப்பிடுகிறபோது ஒரு தம்பியாராகிலும் கூடவுண்டு நோவுபடுகைக்கு; அங்ஙனுமொரு துணையில்லையென்கை.

(க) [ஸ:] பிராட்டியைப் பிரிந்து நடுவே கடந்தனையிலே யகப்பட்டு நோவுபட்டு நிற்கிற நிலையைச் சொல்லுகிறது. [தாம்] இப்பிரிவும் ஆற்றாமையு மில்லாதாரையும் அழிக்கவற்றாய்த்து. [புஷ்கரிணீம்-புஷ்கரிணீம்] பரப்புமாறப்பூத்த பொய்கைகளும் சோலைகளுமாய். ஜலக்ரீடைக்கு யோக்யமான தேசமாய்த்து. பிரிந்து தனியிருப்பார்க்குக் கண்கொண்டு காணப்போகாது. [கத்வா] நினைவின்றிக்கே யிருக்கச்செய்தே. ம்ருத்யுவினுடைய ஆஸ்யத்தில் புகுவாரைப்போலே வந்து கிட்டிக்கொடு நின்றார். ம்ருத்யுவாகிற

(க) ரா-கிஷ்-க-க.

புடைத்தானென்றால் [பௌண்டரீகாக்ஷ:-பத்மோத்பலஜ ஷாகுலாம்] முகத்துக்கும் கண்ணுக்கும் போலியானவற்றையுடைத்தாயிருந்தது. “ உயர்தாமரைசெங்கழுநீர் பாதர்கள்வாண்முகமும் கண்ணுமேந்தும் ” என்னக்கடவதிறே; [ராம:] பிறர் கூப்பீடு தவிர்த்துப் போந்தவராய்த்து. [ஸௌமித்ரிஸஹித:] (௧) “ ராக்ஷஸெ-லக்ஷ்மணராக்ஷஸ்தர்மேண ” என்று ஏதேனுமளவிலும் கூடநின்று நோக்கிக்கொண்டு போந்தவரும் முன்னாக; ஆறிழியுமவன் தெப்பம்முன்னாகவிழியுமாபோலே. [விஹாவாக்ஷெ நியம:-விலலாபாகுலேந்த்ரிய:] அநேகலக்ஷணங்களோடே யாய்த்துக் கூப்பிட்டது.

ப்ராப்யவஸ்துவைப் பெறவேணுமென்னும் மநோரதமாய், கீழ் இவருடைய மநோரதத்துக்கீடாக வந்து கிட்டும்படி அவனும் வாராதேயிற்க, அவனுடையவரவுக்கீடான தூர்யகோஷம், ஸ்ரீபாஞ்சஜந்யத்வநி, ஜயகோஷம், திருவடி திருச்சிறகோசை, மற்றுமுண்டான நல்நிமித்தங்கள், மந:ப்ரஸாதாதிகள் என்றுப்போலே சொல்லுகிறவை ஒன்றும் காணாமையாலே, அநுகூலபதார்த்தங்கள் பாதகமாகிறது, கரணங்களோ ஶரீரமுமாய் க்லேஶப்படுகை யாகிறவிது, விரோதியான ஸம்ஸாரத்தி னின்றும் கால்வாங்கவும் மாட்டாதே, இங்குப் பொருந்துவதுஞ் செய்யாதே, கண்டதடையப் பகையாயிருக்கிறபடி. ஆக, “ இங்குப் பொருந்தாதே அங்குப் புகப்பெறாதே நடுவே நின்று க்லேஶப்படுகிற அவஸ்தை - ஸந்த்யையாகிறது ” என்றுமிதனை யொருதாத்பர்யஞ் சொல்லக் கடவதாயிருக்கும். *

———— ————

இரண்டாம்பாட்டு.

புகலிடமறிகிலந்தமியமாலோ புலம்புறுமணி தென்றலாம்பலாலோ * பகலடுமாலை வண்சாந்தமாலோ பஞ்சமமுல்லை தண்வாடையாலோ * அகலிடம்படைத்திடந்துண்டுமிழ்ந்தளந் தெங்குமளிக்கின்றவாயன்மாயோன் * இகலிடத்தசுரர்கள் கூற்றம்வாராவினியிருந்தென்னுயிர்காக்குமாறென். (உ)

---

(௧) ரா-கி-௧-௧௨௭-

ப:—அநந்தரம், ஸர்வப்ரகாரரக்ஷகனானவன் ஸந்நிஹிதனாகிறிலன், பாதகங்கள் தனித்தனியன்றியே திரள்திரளா யீராநின்றன, ஒதுங்க விடங்காண்கிறிலோம், இனி ப்ராணரக்ஷணம்பண்ணும் ப்ரகாரமென் னென்கிறாள். (உ)

(இ - ள்) தமியம் - தனிப்பட்டோம். புகலிடம் - பெரும்படைக்கு ஒதுங்கவிடம். அறிகிலம்-அறிகிறிலோம். புலம்புறு-நாகைக்கொட்டுகிற சேக்களின் கழுத்திலே த்வநிக்கிற, மணி - மணியும். தென்றல் - அஸஹாயமாய் நலிகிறதென்றலும், ஆம்பலாலோ - இலைக்குழலும், கூடிக் கொண்டது, பகலடுமாலை - பதார்த்ததர்சநம்பண்ணாமல் பகலையழிப் பிக்கிற ராத்ரிமுகமும். வண்சாந்தமாலோ - தத்காலோசிதமான அங்க ராகஸமுதாயமும். ஒருமுகமாய்த்து; பஞ்சமம்-பஞ்சமமாகிறபண்ணும், முல்லை - முல்லைமாலையும். தண்வாடையாலோ - குளிர்ந்த வாடையும், ஒருதிரளாய்த்து, இப்படி படைதிரண்டாப்போலே தனித்தனிபாதகங் கள் ஸங்கமான விவ்வவஸ்தையில். அகலிடம் - விஸ்தீர்ணமானஜகத் தை, படைத்து - உண்டாக்கி. இடந்து-ப்ரளயத்திலழுந்தாம லிடந்தெ டுத்து, உண்டு - மஹாப்ரளயத்திலே வயிற்றுக்குள்ளேவைத்துநோக்கி, உமிழ்ந்து - உமிழ்ந்து. அளந்து - அந்யாபிமாநம் வாராமலளந்துகொ ண்டு, எங்குமளிக்கின்ற-எல்லாவிஷயத்திலும் ஒரையாமலுபகாரகனாய்- ஆயன் - இந்தக்காரணத்வ ரக்ஷகத்வத்துக்கேகாந்தமான க்ருஷ்ணாவதார ஸௌலப்யத்தையுடையனாய். மாயோன்-ரக்ஷணநுரூபமான ஆஸ்சர்ய சேஷ்டிதவிசிஷ்டனாய், இகலிடத்து - யுத்தத்திலே எதிரம்புகோத்த, அசுரர்கள் - அஸுரர்களுக்கு. கூற்றம் - ம்ருத்யுவானவன், வாரான் - இந்தபாதக ஸங்கங்களையழித்து என்னை ரக்ஷிக்கும்படி வருகிறிலன், இனி - அவன் விரும்பாமலுபேக்ஷித்தபின்பு, என்னுயிர் எனக்கேசுமை யானப்ராணனை, இருந்து - ஸத்தையோடேயிருந்து, காக்குமாறென், ரக்ஷிக்கும்ப்ரகாரமென்.

ரக்ஷ்யபூதரானால் ரக்ஷணத்தில் சக்தியும் ப்ராப்தியு மில்லையென்று கருத்து. பாதகஸ்வரூபங்களைச்சொல்லி பாதிக்கிறப்ரகாரம் சொல்லா தொழிந்தது "படை படை" என்பாரைப்போலே வாசாமகோசரமான பயமும் ஆர்த்தியும் அதிசயிக்கையாலே. தென்றலையும் வாடையையுஞ் சொல்லிற்று, ஒருக்ஷணத்திலே அநேககல்பங்கள் கழிகிறதான கருத் தாலே. (உ)

ஆறு;—(புகலிடம்) புலம்புறுமணிதென்றல் தொடக்கமாக வுள்ள விவையும் பாதியாநின்றன, ஸமஸ்தது:க்கங்களையும் போக்கிக் கொண்டு ஸர்வாத்மாக்களையும் பலபடியால் ரக்ஷிக்கிற பரமகாருணிக னை எம்பெருமான் வருகிறிலன், இனியிருந்து நானுஜ்ஜீவிக்கைக் குபாயமென்னென்கிறாள். (உ)

ஈடு;அவ:—முன்பு தூசியேறினபேர்க்கு உரமாகநின்ற பேரணி உறுபூசலானவாறே திரளவமுக்குமாபோலே, தனித்தனியே நலிந்த பாதகங்கள் பலவும்நெகமிக பலகூடிவந்து நலியாநின்றதென்கிறாள்.

(புகலிடமறிகிலம்) மேல்வருகிற பாதகபதார்த்தங்களைக்குறித் துச் சொல்லிற்றாகவுமாம்; அன்றிக்கே, கீழ்ச்சொன்னவை தமக்கே யஞ்சி அநுபாஷிக்கிறதாகவுமாம். (தமியமாலோ) புகலிடமற்றார்க் குத்துணையாமவன் உ.தவாதொழியத் தனியிருக்கிற விருப்பிறே. (தமியம்-தனிப்பட்டநாம்.) (புலம்புறுமணி) நாகுகளைத்தொடர்கிற சேக்கள்கழுத்தில் மணியினுடையத்வநி, அந்நாகுகள்கைபுகுராமை யாலே கூப்பிடுகிறாப்போலே யிராநின்றது.

(தென்றல்) வெறும்புறத்திலே தென்றலென்னவமையும், “மல்லிகைகமழ்தென்றல்” என்னவேண்டா; வினை முடிகிறல் பின்னை யுடம்புக்கிடாதே யேறுவாரைப்போலே, “ஆரெதிராக உடம்புக்கிடுகிறது” என்றிராநின்றது. (ஆம்பலாலோ) குழலென் னுதல், இலைக்குழலென்னுதல்; இவையெல்லாம், “ஈருமாலோ, தவருமாலோ, மயக்குமாலோ, சிதைக்குமாலோ” என்றாப்போலே சொல்லவேண்டா, “புலி, புலி” என்பாரைப்போலே இவற்றின் பேரைச்சொல்ல, பயங்கரமாயிருக்கிறது. அன்றிக்கே, இவற்றினு டையநலிவு வாயால்சொல்லில் வாய்வெக்குரிக்கும்படியா யிருக்கை யாலே சொல்லாதொழிந்ததாகல்.

(பகலடுமாலை) பிராட்டியுடைய வ்யஸநத்துக்குறுப்பாகப் பெரி யவுடையாரை முடித்துக்கொண்டுவந்து ராவணன் தோற்றினாப்போ லே ஆஸ்வாஸகரமான பகலைமுடித்துவந்து தோற்றிற்றுப்த்து ஸந் த்யை. பகல்பதார்த்ததர்ஸநம்பண்ணி யாற்றலாமிறே; அதில்லாமை யாலே ராத்ரி வ்யஸநமொருமுகஞ்செய்திருக்குமிறே (வண்சாந் தம்) அழகியசாந்தம், பஞ்சமமாகிறபண். (முல்லை) யாழ். அன்றிக் கே, முல்லைப்பூந்தா னிடையர்க்குத்தாராயிருக்குமிறே; அத்தைச்

சொல்விற்றாகவுமாம். (தண்வாடை) அவ்வாடையோடு தென்றலோடு வாசியற்றுப்போய்த்து. தென்றல்வருவது ஒருகாலமும் வாடைவருவது ஒருகாலமுமாயிருக்குமிறே; அவையெல்லாம் அவ்வவகாலங்களிலேவந்து தோற்றும்படியாய்த்து காலம் நெடுகுகிறபடி; அன்றியே, அநர்த்தஸூசகமாய் எல்லாக்காற்றும் பொருக்கானேலயடித்ததாகவுமாம். இனித்தென்றலுக்கஞ்சிவாடையின்கீழொதுங்கவிரகில்லை.

(அகலிடமித்யாதி) தன்மஹிஷியானவள் இப்படி பாதகபதார்த்தத்தின்கையிலே நோவுபடாநிற்க, ஸர்வஸாதாரணமாக வாராத்துவந்தால் வயிற்றிலேவைத்து நோக்குமவன்கிடீர் இப்போது வாராதொழிகிறான். பரப்புடைத்தானபூமி யுருமாய்க்கிடக்க உண்டாக்கி, ப்ரளயங்கொண்டவித்தை யிடந்தெடுத்து, திரியவும் ப்ரளயம்வர வயிற்றிலேவைத்துநோக்கி, உள்ளேகிடந்து தளராதபடி வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, மிடுக்கராயிருப்பா ரிறாஞ்சிக்கொள்ள எல்லைநடந்து மீட்டுக்கொண்டு, இப்படிவரையாதே நோக்கும் ஸ்வபாவனானவன்கிடீர் இப்போது வாராதொழிகிறான்].

(ஆயன்) (க) "க்ருஷ்ணம் வஸூஹி-க்ருஷ்ணம் வஹ்றி" இத்யாதி, (மாயோன்) ஜகத்ரக்ஷணத்துக் கறுருபமான ஆச்சர்யசக்தியுக்தன். (இகலித்யாதி) யுத்தபூமியில்காணும் ஆஸுரவர்க்கத்துக்கு ம்ருத்யுவாயிருப்பது. "மாரணம்" என்கிற ப்ரஹ்லாதனிலேக்ஷணத்திகளை யழியச்செய்திலனிறே; ராவணஹிரண்யாதிகளையிறே முடித்தது.(உ)''ஜாதஸ்ய ஹி ஸக்ராய-பியோ ப்ருவ ஹி-ஜ்ராதுக்ஸக்ராயுதிராமவத்யம்'' என்னக்கடவகிறே. (வாரான்) இங்கு அம்பேற்கவும் வேண்டா, விரோதிகளுமில்லை. முகங்காட்டவமையும்.

(இனியித்யாதி) வரைந்துநோக்குவா னொருவனுப் காணுறியிருக்கிறேனே, வருமிடத்தில் ப்ரதிபந்தகமுண்டென் றுமிருந்தேனே, என்னுடையரக்ஷணத்திலெனக்கந்வயமுண்டாய்த் தானுமியிருக்கிறேனே. வரையாதே ரக்ஷிக்குமவனுமாய் ஸக்தனுமாய் ப்ராப்தனுமாயிருக்கிறவன்வாராதொழிய, அவனுடைய் ரக்ஷ்யகோடியிலேயாய் அஸக்தையாய் அப்ராப்தையாயிருக்கிற நான் என் ப்ராணன்களை நோக்குகையென்றொரு பொருளுண்டோ!.

(க) பார.ராஜ-ரூ-அ-உரு-   (உ) ரா-ஸு-உக-௯ரு-

(இனியிருந்து) வருந்தனையும் ஜீவித்துக்கிடக்கும்படி (௧) "நசோபஸோராவமெளஷதெ—நமாம்ஸம்ராகவோபுங்க்தே" என்று சிலர்சொல்லுதல், (௨) "க்வாஸௌவஸ்ஹ்ருதஜ்ஞாநத்ரிஜ-த்வாமபஸ்யந் ந்ருபாத்மஜே" என்னுதல் செய்துதானறியிருக்கிறதன்றோ; வரவுக் குடலாக "கரன்பட்டான், கபந்தன்பட்டான், வாலிபட்டான், கடலடைப்பது, வந்துபுகுந்தாரத்தனை" என்று தானறியிருக்கிறமன்றோ. (இனியிருந்து) இதுக்கு முன்பெல்லாம் "அவன்சரக்கழிய வொண்ணுது" என்று நோக்கிக்கிடந்தமை தோற்றுகிறதாய்த்து - இனியென்னையாலே. (என்னுயிர்காக்குமாறென்) பிறருயிராய்த்தான் நோக்கியிருக்கிறேனே. இவற்றின்கையிலே நோவுபட வெனக்குப் பணியாகவோ என்னுடைய ப்ராணரக்ஷணம். (௨)

மூன்றும்பாட்டு.

இனியிருந்தென்னுயிர் காக்குமாறெனிணைமுலைநமுக நுண்ணிடைநுடங்க * துனியிருங்கலவிசெய்தாகந்தோய்ந்து துறந்தெம்மையிட்டகல் கண்ணன்கள்வன் * தனியிளஞ்சிங்கமெம்மாயன்வாரான் தாமரைக்கண்ணுஞ்செவ்வாயும்* நீலப் பனியிருங்குழல்களும் நான்குதோளும் பாவியேன்மனத்தே நின்றீருமாலோ. (௩)

ப:—அநந்தரம், பாஹ்யமானபாதகங்களேயன்றியே, அதிரமணீயமானவனுடைய அவயவங்களானவை ஆந்தரமாக நலியாநின்றன, இனி ப்ராணரக்ஷணம் பண்ணும் ப்ரகாரமென்னென்கிறாள்.

(இ-ள்.) இனி-ஆஶ்வாஸகரங்கள் பாதகங்களானபின்பு, இருந்து - இருந்து, என்னுயிர் - என்ப்ராணனை, காக்குமாறென் - ரக்ஷிக்கும் ப்ரகாரமென், இணைமுலை - சேர்த்தியழகாலே அவனுக்கு தர்ஶநீயமான முலைகளானவை, நமுக - ஸம்ஶ்லேஷஸாரஸ்யத்தாலே குழையும்படியாகவும், நுண்ணிடை - நுண்ணிடையானது, நுடங்க-தளரும்படியாகவும், துனி - து:கோதர்க்கமாம்படி, இரும் - ஆஶ்ரயத்தளவன்றிக்கே பஹுமுகமான, கலவிசெய்து - ஸங்கத்தைப்பண்ணி, ஆகம்தோய்ந்து- விடாயர் மடுவிலே முழுகுமாபோலே பெரியவபிநிவேசத்தோடே என் வடிவிலே அவகாஹித்துபுஜித்து, அநந்தரத்திலே, எம்மைத்துறந்து -

(௧) ரா-ஸு-௩௬-௪௧- (௨) ரா-ஸு-௩௫-௪௭-

பின்னிரக்கமறும்படி யென்னைக்கைவிட்டு, இட்டு-அசேதந ஸமாநமாம்படி பொகட்டு, அகல்கண்ணன் - அகலுகையே நிரூபகமான க்ருஷ்ணனாய், கள்வன் - விஶ்லேஷார்த்தமான ஸம்ஶ்லேஷதசையில் க்ருத்ரிமமான வ்யாபாரத்தை யுடையனாய், தனி-பெறும்பேறு பெற்றானும்படி அத்விதீயனாய், இளம்சிங்கம்-அத்தாலே, பாலஸிம்ஹம்போலே வடிவிளமையையும் மேனாணிப்பையு முடையனாய், எம்மாயன் விஶ்லேஷாபிப்ராயத்தாலே தாழ்ந்து பரிமாறின வாஶ்சர்யசேஷ்டிதங்களையுடையவன் தான், வாரான் - வருகிறிலன்; தாமரைக்கண்ணும் பிரிகிறவளவில் செல்லாமை தோன்ற நோக்கின தாமரைபோன்றகண்ணும்: செவ்வாயும் - விஶ்லேஷோக்தியை வ்யக்தீகரிக்கமாட்டாத சிவந்த திருப்பவளமும், நீலம் - ஸம்ஶ்லேஷதசையில் ஶ்லதமாய் அநியமிதமாகையாலேயிளைத்த நீலநிறத்தையும், பனி - குளிர்த்தியையும், இரும்பரப்பையுமுடைத்தான, குழல்களும் - திருக்குழல்களும், நான்குதோளும்-விஶ்லேஷதசையில்தரிக்கைக்காக பரிஷ்வங்கார்த்தமாகப்பணைத்த நாலுதிருத்தோள்களும், பாவியேன் - பிரிந் தீடுபடுகைக்கீடான பாபத்தையுடையவென், மனத்தே - மநஸ்ஸிலே, நின்று-ப்ரகாசித்துநின்று ஈரும் - நலியாநின்றன. (௩)

நமுகுதல் - குழைதல்.

ஆறு:— (இனியிருந்து) தன்னுடைய வாஶ்சர்யமான ஸௌந்தர்யாதிகுணங்களாலே என்னை வஶீகரித்து, தன்னை யொருக்ஷணம் விஶ்லேஷிக்கில் நிரவதிகதுஃகத்தைவிளைக்கும்படியாத்ரஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி, ஒரு த்ருணத்தை பரித்யஜித்தாப்போலே யென்னைப்பரித்யஜித்தகன்றகண்ணன் வருகிறிலன்; அவனுடைய தாமரைக்கண்ணும், செவ்வாயும், நீலப்பனியிருங்குழல்களும், நான்குதோளும், என்னெஞ்சை யீராநின்றன; இனியிருந்தென்னுயிர்காக்கைக்கு உபாயமென்னென்றலற்றுகிறாள். (௩)

ஈடு- அவ;—கண்ணுக்கிலக்கான பதார்த்தங்களடங்க பாதகமாகப்புக்கவாறே அவற்றுக் கஞ்சாக் கண்ணைச் செம்பளித்தாள்; அகவாயிலே அவனழகு ஸ்ம்ருதமாய் நலியாநின்றதென்கிறாள்,

(இனியிருந்தென்னுயிர்காக்குமாறென்) என்னைத்தன்றபிமாநித்தவுடம்பு பகையாய்த்து, என்னைத்தன்றபிமாநித்த வஸ்து பகையாய்த்து, இனியிருந்து என்னுடைய ப்ராணரக்ஷணம்பண்ண வென்

றுரு. பொருளுண்டோ. (இணைமுலைநமுக) அவன் சேர்த்தியழகு சொல்லி வாய்வெருவும் முலைகளானவை, கடிநஸ்தலத்திலே வர்ஷித்தால் பதமாமாபோலே, ஸம்ஶ்லேஷஸமயத்தில் அவனுடைய ஸ்பர்ஶத்தால் மெல்கிக் குழைந்தபடி. நமுகை-குழைகை. (நுண்ணிடைநுடங்க) வெறும்புறத்திலும் அநுகூலக்கீழ் விளைநிலம் போலே நோக்கவரிதான இடை நுடங்கும்படியாகவும். கலக்கும்போது எதிர்த்தலையைப்பேணவறிந்திலன், தன்னபிநிவேசம் தீர்ந்தானத்தனை.

(துனியிரும்கலவிசெய்து) து:கபலமான கலவியைச்செய்து. (இருங்கலவி) கலக்கிறபோது பரிமாறின வகைகள், ஆஶ்ரயத்தளவன்றிக்கே யிருக்கை. ஸம்ஶ்லேஷம் விஶ்லேஷாந்தமாயல்ல திராமையாலே து:கத்தை விளைக்குமென்னுதல்; அத்தசையிலே தலை தடுமாறாகக் கலக்கையாலே பொறுக்கவொண்ணாதபடி து:கரூபமென்னுதல். (ஆகந்தோய்ந்து) இக்கலவியாலே நீராக்கி, (௧) "ஸ ஹ்ருஷ்டோ விஶோகஸ் ஸம்ப்ரஹ்ருஷ்டோ வைதேஹ்யா ஸுகமந்வபூத் ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்" என்கிறபடியே இவளோடே கலந்தானாய்த்து; க்ரீஷ்மகாலத்தில் மடுவிலே முழுகிக்கிடப்பாரைப் போலே.

(துறந்து) இப்படி யவகாஹித்ததெல்லாம் பொகடுகைக்குடலாய்த்து. (எம்மையிட்டு) இப்படி யென்பக்கலிலே விருப்பத்தைப் பண்ணிவைத்து, சில அசித்பதார்த்தங்களைப் பொகடுமாபோலே பொகட்டோமென்கிற நினைவும் கூடப் பொகட்டானாய்த்து. (அகல் கண்ணன்) இவனுக்குக்கலவி காதாசித்கம், அகலுகை நிரூபகம். கலவியாலல்லது பிரிவுகூடாமை கலந்தானத்தனை. (கள்வன்) ஸம்ஶ்லேஷத்தில் குளிரநோக்கும் நோக்கும், பேசினபேச்சும், பரிமாறின பரிமாற்றமுமெல்லாம் ஸர்வாபஹார ஸூசகமாயிருக்கிறது. கலக்கிறபோது செய்ததையடையத் தன்னாற்றாமையாலே செய்தானென்று தோற்றும்படியாய்ப் பிரிவில் இவை நம்மைபாதிக்கைக்காகச் செய்தானாயிராநின்றது.

(தனியித்யாதி) (௨) "யஸ்ய ஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத்தேஜ:-யஸ்ய ஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத்தேஜ:" என்னு

---

(௧) பார-மோக்ஷ-௯-௫௦. (௨) ரா-ஆர-௩௭-௧௮.

மாபோலே, இவளோட்டைக் கலவியாலே அத்விதீயனென்று தோற்றும்படியிருந்தவன். (இளம்) கலக்கக் கலக்கக் கீழ்நோக்கிப் ப்ராயம் புகாநின்றான். (சிங்கம்) இவளோட்டைக் கலவியாலே பெறும்பேறு பெற்றானாய் மேனாணித்திருந்தபடி. (எம்மாயன்வாரான்) பிரிவை நினைத்துக் கலங்கிப்போகமாட்டாதே என்பக்கல் அதிசாபலத்தாலே அத்தசையில் தடுமாறினவன் இப்போது வருகிறிலன். அத்தசையில் சாபலத்தோபாதியும் போரும் இப்போதை விரக்தியும். - அப்போது போகையிலுள்ள வருமை போரும் இப்போது வருகையிலுள்ள வருமையும்.

(தாமரையித்யாதி) அவன், கண்ணுக்கு விஷயமாகா தொழிந்தால், இவை நெஞ்சுக்கு விஷயமாகாதொழிந்தாலாகாதோ. தான் போகிறான், இவற்றைவைத்துப் போகவேணுமோ. கலந்தபோது தன் பேறென்று தோற்றும்படியான திருக்கண்களையுடையவனென்னுதல்; பிரிவைநினைத்து வாய்விடமாட்டாதே ஆற்றாமையடங்கலும் நோக்கிலே தோற்றும்படி நின்றநிலையென்னுதல். (செவ்வாயும்) பிரிவை ப்ரஸங்கித்து முடியச்சொல்லமாட்டாதபோதைச் சிவந்த திருவதரமும். இவனுடைய * நிமியும்வாயும் கண்களுமிருக்கிறபடி.

(நீலப்பனியிருங்குழல்களும்) கலவியாலே குலைந்து பிரிவை நினைத்துப் பேணமாட்டாதபோதைக் கறுத்துக்குளிர்ந்த பெரிய திருக்குழலும், (நான்குதோளும்) இவள் தடுமாற்றத்தைக்கண்டு குழலைப்பேணிவருந்தவனையும் தரிக்கைக்காக நெருக்கி யணைத்த நாலு திருத்தோளும், (க) " உபஸம்ஹர-உபஸம்ஹர " என்றது கம்ஸாதிகளுக்கிறே; பெண்களுக்கு நாலாய்த்தோற்றுமிறே. (உ) "ஸஜ்ஜ வக்ஷமஹாபாணே - ஸங்கசக்ரகதாபாணே " என்றாளிறே. (பாவியேன்) இவ்வழகுகளை யநுபவித்து இழந்தால் மறந்திருக்கப் பெறுதபடியான பாபத்தைப்பண்ணினவென்னுடைய. (மனத்தேநின்றிருமாலோ) மநஸ்ஸிலே நிரந்தரமாக நின்று நலியாநின்றது. அணைக்கும்படி கைக்கெட்டுதல், நெஞ்சுக்கெட்டா தொழிதல்செய்யப் பெற்றிலேன். அறிவழிந்து மறந்து பிழைக்கவொண்ணாதபடி பண்ணினானாய்த்து.

(௩)

(க) வி பு-௫-௩-௧௩- (உ) பார-ஸபா-௭௫-

நான்காம்பாட்டு.

பாவியேன்மனத்தே நின்றீருமாலோ வாடைதண்வாடைவெவ்வாடையாலோ * மேவுதண்மதியம் வெம்மதியமாலோ மென்மலர்ப்பள்ளிவெம்பள்ளியாலோ, * தூவியம் புள்ளுடைத்தெய்வ வண்டுதுதைந்தவெம்பெண்மையம் பூவிதாலோ, * ஆவியின்பரமல்லவகைகளாலோ யாமுடைநெஞ்சமுந் துணையன்றுலோ. (ச)

ப—அநந்தரம் அபிரூபமான கருடவாஹநத்தையுடையவன் புஜித்த ஆஶ்ரயமூமீடுபடும்படி நெஞ்சு துணையாகிறதில்லை; ஆஶ்ரயத்துக்குத் தகுதியன்றியே லோகாநுகூலபதார்த்தங்கள் எனக்கு பாதகங்களாகாநின்றனவென்கிறாள்.

(இ-ள்.) பாவியேன்மனத்தே - ஸர்வாநுகூலமானவையும் ப்ரதிகூலமாம்படி பாபத்தை யுடையேனுடைய வென்னெஞ்சிலே, நின்று - தோற்புரையேபோகாமல் ஒருபடிப்படநின்று, வாடை-வாடை, ஈரும் - ஈராநின்றது. தண்வாடை - அவனுடைய ஸம்ஶ்லேஷதசையில் என்னோடு காட்டோடு வாசியறக்குளிர்ந்து அநுகூலமான வாடையானது, வெவ்வாடை-(க) "பனிப்பியல்வெல்லாம் தவிர்ந்தெரிவீசும்" என்கிறபடியே வெவ்வியவாடையாகாநின்றது. மேவு - ஸர்வர்க்கு மாஶ்வாஸகரமாம்படி செறியப்படும், தண்-குளிர்ந்த, மதியம்-சந்த்ரனானவன், வெம்மதியம் நெருப்பைச்சொரியாநின்றான், மென்மலர்ப்பள்ளி - ம்ருதுவானபுஷ்பத்தாலே படுக்கப்பட்டபடுக்கையானது, வெம்பள்ளி - பண்டு போலன்றியே அக்நிமயமான படுக்கையாகாநின்றது. அம் - தர்ஶநீயமான, தூவி - சிறகையுடையனான, புள் - பெரியதிருவடியை, உடை - வாஹநமாகவுடைய, தெய்வம் - பரதேவதையாகிற, வண்டு - வண்டானது. துதைந்த - விமர்த்தித்து புஜிக்கையாலே ஆத்தஸாரமான, எம்பெண்மை - என்னுடையஸ்த்ரீத்வமான, இது - இது, அம்பூ - பரிதாபஸஹமல்லாத ஸௌகுமாரமான பூவென்னலாயிராநின்றது. ஆவியின்பரமல்ல - இவ்வாத்மாவுக்குப்பொறுக்கலாவனவல்ல, வகைகள் - அவனுடையஸம்ஶ்லேஷவிஶ்லேஷப்ரகாரங்களும், பாதகபதார்த்த ப்ரகாரங்களும், யாமுடை - ஆற்றியிருக் கலாம்படி நாம் கரணமாகவுடையோமான, நெஞ்சமும் - நெஞ்சானது, துணையன்று - உசாத்துணையாகிறதில்லை.

துதைகை - மிதிக்கை. (ச)

(க) திருவிரு-

ஆறு:—(பாவியேன்) திருக்கண்களும் திருப்பவளமும் திருக்குழல்களும் திருத்தோள்களுமாகும் என்னெஞ்சைநின்று ஈராநிற்கச்செய்தே, அதின்மேலே, தண்வாடைமுதலாயுள்ள விவையும் காலாக்நிபோலே என்னை தஹியாநின்றன; வண்டுகள் பூமாலையைபுஜித்தாப்போலே பெரியதிருவடிமேலே யேறியருளிவந்து ஆக்கலாரமாம்படி யென்னைபுஜித்தருளினப்ரகாரம் நின்று பாதியாநின்றது; இவ்வாத்மாவினளவன்றியே யிப்படி அபர்யந்தபாதகங்கள் பாதியாநின்றன; இவையெல்லாம் பொறுக்கலாமிறே ஒருதுணையுண்டாகில்; என்னெஞ்சுங்கூடத் துணையன்றியேபோய்த்தென்கிறாள். (௪)

ஈடு. அவ:—அகவாயில் நலிகிறதொழிய ஸ்வரூபேணவந்து ஸ்பர்சாதிகளாலே ஸ்மாரகமாய்நின்று நலிகிற பதார்த்தங்களைச் சொல்லுகிறாள்.

(பாவியேன்மனத்தே நின்றீருமாலோ) நாட்டார்; வலிய இவ்வழகுதன்னை நெஞ்சிலேவைத்து பாபத்தைப் போக்கிக்கொள்ளாநிற்பர்கிடீர்!; இவ்வடிவையிறே ஶுபாஶ்ரயமாகபாவித்து அபிமதங்களைப் பெறுவது. (வாடையித்பாதி) உட்பகையேயாய் புறம்புள்ளவைதாம் அநுகூலிக்கப்பெற்றோமோ? தண்வாடை யானவாடையும் வெவ்வாடையாய்த்து. (க) "ஶுகதாதஸ்-ஶுகதாதம்" என்னுமாபோலே; புத்ரனையிட்டுச்சொல்லும்படியாயிராநின்றது. (வாயுபுத்ரனிறே அக்நி) குளிர்த்தியே ஸ்வபாவமானவாடையும், அக்நிகல்பமாய்நின்று நலியாநின்றது. (தண்வாடை) என்றவிடம், தாய்மார்வார்த்தைகேட்டுச் சொல்லுகிறாள்; (வெவ்வாடை) என்றவிடம், அநுபவத்தாலே சொல்லுகிறாள்.

(மேவுதண்மதியம் வெம்மதியமாலோ) நாட்டார் தாபத்துக்கஞ்சி நிலாவிலே யொதுங்கக்காண்கையாலே தானுமதிலே யொதுங்கப்பார்த்தாள், அவன் அக்நியசந்த்ரனானான்; அவன்நெஞ்சுபிறக்கவுஞ்சைகையாலே இவனும்வேறுபட்டான்; (உ) "சந்த்ரமா மநஸோ ஜாத:" * ஆயன்றன்மனம் கல்லானதறிந்து, மதிகேடாயிருந்தது. (மென்மலர்ப்பள்ளி) புறம்புள்ளவை பாதகமானவாறே அவற்றுக்கஞ்சிப் படுக்கையிலேசென்று விழுந்தாள்; அது இருவர்க்குப் படுத்தபடுக்கையாயிருந்தது. ம்ருதுவான மலராலே

(க) ஸஹஸ்ரநாமம். (உ) புருஷஸூ.

செய்தபடுக்கை, தாபஹேதுவாய்நலியாநின்றது. பழைபவாடையும் நிலாவுமே நன்றும்படியாய்த்து. இருவர்க்குப்படுத்தபடுக்கை யொருவர்க்குபாதகமாயிறே.

(தூவியித்யாதி) பெரியதிருவடியையுடைய தைவமாகிறவன்டாலே ஆத்தஸாரமான வென்னுடைய பெண்மையாகிறபூ, ஏவம்விதமாய் (நலிய) நலிவுபடாநின்றது; படுக்கை பாதகமானவாறேபுறப்பே புறப்பட்டாள், ஸ்வரூபாநுபந்தியான ஸ்த்ரீத்வமும் சிதிலமாகத்தொடங்கிற்று. அழகியசிறகையுடையனைப் தர்ஸநீயவேஷமான பெரியதிருவடி முதுகிலே வந்தாய்த்து ஸ்த்ரீத்வத்தை யழித்தது, கருடவாஹநனிறே பாதேவதையாவான். இதுவென்கிறது - தன் ஸ்த்ரீத்வமழிந்தபடி பேச்சுக்குநிலமல்லாமை.

(ஆவியின்பரமல்லவகைகளாலோ) கலக்கிறபோது அவன்பரிமாறினவகைகள் ஆஶ்ரயத்தளவன்றென்னுதல்; பாதகபதார்த்தங்களுடையபாரிப்பு ஆத்மவஸ்துவளவன்றென்னுதல். (யாமுடைநெஞ்சமும் துணையன்றுலோ) புறம்புண்டானவை பாதகமானால் நெஞ்சுண்டாகில் உசாவி தரிக்கலாமிறே; அதுவும் துணையாகிறதில்லை,

ஐந்தாம்பாட்டு.

யாமுடைநெஞ்சமுந்துணையன்றுலோ வாபுகுமாலையுமாகின்றுலோ * யாமுடையாயன்றன் மனங்கல்லாலோ வவனுடைத்தீங்குழலீருமாலோ * யாமுடைத்துணையென்னுந் தோழிமாருமெம்மின்முன்னவனுக்குமாய்வராலோ * யாமுடையாருயிர்காக்குமாறெனவனுடையருள்பெறும்போதரிதே. (ரு)

ப:—அநந்தரம். ஆஶ்ரிதஸுலபனானவனுடைய விரக்கம்பெறுகையரிதானால் நம்முடைய ப்ராணனை ரக்ஷிக்கும் ப்ரகாரமென்னென்கிறாள்

(ப - ள்.) நமக்கு பவ்யனானவன் துணையாகாதாப்போலே, யாமுடைநெஞ்சமும் - நம்மதானநெஞ்சம், துணையன்று-அலற்றல் தரித்தல்செய்தற்குத்துணையாகிறதில்லை, அவ்வளவேயன்றியே, ஆபுகும் - பசுக்கள்வந்து நிலையிலேபுகுரும்படியான. மாலையும் - மாலையும், ஆகின்று-ஆகாநின்றது. அவற்றோடேகூடப் புகுரக்காணுமையாலே, யாமுடையாயன்றன் - நமக்குக்கையாளாம்படி ஸுலபனான க்ருஷ்ணனுடைய

மனம் - ம்ருதுஸ்வபாவமானநெஞ்சு, கல் - கல்லாய்விட்டதாகவேனும், அப்படி அறுதியிடவொண்ணாதபடி, அவனுடை - அவன்தாழ்ச்சியைத் தூதிவரும், தீம்குழல் - இனிய குழலானது, ஈரும்-அவனுடைய ம்ருது ஹ்ருதயத்தை ஸஞ்சிப்பித்துக்கொண்டு ஸ்ம்ருதிவிஷயமாய் ஈராநின்றது, இப்படி ஈடுபடுகிறவளவில், யாமுடை-நமக்குப்பாதந்த்ரைகளாய், துணையென்னும் - உசாத்துணை யென்னும்படியான, தோழிமாரும் - தோழிமாரும், எம்மில்முன் - அவன்விஷயமாக வீடுபடுகிறவெனக்கு முன்னே, "இவளுக்கு அவனுதவப்பெறுகிறதில்லை" என்று, அவனுக்கு - அவன்பொருட்டு, மாய்வர் - ஈடுபடாநிற்பர்கள். இவ்வளவில், அவனுடையருள் - ரக்ஷகமானவவனுடைய க்ருபையானது, பெறும்போது - பெறுமவஸ்த்தை, அரிது - அரிதாயிராநின்றது, ஆனபின்பு, யாமுடையாருயிர்-* கேவலக்ருபாநிர்வாஹ்யவர்க்கமான நம்முடையவாத்மாவை காக்குமாறு - ரக்ஷிக்கும்ப்ரகாரம், என் - ஏதாயிருக்கிறது. (ரு)

ஆறு: —(யாமுடைநெஞ்சமும் துணையன்றுலோ) என்னுடைய நெஞ்சு துணையன்றிக்கே யொழிவது, அவனோடே வரக்கடவ பசுக்களும் மாலையும் அவனையொழியவருவது, ஒருக்ஷணமும் நம்மைப் பிரியில் தரிக்கமாட்டாத ஸ்வபாவனான வவனுடையநெஞ்சானது இப்போது நம்மைப்பிரிந்திருக்கவும் வற்றுவது, அவனுடைய வதி மதுரமான குழலோசையானது ஸ்ம்ருதமாய் நின்றீராநிற்பது, நமக்கு ஸர்வாவஸ்த்தையிலும் துணையாகக்கடவியதோழிமாரும் நாமவனைப்பிரிந்துபடுகிற வ்யஸநம் பொறுக்கமாட்டாமை நமக்குமுன்னே தளராநிற்பது, அவனுடையக்ருபைபெறுகை நமக்கரிதாவது, இனி யெங்ஙனே நம்முயிரைக்காக்கும்படி யென்கிறாள். (ரு)

ஈடு-அவ;—ஸகலபதார்த்தங்களும் ஸ்வஸ்வபாவங்களைவிட்டு அந்யதாவாய், அவ்வளவிலு மவனுடைய ப்ரஸாதமரிதானால் தரிக்கவிரகுண்டோ வென்கிறாள்.

(யாமித்யாதி) "என்னது" என்றபிமாநிக்கவமையுமாகையை துணையன்றிக்கேயொழிகைக்கு. பசுக்களும் வந்துபுகுர ஸந்த்யையுமாகாநின்றது; நெஞ்சு துணையன்றிக்கே யொழிந்தால் ஒருபடி தாழ்த்துவரவேண்டாவோ இம்மாலைக்கு. (யாமுடையித்யாதி) நெஞ்சு துணையன்றிக்கே மாலையும் வருகிறவிது அவன்நெஞ்சிற் படுகிறதில்லை; பதார்த்தங்களெல்லாவற்றுக்கும் ஸ்வபாவபேதம் பிறக்கிறப்

போலே, (ம்ருதுஸ்வபாவனானவன் நெஞ்சுகல்லாய்த்து) நெஞ்சினு மண்ணியவன்நெஞ்சு நெகிழவேண்டாவோ. ஒருகல்லைப் பெண்ணாக்கினவன்நெஞ்சு கல்லானால் அத்தை நெகிழ்க்கவல்லாரில்லையிறே.

(அவனித்யாதி) அவனுடைய வினிய குழலோசை, "அவன் நெஞ்சுகல்" என்று நைவாக்கவொட்டுகிறதில்லை. 'நான்பகலெல்லாம் பிரிந்தேன், வருந்தாழ்க்கேன், ஆற்றேன். பாரதந்த்ரனாய்க் கெட்டேன்" என்கிறவுடைகளிலே சிலபாசுரங்களை வைத்திறே குழலூதுவது. "அதுகல்லென்று நைவாங்காதேகிடாய், நீர்கிடாய்" என்னாநின்றது; இப்பாசுரங்களாலே அவனுடைய இனியகுழலோசையானது சொல்லாநின்றது.

(யர்முடையித்யாதி) நெஞ்சும் துணையின்றிக்கே அவனுமுதவாதபோது, துணையான தோழிமாரும் என் வ்யஸநத்தைக் கண்டு எனக்கு முன்னே "இவளுக்கவன்வேணும்" என்று நோவுபடாநின்றார்கள். (துணையென்னும்) மாம்பழவுண்ணிபோலேயிறே நீங்கள் தோழிமாரானபடி. (க) "ஸமாநஸுகதுக்கா:" ..... துக்கம்ஸாகஞ்சநேள" என்றிருக்குமவர்களாகையாலே, இவளாற்றாமை பொறுக்கமாட்டாமை நோவுபடுகிறார்களிறே. இவர்களுக்கவனோடு ஸம்பந்தம் இவள்வழியாகவிறே.

(யாமுடையாருயிர்காக்குமாறென்) இத்தனிமையில் ஆத்மதாரணம்பண்ணும் விரகென். பிறருயிராகில் நோக்கவுமாமிறே (அவனுடையருள் பெறும்போதரிதே) அவனுடைய ப்ரஸாதம்பெறுகை யரிதாய்த்து. அதுபெறில் நம்முயிர் தன்னையும் நோக்கலாமிறே.(௫)

ஆறும்பாட்டு.

அவனுடையருள்பெறும் போதரிதாலவ்வருளல்லன வருளுமல்ல* அவனருள்பெறுமளவாவிநில்லா தடுபகல்மாலையும்நெஞ்சுங் கர்ணேன் * சிவனொடுபிரமன்வண்திருமடந்தைசேர் திருவாகமெம் மாவிமீரும் * எவமினிப்புகுமிடமெவஞ்செய்கேனே வாருக்கென் சொல்லுகேனன்னைமீர்காள். (௬)

(க) ரா-கிஷ்-௫-கஅ-

ப:—அநந்தரம், துர்மாநிகளான ப்ரஹ்மாதிகளோடு நித்யாநபாயிநியான லக்ஷ்மியோடு வாசியறலபித்து வாழும்படியானபடியை யுடையவனுடைய ஸௌசீல்யப்ரகாசகமானவடிவானது என்னாத்மாவையீராநின்றதென்கிறார்.

(இ-ள்.) அவனுடை - அவனுடைய, அருள் - ஸம்ஶ்லேஷோபகாரத்தை, பெறும்போது-பெறுமவஸ்த்தை, அரிது - அரிதாயிராநின்றது, அவ்வருளல்லன - அந்தவுபகாரமொழிய மற்றுமுண்டான ஆஶ்வாஸஹேதுக்களானவை, அருளுமல்ல - உபகாரரூபமுமல்ல; அவனருள் - அவனுடையவுபகாரம், பெருமளவு - பெறுமளவும் ஆறியிருக்கும்படி, ஆவி - ப்ராணன், நில்லாது - தரிக்கிறதில்லை, பதார்த்ததர்ஶநம்பண்ணிப் போதுபோக்கவொண்ணாதபடி, மாலையும் - ஸந்த்யாவேளையும், அடுபகல் - நசிப்பிக்கபபட்ட பகற்பொழுதையும் உடைத்தாயிராநின்றது, நெஞ்சம் - தனிமைக்குதவக்கடவதான நெஞ்சையும், காணேன் - உதவக்காண்கிறிலேன்; சிவனொடு - ஈஶ்வராபிமாநியானருத்ரனோடு, பிரமன் - அவனுக்கு முத்பாதகனான பெருமையையுடைய ப்ரஹ்மாவோடு, வண் - ஸமஸ்தகல்யாணகுணாத்மிகையான, திரு - நிரதிஶயஸம்பத்ரூபையான, மடந்தை-* நாரீணாமுத்தமையானலக்ஷ்மியோடு வாசியற, சேர் - அபாஶ்ரயமாகப் பற்றும்படியான, திரு - சீலஸம்பத்தையுடைத்தான, ஆகம்-திருமேனியானது, ஸ்ம்ருதிவிஷயமாகக் கொண்டு, எம்மாவி - என்னாத்மாவை, ஈரும்-ஈராநின்றது; இனி-ஸர்வாபாஶ்ரயமான திருமேனியுதவாதபின்பு, புகுமிடம் - ஒதுங்குகைக்கிடம், எவம் - எதாயிருக்கிறது, எவம்செய்கேனோ - ததீநப்ரவ்ருத்திகையானநான் ஸ்வாதீநமாக என்ன உபகாரத்தைப்பண்ணுவேன்; அன்னைமீர்காள்-எனக்கோடுகிறவார்த்தியறியாமல் நியமிக்கிற அன்னைமீர்காள், ஆருக்கு - இதுக்குப் பரிவரில்லாத வுங்களிலாருக்கு, என்சொல்லுகேன், உங்களுக்கவ்யுத்பந்நமான வித்தை என்னபாசுரமிட்டுச் சொல்லுவேன்.

“அடுபகல்மாலையென்னெஞ்சம்” என்று பாடமானபோது, மாலைக்காலத்துக்கு என்னெஞ்சையுமுதவக்காண்கிறிலேனென்று சொல்லுவாருமுளர்.

(௬)

ஆறு;—(அவனுடையருள்) அவனுடையகடாக்ஷம் பெறுகிறிலேன், அவனுடையகடாக்ஷமல்லது மற்றொருகடாக்ஷமில்லை, அவ

னுடையகடாக்ஷம் பெறுமளவும் இவ்வாத்மா தரித்திருக்கிறதில்லை; பகலடுமாலைவந்தது, துணையான வவனுடைய ஸௌசீல்யகுண மென்னையீராநின்றது, இனி நானெங்கேபுகுவேன், என்செய்கேன். ஆருக்குச்சொல்லுகேன் அன்னைமீர்காள் என்றலற்றுகிறாள். (௯)

ஈடு; அவ;—நித்யாநபாயிநியான பிராட்டியோடு அந்யபரரான ப்ரஹ்மருத்ராதிகளோடு வாசியற வுடம்புகொடுக்கு மவனுடைய ஸௌசீல்யமே என்னாத்மாவை யீராநின்றதென்கிறாள்.

(அவனுடையித்யாதி) கொள்வார் தேட்டமாயிறே அவனுடையவருளிருப்பது. தண்ணீர்ப்பந்தலில் சேர்ந்துகுளிர்ந்த தண்ணீர் விடாயர்க்கு அரிதாமாபோலேயிறேயெனக்கரிதானபடி, அவனருள்கிடைக்குமளவும் பந்துக்களுடைய இன்சொல்லைக்கொண்டாகிலும் தரித்தாலோவென்ன (அவ்வருளல்லனவருளுமல்ல) (க) "பல்லாருளும்பழுது-நல்லானருளல்லால்." விடாய்த்தவனுக்கு அக்நிகணங்களைக்கொண்டு விடாயைப்பரிஹரித்தாப்போலேயிறே. பரிஹரிக்கவொண்ணாமையேயல்ல, பாதகமாவதும் செய்யும்.

அவ்வருள் தப்பாதபின்பு பெறுமளவு மாறியிருந்தாலோவென்ன (அவனருள்பெறுமளவாவிநில்லாது) அவன்ப்ரஸாதம் கிட்டுந்தனையும் ப்ராணன் தரிக்கிறதில்லை. க்ரமப்ராப்தியை ஸஹிப்பதொரு ப்ராணனைப்பெற்றோமாகில் ஆறியிருக்கலாய்த்தே. (அடுபகல்மாலையும்நெஞ்சுங்காணேன்) பகலை முடித்துக்கொடுவந்து ஸந்த்யையும் தோற்றுகின்றது, நெஞ்சையும் காண்கிறிலேன். மாலையும் காண்கிறிலேன், நெஞ்சையும்காண்கிறிலேனென்னுதல். அதாவது - மேல் வருகிற காலத்தினுடையக்ரௌர்யத்தைப் பார்த்தவாறே, பழைய ஸந்த்யைதான் தேட்டமானபடி.

வழிபோகாநிற்க திங்மோஹம்பிறந்தால் "கையிற்பொருளைக் கொண்டாகிலும் வழிகாட்ட, வல்லடிக்காரரையாகிலும் கிடையாதோ" என்னுமாபோலே, (ஆச்வாஸகரான பெரியவுடையாரையும் முடித்துக்கொண்டுபோந்து) ஏகாக்ஷி ஏககர்ணி தொடக்கமான ராக்ஷஸிகள்கையில் காட்டிக்கொடுத்து ராவணன் பேரநின்றாப்போலே, ஆச்வாஸகரமான பகலைமுடித்துக்கொண்டுவந்த ஸந்த்யை தேட்டமாம்படியாய்வந்து விழுந்தது.

(க) க-திருவ-கடு

(சீலஞ்ஞேபேரமனித்யாதி) பிராட்டியோடு அங்யபாரான ருத்ராதிகளோடு வாசியற உடம்புகொடுக்கும் சீலம் ஸ்மாரகமாய், நித்யமானவாத்மாவை முடியாநின்றது. காபாலிகந்தற்கெளிதான துகிலுரெனக்கரிதாய்த்து.

ஆனால் புறம்பேபோயாகிலும் தரித்தாலோவென்ன (எவமினிப்புகுமிடம்) ஸர்வஸாதாரணமான வுடம்பையிழந்து இனி யெங்கே புக்குதரிப்பது "அவனுடம்புகிட்டிற்றில்லை" என்று, ஹிதஞ்சொல்லுகிற வுங்களுடம்பைப்பற்றிதரிக்கவோ. தோழிமாரோடே வ்ருத்தகீர்த்தநம் பண்ணிதரிக்தாலோவென்ன (ஆருக்கு) வடிகொக்குத் தமிழர் வார்த்தைசொல்லுமாபோலே, சொல்லும்வார்த்தைக் கதிகாரிகளார்?. வ்ருத்தகீர்த்தநம்பண்ணும் தோழிமார் எனக்குமுன்னே யழிந்தார்கள். (என்சோல்லுகேன்) கேட்பாரைப்பெற்றால்தான் சொல்லுகைக்குப்பாசுரமுண்டோ?.

(அன்னைமீர்காள்) தோழிமாரழிந்தார்கள், நாட்டாரங்யபார், சேஷித்திகோள் நீங்களாயிருந்திகோள்; உங்களுக்குச்சொல்லவோ. மீனுக்குத் தண்ணீர்வார்த்தாப்போலே நித்யஸூரிகளுக்குச் சொல்லவோ, "ஈப்ஸவரோஹம்" என்றிருக்கிற ப்ராஹ்ருதிகளுக்குச்சொல்லவோ, விஷயப்ரவணராய்த்திரிகிற ஸம்ஸாரிகளுக்குச்சொல்லவோ, அன்றியே, ஆசார்ய ஸமாச்ரயணம்பண்ணி ஸ்வரூபஜ்ஞராயிருந்து "துரும்புநறுக்கலாகாது" என்றிருக்கிற செங்கொடித்தட்டைகளுக்குச்சொல்லவோ, ஆருக்கெத்தைச்சொல்ல. சொல்லப்பாசுரமில்லை, கேட்கைக்கதிகாரிகளுமில்லை. (௬)

ஏழாம்பாட்டு.

ஆருக்கென்சொல்லுகே னன்னைமீர்கா ளாருயிர்வேந்தன்றன் சீரருள்
தண்வாடை * காரொக்குமேனி நங்கண்ணன் கள்வம் கவர்ந்தவத்
தனிநெஞ்சமவன்கணஃதே* சீருற்றவகிற்புகையாழ் நரம்புபஞ்சமந்
தண்பசுஞ்சாந்தணைந்து * போருற்றவாடை தண்மல்லிகைப்பூப்
புதுமணமுகந்துகொண்டெறியுமாலோ, (௭)

ப:—அநந்தரம், உபகாரசீலமான மேகம்போன்ற திருநிறத்தையுடையனாய்க்கொண்டு நமக்கு பவ்யனான க்ருஷ்ணன் பக்கலிலே நெஞ்சைசாய்த்து, வாடையினுடைய ஸம்ஹாரம் நிர்வாஹமாயிராநின்றதென்கிறாள்.

(இ - ள்.) காரொக்குமேனி-வரையாமல் உபகரிக்கும் காளமேகம் போன்ற நிறத்தையுடையனாய், நங்கண்ணன்கள்வம்-நமக்கும் ஸர்வமுமாம்படி தன்னையுபகரித்த க்ருஷ்ணன் க்ருத்ரிமபவ்யதையாலே, கவர்ந்த-அபஹரிக்கப்பட்டு, அத்தனிநெஞ்சம்-நம்மைவிட்டுத்தனியேயான நெஞ்சானது, அவன்கணஃது - அவனிடத்திலே போய்த்து; இத்தனிமையிலே இவளைநலியலாமென்று நினைத்து. சீர் - பரிமளஸம்பத்தை, உற்ற - உடைத்தான, அகிற்புகை - அகிற்புகையையும், யாழ்நரம்பு - யாழ்ன்நரம்பொலியையும், பஞ்சமம்-பஞ்சமமாகிற பண்ணையும், தண்பசுஞ்சாந்து - குளிர்ந்தாறின அங்கராகத்தையும். அணைந்து - உட்புகுந்துகொண்டு. இந்த ஸஹகாரிபலமன்றியே ஸ்வயம்ஸாமர்த்யத்தையுடைத்தாய்க்கொண்டு நலிகைக்கு; போருற்ற - யுத்தோந்முகமான, வாடை - வாடையானது, தண் - குளிர்ந்த, மல்லிகைப்பூ - மல்லிகைப்பூவினுடைய, புதுமணம்-செவ்வியான பரிமளத்தை, முகந்துகொண்டு-முகந்துகொண்டு, எறியும் - வீசாநின்றது; இக்கூர் - இப்படி பரிகரஸாமக்ரியோடே செறிந்து, தண் - குளிர்ந்த, வாடை - வாடையானது, ஆருயிரளவன்று - என்னாத்மாவினளவன்று, அன்னைமீர்காள் - இவ்வளவிலும் அபிமதம் சொல்லும்படியான அன்னைமீர்காள், ஸ்வஸம்வேத்யமான வாகாரத்தை, ஆருக்கு - ஆருக்கு, என்சொல்லுகேன் - ஏதென்று சொல்லுவேன். (எ)

ஆறு;—(ஆருக்கேன்சொல்லுகேன்) அவனழகுக்கும் செயல்களுக்குந் தோற்று எனக்குத் துணையான நெஞ்சமவன்பின்னேபோய்த்து, என்னுடைய யிரளவன்றிவ்வாடை பாதிக்கிறபடி; அதெங்ஙனேயென்னில்; சீருற்றவகிற்புகை யாழ்நரம்பு, பஞ்சமம், தண்பசுஞ்சாந்தணைந்து, இப்படி போர்க்கோலங்கொண்டு போருற்றவாடை, காலாக்நி ஜ்வாலைபோலேயிருந்த தண்மல்லிகைப்பூப் புதுமணத்தை முகந்துகொண்டெறியாநின்றது; "ஆருக்கென்சொல்லுகேன் அன்னைமீர்காள்" என்று நிரவதிக வ்யஸநத்தோடே கூப்பிடுகிறாள். (எ)

ஈடு-அவ;—கீழ்ச்சொன்ன பாதகபதார்த்தங்கள் திரளவந்து கண்பாராதே நலியாநின்றதென்கிறாள்.

(ஆருக்கென்சொலலுகேனித்யாதி) நெஞ்சமுங்களதாய், பாதகபதார்த்தங்களை "போக்யவஸ்துக்கள்" என்று அவற்றைத் தேடித்திரிகிறவுங்களுக்குச் சொல்லேவா. இத்தைச் சொன்னவாறே என்

னெஞ்சும் தந்தாமதாய், "தந்தாமுக்கென்ன அநுகூல பதார்த்தங்களும் தேடக்கடவதன்றோ" என்பார்களிறே தங்கள்வாஸனையாலே; உங்களுக்குச் சொல்லுவோம் (ஆருயிரளவன்றிக் கூர்தண்வாடை) மிகைத்துக் குளிர்ந்துவருகிறவாடையானது, நம்முடைய வாத்மாவினளவிற்போமதல்ல.

பாதகபதார்த்த முறைந்தாலும் தரித்திருக்கலாயிற்று நமக்கென்ன வொருநெஞ்சு பெற்றோமாகில்; "என்னெஞ்சினாருமங்கேயொழிந்தார்" என்று அதுவும் மீளாதவிடத்தே புக்கதே (காரித்யாதி) மேகம்போலே ஸ்ரமஹரமான வடிவையுடையனாய், அவ்வடிவைக்காட்டி நம்மை யநந்யார்ஹமாக்கி நமக்கு பவ்யனான க்ருஷ்ணனுடைய, கள்வமுண்டு - ஸம்ஸ்லேஷதசையில் தாழ்ந்தபேச்சுக்களும் செயல்களும்; (க) "பேச்சும்செய்கையும்" என்னக்கடவதிறே; அவற்றாலே யபஹ்ருதமாய் அத்விதீயமான வென்னெஞ்சானது அவன்பக்கலது.

(சீரித்யாதி) "இங்குள்ளது கேவலசரீரமேயிறே" என்றறிகிறனவில்லையவை. வாடைதானே ப்ரதாநமாய் வருகையன்றிக்கே, மற்றும் அப்ரதாநமானவற்றையும் கூடக்கொண்டு, (உ) "ஸஹஸௌஷ வாஸம்வஸந்தஸௌஷ-ஸைஷவாஸம்ஸதலங்காம்" என்கிறபடியே அஹமஹமிகயா மேல் விழாநின்றது. (சீருற்றவித்யாதி) சீருறுகையாவது - அழகுமிக்கிருக்கை. அதாவதென்னென்னில்; பரிமளமேயாய்க் கண்ணுக்குப்புகைந்து பருஷமாமாகாரமின்றிக்கேயிருக்கை. பண்பட்டயாழ், பஞ்சமமாகிறபண். (தண்பசுஞ்சாந்து) ஆறிக்குளிர்ந்து வாஸிதமான த்ரவ்யங்களில் செவ்விமாறுதசாந்து. (அணைந்து) இவற்றைக்கூட்டிக்கொண்டு.

(போருற்றவாடை) "கூடினபரிகரங்கள் பங்களங்கள்" என்னும்படி தனிவீரம்செய்கிறவாடையானது. பொருகையிலே சமைந்தவாடையானது. (தண்மல்லிகைப்பூ) ஸ்ரமஹரமான மல்லிகைப்பூவின் செவ்விப்பரிமளத்தை முகந்துகொண்டு. முகப்பார் தாழ்வேயாய்த்து; மணத்தில் குறையில்லை. (எறியுமாலோ) இவள் விரஹாக்நி தன்னைக் கதுவாதபடி கடக்கநின்று வீசாநின்றது; அம்பைக்காய்ச்சி யெய்வாரைப்போலே. (எ)

(க) நாச்சி-உ-கூ.

(உ) ரா-யு உக-௩௦-

எட்டாம்பாட்டு.

புதுமணமுகந்துகொண் டெறியுமாலோ பொங்கிளவாடைபுன் செக்கராலோ * அதுமணந்தகன்றநங்கண்ணன்கள்வங் கண்ண னிற்கொடிதினியதனிலும்பர் * மதுமணமல்லிகைமந்தக்கோவை வண்பசுஞ்சாந்தினிற்பஞ்சமம்வைத்து* அதுமணந் தின்னருளாய்ச் சியர்க்கே யூதுமத்தீங்குழற்கேயுய்யேன்நான். (அ)

ப்:—அநந்தரம், அதிசயித ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணியகன்ற க்ருஷ்ணனுடைய க்ருத்ரிமங்கள் அவனிலும் கொடிதாயிராநின்றன, அதுக்குமேலே பாதகங்களும் அதிஶயியாநின்றனவென்கிறாள்.

(இ-ள்) பொங்கு - மேலெழுந்து, இளம் - இளகிப்பதித்த, வாடை - வாடையானது, புதுமணம் - அபிநவமானபரிமளத்தை, முகந்துகொண்டு - முகந்துகொண்டு, எறியும் - வீசாநின்றது, ஸந்த்யையுங்கழிந்து, புன் - புல்லிய, செக்கர்-செக்கர்வானமாகாநின்றது; இவ்வளவில், அது - வாசாமகோசரமான மஹிமாவையுடைத்தாம்படி, மணந்து-ஸம்ஶ்லேஷித்து, அகன்ற - அகன்ற, நங்கண்ணன் - நமக்கு பவ்யனுபாவித்த க்ருஷ்ணனுடைய, கள்வம் - க்ருத்ரிமசேஷ்டிதங்கள், ஸ்ம்ருதிவிஷயமாகக்கொண்டு நலியுமிடத்தில், கண்ணனில்-அவன்றன்னிலும், கொடிது - கொடிதாயிராநின்றது, இனி - இன்னமும், அதனிலும்பர் - அதுக்குமேலே, மது - மதுவையும், மணம்-மணத்தையுமுடைத்தான, மல்லிகை - மல்லிகையினுடைய, மந்தம் - செவ்வியழியாத, கோவை - தொடையிலும், வண்பசுஞ்சாந்தினில் - விலக்ஷணமாய்க்குளிர்ந்த அங்கராகத்திலுங்காட்டில், பஞ்சமம்வைத்து-பஞ்சமமாகிறபண்ணைவைத்து அதுமணந்து - பரிச்சேதிக்கவரிதாம்படியான தாவித ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி, இன்னருள் - இனியவருளுக்கு விஷயமான, ஆய்ச்சியர்க்கே - ஆய்ச்சியர்க்கே, ஊதும் - ஸ்வஸம்வேத்யமாம்படி ஊதுகிற, அத்தீங்குழற்கே - அக்காலத்தில் காட்சியாலுண்டான இனிமையை ப்ரகாசிப்பிக்கிற குழலோசைக்கே, நான் - நான், உய்யேன் - பிழைக்கமாட்டேன்.

"சாந்தினில்" என்றது-அஞ்சாம்வேற்றுமை; ஒப்பைச் சொல்லவுமாம். (அ)

ஆறு;—(புதுமணமுகந்துகொண்டு) இப்படி பொங்கிளவாடை புதுமணமுகந்துகொண் டெறியாநிறகச்செய்தே, அதின்மேலே, புன்செக்கர்வந்து பாதியாநின்றது; அதின்மேலே, சொல்லநிலமல்லாதபடிதொருபடி அதிமாத்ரமாக வென்னுடனே கலந்தகன்ற நங்கண்

னுடைய வக்கலவி அவன்றன்னிலும் கொடிதாயின்றென்னை யீராநின்றது; இனி அதுக்குமேலே, மதுமணமல்லிகை மந்தக்கோவையும் வண்பசுஞ்சாந்தும்வந்து பாதியாநின்றன; அதின்மேலே, நம்மோடே அந்நனைக் குழலைக்கொத்துக்கலந்து பரிமாறுமைக்குத் தன்பாடே நான்வருகைக்காக ஆச்சியாராக நமக்கேநேட்டுக்குடிப்படி. பஞ்சமத்தைவைத்தூது மந்திக்குழலோசையான தொன்றுமே நின்றென்னை மாயாநின்றதென்கிறாள். (அ)

ஈடு-அவ;—கீழ் தனித்தனியும் திரளவும் பாதகமானவை ஒன்றாக்கொண்டு முற்கோலி நலியாநின்றன என்கிறாள்.

(புதுமணமுகந்துகொண்டேறியுமாலோ பொங்கிளவாடை) செவ்விப்பரிமளத்தை முகந்துகொண்டேறியாநின்றது, ஸ்த்ரீவத மென்றவாறே கிளர்ந்திளகிப்பதிக்கிறவாடையானது. புன்செக்கராலோ) செக்கர்வானமும்போய் மறையுமளவாய்த்து; மேல் வருகிற காலத்தினுடைய தண்மையைப் பார்த்தவாறே, பகலோபாதி ஸந்த்யையும் தேட்டமாய்வந்து விழுந்தது.

(அதுமணந்து) வாக்குக்கவிஷயமாம்படியாய்த்துக்கலந்தது. சோகவிஷயமாக இருபத்துநாலாயிரம் க்ரந்தம்சொன்னவன், ஸம்ச்லேஷவிஷயமாக வொன்றும் சொல்லிற்றிலனிறே, அவிஷயமாகவே வாக்குக்கு; (க) "ஶோகார்தஸ்ய ப்ரவ்ருத்தோமே-ஶோகஶ்ஶ்லோகத்வமாகதஃ" என்று சோகவிஷயமாகவிறே சொல்லிற்று. அப்படிகலந்தவன்று நமக்கு பவ்யனானவனுடைய, கள்வம் - கலக்கிறபோதைத் தாழ்ந்தபேச்சுக்களும் பரிமாற்றங்களும். (கண்ணனிற்கொடிது) கலக்கிறபோது நமக்கு ஸ்வம் என்னும்படியிருந்த க்ருஷ்ணனுடைய தத்காலத்திற் பரிமாற்றம், அவன்றன்னிற்காட்டில் பாதகமாகாநின்றது. இச்செயல்களின் மென்மையவன்றானே நல்லன். (இனியதனில் பர்) பின்னையுமதுக்குமேலே.

(மதுமணமல்லிகைமந்தக்கோவை) மதுவையும் மணத்தையுமுடைத்தான மல்லிகையாலே செறிபத்தொடுத்தமாலை, அழகிய பசுஞ்சாந்து, இவையும் நலியாநின்றன; அதுக்குமேலே, பஞ்சமமாகிறபண்ணையும் கூட்டிக்கொண்டு குழலோசை பாதகமாகாநின்றதென்னுதல்; இவற்றிலே பஞ்சமமென்கிற பண்ணையும் கூட்டிக்கொண்டென்னுதல்.

(க) ரா-பா. உ-சுo.

(அதுமணந்து) அப்படியேகலக்கைக்காகவென்னுதல், அப்படி கலந்த வாய்ச்சியர்க்கென்னுதல், (இன்னருளாய்ச்சியர்க்கே) தன் ப்ரஸாதத்துக்கிலக்கான இடைப்பெண்களுக்கே. (ஆய்ச்சியர்க்கேயூதும்) அதாகிறது-காவல்காத்துக் கிடக்கிறவர்களைத் தொடைகுத்தியுறக்கி ஒருபருவத்திற் பெண்களை மயிரைப்பற்றியிழுக்குமாய்த்து இக்குழலோசை. " இன்னார்க்குத்தொடுத்தவம்பு " என்னுமாபோலே. அல்லாத பாதகபதார்த்தங்களுக்கு ஜீவித்திருந்தேனேயாகிலும், இக்குழலோசைக்கு நான் ஜீவிக்கமாட்டேன். அவையெல்லாமொருபடியும் இதொருபடியுமாய்த்து நலிகிறபடி. (அ)

ஒன்பதாம்பாட்டு.

ஊதுமத்தீங்குழற்கேயுய்யேன்நானது மொழிந்திடையிடைதன் செய்கோல * தூதுசெய்கண்கள்கொண்டொன்றுபேசித் தூமொழி யிசைகள்கொண்டொன்றுநோக்கி * பேதுறுமுகஞ்செய்து நொந்து நொந்து பேதைநெஞ்சறவறப்பாடும்பாட்டை * யாதுமொன்றறிகில மம்மவம்ம மாலையும்வந்தது மாயன்வாரான். (௯)

ப:—அநந்தரம், ஸாபிப்ராயங்களான நிரீக்ஷணங்களையும் உக்திகளையுமுடையனுய்க்கொண்டு மநோஹரமான பாட்டை யுடைத்தாம்படியூதுகிற குழலுக்கு நான்தரிக்கமாட்டேனென்கிருள்.

(இ - ள்.) இடையிடை - இடையிலே, அது - ஸ்வஸம்வேத்யமாய் அவர்களறியும்படியான தன்னைச்யஸூசகமான பாசுரங்களை, மொழிந்து சொல்லி, ஊதும்-ஊதுகிற. அத்தீங்குழற்கே-அந்த இனியகுழலோசைதனக்கே நான் - நான், உய்யேன் - தரிக்கமாட்டுகிறிலேன், தன் - தனக்குதானே, செய் - செய்யப்பட்ட, கோலம் - கோலத்தையுடைத்தாய், அந்தவிஷயத்திலே முற்படச்சென்று தூதுசெய் - தூதக்ருத்யத்தைப்பண்ணும். கண்கள்கொண்டு - கண்களைக்கொண்டு, ஒன்றுபேசி - ஸ்வாபிப்ராயத்தை ஸ்பஷ்டமாகச்சொல்லி, தூமொழி - தன்னுடைய தௌர்த்யத்தில் 'பரிசுத்தமான பாசுரங்களை யுடைத்தான, இசைகள் கொண்டு - இசைகளைக்கொண்டு, ஒன்றுநோக்கி - ஸ்வாபேக்ஷிதங்களைக்கடாக்ஷித்து, பேதுறுமுகம்செய்து - இப்பாட்டிலினிமையில் தனக்குண்டான வீடுபாடு தன்முகத்திலே தோன்றும்படியாய், நொந்துநொந்து, - " இதுகேட்ட வ்யலைகளான பெண்கள் என்படுகிறோரோ" என்று மேன்மேலென நொந்து, பேதை - முக்தைகளான பெண்களுடைய, நெஞ்சறவு - நெஞ்சிலுடலால்வந்த விஸ்லேஷம், அற - மிகவும் அறும்

படி. பாடும்பாட்டை - பாடுகிறபாட்டை. ஆதுமொன்று - ஏதேனுமொருப்ரகாரத்தாலும். அறிகிலம் - அனவிட்டறியமாட்டுகிறிலோம், இவ்வளவிலே, அம்மவம்ம - அம்மே அம்மே. மாலையும்வந்தது-ராத்ரிவந்தது, மாயன் - ஆஸ்சர்யபூதன், வாரான் - வருகிறிலன்.

"அதுமொழிந்து" என்றவிடத்துக்கு. குழலோசையமொழியவென்று சொல்லுவர்; தன்செய்கோலமென்று - தன்சிவந்தகோலமென்றுமாம், பேதுறவு - நெஞ்சழிவு. (௬)

ஆறு;—(ஊதுமத்தீங்குழற்கே) ஊதுமத்தீங்குழற்கே உய்யமாட்டுகிறிலேன்; அதின்மேலே, அங்ஙனே நம்மையழைத்து, தூது செய்கண்களைக்கொண்டு பணிமொழிகளாலே ஸாந்த்வவாதம்பண்ணி, தூமொழியிசைகள்கொண்டு ப்ரேமகர்ப்பமாக நோக்கியும், பேதுறமுகஞ்செய்து நொந்துநொந்தும், ஊடலைத் தீர்த்துக்கொண்டு எம்மோடே கூரவைநோக்கு, கேட்டார்நெஞ்சுகளெல்லாமழியும்படி பாடினபாட்டு என்னை நின்றீருகிறபடி. ஒன்றும் தெரிகிறதில்லை; அதின்மேலே மாலையும்வந்தது, மாயன்வாரான் என்றலற்றுகிறாள். (௬)

ஈடு; அவ;—பண்டே இடைப்பெண்கள் நடுவே இவன் குழலூதுகிறபோது நடுநடுவே தன்னுற்றாமையாலே சில வந்திசெஷ்டிதங்களைப் பண்ணுநின்றுகொண்டு பாடும்பாட்டை நினைத்து ஒன்றும் தரிக்கமாட்டுகிறிலேனென்கிறாள்.

(ஊதுமத்தீங்குழற்கேயுய்யேன்நான்) "சிறுவிரல்கள் தடவிப்பறிமாற" என்னும்படி குழலோசையே பாதகமானபடி. (இடை-யிடை-அதுமொழிந்து) "பிரிந்தேதன், ஆற்றேன்" என்றாப்போலே சொல்லுகிற நீசபாஷணங்களை யிடையிடையே சொல்லிப்பாடுப் பாடுவது. தாழ்ந்த செயலும் பேச்சும் தன்வாயால் சொல்லமாட்டாமையாலே (அது) என்கிறாள். எம்பார், இவ்விடத்தே வந்தவாறே, "நோருன்னானையுஞ்சேரேறயோ, தேசிகருங்கூடப் பாசுரமிட்டுச் சொல்லமாட்டாதே 'அது' என்னுநிற்க, மத்பஸ்தரான நாமிதுக்கென்னபாசுரமிட்டுச்சொல்வது" என்றருளிச் செய்தாராம். அன்றிக்கே, (அதுவொழிந்து) அது தவிர்ந்தென்னவுமாம் - நடுவே நடுவே பாடுகிறபாட்டைவிட் டென்னவுமாம்.

(தன்செயித்யாதி) தனக்குத்தானே யாபரணமாய், தன்கருத்தை யவர்களுக்கறிவிக்கவல்ல திருக்கண்கள், நெஞ்சில் மறந்தாலே

"கிட்டக்கடவோமல்லோம்" என்றிருக்கிற பெண்களுடைய காலைச் சென்று பிடியாநிற்கும் கண்களென்கை. நம்பிமூத்தபிரான் செய்வு ற்றை யடையச் செய்யாநிற்குமாய்த்து. குழலூதுகையிலே மூண்டு மீண்டு வார்த்தைசொல்லவொண்ணாமையாலே வாக்வ்யாபாரத்தை யெறட்டுக்கொள்ளாநிற்குமாய்த்து. பேச்சால் பிறக்கும் ஸ்பஷ்டதை நோக்காலே பிறக்கை. (தூமொழியிசைகள் கொண்டொன்று நோக்கி) அழகிய பேச்சோடே கூடின இசைகளாலே, கண்ணாலே நோக்கி யீடுபடுத்துமாபோலே யீடுபடுத்தி. இசையோடேகூடச் செய்தே யும் இயலும் தெரிந்திருக்கை. வாக்வ்யவஹாரமும் நேத்ரவ்ருத்தி ம்யு மாறாடினபடி.

(பேதுறுமுகஞ்செய்து நொந்துநொந்து) கேட்கிறவர்களிலும் தன் செவியணிந்தாகையாலே. "நாமீடுபடுகிறபடி கண்டால் அபலை களானவர்க ளென்படுகிறார்களோ" என்று மிகவும் நொந்து. "வன் னெஞ்சரான நம்மை வருத்தினபடி கண்டால், அபலைகளென்படுகி றார்களோ" என்று மிகவும்நோவுபட்டான். (பேதைநெஞ்சறவறப் பாடும்பாட்டை) பெண்களுடைய நெஞ்சு ஊடலை மறந்துவந்து பொருந்தும்படி பாடுகிறபாட்டை.

(ஆதுமோன்றறிகிலம்) அதுபாதகமாகிறபடி யெனக்கொன்றும் தெரிகிறதில்லை. (அம்மவம்ம) பூசல் பூசல். (மாலையும்வந்தது) மிக வும் பாதகமாம்படி ஸந்த்யையும்வந்தது. இனியிருந்து க்லேசிக்க வேண்டாதபடி இது முடித்தே விடும்போலே யிருந்தது. (மாயன் வாரான்) தன்னைப் பிரிந்தார் லஜ்ஜிக்கும்படி தானேயிழவாளனாய் வந்து கால்பிடிக்கு மாஸ்சர்யபூதன் வருகிறிலன். (கூ)

பத்தாம்பாட்டு.

மாலையும்வந்ததுமாயன்வாரான் மாமணிபுலம்பவல்லேறணை ந்த * கோலநன்னாகுகளுகளுமாலோகோடியனகுழல்களுங் குழறு மாலோ * வாலொளிவளர்முல்லைக்கருமுகை கள்மல்லிகையலம் பிவண்டாலுமாலோ * வேலையுள்விசும்பில் விண்டலறுமாலோ வென்சொல்லியுய்வனிங்கவனைவிட்டே. (கo)

ப:—அநந்தரம், ஆஸ்சர்யபூதனானவன் வந்திலன், பாதகங்கள் நலி யாநின்றன, இனி யெங்கே யுஜ்ஜீவிப்பேனென்கிறாள்.

(இ - ள்.) மாலையும்வந்தது - வருவதாக அவன்குறித்துப்போன மாலைக்காலமும் வந்தது. மாயன் - தன்ஸந்நிதியாலெல்லாம் அநுகூலிக்கும்படியான ஆஸ்சர்யத்தையுடையவன். வாரான் - வருகிறிலன், மாமணி - பெரியமணிகள், புலம்ப - த்வநிக்கும்படி, வல் - பெருமிடுக்கனை. ஏறு - ஏறுகள். அணைந்த - அணைந்த, கோலம் - தர்ஸநீயமான வடிவையுடையவாய், நல் - ஏறுகளோடுசேர்ந்த வுகப்பையுடைத்தான, நாகுகள் - நாகுகளானவை, உகளும் - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஸஸம்ப்ரம ஸஞ்சாரத்தைப்பண்ணாநின்றன. குழல்களும் - பசுக்கள் திரளைக் காக்கப் பலவிடத்திலுமூதின குழல்களானவை, அவன் குழலோசையை ஸ்மரிப்பித்து, கொடியன - அஸஹ்யமாம்படி. குமுறும் - அக்ஷரஸமாகத்வநியாநின்றன, வால் - வெளுத்த, ஒளி - ஒளியையுடைத்தான வளர் - கொடியானது மிகாநிற்கிற முல்லை - முல்லை. கருமுகை - கருமுகை, மல்லிகைகள் - மல்லிகைகளை. அலம்பி - அவகாஹித்து, வண்டு - வண்டுகளானவை, ஆலும் - ஹ்ருஷ்டியாநின்றன. வேலையும் - ஸமுத்ரமும் - விசும்பில் - ஆகாசத்திலே, விண்டலறும் - கிட்டி வாய்விட்டுக் கூப்பிடாநின்றது, இங்கு - இவ்வளவில், அவனைவிட்டு - அவனைவிட்டு, என்சொல்லி - எத்தைச்சொல்லி, உய்வன் - உஜ்ஜீவிப்பேன். (௧௦)

ஆறு:—(மாலையும்) மாலையும்வந்தது, மாயன் வருகிறிலன், மாமணிபுலம்பவல்லேறணைந்த கோலநன்னாகுகள் களித்துக்கொடு வாராநின்றன, வண்டுவரைப்பெருமானுடைய திருத்தோழன்மார் குழல்களை யூதிக்கொடுவந்து புகுராநின்றனர், அதி தவளமான வொளிவளர்கிற முல்லை கருமுகைகள் மல்லிகைகளிலுண்டான பூக்களின்மதுக்களைப்பருகி வண்டுகளானவை திளையாநின்றன. கடலும் கிளர்ந்து கொடுவாராநின்றது, இந்தசையிலவனைவிட்டு என்னத்தைச்சொல்லி யுய்வனென்கிறாள். (௧.)

ஈடு- அவ:—வருவதாகச்சொன்ன காலம் வந்திருக்க அவன் வருகிறிலன், பாதகங்களுடைய ஸந்நிதியிலவனையொழியத் தரிப்பதெங்கேயென்கிறாள்.

(மாலையித்யாதி) மாலையும் பாலையும் கூடப் பிணைத்துவிட்டார் போலேகாணும். வருவதாகக் குறித்துப்போன காலம் வந்தது, அவன்றான் வருகிறிலன். அவனைக்காணாமே, ப்ரதிகூலமெல்லாமநுகூலமாய்த்தோற்றுமிறே. (மாமணிபுலம்ப) பெருத்தமணி த்வநிக்க (வல்லேறித்யாதி) நாகுகை புகுந்தாலல்லது மீளாதாய்த்து. அது மதம் கைபுகுந்தாலல்லது மீளாத ஏறுகளோடே கலந்த தர்ஸநீய

மான ஸ்நேஹத்தையுடைய நாகுகள்; அந்த ஸம்ச்லேஷத்தாலுண்டான ஹர்ஷத்தாலே ஸஸம்ப்ரமவ்ருத்திகள் பண்ணுகின்றன. நான் ஶோகத்தோடேயிருந்தேன், இவை ஹர்ஷத்துக்குப் போக்குவிடாநின்றன. பின்னை யவன்செய்த தென்னென்னில்; அவனின்னமும் வரவுக்கு க்ருஷிபண்ணுகின்றான்.

(கோடியனவித்யாதி) தூரப்போன பசுக்களை யோரிடத்திலே திரட்டுகைக்காக அங்குமிங்கும் சிதறின விடையரடையத் திரண்டு எல்லாருமொக்கக் குழல்களைவாங்கி ஸந்த்யாஸமயத்திலே தங்கள் வரவை ஊரறியும்படியாகவும் பெண்கள்நெஞ்சில் மறமாறும்படியாகவும். எழுத்தும் சொல்லும்பொருளும் தெரியாதபடி யொன்றாக விரலியெழும்படி யூதுவதொருகுழலோசையுண்டு; அது பாதகமாகாநின்றதாய்த்து.

(வாலொளியித்யாதி) மிக்கவொளியையுடைத்தாய் கண்டவிடமெங்கும் தானேயாம்படி படர்ந்தமுல்லை, அப்படியிருக்கிற கருமுகை, மல்லிகை, இவற்றிலேபுக்கு மதுபானம்பண்ணி, அலேகிற-ஆலிக்கிறவண்டுகளானவை ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுகின்றன; திர்யக்குகளானவை, ஸம்ச்லேஷத்தால்வந்த ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுக் களிப்பனவும், ஸஸம்ப்ரமந்ருத்தம பண்ணுவனவுமாகாநின்றன.

(வேலையும்)கடலும், ஆகாசத்திலே நின்று கூப்பிடாநின்றது. (இங்கவனைவிட்டு - என்சொல்லியுய்வன்) பாதகபதார்த்தங்களின் நடுவே, அவனையொழிய வெத்தைச்சொல்லி யுஜ்ஜீவிப்பது. இவை மேன்மேலென நலியாநின்றன, அவனோவந்திலன், நானுஜ்ஜீவிக்க வென்னென்றுண்டோ, முடிந்தேனென்றபடி. (௧௦)

பதினொன்றாம்பாட்டு.

அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா வணியிழையாய்ச் சியர் மாலைப்பூசல் * அவனைவிட்டகல்வதற்கேயிரங்கியணிகுருகூர்ச்சட கோபன்மாறன் * அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்தவாயிரத் துள்ளிவைபத்துங்கொண்டு * அவனியுளலற்றிநின்றுய்மின் தொண் டீர்ச்சொன்னமாலை நண்ணித்தொழுதே. (௧௧)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப்பலமாக பகவத்ஸம்ஶ்லே ஷத்தை யருளிச்செய்கிறார்.

(இ-ள்) அவனைவிட்டகன்று-அதிசயிதபோக்யனான க்ருஷ்ணனை விட்டகன்று, உயிராற்றகில்லா - ப்ராணதாரணம் பண்ணமாட்டாதே யிருப்பாராய், அணியிழை - அவன்வரவுக்கீடாக வணியப்பட்ட ஆப ரணங்களையுடையாரான, ஆய்ச்சியர் - கோபிமார், மாலை - மாலைக்காலத் தில், பூசல் - அவன்வரவுகாணுமல் கூப்பிட்டபடியை. அவனை-அவனை, விட்டகல்வதற்கே - விட்டகன்றிருக்கைநிமித்தமாக, இரங்கி - நோவு பட்டு, அணிகுருகூர்-அழகியதிருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் மாறன்-ஆழ்வாரானவர், அவனி-பூமியை-உண்டு-ப்ரளயங்கொள்ளாமல் உண்டு, உமிழ்ந்தவன்மேல்-உமிழ்ந்த வன்விஷயமாக, உரைத்த-அருளிச் செய்த, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இவைபத்தும்கொண்டு - இவைபத் தையும் ஸ்வீகரித்துக்கொண்டு, அவனியுள் - பூமிக்குள்ளே, அலற்றி நின்று-ப்ரீதியாலே திரளாகக்கூப்பிட்டுநின்று, தொண்டீர் - அநுபவசா பலத்தையுடையவர்களே, அச்சொன்னமாலை - அங்குச்சொன்ன ஆஶ்ரிதவ்யாமுக்தனான க்ருஷ்ணனை, நண்ணித்தொழுது - கிட்டித்தொ ழுது. உய்மின் - உஜ்ஜீவியுங்கோள்.

இத்திருவாய்மொழியிலிப்பத்துப்பாட்டும் - கோபிமார் தனித்தனி யேகூப்பிட்ட பாசுரமாதல், ஒருகோபிகை திரளோடேகூடியும் தனியு மாய்க்கூப்பிட்ட பாசுரமாதலாயிருக்கிறது. (கக)

இது எண்சீராசிரியவிருத்தம்.

ஆறு;—(அவனைவிட்டு) வண்டுவரைப் பெருமாளைப்பிரிந்து தங்களைக்கொண்டு தரிக்கமாட்டாமை * அந்தியம்போது அணியி ழையாய்ச்சியர் திரள்நின்று கூப்பிட்டாப்போலே, ஆழ்வாரும் அவ னைப்பிரிந்து தரிக்கமாட்டாமை கூப்பிட்டலற்றின வித்திருவாய் மொழியைக்கொண்டு அலற்றியுய்யலாமென்கிறார். (கக)

ஈடு-அவ:—நிகமத்தில், அவன்பக்கல் சாபலமுடையார், இத் திருவாய்மொழியைச்சொல்லி அவனைப்பெறுங்கோளென்கிறார்.

(அவனைவிட்டகன்று யிராற்றகில்லா வணியிழையாய்ச்சியர்) அவனைவிஶ்லேஷித்துத் தந்தாமுடைய ப்ராணன்களைக்கொண்டு தரிக்கக்ஷமைகளன்றிக்கே, அவனுடைய வரவுக்குறப்பாக வொப்

பிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய இடைப்பெண்கள். (௧) "கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப்புகுந்து" என்கிறபடியே, அவன்வரவுக்குடலாகத் தங்களையலங்கரித்து, வரும்காலத்தில் வரக்காணாமையாலே, திருவாய்ப்பாடியில் பஞ்சலக்ஷம்குடியிற்பெண்கள் க்ருஷ்ணவிரஹத்திலே ஒருஸந்த்யையிற்கூப்பிட்ட கூப்பீடாய்த்து.

(அவனைவிட்டகல்வதற்கேயிரங்கி) (அவனுடைய பிரிவாலே நோவுபட்டு) அவர்களெல்லோரும்பட்ட க்லேசத்தை யிவ்வொருவரும் பட்டாரென்கை, (அவனியுண்டுமிழ்ந்தவன் மேலுரைத்த) (ஸர்வரையும்) ப்ரளயாபத்திலே ரக்ஷித்து அழிந்தவற்றையடையவுண்டாக்கின ஸர்வேஶ்வரன் திருவடிகளிலேயாய்த்துச் சொல்லிற்று. [தொண்டர்-அணிகுருகூர்ச்சடகோபன்மாறன், அவனியுண்டுமிழ்ந்தவன்மேலுரைத்தவாயிரத்துள்-அவனைவிட்டகல்வதற்கேயிரங்கி-அவனைவிட்டகன்றுயிராற்றகில்லா வணியிழையாய்ச்சியர் மாலைப்பூசல்-சொன்ன-இப்பத்துங்கொண்டு-அம்மாலைநண்ணித்தொழுது-அவனியுளலற்றிநின்றுய்மின்.]

இப்போதிதுசொல்லிற்று விரஹப்ரளயத்தில் நின்றும் தம்மையெடுக்கவேணுமென்கைக்காக. (அச்சொன்னமாலை நண்ணித்தொழுது-அவனியுளலற்றிநின்றுய்மின்தொண்டீர்) அப்படிப்பட்ட வ்யாமோஹத்தை விளைக்கவல்லவனைக்கிட்டி, அவனைத்தொழுது, அவன்பக்கல் சாபலமுடையார், பூமியிலேநின்று அடைவுகெடக்கூப்பிட்டு உஜ்ஜீவித்துப்போகப்பாருங்கோள். இப்பாசுரத்தை யப்யஸிப்பார்க்கு என்னைப்போலேகூப்பிடவேண்டா, "என்சொல்லியுய்வன்" என்றுசைப்பட்டபேறு பெறுகையில் கண்ணழிவில்லை. (௧௧

ஒன்பதாந்திருவாய்மொழி முற்றிற்று.

---

(௧) நாய்ச்சி-௮-௭.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஒன்பதாம்பத்து.

பத்தாந் திருவாய்மொழி.

மாலைநண்ணி - ப்ரவேஶங்கள்.

ஆறு;—(மாலைநண்ணி) "என்சொல்லியுய்வனிங்கவனை விட்டு" என்று இடந்தலற்றுநிற்கச்செய்தே, அவனும் பசுமேய்த்துவந்து புகுர அவர்களவனோடே கலந்து பரிமாறினாப்போலே, தம்முடைய வ்யஸநமும் தீரும்படி திருக்கண்ணபுரத்திலே அவனைக் கண்டு அவனோடே கலந்து பரிமாறி, தம்முடைய ப்ரீதிப்ரசயத்தாலே அநுகூல ஜநங்களைக் குறித்து. *

ப:—பத்தாந் திருவாய்மொழியில், கீழே ப்ராப்யத்வரையாலே ஆர்த்தராய்க் கூப்பிட்டவர்க்கு ஈஶ்வரன் அர்ச்சாவதாரஸ்வபனாய்க் கொண்டு திருக்கண்ணபுரத்திலே நிற்கிற நிலையைக் காட்டி இவருடைய ஆர்த்தியை ஶமிப்பிக்க விஶ்வாபத்ஸகத்வத்திலே ஸந்துஷ்டராய்; வடதளஶாயித்வமஹோபகாரத்தையும், வஸ்தவ்யதேஶவைலக்ஷண்யத்தையும், விலக்ஷணவிபூதி யோகத்தையும். அதிசயிதபோக்யத்வத்தையும், பரமபதப்ரதத்வத்தையும், அநுபவவிரோதி நிரஸநத்வத்தையும், அநந்யப்ரயோஜந ஸுலபதையையும், ஸம்ஸாரநிவர்த்தகத்வத்தையும், காரணத்வத்தையும், ஶ்ரிய:பதித்வத்தையுமநுஸந்தித்து, ஏவம்ப்ரகார விஶிஷ்டனைக்கொண்டு ஆஶ்ரயணஸ்தலத்திலே அடிமைகொள்வதாக நிற்கிறகைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தையுமநுஸந்தித்து. ஸந்துஷ்டராய், "பக்திபரராயும் ப்ரபத்திபரராயும் உக்திபரராயுங்கொண்டு அவனையாஶ்ரயித்தும் அநுபவித்தும் அவன் திருவடிகளிலே கைங்கர்யம் பண்ணியும், நிவ்ருத்தஸாம்ஸாரிக ஸகலக்லேஶராய்க்கொண்டு வர்த்தியுங்கோள்". என்று, அவனுடைய கிஞ்சித்கார ப்ரதிஸம்பந்தித்வத்தால்வந்த பலரூபத்தை ப்ரதிபாதித்து நிகமிக்கிறார்

ஈடு;—* அறுக்கும் வினையில் - அவனைப் பெறுகைக்குறுப்பான மநோரதமாய்ச் செல்லுகிறது; மநோரதமைபத்திலே அபேக்ஷிதம் கிடையாமையாலே மிகவும் க்லேஶப்பட்டபடி சொல்லிற்று - * மல்லிகைகமழ்தென்றலில்; அதுதான் ராத்ரி வ்யஸநமாய்ப் போயிற்றபடியிறே. இப்படி மநோரதித்துப் பெறாமையாலே நோவுபடுகிற இவருடைய வ்யவஸாயத்தையநுஸந்தித்து, ஈஶ்வரன் "நீபோ இப்படி-

மநோரதிப்பீரும் அது கிடையாமல் க்லேசப்படுவீரும், உம்மைப் பெறவேணுமென்று மநோரதிப்போமும் நாமன்றோ, உம்மைக்கிடையாமைபா விழவுபட்டோமும் நாமன்றோ, உமக்கொரு குறையுண்டோ, * கலங்காப்பெருநகரம் கலவிருக்கையாயிருக்க அவ்விடத்தைவிட்டுத் திருக்கண்ணபுரத்திலே நாம்வந்து ஸந்நிதிபண்ணிற்றுமுமக்காகவன்றோ, ஶரீராவஸாநத்திலே உம்முடைய வபேக்ஷிதம் செய்யக்கடவோம்" என்று ஸமாதாநம்பண்ண ஸமாஹிதராய், இவரும் ஹ்ருஷ்டராகிறார்; அவன் "ஒன்றுசெய்யக்கடவோம்" என்றால் அப்போதே பெற்றதாகநினைத்து ஹ்ருஷ்டராகலாம்படியிறே அவன்படியிருப்பது.

இப்படி ஹ்ருஷ்டராய், "அவன்படியிதுவானபின்பு, ஸர்வேஶ்வரன் ஸர்வஸ்மாஶ்ரயணீயனுக்கொண்டு திருக்கண்ணபுரத்திலே ஸந்நிதிபண்ணினான், எல்லாருமொக்க வவனையாஶ்ரயியுங்கோள், ஆஶ்ரயிக்குமிடத்தில் அவன்திருவடிகளிலே பக்தியைப்பண்ணுங்கோள், பக்திக்குப்பரிகாமில்லாதார் ப்ரபத்தியைப்பண்ணுங்கோள், அதுக்கீடான வ்யவஸாயமில்லாதார் உக்திமாத்ரத்தைபாகிலும் பண்ணுங்கோள், அவ்வளவேகொண்டு அவன்றன்னைநவிடான், ஆனபின்பு எல்லாருமொக்க அவனை யாஶ்ரயியுங்கோள்" என்று பரோபதேசத்திலே ப்ரவ்ருத்தராகிறார். மோஹித்துக்கிடந்தாகில் கிடக்குமித்தனைபோக்கி, உணர்ந்தாராகில் பிறர்க்குஹிதஞ்சொல்லியல்லது நிற்கமாட்டார்.

"'ஶரீராவஸாநத்திலே உம்முடைய வபேக்ஷிதம் செய்யக்கடவோம்' என்று ஈஶ்வரன்சொன்னவிடமும், அதுகேட்டு இவர் ஹ்ருஷ்டரானவிடமுங்கூடாது, 'ப்ராரப்தகர்மாவஸாநத்திலே மோக்ஷமாகக்கடவது' என்றன்றோ வேதாந்தங்களில்வாஸனை" என்னில்; இத்திருவாய்மொழிதன்னிலே "பக்தியைப்பண்ணுங்கோள்" என்றும், "அதுமாட்டாதார் ப்ரபத்தியைப்பண்ணுங்கோள்" என்றும், சொல்லிற்றிறே. அதில், உபாஸகனைறிற வதிகாரியைப்பற்றச்சொல்லுகிறது; இது, ப்ரபந்நனுக்குச் சொல்லுகிறது.

(௧) "தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே - தஸ்ய தாவதேவசிரம்யாவந்நவிமோக்ஷ்யே" என்கிற வாக்யமன்றோ இவ்

(௧) சாந்தோ. ௬-௧௪-

வர்த்தத்தைச் சொல்லுகிறது " 'இதுதான் ஶரீராவஸாநத்தைப் பற்றச் சொல்லுகிறதோ, கர்மாவஸாநத்தைப் பற்றச்சொல்லுகிறதோ' என்று விசாரித்து, கர்மாவஸாநத்தைப் பற்றச்சொல்லுகிறதென்று ஸித்தாந்தித்ததில்லையோ, அத்தோடு விரோதியாதோ விது " என்னில், ந்யாயாநுக்ருஹீதமாயிறே வாக்யமர்த்த ப்ரத்யாயகமாவது; உபாஸகனுக்குத் தான்பற்றினவுபாயம்முற்றி பலிக்க வேண்டுகையாலே அவ்வளவும் ந்யாயம்நடக்கும்; இவன், முதலடியிலே, " என்னுடைய ஸர்வபாரங்களுக்கும் கடவாய்நீயே " என்று கொண்டு ஸர்வேஶ்வரன்பக்கலிலே பரந்யாஸம்பண்ணினவனிறே; " இவன்றான் செய்கிறதொன்றுண்டாய் அது பக்வமாய்ப் பெறவேணும் " என்னும் விளம்பஹேதுவுமில்லை, இவன்றான் பரந்யாஸம் பண்ணினவீஶ்வரனுக்கு அஶக்தியுண்டாய் அது விளம்பஹேதுவாகிறதுமன்று. ஆகவிப்படி ந்யாயங்கள் காட்டினவாறே இவனுக்கு ஶரீராவஸாநத்திலே பேறுகைக்குத் தட்டில்லையிறே.

" இனித்தான், (க) ஸஹவஸம்வஸரா ஸஹவஸேவாவஸா-பகவந்தம் ப்ரபந்நாஸா பகவந்தமவாபஸா " என்று - மாதவி ப்ரபத்திபண்ணி அநந்தரம் பெற்றாளாகச் சொல்லாநின்றதிறே. முக்தலோபாக்யாநத்திலே வந்தவாறே " நரகாநுபவம்பண்ணுகிறவர்கள் பகவந்நாமஶ்ரவணத்தாலே அநந்தரம் முக்தரானார்கள் " என்றதிறே; "அவதாரரஹஸ்யஜ்ஞாநமுடையவன் இஶ்ஶரீராவஸாநத்திலே பெறக்கடவன் " என்றேசொல்லாநின்றதிறே; (உ) " க... ரேஹம் ... த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி " (ங) " ... ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி " என்றும் சொல்லாநின்றதிறே.

" ஆனால், ப்ரபத்திபண்ணினவநந்தரத்திலே பகவத்ப்ராப்தியாகவேண்டாவோ, ' இவ்விரோதியைப்போக்கி உன்திருவடிகளைத் தரவேணும் ' என்றன்றோ விவனபேக்ஷிக்கிறது, பின்னையும் அநிஷ்டமான ஶரீரத்தோடே யிருக்கிறவிருப்பு கர்மஶேஷத்தாலேயாவதோ, ஈஶ்வரன்வைக்கவிருக்கிறானவதோ " என்னில்; ஈஶ்வரன் வைக்கிறானாகில் அவனுக்குச் சிலதோஷம் ப்ரஸங்கிக்கும், அவன்

(க) காருடே-ஸ்ரீரங்கமாஹாத்- (உ) கீ. ச-கூ-
(ங) கீ. கஅ-சசு-

ருன் நம்விரோதியை நடுவேதுண்டித்து அவ்வருகே கொண்டுபோகி றேன்" என்று சொன்னத்தோடும் விரோதிக்கும்; ஆனபின்பு, கர்ம வஶ்யரோபாதி ஸுகது:காத்யநுபவமிவனும் பண்ணியிருக்கையா லே கர்மத்தாலேயாயித்தனையன்றோ; இனி, கர்மம் நடையாடக்க டவதானால் அவ்வளவும் போகத்தட்டென்னென்னில்; அதுவேண் டா, அதிகாரிவிசேஷத்தாலே.

இவன் ப்ரபத்திபண்ணினவநந்தரம் முக்தனுமாகி விதுதன்னை நச்சுப்பொய்கைபோபாதியாக நினைத்தஞ்சி ஆள்பற்றாது; இனியிவ னையிங்கே சிலநாளிருத்தவே, ஸ்ரீபீஷணரையிட்டு நாட்டுக்கு வெளிச் சிறப்பைப் பண்ணிக்கொடுத்தாப்போலே, இவன் சிலர்க்குபதேசித் தும், இவனுடைய வ்ருத்தங்கண்டு திருந்துவாருமாய், இங்ஙனே சிலநன்மைகளுக்கு முடலாயிருக்கும்; இனித்தான் "இவன்றன் னைத்தந்த சரீரமன்றோ" என்று இச்சரமசரீரத்தை ஈஶ்வரன் தா னாக வுபேக்ஷிக்கவும்மாட்டான்.

இவன்றான் ப்ரபத்திபண்ணுகிற ஸமயத்திலே "இப்போதே விரோதிபோய் உன்திருவடிகளைப் பெறவேணும்" என்னும் த்வரை யுமிவனுக்குண்டாக ஸம்பாவனையில்லை, முகம் பழகினதாகையாலே "இத்தைவிட" என்றால் கடுக இசையான்; இனியொரு ஶரீரபரிக் ரஹம்பண்ணுதல் கர்ப்பவாஸம்பண்ணுதல் செய்யாதொழியவேணு மென்னு மளவாய்த் திவனுக்குண்டாகிலுள்ளது; ஆகையாலே தத் க்ரது ந்யாயத்தாலே அப்படியே பேறாயிருக்கும்; இவனுடைய நினை வையும்பற்ற, "இவன்றானிதிலே சாபலம்பண்ணியிருந்தானாகில் நாலுநாளிருந்திடுவானுக்கு" என்றிருக்குமீஶ்வரன்.

"ஆனால், இங்கிருக்கிறநாளுநாளும் ஆதிவ்யாதிகளுக் கிடங் கொடாதபடி அல்லாதாரில் வ்யாவ்ருத்திதோற்ற இவனை ஸுகோத் தரனாக வையாதொழிவானென், நாட்டாரோபாதி ஒன்றையிழந்த போதாக சோகித்தும் ஒன்றினுடைய லாபமுண்டானபோது ஹ்ரு ஷ்டனாய்ப்போலேயிருந்தும் போரும்படிக்கிடாகவைக்கிறதென்" என்னில்; இவன்றான் "இவ்விரோதியைப்போக்கி யுன்னைத்தரவே ணும்" என்றே யபேக்ஷித்தது; இதுதான் தன்னிதென்றறியாதிற் சச் செய்தேயும் விடாமாட்டாதிருக்கிறவன், இத்தாலே ஸுகோத்தர மாக்கிவைக்குமன்று, "இதுதானே நன்றாயிருந்ததாகில் இன்னம்

சிலநாளித்தனையே அநுவர்த்திக்கிறீர்கோ" என்றிருக்குமிறே; இவனுடைய விச்சைக்கிடாக வைக்குமன்று இன்னமுமொரு ஶரீரத்திலே யிவனுக்கு ருசியுண்டாகவுங்கூடுமே; ஆகையாலே, இவனுடையருசி தபாறுப் "இவனிருந்தபடியிருக்கிறான்" என்றிருக்கும்.

ஆகையாலே, முகம்பழகின இஶ்ஶரீரம் தன்னடையேகழிந்து இனியொருசரீரத்திலே யிவனுக்கு ருசிபிறப்பதற்குமுன்னே, ஈஶ்வரனுக்கு கார்யஞ்செய்து தலைக்கட்டலாயிருக்கும். முகம்பழகினது தன்னடையேகழிந்துகொடுநிற்கும்; மேல் வரப்புகுகிற தறியாமையாலே அதில் ருசியில்லை; "இதுதான்றெல்லாது" என்று போலியாகவறிந்தும் வைக்குமே. இவன் முகவிலே "இக்கைதக்கிர்த்துத் தரவேணும்" என்று ஒருவார்த்தைசொல்லிவைக்கையாலே, அவனுக்கபுருஷார்த்தம் செய்தானையும் வேண்டாவிறே. இனி சரமதஶையிலே * காஷ்டபாஷாண ஸந்நிபனாயிருக்குமிறே. ஆகையாலே முதற்சொன்ன வார்த்தையைக் கொண்டு, இவன் விலக்கமாட்டாதவளவிலே ஈஶ்வரன் கார்யஞ்செய்து தலைக்கட்டும்.

"அசித்கல்பனாய்க்கிடக்கிறவன் தலையிலே ஒருதேவையிட்டேன், நானே நினைக்கக்கடவேன்" என்று சொல்லிவைத்தானிறே. "இஶ்ஶ்லோகத்வயமும் எம்பெருமானுடைய ஸர்வஸ்வம்" என்றுசொல்லக்கடவதிறே. (க) [ஸ்திதேமநஸி-ஸ்வஸ்திதேமநஸி] * நின்றவா நில்லாநெஞ்சமொரிடத்திலேநிற்பது. பட்டிதின்றுதிரியும் பசுவுடையவனுக்கு ஒன்றில் ப்ரவர்த்திக்கவொண்ணாதிறே; நெஞ்சைக்கொண்டு ப்ரவர்த்திக்கவேணுமிறே புருஷார்த்தம் பெறும்போது; (உ) "தஸ்யாஹம் நிக்ரஹம் ஹாசெந வாயொரிவஸுதுஷ்கரம்-தஸ்யாஹம் நிக்ரஹம்மந்யே வாயோரிவஸுதுஷ்கரம்" என்றானிறே. நாட்டார் ஊர்வஶீஸாலோச்யத்துக்கு ஸாதநாநுஷ்டானம்பண்ணாநிற்க, அவள்தான்வந்து உபஸ்த்தானம்பண்ணாநிற்க, "நீயென்தாயன்றோ" என்று நமஸ்கரித்துக் கடக்கநிற்கவல்ல விரக்தனிறே இவ்வார்த்தை சொல்லுகிறான்.

[ஸுஸ்வஸ்தே ஶரீரே-ஸுஸ்வஸ்தே ஶரீரே] பரிணதப்ரவ்யமானஶரீரமு மொருநிலையிலேநிற்பது. [யாத ஸ்வஸ்தெ ஹ்யஸி தெ - தாதுஸாம்யேஸ்திதே] அதுக்குறுப்பாக தாதுக்களுமொ

(க) வராஹசரமம். (உ) கீதை-சு ருக.

ன்று முடங்கி ஒன்றுநிமிருகையன்றிக்கே இவையுமெல்லாம் ஸமமாய்; சரீரத்திலே பொருளாகவும்பிறந்து, ஸத்த்வம் தலையெடுத்தபோதாக நம்மையாவனொருவன் ஸ்மரிக்கிறான் - "நாமார், ஶரீரமாகிறவித்து அசித்தாயிருந்தது, தேஹாதிரிக்தனாயிருப்பானொ ராத்மாவுளன், அவன்றான் ஈஶ்வரனுக்கு ஶேஷபூதன், அவனைப்பெறுகையிவ்வாத்மாவுக்கு மோக்ஷமாகிறது" என்று ஸ்மரித்து.

[விஶ்ராமுவெளஜம் - விஶ்வருபஞ்சமம்] குடற்றுடக்காலே முட்பாய்ந்தால்வரும் வ்யஸநமாத்மாவதாமாபோலே, இவற்றுக்கு வந்ததொன்று தனக்குவந்ததாம்படி எல்லாவற்றையும் ஶரீரமாகவுடையனாயிருக்கிறவென்னை. [அஜம் - அஜம்] " இவனைப்போலே ஜந்மநிபந்தநமான கலக்கமின்றிக்கேயிருக்கையிறே. [ததஸ்தி தத்ராஜி- தகஸ்கமித்பாகி] நடையாடித்திரியுமன்று இவனுக்கு முண்டிறே யிந்நினைவு; அசித்கல்பனாய்க்கிடந்தவன்றும் "இவன்நினைத்திலன்" என்று தேவையிடாதே நானவனையெப்போதும் நினைத்தபடியே நிற்பன்.

[ஊஜ்ஜூ - மத்பக்தம்] அடைகொடுபோம்போகடு மவனையோ வவன்பற்றிற்று-நெடுநாள் பச்சையிடுவித்துக்கொண்டு கார்யகாலத்திலேவந்தவாறே பச்சையிடாதநாளையெண்ணி யகற்றுமவனையோ பற்றிற்று. [நயாமிபரமாங்கதிம்-நயாமிபரமாங்கதிம்] * கள்வன் கொல்லிற்பிராட்டியை அந்தவாளத்தலையையிட்டு மறைத்துக்கொடு போனாப்போலே; தானே கையைப் பிடித்துக்கொடு போமாய்த்து. ஆதிவாஹிகரைவரக்காட்டியாதல் பெரியதிருவடியை வரக்காட்டியாதல் கொடுபோகையன்றிக்கே, ஆதிவாஹிகரில் ப்ரதாநனான தானே கொடுபோம். *

முதற்பாட்டு.

மாலைநண்ணித் தொழுதெழுமினோவினைகெட * காலைமாலை
கமலமலரிட்டுநீர் * வேலைமோதும்மதிள்சூழ் திருக்கண்ணபுரத்து *
ஆலின்மேலாலமர்ந்தானடி யிணைகளே. (க)

ப—முதற்பாட்டில், வடதளஶாயியான மஹோபகாரகன் திருவடிகளிலே ப்ரேமயுக்தராய்க்கொண்டு ஸர்வகாலங்களிலும் கைங்கர்யம் பண்ணுங்கோளென்று இத்திருவாய்மொழிக்கு ப்ரதிபாத்யமான வர்த்தத்தை ஸங்க்ரஹித்தருளிச்செய்கிறார்.

(இ - ள்.) வேலை - திரைக்கிளப்பத்தையுடைய ஸமுத்ரத்தாலே, மோதும் - மோதப்பட்ட, மதிள்சூழ்-மதிள்சூழ்ந்த, திருக்கண்ணபுரத்து திருக்கண்ணபுரத்திலே வர்த்திக்குமவனாய், ஆலின்மேலாலமர்ந்தானடியிணைகள்-வடதளஶாயியாய்க்கொண்டு ஜகத்தைரக்ஷித்த அகடிதகடநாஸமர்த்தனானவன் திருவடிகளையுத்தேசித்து, மாலை - ப்ரேமபாரவஶ்யத்தை, நண்ணி-பெற்றுக்கொண்டு, காலைமாலை-அஹோராத்ரவிபாகமற ஆதராநுரூபமாக, கமலமலர்-விலக்ஷணமான தாமரைப்பூக்களை, இட்டு- பணிமாறி, நீர் - நீங்கள், வினை - உங்களநுபவாலாபக்லேசம், கெட - தீரும்படி, தொழுதெழுமினோ - (க) "வஸ ஹ்ருதி வ டா: பத்தாஞ்ஜலிபுடா:" என்கிறபடியே ஶேஷத்வாநுரூபவ்ருத்தியைப் பண்ணி உஜ்ஜீவியுங்கோள்.

மேலாலென்றது-ஆலின்மேலென்றபடி. ஆல்-அசையாய்க்கிடக்கிறது. (௧)

ஆறு;—ஸர்வஸமாஶ்ரயணீயனாய்க்கொண்டு திருக்கண்ணபுரத்திலே யெழுந்தருளியிருந்த வெம்பெருமானை ரக்ஷகனாகப்பற்றி அவன்திருவடிகளைக் கமலமலரிட்டு நீர்வினைகெடத் தொழுதெழுமின், இதுக்கொரு காலநியமாபேக்ஷையு மில்லையென்கிறார். (௯)

ஈடு-அவ;—இத்திருவாய்மொழியிற் சொல்லுகிற வாஶ்ரயணத்தை ஸங்க்ரஹேணா வருளிச்செய்கிறார்.

(மாலைநண்ணித்தொழுதெழுமினோ) ஸர்வேஶ்வரன் திருவடிகளைக்கிட்டி யாஶ்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோள். மாலென்று - ஸ்நேஹகார்யமான வ்யாமோஹமாய், மாலையுற்றென்னவுமாய். பக்தியுக்தராயென்றபடி. (தொழுதெழுமினோ) என்கிறார், "தொழுதெழு" என்கிற தம்முடைய வாஸனையாலே. "அருளினன்" என்று ப்ரபத்தியைப்பற்றி யிழிந்தவராகையாலே, தம்வாஸனைதோற்றச்சொல்லுகிறார். (எழுமினோ) ஸர்வேஶ்வர னிவ்வாத்மவர்க்கத்துக்கெல்லாம் ஶேஷியாய் அவனைக் குறித்து ஶேஷத்வாகார மெல்லார்க்குமொத்திருக்கையாலே பலர்க்குமாகச் சொல்லுகிறார். (வினைகெட) பகவத்ப்ராப்தி விரோதிவர்க்க மென்னுதல், * மல்லிகைகமழ் தென்றலில் விரஹக்லேஶந் தீரும்படி யென்னுதல்.

(க) பார-மோக்ஷ-௩௪௪-௪.

(காலைமாலை) ஆஶ்ரயணத்துக்குக் காலநியதி யில்லையென்கை (க)"ஆதிநெடுவந்திவாய்" என்கிறபடியே ஸர்வகாலத்துக்கு முபலக்ஷணம். (கமலமலரிட்டு) ஸர்வபுஷ்பங்களுக்கு முபலக்ஷணம். நீங்கள் விரும்பின ப்ராப்ருத த்ரவ்யமேயமையுமென்கை. (நீர்) அதிகாரிகளும் முன்புத்தை நீங்களேயமையும். (வேலையித்யாதி) ஸமுத்ர மணித்தாரையாலே திரைகள்வந்து மோதாநின்றுள்ள மதிளாலே சூழப்பட்டிருந்துள்ள திருக்கண்ணபுரத்திலே, ப்ரமஹுரமான தேசமென்கை.

(ஆலின்மேலாலமர்ந்தான்) ஸகலலோகங்களையும் வயிற்றிலே வைத்து ஒருபவனை வாலந்தளிரின்மேலே கண்வளர்ந்தவன். உங்கள் விரோதிநிரஸநங்கள் துர்க்கடங்களே யாகிலும் கடிப்பிக்கவல்லவனென்கை; அவனடியிணைகளை - இறைஞ்சுமின். (ஆலின்மேலாலமர்ந்தான்) ஆல் - நீரும், இடமும். நீரின்மேலா லென்றுமாம், ஆலின்மேலிடத்தென்றுமாம். ஆல் - செய்யுளின்பம். (க)

இரண்டாம்பாட்டு.

கள்ளவிழும்மலரிட்டு நீரிறைஞ்சுமின்* நள்ளிசேரும்வயல்சூழ் கிடங்கின்புடை * வெள்ளியேய்ந்தமதிள்சூழ்திருக்கண்ணபுர முள்ளி * நாளுந்தொழுதெழுமினோதொண்டரே. (உ)

ப:—அநந்தரம், அவன் வர்த்திக்கிறதேசத்தை யாராதித்து அதினுடைய க்ஷேமத்தையை யநுஸந்தித்து ஸங்கிகளாய்வர்த்திக்கப் பாருங்கோளென்கிறார்.

(ப - ஸ்.) தொண்டர் - அநுபவசாபலமுடைய, நீர் - நீங்கள், கள் - மதுவை, அவிழும் - மலருகிற. மலரிட்டு - பூக்களைக்கொண்டு, இறைஞ்சுமின் - ஆராதியுங்கோள், போக்யஸம்ருத்தியாலே, நள்ளி - க்ஷுத்ரமான பெண்ணண்டுகளகப்பட, சேரும் - சேர்ந்துவர்த்திக்கிற, வயல் - வயல்களாலே, சூழ் - சூழப்பட்ட, கிடங்கின் - அகழினுடைய, புடை - பரிஸரத்திலே, வெள்ளி - வெள்ளியாலே, ஏய்ந்த - சமைந்த, மதிள் - மதிளாலே, சூழ் சூழப்பட்ட, திருக்கண்ணபுரம் - திருக்கண்ணபுரத்தை, ரக்ஷையுடையதேசமென்று, நாளுமுள்ளி - நித்யாநுஸந்தாநம்பண்ணி, தொழுதெழுமினோ - அநுபவஜநிதப்ரீதியாலே தொழுது கிளர்த்தியோடே வர்த்தியுங்கோள்,

---

(க) உ-திருவ-எ௩-

(இறைஞ்சுமின்) என்கிறவிடம். கீழில் * அடியிணைகளோடே யந்விதமாய், தேசபரமாகவுமாம் வெள்ளியேய்ந்தவென்று - ஹாக்ரபதத்தோடே சேர்ந்தவென்றுமாம். அன்றியே, வெள்ளிபோன்ற நிறமுடைய மதிளென்றுமாம், நள்ளி - பெண்நண்டு. (௨)

ஆறா:—(கள்ளவிழும்) அவன் திருவடிகளைக் கள்ளவிழும் மலரிட்டு நீரிறைஞ்சுமிடத்தில், அவற்றை நெஞ்சாலே நினைத்துக்கொண்டு நாளுமிறைஞ்சுமினென்கிறார். (௨)

ஈடு-அவ;—"இவ்விஷயத்துக் கென்வருகிறதோ" என்றஞ்சும் சாபலமுடையார், ஸாக்ஷாத்தான தேசமென்று நிர்ப்பயராய் நித்யமாக வாஸ்ரயியுங்கோளென்கிறார்.

(கள்ளவிழுமித்யாதி) செவ்விப் பூவைக்கொண்டு ஆஸ்ரயியுங்கோள். ஸ்நேஹிகளாயிருப்பார், செவ்விப்பூத் தேடுவர்களிறே; (௧) "கள்ளார்துழாயுங்கணவலரும்" என்கிறபடியே புஷ்பஜாதிமாத்ரமே யமையுமிறே அவன்படியைப்பார்த்தால். ஆக, த்ரவ்யதாரதம்யம்பாரான், ஆஸ்ரயிக்குமவன் ப்ரேமத்தையே பார்க்குமத்தனை. ஸ்ரீபுருஷோத்தமமுடையானுக்கு ராஜபுத்ரன் சாத்தின செண்பகப்பூ வார்த்தையை ஸ்மரிப்பது.

(நள்ளியித்யாதி) நள்ளியென்று-பெண்நண்டு. நீர்மாறாதவிடங்களிலே யாய்த்தவைவர்த்திப்பது. ஜலஸம்ருத்தியை யுடைத்தான வயலாலே சூழப்பட்ட அகழினருகே, கிடங்கு - அகழ். (வெள்ளியித்யாதி) நக்ஷத்ரபதத்தளவு மோங்கின மதிளென்னுதல், வெள்ளியாலே செய்யப்பட்ட (ததியான) மதிளென்னுதல். ப்ரத்யக்ஷிக்கிறிலோமாகிலும் ப்ரமாநிஸ்சயத்தாலே அதிவிலக்ஷணமாய்த் தோற்றுமிறே.

(திருக்கண்ணபுரமுள்ளி) ப்ரேமத்தாலே நிர்ப்பயமான தேசமென்று அநுஸந்தித்து, இவ்விஷயத்திலே சபலராயிருப்பார், நித்யமாகத்தொழுது உஜ்ஜீவியுங்கோள். "அபர்வணிகடல் நின்றலாகாது" என்னுமாபோலே இவ்விஷயத்தில் காலநியதியில்லை. (௨)

---

(௧) தி-மொ-௧௧-௭-௯.

மூன்றாம்பாட்டு.

தொண்டர்நுந்தந்துயர்போக நீரேகமாய் * விண்டுவாடாமலரிட்டு நீரிறைஞ்சுமின் * வண்டுபாடும் பொழில்சூழ் திருக்கண்ணபுரத் தண்டவாணன் * அமரர்பெருமானையே. (௩)

ப:— அநந்தரம், விலக்ஷணவிபூதியுக்தனைக்கொண்டு ஸுலபனை ஸர்வேஶ்வரனை ஏகாந்தரா யாராதியுங்கோளென்கிறார்.

(இ-ள்.) வண்டு - வண்டுகளானவை, பாடும்-களித்துப்பாடும், பொழில் - பொழில், சூழ் - சூழ்ந்த, திருக்கண்ணபுரத்து- திருக்கண்ணபுரத்திலே, அண்டவாணன் - பரமபதநிலயனாய், அமரர்பெருமானை - ஸூரிபோக்யனாய்க்கொண்டு நின்றவனை, தொண்டர் - ஸகலகைங்கர்யாபிநிவேஶயுக்தரானவர்களே, நுந்தம்துயர் - உங்களநுபவாலாபக்லேசம், போக - தீரும்படி, நீர் - நீங்கள், ஏகமாய்-ஏக ஹ்ருதயராய்க்கொண்டு, விண்டு - விகாஸோந்முகமாய், வாடா - செவ்வியழியாத, மலரிட்டு-பூக்களையிட்டு, நீரிறைஞ்சுமின்-உங்கள் ஸேஷத்வாநுரூபமாக வாராதியுங்கோள். (௩)

ஆறு;— (தொண்டர்) ஸர்வலோகேஶ்வரனைப், * அயர்வறுமமரர்களதிபதியாயிருந்தானைவைத்து. ஸர்வஸமாஶ்ரயணீயனாகைக்காகத் திருக்கண்ணபுரத்திலே யெழுந்தருளியிருந்தவனுக்கு அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு அடிமைசெய்யுங்கோளென்கிறார். (௩)

ஈடு-அவ;— திருக்கண்ணபுரத்திலே நின்றருளினவன் உபயவிபூதிநாதனாயிற்று; உங்கள் துக்கங்கெட அநந்யப்ரயோஜநராய்க் கொண்டு ஆஶ்ரயியுங்கோளென்கிறார்.

(தொண்டர்) ஆஶாலேச முடையாரான நீங்களென்னுதல், * (௧) * [illegible] - அஹம்ஸர்வம் கரிஷ்யாமிக் கிட்டிப்பிறந்த நீங்களென்னுதல் (நுந்தம்துயர்போக) துயரும் அவர்களுக்கு வ்யாவ்ருத்தமாயிறே யிருப்பது. விஷயப்ராவண்யத்தால் வந்த துக்கமென்னுதல், இறைஞ்சப்பெறாத துக்கமென்னுதல். (நீரேகமாய்) நீங்களநந்யப்ரயோஜநராயென்னுதல், நீங்களெல்லாரு மொருமிடறாயென்னுதல். "தொண்டர்" என்கையாலே எல்லாரு மொருமிடறாகலாமிறே

(௧) ரா-அயோ-௩௧-௫

(விண்டுவோடாமலர்) அலரத்தொடங்கினவளவாய்க் கழிய வலர்ந்துவாடாதபூ. செவ்விப்பூவைக்கொண் டாச்ரயியுங்கோ ளென்கை. (வண்டுபோமித்யாதி) வண்டுகள் மதுபானமத்தமாய்க்கொண்டு பாடாநின்றுள்ள சோலைசூழ்ந்ததேசம்; (௧) "ஹா௩வு ஹா௩வு ஹா௩வு-ஏதத்ஸாமகாயந்நாஸ்தே" என்கிறபடியே. நிரதிசயபோக்யமானதேசமென்கை,

(திருக்கண்ணபுரத்தண்டவானணமரர்பெருமானையே) திருக்கண்ணபுரத்திலேவந்து எளியனாயிருக்கிறவன் உபயவிபூதிநாதனைத்து; பரமபதநிலயனைப், * அயர்வறுமமரர்கள திபதியானவ னென்னுதல். லீலாவிபூதிக்குநிர்வாஹகனுமாய், நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனுமானவனென்னுதல், இங்கே ஆச்ரயிக்கைக்கு விரோதியைப்போக்கி பூர்ணாநுபவம்பண்ண ஓருதேசவிசேஷம் தேடிப்போக வேண்டா, நித்யஸூரிகளு மிங்கேவந்தநுபவிக்கும்படி ஸ்லாகித்தனை திவ்ய முண்டிறே இங்கு; அந்தர்க்குகைக்கதவிலேயில் விழித்திருப்பார்க்கு உஜ்ஜீவனமில்லையே; அப்படியன்றிறே யிவ்விருக்கைநிலை. (௨) "ஹ்ருதிதேவோ மநீஷிணாம்-ப்ரதிமாஸ்வ ப்ரபுத்தாநாம்" இதுக் காளவந்தா ரருளிச்செய்யும்படி "அம்மேட்டிலேறிப் பாயா நின்றால் தேசிகருக்குச்சொல்லவேணுமோ" என்று. (௫)

நான்காம்பாட்டு.

மானேநோக்கிமடப்பின்னை தன்கேள்வனைத் * தேனேவாடா மலரிட்டு நீரிறைஞ்சுமின் * வானையுந்துமதிள்சூழ் திருக்கண்ண புரம் * தானயந்தபெருமான் சரணாகுமே. (௪)

ப:—அநந்தரம் அதிசயிதபோக்யனான திருக்கண்ணனை, நப்பின்னைப் பிராட்டி சேர்த்தியிலே ஆராதியுங்கோளென்கிறார்.

(இ-ள்.) மான்-மானானது. நை-தோற்றுப்போம்படியான, நோக்கி-நோக்கையுடையளாய், மடம்-ஆத்மகுணபூர்ணையான, பின்னை தன்-நப்பின்னைப்பிராட்டிக்கு கேள்வனை-வல்லபனாய். தேனை- (௩) "...ரஸோவைஸ:" என்கிறபடியே தேன்போலே போக்யபூத

(௧) தை-ப்ருகு-௧௦ (௨) உத்தரகீதை- (௩) தை-ஆந-எ-

ஞனவனை, வாடா - வாடாத, மலரிட்டு - புஷ்பங்களைக்கொண்டு, நீர் - நீங்கள்; இறைஞ்சுமின் - ஆராதியுங்கோள், வானை - ஆகாசத்தை, உந்து - தள்ளும்படியோங்கின, மதிள்சூழ் - மதிள்சூழ்ந்த, திருக்கண்ணபுரம் - திருக்கண்ணபுரத்தை, "ஆஶ்ரிதர்க்கு முகங்கொடுக்கைக்கு யோக்யஸ்தலம். என்று, தான் நயந்த - தானே விரும்பின, பெருமான் - ஸர்வேஶ்வரன், சரணாகுமே - அவ்வாஶ்ரணீயவேஷந்தன்னிலே யுங்களுடைய ஆராதநப்ரதிஸம்பந்தியாய்க்கொண்டு கந்தவ்யனுமே;

தேனை வாடாமலரென்று - பூவோடேகூட்டவுமாம். (௪)

ஆறு:—(மானைநோக்கி) எல்லார்க்கு மினியனாய்க்கொண்டு நப்பின்னைப் பிராட்டியோடேகூடத் திருக்கண்ணபுரத்திலே யெழுந்தருளியிருந்த வெம்பெருமானுக்கு இப்படி அநந்யப்ரயோஜநராய்க் கொண்டடிமைசெய்யவே, தன்திருவடிகளில் நித்யஸித்தமான கைங்கர்யரூப ஸம்பத்தை யுங்களுக்குத்தந்து ரக்ஷித்தருளுமென்கிறார்.

ஈடு-அவ:—ஆஶ்ரயிக்குமிடத்தில் நப்பின்னைப்பிராட்டி புருஷகாரமாக வாஶ்ரயியுங்கோள், அவனுங்களுக்கு ரக்ஷகனுமென்கிறார்.

(மானைநோக்கி) மானானது நையும்படியான நோக்கையுடையவள். மான்தோற்று நாணும்படியாய்த்து நோக்கிருப்பது. (மடப்பின்னை தன்கேள்வனை) ஸ்த்ரீத்வம் முதலான ஆத்மகுணங்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனாயுள்ளவனை. (தேனை) நிரதிசய போக்யனானவனை; இவ்வேப்பங்குடிநீரையன்றோ நானுங்களைக்குடிக்கச்சொல்லுகிறது. (வாடாமலரிட்டு நீரிறைஞ்சுமின்) செவ்விப்பூவிட்டு நீராஶ்ரயியுங்கோள். தேனையும் செவ்விப்பூவையும் சேர்க்கைபோலேகாணும் ஆஶ்ரயணமாவது.

(வானையித்யாதி) ஆகாசத்தோடே ஸ்பர்த்தைபண்ணி அத்தைத் தள்ளுமாபோலே யிருக்கிறமதிளாலே சூழப்பட்டவூரை. ஶத்ருக்களுக்குக் கிட்டவொண்ணாதபடி ஸுரக்ஷிதமானவூரென்கை. (தான்நயந்தபெருமான்) "ஆஶ்ரிதஸம்ஶ்லேஷத்துக்குப் பாங்கானதேசம்" என்று அத்தை விரும்பிவர்த்திக்கிற ஸர்வேஶ்வரனானவன். (சரணாகுமே) உங்களுக்கு ரக்ஷகனும்; அம்மதிளவனுக்கானாப்போலே உங்களுக்கவன்மதிளாம். (௪)

ஐந்தாம்பாட்டு.

சரணமாகுந்தனதாளடைந்தார்க் கெல்லாம் * மரணமானால் வைகுந்தம்கொடுக்கும் பிரான்* அரணமைந்த மதிள்சூழ்திருக்கண்ணபுரத்தரணியாளன் * தனதன்பர்க்கன்பாகுமே. (௫)

ப:—அநந்தரம், ஆஶ்ரிதர்க்குப் பரமபதப்ரதனானவன், அவ்விஷயத்தில் கைங்கர்யாபிநிவிஷ்டரானார்க்கு, அபிநிவேஶந்தானொருவடிவு கொண்டாப்போலே யாமென்கிறார். (௫)

(இ-ள்.) தனதாளடைந்தார்க் கெல்லாம் - தன்திருவடிகளைக் குறித்து ப்ரபத்திபண்ணின ஸர்வாதிகாரிகளுக்கும், சரணமாகும் - தானே யுபாயபூதனாய்க்கொண்டு, மரணமானால் - அவர்களுடைய ம்ரியமாண தசையில், வைகுந்தம் - அபுநராவ்ருத்திலக்ஷணமான தேசத்தை, கொடுக்கும் - கொடுக்கும், பிரான் - மஹோபகாரகனாய். அரணமைந்த - ரக்ஷகமாம்படி சமைந்த, மதிள்சூழ் - மதிள்சூழ்ந்த திருக்கண்ணபுரம் - திருக்கண்ணபுரத்திலே, தரணியாளன் - பூமியை ரக்ஷிக்கைக்காக வந்து நிற்கிறவன், தனதன்பர்க்கு - தன்திருவடிகளில் ப்ராவண்ய முடையார்க்கு, அன்பாகும் - ப்ராவண்யந்தானொருவடிவு கொண்டாப்போலேயாம்.

சரணமாகும் தனதாளென்று - உபாயமான திருவடிகளென்றுமாம். தரணியாளனென்று-ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு வல்லபனென்றுமாம்.

ஆறு:—(சரணமாகும்) இப்படி பக்தியோகத்தாலே யவனை யாஶ்ரயிக்க க்ஷமரன்றிக்கே தன்திருவடிகளையே யுபாயமாகப்பற்றினார்க்கு ஒருபடியாலன்றிக்கே யெல்லாப்படியாலும் ரக்ஷகனாய், அப்போதே அவர்களை யிப்ப்ரக்ருதியை விடுவித்துத் திருநாட்டிலே கொண்டுபோய் திவ்யப்ரக்ருதிகளாக்கி அவர்களோடே ஸம்ஶ்லேஷித்தல்லது தரிக்கமாட்டாதிருக்கச்செய்தே, அவர்களுக்கு ப்ரக்ருதிஸம்பந்த மநாதிவாஸனையாலே ஸஹபாவித்திருக்கையாலே, அல்பகாலத்திலே யிப்ப்ரக்ருதிகளைவிட்டால் திருநாட்டைக்கொடுத்தருளி, பின்னையு மவர்கள்பக்கலுள்ள ஸ்நேஹாதிஶயத்தாலே தானொன்றும் செய்யாதானாய், இவர்களுக்கெத்தைச் செய்வோமென்றிருக்கு மென்கிறார். (௫)

ஈடு-அவ;—இப்படி பக்தியோகத்தாலாஶ்ரயிக்க க்ஷமரன்றிக்கே தன்திருவடிகளையேயுபாயமாகப்பற்றினார் திறத்து அவன் செய்தருளும்படியை யருளிச்செய்கிறார்,

(சரணமாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்) ஜந்மவ்ருத்தஜ்ஞாநங்களால் குறையநின்றாரேயாகிலும், தன் திருவடிகளையே உபாயமாகப்பற்றினார்க்கெல்லாம் ரக்ஷகனாம். கீழ் மூன்றுபாட்டாலும் சொன்ன பக்தியோகம் அதிக்ருதாதிகாரம், இதில் சொல்லுகிற ப்ரபத்தி ஸர்வாதிகாரமென்கிறது; (௧) "[illegible]ஷு-ஸமோஹம் ஸர்வபூதேஷு" என்னக்கடவதிறே. பகவத்விஷயந்தான் ஸ்பர்ஸவேதியாயிருக்குமிறே; கைசிகத்தில் பகவத்ஸம்பந்தமுடையானொருசண்டாளனோட்டை ஸம்பாஷணம் ப்ராஹ்மணனுடைய வாசாரவைகல்யத்துக்குப்பரிஹாரமாய்த்து; அவ்விடத்திலெல்லாம் சொல்லுகிறவர்த்தமிதுவேயாய்த்து.

(மரணமானால் வைகுந்தம்கொடுக்கும்பிரான்) இவன் தன்பக்கலிலே பரந்யாஸம் பண்ணினவன்றுதொடங்கி இவனையொழியத் தனக்குச் செல்லாமையுண்டாயிருக்கச் செய்தேயும், இவனுடைய ருசியையநுவர்த்தித்து ஸரீரவிஸ்லேஷத்தளவு மவஸரப்ரதீக்ஷனாய் நின்று, பின்னையதுண்டானால் பரமபதத்தைக்கொடுக்குமுபகாரகன். தன் திருவடிகளைப் பற்றினவன்றே தானிருக்கிறவிடத்திலே இவனைக்கொடுபோய்ச் சேரவைத்துக்கொள்ளவேண்டியிருக்கச்செய்தேயும், நடுவிவனிருக்கும் நாலுநாளும் அவனுக்கு "ஒருபகலாயிரமூழியாயிருக்கையாலே (மரணமானால்) என்கிறது, "மரணமானால்" என்கிறது - தனக்கசக்தியில்லை, இவனுக்குக் கர்த்தவ்யமில்லை, இவன் ருசியைக்கடாக்ஷித்து நிற்கிறவித்தனை. இப்பாட்டில் "மரணமானால்" என்றதைக் கொண்டிறே கீழ்ச்சொன்ன நிரூபணமெல்லாம்.

(அரணமைந்த) "நித்யஸூரிகள் பரியவிருக்கிறவனிங்கேநின்றான், என்வருகிறதோ" என்றஞ்சவேண்டாதிருக்கை, (தரணியாளன்) பூமிக்கு நிர்வாஹகன். ஸம்ஸாரிகளுக்கு ரக்ஷகனென்கை. (தனதன்பர்க்கன்பாகுமே) தனக்குஸ்நேஹிகளானார்பக்கல் அதிப்ரவணனாம். (அன்பாகும்) (௨) "அன்புடையன்" என்று பிரிக்கவொண்ணாதபடி அன்புதானொருவடிவுகொண்டாப்போலேயிருக்கை. (௫)

---

(௧) கீதை-௯-௨௯. (௨) பெரியதிருவ-௩௫-

ஆறும்பாட்டு.

அன்பனாகுந் தனதாளடைந்தார்க்கெல்லாம் * செம்பொனாகத் தவுணனுடல் கீண்டவன்* நன்பொனேய்ந்த மதிள்சூழ் திருக்கண் ணபுரத்தன்பன் * நாளுந்தனமெய்யர்க்குமெய்யனே. (௬)

ப:—அநந்தரம், ப்ரஹ்லாதனுடைய ஸ்வாநுபவவிரோதியான ஹிரண்யனைப்பிளந்தவன், தன்பக்கல் பாரமார்த்திக ப்ரேமமுடையார்க்குப்பரமார்த்தபூதனுமென்கிறார்.

(இ-ள்) தனதாளடைந்தார்க்கெல்லாம் - தன் திருவடிகளை ஆச்ர யித்தார்க்கெல்லாம், அன்பனாகும்-நிரவதிகவாத்ஸல்யயுக்தனாய், செம் - சிவந்த, பொன் - பொன் போலேயிருக்கிற, ஆகத்து - வடிவையுடைய னை, அவுணன் - ஹிரண்யாஸுரனுடைய, உடல் - சரீரத்தை, கீண்ட வன் - அநாயாஸேநகிழித்தவனாய், அப்படி யாச்ரித விரோதிகளைப் போக்கி அடிமைகொள்ளுகைக்காக, நன்பொன் - நன்றான பொன்னாலே, ஏய்ந்த - சமைக்கப்பட்ட, மதிள்சூழ் - மதிள்சூழ்ந்த, திருக்கண்ண புரத்து-திருக்கண்ணபுரத்திலே, அன்பன் - விரும்பிவர்த்திக்குமவன், தனமெய்யர்க்கு-தன்பக்கல் பாரமார்த்திக ப்ரயோஜநபுக்தியுடையார்க்கு, நாளும் - என்றுமொக்க, மெய்யன்-தானுமவர்கள்பக்கலிலே பார மார்த்திக ப்ரயோஜநபுத்தியுடையனாயிருக்கும். (௬)

ஆறு;—(அன்பனாகும்) இப்படி தன் திருவடிகளிலே யநந்ய ப்ர யோஜநமான ஸ்நேஹத்தையுடையாரானவர்கள் பக்கல், தானும் அந ந்யப்ரயோஜநமான ஸ்நேஹத்தையுடையனாய், ஸ்வாநுபவவிரோ திகளையும் தானே போக்குமென்கிறார். (௬)

ஈடு-அவ;—தன்னையாச்ரயிப்பாருடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கி அவர்களுக்கு மிகவும் ஸ்நேஹியாமென்கிறார்.

(அன்பனித்யாதி) தன் திருவடிகளையே யுபாயமாகப்பற்றினார் க்கு, (க) "ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாதவ:" என்கிறபடி யே அவர்கள்தோஷம் தோற்றாதபடி வ்யாமுக்தனாயிருக்கும்; (௨) "தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம்" அவர்களுடைய விரோதிசெய்வதென்னென்னில்; ப்ரஹ்லாதனு

(க) ரா-ஸு-௨௧-௨௦- (௨) ரா-யு-௧அ-௩-

டையவிரோதி பட்டதுபடும். ஹிரண்யனென்கிற வஸுரனுடைய ஶரீரத்தை யநாயாஸேந கிழித்தவன்.

(நன்பொனேய்ந்தமதிள்) நல்லபொன்னாலே செய்யப்பட்டமதிள். ஸ்ப்ருஹணீயமான மதிளென்கை. (திருக்கண்ணபுரத்தன்பன்) "ஆஶ்ரிதரக்ஷணத்துக்குப் பாங்கானதேசம்" என்று விரும்பிவர்த்திக்கிறவர். (நாளும்தனமெய்யர்க்குமெய்யனே) தன்பக்கலநந்யப்ரயோஜநராயிருப்பார்க்கு, தானுமவர்கள்பக்கல் என்றுமொக்க வநந்யப்ரயோஜநனாயிருக்கும். தன்பக்கல் * மித்ரபாவமுடையார்க்கு (௧) "நத்யஜெயம்-நத்யஜேயம்" என்றிருக்குமவன். (௬)

ஏழாம்பாட்டு.

மெய்யனாகும் விரும்பித் தொழுவார்க்கெல்லாம் * பொய்யனாகும்புறமே தொழுவார்க்கெல்லாம் * செய்யில்வாளையுகளுந்திருக்கண்ணபுரத்தையன் * ஆகத்தணைப்பார்கட்கணியனே (௭)

ப:—அநந்தரம், அநந்யப்ரயோஜநர்க்கு ஸுலபனாய்க்கொண்டு ப்ரயோஜநாந்தரபரர்க்கு அவ்வோ ப்ரயோஜநங்களைக்கொடுத்து அகலநிற்குமென்கிறார்.

(இ-ள்.) விரும்பித்தொழுவார்க்கெல்லாம் - தன்பக்கலிலே ப்ரயோஜநபுத்திபண்ணி விரும்பி யாஶ்ரயிப்பார்க்கெல்லாம், மெய்யனாகும்-தன்னுடைய பாரமார்த்திகமான ப்ராப்யாகாரத்தை யுடையனாய்க்கொண்டு ப்ரகாசியாநிற்கும். புறமேதொழுவார்க்கெல்லாம் - புறம்பேசிலப்ரயோஜநங்களைக் கணிசித்து தகர்த்தமாக வாஶ்ரயிப்பார்க்கு. பொய்யனாகும் - அந்த ப்ரயோஜநத்தளவைக் கொடுத்துத்தன்னை மறையாநிற்கும். செய்யில் - தன்னிலமானசெய்யிலே. வாளை-வாளையானது, உகளும் - உகளாநிற்கிற, திருக்கண்ணபுரத்து - திருக்கண்ணபுரத்திலே, ஐயன் - உபயஸாதாரணமாக நிருபாதிகபந்துவாயிருக்கிறவன். ஆகத்தணைப்பார்கட்கு - தங்கள் நெஞ்சிலே தன்னை ப்ராப்யமாக ஸ்வீகரிப்பார்க்கு, அணியனே - ஸாதாரணபந்துவா யிருக்கச்செய்தே அஸாதாரணஸுலபனும் (௭)

ஆ-று;—(மெய்யனாகும்) இப்படி யநந்யப்ரயோஜநமாகத் தொழுவார்க்கெல்லாம் தன்னை யுள்ளபடியே காட்டிக்கொடுக்கும், அநந்ய

---

(௧) ரா-யு-௧௮-௩-

ப்ரயோஜநமாகத் தொழுவார்க்கெல்லாம் தன்னை யுள்ளபடி காட்டான். அநந்யப்ரயோஜநராக வொருஞ்ஜலிமாத்ரத்தைப் பண்ண அவனிப்படி ஸுலபனோமோவென்னில்; "தானே ப்ராப்யன்" என்றிருப்பார்க்கு அவன் ஸுலபனும், இவ்விடத்திலொரு ஸந்தேஹமில்லை யென்கிறார். (எ)

ஈடு-அவ;—அநந்யப்ரயோஜநர்க்கு ஸுலபனாய் ப்ரயோஜநாந்தரபரர்க்கு அத்தைக்கொடுத்துத் தானகலநிற்குமென்கிறார்.

(மெய்யனாகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம்) அநந்யப்ரயோஜநராயிருப்பார்க்கு அவர்களநேகமாகிலும் மநோரதித்ததை முடியநடத்தும்; புறம்பே ப்ரயோஜநங்களைப்பற்ற வாஸியில்லார்க்கு பக்தகமான வப்புருஷார்த்தங்களை யாகிரித்துக் கொடுக்கானாய்த் தன்னைக்கொண்டகலும். (க) "க்ருஷ்ணாஸ்ரயா: க்ருஷ்ணைவஸ்யா: - க்ருஷ்ணைஸ்ரயா: க்ருஷ்ணபலா:" என்றிருப்பார்க்கு மெய்யனாயிருக்கும்; படைத்துணை வேண்டிவந்த துர்யோதநனுக்கு நாராயண கோபாலர்களையடையக் கொடுக்கானாய், தான் பாண்டவர்களுக்காக நின்று அத்தலையையழியச்செய்கையாலே பொய்யனாகும்.

(செய்யிலித்யாதி) செய்களிலே மத்ஸ்யமானது உகளித்துவர்த்தியாநிற்கிற திருக்கண்ணபுரத்திலே நிற்கிறபரமபந்து. திர்யக்குகளும் களித்து வர்த்திக்கும்படியான போக்யதையையுடைய தேசமென்கை. தன்னை ஹ்ருதயத்திலே வைப்பார்க்குக் கையாளாயிருக்கும் - அநந்ய ப்ரயோஜநர்க்கு (உ) "திஷ்டநாவஸ்ய வேஷ்டிதௌ-திங் கமௌளஸமூபஸ்த்திதௌ" என்றிருக்கும். (எ)

எட்டாம்பாட்டு.

அணியனாகுந்தனதாளடைந் தார்க்கெல்லாம் * பிணியுஞ்சா
ராப்பிறவிகெடுத்தாளும் * மணிபொன்னேய்ந்தமதிள்சூழ் திருக்கண்
ணபுரம் பணிமின் * நாளும்பரமேட்டி தன்பாதமே. (அ)

ப:—அநந்தரம், தன் திருவடிகளையே ப்ராப்யமென்றடைந்தார்க்கு அத்யந்தஸுலபனாய்க்கொண்டு ஸம்ஸாரோச்சேதத்தைப் பண்ணுமென்கிறார்.

(க) பாரத-த்ரோண-கஅஎ உசு. (உ) ரா-பா-கூகஎ-சு.

(இ - ள்) தனதாள் - நிரதிசயபோக்யமான திருவடிகளை, அடைந்தார்க்கெல்லாம்-கிட்டினார்க்கு, அணியனாகும்-தானத்யந்தாஸந்நனாய்க் கொண்டு புஜியாநிற்கும், அத்தாலே, பிணியும் - ப்ரயோஜநாந்தரரூபமான வ்யாதியானவை, சாரா - கழியாநிற்கும், பிறவி- அதுக்கு ஹேதுவான ஜந்மஸம்ஸர்க்கம், கெடுத்து-பிறவாதபடிகழித்து, ஆளும்-அடிமைகொள்ளாநிற்கும், ஆதலால், மணி - மணியும், பொன் - பொன்னும், ஏய்ந்த - சேர்ந்த, மதிள்சூழ் - மதிள்சூழ்ந்த, திருக்கணபுரம்-திருக்கண்ணபுரத்திலே, பரமேட்டிதன் பாதம்-பரமபதத்திலே யிருக்குமாபோலே ஸந்நிஹிதனானவன் திருவடிகளை, நாளும் - நிரந்தரமாக, பணிமின் வணங்கி அநுபவிக்கும்படிப் பாருங்கோள்.

கணபுரமென்று - ஏழாம்வேற்றுமை யெஞ்சிக்கிடக்கிறது (அ)-

ஆறு;— (அணியன்) இப்படி தன்திருவடிகளையே ப்ராப்யமென்று பற்றினாரெல்லாருடைய து:கங்களையும் து:கஹேதுவான ஸம்ஸாரத்தையும்போக்கி, அவர்களுக்கு ஸுலபனும்; ஆதலால் ஸ்ரீவைகுண்டத்தி லெழுந்தருளியிருக்குமாபோலே திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளியிருந்த வெம்பெருமானைப் பெறுகைக்கு அவன் திருவடிகளையே யுபாயமாகப் பற்றுங்கோள்; இதுக்கொரு காலநியமமில்லை, வேண்டினபோ தாச்ரயிக்கலாமென்கிறார். (அ)

ஈடு- அவ;— அவனை யாச்ரயியுங்கோள், உங்களுடைய து:கத்தையும் து:கஹேதுவான ஸம்ஸாரத்தையும் போக்கியருளுமென்கிறார்.

(அணியனாகும் தனதாளடைந்தார்க்கெல்லாம்) தன்திருவடிகளையாச்ரயித்தாரை வரையாதே அவர்களுக்குஸுலபனும், இன்று ஆச்ரயித்தவொரு திர்யக்கைக்குறித்து (க)“ஜிம் கார்யம் ஹரிச்ரேஷ்ட மயா த்வச் சரணார்த்தி நா” என்றாரிறே. (பிணியும் சாரா) உங்களுடைய ஸகலது:கங்களும்போம். (பிறவிகெடுத்தாளும்) அந்த து:கஹேதுவான ஜந்மத்தைப்போக்கி அடிமைகொள்ளும்.

(மணிபொனேய்ந்த மதிள்சூழ் திருக்கண்ணபுரம்) மணியாலும் பொன்னாலும் செய்தமதிளாலே சூழப்பட்ட திருக்கண்ணபுரத்திலேயென்று - ஸப்தமியாக்கிக்கொள்ளுவது. (பரமேட்டிதன்பாத

(க) ரா-யு-சக-ச-

மே-பணியின்நாளும்)பரமபதத்திலிருக்கும்படியி லொன்றும் குறையாதபடியாய்த் திங்கிருப்பது. அவன் திருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமானவ்ருத்தியைப் பண்ணுங்கோள்; அங்கு நித்யஸூரிகள் பணியவிருக்குமவன் இங்கேவந்தபின்பு, நீங்களு மவன்திருவடிகளிலே பணியப்பாருங்கோள். (அ)

ஒன்பதாம்பாட்டு.

பாதநாளும்பணியத்தணியும்பிணி* ஏதஞ்சாரா வெனக்கேலினியென்குறை* வேதநாவர் விரும்புந்திருக்கண்ணபுரத் தாதியானை*
அடைந்தார்க்கல்லலில்லையே. (௯)

ப:—அநந்தரம், நானவனை ப்ராபித்து என்ஸகலதுக்கங்களும் தீரப்பெற்றேன்; காரணபூதனானவனைக் கிட்டினார்க்கு துக்கமுண்டோவென்கிறார்.

(இ-ள்.) பாதம் - அவன்திருவடிகளை, நாளும்-நாடோறும், பணிய - அநுபவிக்க, பிணி - முன்புண்டான துக்கங்களெல்லாம், தணியும்-போம், ஏதம் - மேலுமொருதுக்கங்களும், சாரா - வாராதுகள்; இனி - ஆதலால், எனக்கு - எனக்கு; என்குறை - என்னகுறையுண்டு, வேதநாவர் - வேதோச்சாரணத்தை நாக்குக்கு நிரூபகமாகவுடையவர்கள், விரும்பும்-(க) "வேதவேத்யே"-வேதவேத்யே" என்று வர்த்திக்கையாலே விரும்பும்படியான, திருக்கணபுரத்து - திருக்கண்ணபுரத்திலே, ஆதியானை - வேதைகஸமதிகம்யனான பரமகாரணபூதனை, அடைந்தார்க்கு - ப்ராபித்தார்க்கு, அல்லல் - துக்கம், இல்லையே - இல்லையாகாதே.

"பிணி - ஏதம், என்று - பூர்வாகோத்தராகங்களுமாகவுமாம். (௯)

ஆறு;—(பாதநாளும்) இப்படியவன்திருவடிகளை யாஶ்ரயிக்கவே, பகவதநுபவவிரோதியான உத்தரபூர்வாகங்களெல்லாம் போம்; இதிலொரு ஸம்ஶயமில்லையென்றுசொல்லி, அவன்திருவடிகளையே ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் பற்றப்பெற்றேன், எனக்கினியென்னகுறையுண்டு என்றுகொண்டு ஸ்வலாபத்தைச் சொல்லுகிறார். (௯)

ஈடு; அவ;—உபதேஶநிரபேக்ஷமாக நான்முன்னமவனையாஶ்ரயித்து ஸுகியாகப் பெற்றேனென்று ப்ரீதராகிறார்.

(பாதநாளும் பணியத்தணியும்பிணி) அவன்திருவடிகளை யாஸ்ரயிக்கவே, அநாதிகாலார்ஜிதமான பூர்வாகம் நசிக்கும், இனியது செய்ய, விரோதியானபாபம்போமென்கை. (ஏதஞ்சாரா) உத்தராகமானது சேஷியாது. (எனக்கேலினியென்குறை) அவன்திருவடிகளிலே தலைசாய்க்க என் ஸகலதுரிதங்களும் போவதானபின்பு, எனக்கொருகுறையுண்டோ.

(வேதநாவரித்யாதி) வேதார்த்தவித்துக்கள் விரும்பிவர்த்திக்கிற திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதனான ஜகத்காரணபூதனை. வேதநாவரென்கிறது - திருமங்கையாழ்வார்போல்வாரை. விரும்புகையாவது (க) "கண்ணபுரமொன்றுடையானுக் கடியேனொருவர்க்குரியேனோ" என்கை. ப்ரமாணம் வேதமாய், ப்ரமேயம் ஜகத்காரணமாயிறே யிருப்பது, (உ) "காரணந்து த்யேய:-காரணந்து த்யேய:" என்று ஜகத்காரணவஸ்துவிறேத்யேயம். (ஆதியானையடைந்தார்க்கல்லலில்லையே) தாய்மடியிலே சாய்ந்தார்க்கு க்லேஸமில்லை யென்னுமிடம் ஸித்தம். (க)

பத்தாம்பாட்டு.

இல்லையல்லலெனக்கேலினி யென்குறை* அல்லிமாதரமருந் திருமார்பினன்* கல்லிலேய்ந்மதிள்சூழ் திருக்கண்ணபுரஞ்சொல்ல* நாளுந்துயர்பாடுசாராவே. (க0)

ப:—அநந்தரம், ஸ்ரிய:பதியான ஸர்வேஸ்வரனுடைய திருக்கண்ணபுரத்தைச்சொன்னவளவிலே து:க்கங்கள்வாராதபடியாயிருந்தது; எனக்கினி யென்னகுறையுண்டென்கிறார்.

(இ - ள்.) அல்லி - தாமரைப்பூவை யிருப்பிடமாகவுடையளாய், மாதர் - ஸ்த்ரீத்வமுக்தமையான லக்ஷ்மி. அமரும் - நித்யவாஸமபண்ணுகிற, திருமார்பினன்-திருமார்வையுடையவனாய் கல்லிலேய்ந்த-கல்லாலேசெறிந்த மதிள்சூழ் - மதிள்சூழ்ந்த, திருக்கண்ணபுரம்-திருக்கண்ணபுரத்தை, சொல்ல-சொன்னவளவிலே நாளும்-ஸர்வகாலமும். துயர் - துக்கங்கள், பாடு - அருகு சாரா-வாராதனவாயிருந்தன, ஆனபின்பு; எனக்கு - எனக்கு, அல்லல்-அநுபவாலாபது:கம், இல்லை-உண்

(க) தி-மொ-அ-க-ரு- (உ) அத்ரவஸிரஸ்-

௨௪௪ திருவாய்மொழி, ௬-ப,௧௦-தி, ௧௧-பா,பாடுசாரா வ்யாக்யாநம்,

டாகாதாயிருந்தது, இனி-இப்படியானபின்பு, என்குறை-என்னகுறை யுண்டு.

அநுபவமவிச்சின்னமன்றோ வென்றுகருத்து. ௧௦)

ஆறு;—(இல்லையல்லல்) அவன்திருவடிகளை யாஸ்ரயித்து நிரஸ்தஸகலதுःகனானேன், எனக்கினியென்னகுறை யுண்டென்று, ப்ரீத்யதிசயத்தாலே பின்னையும் தம்முடையலாபத்தைச் சொல்லி, "அவனேரக்ஷகன்" என்று விஸ்வஸிக்கமாட்டீராகில் திருக்கண்ணபுரமென்று சொல்லுங்கோள், சொல்லவே ஒருநாளும் துःகங்கள் வாராவென்கிறார். (௧௦)

ஈடு-அவ;—ப்ரீத்யதிசயத்தாலே ஸ்வலாபத்தைச்சொல்லி, பக்திப்ரபத்த்யநுஷ்டாநங்களுக்கு க்ஷமரல்லாதார் திருக்கண்ணபுரமென்கிற வு ரையைச் சொல்லவே ஸமஸ்தது:கங்களும் போமென்கிறார்.

(இல்லையல்லல்) ஸகலதுःகங்களும்போம், (எனக்கேலினி யென்குறை) இனி யெனக்கென்னகுறையுண்டு. பகவதநுபவவிரோதியான துரிதங்களும்போனபின்பு, எனக்கநுபவத்துக் கொருதேசவிசேஷம் தேடிப்போகவேண்டியிருந்ததோ.

(அல்லியித்யாதி) பெரியபிராட்டியார் நித்யவாஸம் பண்ணுகிற திருமார்வையுடையவன். ஆஸ்ரயணத்தில்குறைபார்த்து அவன்நாதரியாதபடி (க) "நகஸ்சிந்நாபராத்யதி-நகஸ்சிந்நாபராத்யதி" என்பாருமருகேயுண்டு, திண்ணிதான மதிளையுடைய திருக்கண்ணபுரத்தை வாயாலேசொல்ல. பக்தியிலிழிகைக்குப் பரிகரமின்றியே ப்ரபத்திக்கு வ்யவஸாயமின்றிக்கே யிருக்குமவர்கள், "திருக்கண்ணபுரம்" என்று வாயாலேசொல்லவே, ஸமஸ்ததுःகங்களும்போம்.

பதினொன்றாம்பாட்டு.

பாடுசாராவினைபற்றறவேண்டுவீர் * மாடநீடுகுருகூர்ச் சடகோபன்சொல் * பாடலானதமிழாயிரத்துளிப்பத்தும் பாடியாடி * பணிமினவன் தாள்களே, (௧௧)

ப:—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாக பகவதநுபவத்தை யருளிச்செய்கிறார்;

(க) ராமாயு-௧௧௬-௪௪-

(இ - ள்) வினை - ஸாம்ஸாரிக ஸகலது:கங்களும், பாடசாரா-உங்கள் பரிஸரத்திலேயன்றியே, பற்றறவேண்டுவீர் - ஸவாஸநமாகப்போக வேண்டியிருந்திகோளாகில், மாடம் - மாடங்கள், நீடு - உயர்ந்த, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொல் - அருளிச்செய்ததாய், பாடலான - காநரூபமான, தமிழ் - த்ராமிடமாயிருக்கிற, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளே, இப்பத்தும் - இப்பத்தையும், பாடி - ப்ரீதியுக்தராய்க்கொண்டுபாடி, ஆடி - ஹர்ஷத்தாலே ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணி, அவன்தாள்கள் - அந்தஸ்த்தலபனான ஸர்வேஶ்வரன் திருவடிகளை, பணிமின் - வணங்கி அநுபவிக்கும்படி பாருங்கோள்.

இத்திருவாய்மொழி முகத்தாலே, பகவதநுபவம்பண்ணவே ஸமஸ்த துரிதமும் ஸவாஸநமாகப் போமென்றுகருத்து.

இது கலிவிருத்தம். (கக)

ஆறு;—(பாடசாரா) ஸ்வரூபமான வுபாயத்தாலே நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகராய்க்கொண்டு எம்பெருமானைப்பெறவேண்டுவீர், திருவாய்மொழியைப் பாடுங்கோளென்கிறார். (கக)

ஈடு-அவ:—நிகமத்தில், ப்ரதிபந்தகங்கள் ஸவாஸநமாகப் போக வேண்டியிருக்கில், இத்திருவாய்மொழியை ப்ரீதிபூர்வகமாகச்சொல்லிக்கொண்டு அவன் திருவடிகளை யாஶ்ரயியுங்கோளென்கிறார்.

(பாடசாராவினைபற்றறவேண்டுவீர்) வினை உங்கள் பார்ஶ்வத்திலேவந்துகிட்டாதபடி. ஸவாஸநமாகப்போகவேண்டி யிருந்திகோளாகில். (மாடநீடித்யாதி) நித்யமானமாடங்களையுடைத்தான திருநகரியையுடைத்தான வாழ்வாருளிச்செய்த. ஆப்தோபதேசமாகையாலே, திருவாய்மொழியிற்பிறந்தவற்றிலர்த்தவாதமில்லை.

(பாடலித்யாதி) அநாப்தர் சொல்லிலும் விடவொண்ணாத போக்யதையையுடைத்தானபத்து. புஷ்பம் பரிமளத்தோடே யலருமாபோலே, இசையோடேகூடப்பாடினதமிழ். (பாடியாடிப்பணிமினவன்தாள்களையே) ப்ரீதிபூர்வகமாகப்பாடி, இருந்தவிடத்திலிராதே யாடி ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு அவன்திருவடிகளிலே விழுங்கோள். இதன்றோ நாலுங்களைக்குடிக்கச் சொல்லுகிற வேப்பங்குடிநீர். * தேனைமலரும் திருப்பாதத்தையிறே சேரச்சொல்லுகிறது. (கக)

திருவாய்மொழி ஒன்பதாம்பத்து முற்றிற்று.